[illegible] க்ரந்தாலய ப்ரசுரம் 6.

வைத்யநாத தீக்ஷிதீய ஸ்ம்ருதி முக்தாபல

ஆந்ஹிக காண்ட ஸங்க்ரஹமான

நித்ய கர்மானுஷ்டான விதிகள்

ஸம்ஸ்க்ரு[illegible]-தமிழ் அகராதி, இதிஹாஸ புராண கதைகள்
பக்தி பத்ரிகையின் பத்ராதிபருமான

நே. ஈ. வேங்கடேச சர்மா

கிடைக்கும் இடம்:—

நே. ஈ. துரைஸாமி ஐயங்கார்
தக்ஷிண தேசக்ரந்தாலயம்
கம்பரசன் பேட்டை போஸ்ட்.,
திருச்சி S. I. Ry.

அட்டையின் பின்புறத்தில் கேட்லாக்] [வி

விஷயஸூசிகை.

ஒவ்வொரு பக்கத் தலைப்பிலும் அந்தந்த பக்க விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

விஷயம்	பக்கம்
மங்கள ச்லோகம்	
ஆன்ஹிக சப்தார்த்தம்	
ப்ராஹ்மமுஹூர்த்த கார்யம்	
,, நித்ரையின் தோஷங்கள்	2
,, அதன்ப்ராயச்சித்தம்	
,, நிர்வேதனம்	3
,, த்ருச்யாத்ருச்ய வ்யவஸ்தை	
,, ஸ்மரிக்கவேண்டியவை	
ஸூப்ரபாத அனுஸந்தானம்	
...பஹிர்பூமி ஸஞ்சாரம்	4
...லமூத்ர விஸர்ஜன க்ரமம்	5
...சௌச விதி	7
...ண்டூஷ விதி	10
...மனம்	11
...ற்மாதி தீர்த்த லக்ஷணம்	12
... ப்ரசம்ஸை	14
...ன நிமித்தங்கள்	18
...வனம்	20
...வர்ஜ்ய காஷ்டங்கள்	21
...நியமங்கள்	22
...ஷ்பீடனம்	24
...ரணம்	25
...தங்கள்	28

[...தொடர்ச்சி பின் அட்டை உள் புறத்தில்]

ஸ்ரீ:

ஆந்ஹிக காண்டம்

என்னும்

நித்திய கர்மானுஷ்டான விதிகள்.

(வைத்யநாத தீக்ஷிதீயத்தை அனுஸரித்தது)

நமாமி நாராயண பாதபங்கஜம்
கரோமி நாராயண பூஜனம் ஸதா |
வதாமி நாராயணநாம நிர்மலம்
ஸ்மராமி நாராயண தத்வமவ்யயம் ||

குருப்யோ நம:

ஆந்ஹிகம் (அஹஸ்) தினத்தில் உண்டானது. தினத்திய, தினம் செய்யவேண்டியது.

ப்ராம்ஹ முஹூர்த்த காலமும் செய்யவேண்டியதும்.

இரவின் கடைசியான நான்காவது ஜாமத்தின் முன் பாதிக்கு **பிராம்ஹம்** என்றும் பிந்தியதிற்கு **ரௌத்ரம்** என்றும் பெயர். பிராம்ம முஹூர்த்தம் என்பது தேவதைகளும் பிதிர்க்களும் ஒன்று கூடுங்காலம். அப்பொழுது விழித்து அவர்களை ஸ்மரித்துக்கொண்டிருப்பதானது பிதிர், தேவதைகளை கௌரவித்ததாகும். எழுந்திருக்கும்பொழுதே பகவானை நினைத்துக் கொண்டு ஹரிர் ஹரிர் ஹரிர் என்று ஹரிநாம ஸங்கீர்த்தனத்தை உரத்த குரலில் எழுதரம் செய்துகொண்டு எழுந்திருக்க வேண்டியது. பக்கத்தில் மனைவியிருந்தால் இருவருமே கண் விழித்துக்கொண்டு தாங்கள் பூஜிக்கும் தைவத்தைத் தியானிக்க வேண்டியது. பின்பு புருஷனானவன் தான் அன்று செய்ய வேண்டிய தர்மானுஷ்டானத்தையும், தர்ம மார்க்கத்திற்கு விரோதமில்லாத வியவஹாரத்தையும் (பண ஸம்பாதனம்) நினைக்கவேண்டியது.

பிராம்ஹ முஹூர்த்தத்தில் விழித்திருப்பதால் உண்டாகும் நன்மைகளும், தூங்குவதால் ஏற்படும் தோஷங்களும்

யம பயத்தை நீக்கிக்கொள்ள இச்சிப்பவனும், புனர் ஜன்மத்தை அடையாதிருக்க இச்சிப்பவனும் அக்காலத்தில் விழித்துக்கொண்டே இருக்கவேண்டும். பிராம்ம முஹூர்த்தத்தில் தம்பதிகள் தூங்கிக்கொண்டிருக்கும் வீட்டைப் பிதிர்க்கள் ஸ்மசானமாய் ஒதுக்கித் தள்ளி விடுகின்றனர். தூங்கும் அவர்களும் அசுத்தர்களாய் ஸகல கர்மாக்களையும் செய்ய அர்ஹதை யற்றவர்களாகின்றனர். அப்பொழுது தூங்குவதால் புண்ணியம் போய்விடுகிறது. தவிரவும் ஸந்தியா காலங்களில் உண்பதால் வியாதியும், மைதுனத்தால் கர்ப்ப நாசமும், தூங்குவதால் மூதேவியும், வேதமோதுவதால் ஆயுட் குறைவுகளும் உண்டாகின்றன.

ஸந்தியா காலங்களில் உறங்கிவிட்டவனுக்குப் பிராயச்சித்தம்.

அப்யுதிதன் (உதயத்தில் உறங்கினவன்) அப்பகல் முழுவதும் பட்டினியாய், மௌனமாய்ப் பிராணாயாமங்களைச் செய்துகொண்டும், **அபிநிர்முக்தன்** (அஸ்தமனத்தில் உறங்கினவன்) இரவு முழுவதும் மௌனியாய்ப் பட்டினி கிடந்து, மறுநாள் தன் நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்துவிட்டுப் பேசக்கடவன் என்று ஆபஸ்தம்பர் விதிக்கிறார். எழுந்தவுடன் நாம் யாது புண்ணியம் செய்திருக்கிறோம், என்ன தானந்தான் பண்ணியிருக்கிறோம், அல்லது பண்ணவாவது யாரையாவது சொன்னோமா, ஸத்தியமாவது தவறாமல் இருக்கிறோமா, (இவை ஒன்றுமே காணோமே), நாம் செய்யும் மஹா பாவங்கள் நம்மை எப்படி விட்டு நீங்கும், எந்த ஸமயத்தில் தான் நம்மை யமன் வந்து அழைத்துக்கொண்டு போய்விடமாட்டான், இன்

னும் என்ன வியாதிதான் அல்லது பெருந் துக்கந்தான் நம்மை வந்து அடைந்துவிடாது என்று சற்று அனுதாபப்படவேண்டும். ஆசாரம் குறைவாய்க் கழிக்கப்பட்ட தினத்தை புத்திமான் நம் ஆயுளில் ஒரு நாள் இப்படி வீணாய்ப் போய்விட்டதே என்பதைப் பற்றி வருந்தி மறுபடி அவ்வித அனாசாரஸம்பவமின்றிப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

தூங்கி எழுந்ததும் பார்க்கத் தகுந்தவைகள்

கை நுனியில் லக்ஷ்மியும், நடுக்கையில் ஸரஸ்வதியும், அடிக்கையில் கோவிந்தனும் இருப்பதால் எழுந்தவுடன் நம் வலக்கையைத் துடைத்துக்கொண்டு வெளிச்சத்தில் கையை நீட்டிப் பார்த்துக்கொள்ளவேண்டும். பிறகு ச்ரோத்திரியன் (வேதமோதினவன்), அக்னி ஹோத்ரி (அக்னிஆதானஞ் செய்தவன்), அக்னி, பசு, தீபம், கண்ணாடி முதலிய பரிசுத்த வஸ்துக்களைப் பார்ப்பதால் அன்று நமக்குக் கெடுதிகள் ஒன்றும் ஸம்பவியாவாம்.

எழுந்ததும் பார்க்கத் தகாதவைகள்

பாவி, பாக்யஹீனன், அத்யயன சூன்யன் (வேதமோதாதவன்) நக்கினன், மூக்கறுபட்டவன், விதவை, பூனை முதலிய அவலக்ஷணங்கள் தென்பட்டால் அன்று கெடுதிகள் ஏதாவது நேரிடலாம். நக்கினன் என்பதில் குழந்தைகள் வஸ்த்ரமின்றி இருப்பது கூடாததாகாது.

முதல் முதலில் உச்சரிக்கப்படும் ச்லோகங்களில் நினைக்கவேண்டியவைகள்

ஸுஸ்வரமாய் கம்பீரமாய் முதலில் சொல்லவேண்டியவை ஸுப்ரபாத ச்லோகங்களாகும். அவைகளில் வரும் பெயர்களாவன:— திரிமூர்த்திகள், ஸூரிய சந்திராதி நவக்ரஹங்கள், ஸப்த ரிஷிகள், நான்கு ஸனத் குமாரர்களும், ஸப்தஸ்வரங்கள், ஸப்த

ரஸாதலங்கள், ஸப்த ஸமுத்திரங்கள், ஸப்த குலபர்வதங்கள், ஸப்த உபவனங்கள், பஞ்ச பூதங்கள், பஞ்ச கன்னிகைகள், ஸப்த சிரஞ்ஜீவிகள், முதலியோர் நமக்கு நற்பொழுதை உண்டு பண்ணட்டுமென்று பிரார்த்திக்கவேண்டும். தர்ம புத்திரர், நள, தமயந்திகள் முதலிய புண்ணிய புராண புருஷர்களை ஸ்மரித்தலானது கண்ட துஸ்வப்னங்களின் பரிஹாரங்களாகி கெடுதி ஒன்றும் ஸம்பவியாவாம். கலிபுருஷனும் நெருங்குகிறதில்லை. ஏகாக்ர சித்தனாய் உரத்த குரலில் வாஸுதேவாதி பகவன் நாமங்களை உச்சரிக்க வேண்டியது. இதைக் கேழ்ப்பவர்களுக்கும் இந்த துஸ்வப்ன பரிஹார ப[illegible]டு. விஷ்ணுவின் தசாவதார ச்லோகங்களும் அனுஸந்திக்கத் தகுந்தத[illegible]யத்ரீ, துளஸீ, கங்கை, காமதேனு, அருந்ததியான இப் பஞ்ச[illegible]க்களைத் தினம் ஸ்மரித்தலும், பஞ்ச மஹாபாதகங்களும் தொலையும். ப்ரஹ்லாதன், நாரதர், பராசரர், புண்டரீகர், வியாஸர், அம்பரீஷன், சுகர், சௌனகர், பீஷ்மாசாரியர், தால்ப்யர், ருக்மாங்கதன், அர்ஜுனன், வஸிஷ்டர், விபீஷணன் முதலிய பாகவதோத்தமர்களையும் ஸ்மரிக்க வேண்டியது.

வெளிச் செல்லப் புறப்படல்

திரிவிக்கிரமனைத் தியானித்து, வலக்காலைப் பூமியில் வைக்கும் முன்னர் அனுஸந்திக்கவேண்டிய (விஷ்ணோ: க்ரமோஸி) ச்ருதிமந்த்ரம், ச்லோகங்களையும் சொல்லுதலானது பாதஸ்பர்சம், மல மூத்ர விஸர்ஜனங்கள், பூமியில் செய்வதற்காக [illegible]தேவியை அபராத க்ஷாபனம் செய்துக்கொள்ளப் பிரார்த்தி[illegible]லாகும். வெளிச்செல்லும் முன்னர் மாதா, பிதா, குருக்க[illegible] அருகே இருப்பின் அவர்களை நமஸ்கரித்துவிட்டுச் செல்லவேண்டும். நக்ஷத்ர மண்டலம் சுத்தமாய்த் தெரிந்து ஸூர்யோதயம் ஆகிற வரையிலும், அதேமாதிரி அஸ்தமித்து நக்ஷத்ர மண்டலம்

சுத்தமாய்த் தெரிகிறவரையிலும் உள்ள காலங்களுக்கு **ஸந்தியா** என்று பெயர். இக் காலம் ஸந்தியாவந்தனத்திற்கு உத்தேசமானபடியால் இந்நேரம் வரும் முன்னரே ப்ரக்ஷாளன தந்ததாவன, ஸ்நான, புண்ட்ர தாரணங்களை முடித்துக் கொள்ளவேண்டும்.

மல மூத்ர விஸர்ஜன நியமங்கள்

வீட்டிற்கு ஓர் அம்பு செல்லக்கூடிய தூரம் தெற்கிலோ, தென்மேற்கிலோ, எங்கு நீரிருக்கிறதோ அங்கு சற்று தூரமாகவே செல்லவேண்டியது. தௌத வஸ்த்ரம், தர்ப்பம், எள் முதலியவைகள் அடங்கிய திருப்புற்குடலையை இடத்தோளில் மாட்டிக்கொண்டு கையில் தடியெடுத்துக்கொண்டு போகவும். உட்காரும் முன்னே கையை மும்முறை தட்டவும், பூச்சி புழுக்கள் ஒதுங்கும். பூமி தேவியும் ஒதுங்குவள். பரிசுத்தமான இடத்தில் திருப்புற்குடலையை வைக்கவேண்டியது. தலையை மூடிக் கொள்ளாமல் விஸர்ஜிப்பவனின் சிரஸ் அநேகம் பொடிகளாய்ச் சிதறக்கடவதென்று தேவர்கள் சபிக்கின்றனர். ஆகையால் உத்தரீயத்தால் தலையை நன்றாய் மூடிக்கொண்டு, மௌனமாய், எச்சில் துப்பாமல் கையால் தலையைத் தொடாமல், காஷ்டங்கள், ஓடுகள், இலைகள் யாகத்திற்கு உபயோகப்படாதவைகளாய்ப் பார்த்து இவற்றுள் ஒன்றால் பூமியை மறைத்து விஸர்ஜனம் செய்யவேண்டியது. மல மூத்ரோத்ஸர்ஜனம், எச்சில் அன்னங்களை வெளிப்படுத்துதல், நிஷேகம் இவைகளைத் தன் இருப்பிடத்திற்கு வெகுதூரத்தில் செய்யவேண்டியது. இரவில் தெற்கு முகமாயும், பகலிலும் இரு ஸந்தியைகளிலும் வடக்கு முகமாயும் இருந்து செய்யவேண்டியது. பயம், பிராண ஸங்கட காலங்களில் திக் நியமம் கவனிக்கவேண்டியதில்லை. மலத்தை அடக்கிக்கொண்டு ஒரு கர்மாவும் செய்யக்கூடாது. பூணூலை வலக்காதில் சுற்றிக்கொள்ளவும். பூணூலைச் சுற்றிக்

கொள்ள மறந்து விஸர்ஜனம் செய்துவிட்டால் அதை நீக்கி எக்காலமாயிருப்பினும் ஸ்நானஞ் செய்து மந்த்ர பூர்வகமாய் வேறென்று அணியவேண்டியது. பராக்கு பார்த்துக்கொண்டிராமல் ஆண் குறியைக் கையில் பிடித்துக்கொண்டு கால தாமதமின்றி விஸர்ஜித்து எழுந்திருக்கவேண்டியது. விஸர்ஜனம் செய்யும் முன்னரே சௌசத்திற்கு மண்ணையும் நீரையும் கொண்டு வைத்துக்கொள்ளவேண்டியது. மறந்து பிறகு கொண்டுவந்தால் ஸசேல ஸ்நானம் செய்யக்கடவன். நீர் நிறைந்த பாத்திரத்தைக் கையில் வைத்துக்கொண்டு விஸர்ஜனம் செய்துவிட்டவன் சாந்த்ராயண க்ருச்ர ப்ராயச்சித்தத்திற்கு அர்ஹனுகிருன். அந்நீரும் மூத்திரத்திற்கு ஸமானமாகும். அதைக் குடிப்பது ஸுராபானத்தோடொக்கும். விஸர்ஜனம் செய்த பிறகும் நீர் கிடைக்காவிட்டால் நீர் கிடைத்தவுடன் சுத்தி செய்துகொண்டு ஸசேல ஸ்நானஞ் செய்யச் சுத்தியாவன். ஸ்நானம்செய்து ஈர வஸ்த்ரத்துடன் விஸர்ஜனஞ் செய்தால் மூன்று பிராணுயாமங்களைச் செய்து மறுபடியும் ஸ்நானம் செய்யச் சுத்தியாவன். தைலாப்யங்கனம், வாந்தி, க்ஷௌரம், மைதுனம் செய்து அதற்குரிய சௌசங்களைச் செய்துகொண்டு ஆசமனம் செய்யாமல் விஸர்ஜித்தால் மூன்று தினம் வரையில் அவனுக்கு சுத்தி ஏற்படாது. உழுத பூமி, புற்று, வளை, நீர், ஜலசமீபம், யாகார்ஹ பூமி, கோயில், ஸ்மசானம், பயிர், நிழல், மரத்தடி, நதி, கடைவீதி, சாணம், மலை, ஆற்றங்கரை, நடக்கும் வழி, பஸ்மம், பசுக் கொட்டகை, முதலிய இடங்களில் விஸர்ஜிக்கக் கூடாது. நின்றுகொண்டும், நடந்துகொண்டும் செய்யக்கூடாது. அக்கினி, பிராம்மணன், பசு, ஸூரியன், ஜலம், கோயில் இவர்களைப் பார்த்துக்கொண்டும் செய்யக்கூடாது. இவைகளும், ஸந்தியா திக்குகள், குரு, ஸ்திரீ இவர்களுக்கும் எதிராக தன் ஆண் குறியைக் காட்டிக்

கொண்டு உட்காரலாகாது. பார்த்து விட்டால் ஸூர்யன், அக்னி, பிராம்மணன், பசு இவைகளில் ஒன்றைப் பார்க்கவேண்டும். மாடியினின்றும், படிக்கட்டுகளிலிருந்தும், செருப்பு அல்லது குடை தரித்தும் விஸர்ஜனம் செய்யக்கூடாது. விஸர்ஜித்ததும் அங்கு தங்கவும், பேசவுங்கூடாது. ஆஸனத்திலுள்ள மலத்தை த்ரண காஷ்டாதிகளால் துடைத்து இடுப்பிற்கு மேல் துணியைத் தூக்கிக்கொண்டு இடக்கையால் ஆண் குறியை ஆடாமல் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு நீர் வைத்திருக்கும் இடத்தை அடைய வேண்டியது. விஸர்ஜனம், ஆஹாரம், மைதுனம் இவைகளை ரஹஸ்யமாய்ச் செய்தால் ஸ்ரீமானுயும், தவறிச் செய்தால் கஷ்டங்களுக்கும் ஆளாகிருன்.

சௌசவிதி

இரவில் தெற்காயும், பகலில் வடக்கோ, கிழக்கோ நோக்கியும் சௌசம் செய்துகொள்ளவேண்டும். ம்ருத்ஸங்க்ரஹண விதிகள் யதிகளுக்கு அளவற்றிருக்கின்றன. க்ரஹஸ்தன் நீர் எடுத்து வைத்துக்கொள்ளாத பக்ஷத்தில் ஒரு சாண் தூரம் கரையைவிட்டு ஒதுங்கி யுட்கார்ந்து ஜலத்தில் மணிக்கட்டிற்கப்பால் உள்ள மண்ணை எடுத்து சௌசம் செய்துகொள்ளலாம். இடது கையை இரண்டு முழங்கால்களின் நடுவிலும் வலது கையை முழங்காலுக்கு வெளியிலுமாக வைத்துக்கொண்டு வலது கையினுல் மண்ணை எடுத்து இடது கையில் போட்டுக்கொண்டு சௌசம் செய்யவேண்டும். செய்துகொண்டபின் அவ்விடத்தை நீரால் மிகுந்த மண்ணையும் சேர்த்து அலம்பிவிட வேண்டியது. இல்லாவிடில் பிதிர்க்கள் அம்மண்ணைப் புசித்து விடுவர். இவனுக்கும் சுத்தியில்லை. மண் ஆனதும் ஒவ்வொரு சௌசத்திலும் இடதுகையை அலம்ப வேண்டியது. வலக்கையால் இடுப்பிற்குக் கீழ்ப் பாகங்களையும், இடக்கையால் இடுப்பின் மேல் பாகங்களையும் தொடக்கூடாது. வைதிக கார்யத்திற்குரிய

வலக்கையால் ஆஸனத்தைத் தொடக்கூடாது. மழைத்துளி, தாரையாய்க் கொட்டும் நீர்களால் ஒரு கையால் சௌசம்செய்து கொள்பவனுக்குச் சுத்தி ஏற்படாது. ஆண் குறியில் இரண்டும், குதத்தில் ஐந்தும், இடது கையில் பத்தும், இரு கை கால்களில் தனித்தனி ஏழும் மண் போட்டுச் சுத்தி செய்துகொள்ளவேண்டியது. இதன் இரு மடங்கு பிரம்மசாரிகளுக்கும், மும் மடங்கு வானப்ரஸ்தர்களுக்கும், நாற் பங்கு யதிகளுக்குமாகும். துர்க்கந்தம் நீங்கி சுத்தி ஏற்பட்டதாக மனதிற்கு திருப்தி ஏற்படும் வரையிலும் நீர் மண்களால் சுத்திசெய்து கொண்டிருக்க வேண்டியது என்பது ஓர் பொது விதியாகும். சௌச ஸங்க்யை பல ஸ்ம்ருதிகளில் பலவாறு இருக்கின்றன. ஆறு, புஷ்கரிணி என்று வியவகரிக்கப்படும் தேவாலய ஸமீப தீர்த்தங்களிலும் மல விஸர்ஜன சுத்தி செய்து கொள்ளக்கூடாது.

மண் கை கொண்டதில் பாதி முதல் தடவைக்கும், அதில் பாதி இரண்டாம் தடவைக்கும், அதிலும் பாதி மூன்றாந் தடவைக்கும் போட்டு ஜலத்தால் பன்னிரண்டு பன்னிரண்டு தடவை இறைத்துச் சுத்தி செய்யவேண்டியது. சாந்த்ராயண விருதபரர்களுக்கு ஆஹாரமும், ஹோமம் செய்யும் ஹவிஸ் ப்ரமாணமும், சௌச மிருத்திகைகளும் வாட்டமில்லாத நெல்லிக்காய் அளவாயிருக்க வேண்டும். மூத்ர சௌசத்தில் ஆண் குறியில் ஒன்றும், இடது கையில் மூன்றும், இரு கைகளிலும் இரண்டும் மண்ணின் கணக்காகும். ரேதஸ் வெளிப்படுமாயின் இதுபோலவே இரு மடங்கு, மைதுனத்தில் மும்மடங்காம். மல மூத்ர விஸர்ஜனஞ் செய்தவன் முதலில் அபான சௌசமும் பிறகு மூத்ர சௌசமும் பிறகு கால் சௌசமும் பிறகு கைகளையும் செய்யக்கடவன். மூத்ரவிஸர்ஜனம் முந்தியானால் முதலில் அந்த சௌசத்தையே செய்யவேண்டும். பிறகு தான் குதத்திற்கு. இரவு, வியாதிகாலம், மார்க்கம்

இவைகளில் இவ்விதிகளைப் பூர்த்தியாய் அனுஷ்டிக்காவிடினும் பாதகமில்லை. மல விஸர்ஜனத்திற்காக உட்கார்ந்து செய்யாமல் எழுந்தவன் விதித்ததிற் பாதி ப்ரக்ஷாளனம் செய்யக் கடவன். சாப்பிடும்பொழுது அபானத்தில் மல மொழுக்கு ஏற்பட்டால் அவன் விதிப்படி கை கால் சுத்தி, குத சுத்தியும் செய்துகொண்டு ஸ்நானஞ் செய்து அஹருபவாஸம் இருந்து பஞ்சகவ்யமருந்தச் சுத்தனாகிறான்.

மலம், மூத்திரம், ரக்தம், ரேதஸ், மாம்ஸம், நகம், சீழ், கோழை, குரும்பை (காதினது), பீளை (கண்ணினது), வியர்வை, கொழுப்பு என **தேஹ மலங்கள்** பன்னிரண்டாகும். இவைகள் யாவற்றிற்கும் நீர் மண்களாலும், சிலவற்றிற்கு நீரினால் மட்டுமே சுத்தியாகும். பிறருடைய மலம் ஸ்பர்சிக்கப்பட்டால் ஸ்நானத்தால் சுத்தியும், தன்னுடையதேயானால் நீர் மண்களால் பலமுறை கழுவி ஆசமனஞ் செய்வதாலும் சுத்தி ஏற்படும். தன் மலமும் தொப்புளுக்கு மேற்பாகத்தில் ஸ்பர்சிக்கப்பட்டால் ஸ்நானஞ் செய்தும், ஓர் உறுப்பில் ஆனால் ஸ்நானோபவாஸங்களாலும், உதட்டில் ஏற்பட்டால் உபவாஸம், ஸ்நானம், பஞ்சகவ்ய ப்ராசனம், ஆசமனம் இவைகளாலும் பரிசுத்தம் ஏற்படுகிறது. தன் மூத்ர ஸ்பர்சத்தில் கை கால்களில் மூன்று மண்ணும், மலமானால் ஐந்தும், கை கால்களிலானால் பத்து தரமும் கணக்காகும். அயலாருடையதானால் 32 மிருத்திகா சௌசங்களாகும். காலம், அக்னி, மனஸ், ஜலம், மிருத்திகை, தான் தெரிந்துகொள்ளாதது என சௌசம் அறுவிதமாகும். சௌசத்தைச் சரிவரச் செய்யாதவன் பரலோகத்திற்குரிய கார்யம் எது செய்யினும் அவை யாவும் நிஷ்பலமாகும்; ஆஸுரமேயாகும்; தேவ பிதிர்க்களும் ரக்ஷிக்கிறதில்லை. 108 தரம் காயத்ரீ ஜபமும் 3 பிராணாயாமமுமே அவனுக்குப் பிராயச்சித்தமாகும்.

மனோசுத்தியின் ஆவச்யகத்தைப் பற்றி

பூர்ண கங்கா ஜலத்தாலும், பர்வதாகார மண் குவியல்களாலும், தன்னாயுள் முழுதும் தேஹத்தைச் சுத்திசெய்து கொண்டிருந்தாலும் சித்த சுத்தியில்லாதவனுக்கு சுத்தியே கிடையாது. தான் அபரிசுத்தனாயிருந்தாலும் ப க வா னை ஸ்மரித்தால் உள்ளும் புறமும் சுத்தனாய் விடுகிறான் என வியாஸர் கூறியிருக்கின்றனர்.

(கண்டூஷம்) வாய் கொப்பளித்தலுக்கு விதி

நகம், கை, கால்களைச் சுத்தி செய்துகொண்டானதும் கச்சம் முதலியவைகளைச் சீர்திருத்திக்கொண்டு பிராம்ஹணர்களுக்கு வலப் பக்கத்தில் ஸதா தேவர்கள் வஸிக்கிறபடியால் உட்கார்ந்து இடது பக்கமாய்க் கொப்பளிக்கவேண்டியது. மூத்ர விஸர்ஜனத்திற்கு 4, மலத்திற்கு 8. போஜனத்திற்குப்பிறகு அது அடை தோசையாயிருந்தாலும் 12, தந்ததாவனத்திற்கு 16-ம் ஆகும். அப்பொழுது ஆள்காட்டி விரலால் பல்லைத் துலக்கினால் அவன் ரௌரவ நரகத்திற்காளாவான். கொப்பளிக்கும் ஜலத்தை உட்கொள்ளக்கூடாது.

ஆசமன விதி

பூணூலை உபவீதமாய்ப் போட்டுக்கொண்டு த்ரிகரணங்களையும் அடக்கி பகவத்தியானத்துடன் முழங்கால் வரையில் கால்களையும், மணிக்கட்டு வரையில் கைகளையும் சோதித்து ஆசமனம் உபக்ரமிக்கக்கடவன். பூமி, மயிர், கச்சம், தொப்புளுக்கு கீழ் எந்த பாகத்தையுமாவது தொட்டால் மறுபடியும் கை கழுவ வேண்டியது. கிழக்கு, வடக்கு, வடகிழக்கு எதாவதொன்றை நோக்கி, இரு முழங்கால்களுக்கும் நடுவில் தன் இரு கைகளையும் வைத்துக்கொண்டு ப்ரம்ஹ தீர்த்தத்தினால் ஆசமனஞ் செய்யவேண்டியது. நடந்துகொண்டும், வளைந்துகொண்டும், படுத்துக்கொண்டும், நின்றுகொண்டும், பிறரைத் தொட்டுக்

கொண்டும். சிரித்துக்கொண்டும், இடது காலில் கையை ஊன்றிக்கொண்டும், பேசிக்கொண்டும், பிறர் வார்த்தையைக் கேட்டுக்கொண்டும், தன் தேஹத்தையோ அக்கம் பக்கத்திலெதையோ பார்த்துக்கொண்டும் செய்யக்கூடாது. விரலில் பவித்ரந் தரித்து, தன் கையை கோகர்ணம் (பசுவின் காது) போல் வைத்துக்கொண்டு மாஷம் (கையில் ஓர் ரேகை அல்லது உளுந்து) முழுகும்படியான அளவு ஜலமெடுத்து மந்திரத்தைச் சொல்லி உட்கொள்ளவேண்டியது. இவ்வளவிற்குக் குறைத்தோ அதிகமோ எடுத்துப் பருகுவது ஸுராபானத்திற்கு ஸமானமாகும். முதல் தடவையின் நீர் வயிற்றுக்குள் போன பிறகு இரண்டாந்தரமும் அதே மாதிரி மூன்றாந்தரமும் உட்கொள்ள வேண்டியது. இவ்வளவு தாமத நிர்ப்பந்தம் ஸ்திரீ, பாலர்களுக்கில்லை. ஆசமன காலத்தில் காக்கை, குதிரை, கழுதை, பன்றி, கோழி, தூரஸ்திரீ, கர்மத்தை விட்டவர், நீசர், சூத்ரர் முதலியோரைப் பார்க்கக்கூடாது. தவிரவும் குடுமி அவிழ்ந்தும், தலையில் துணி சுற்றப்பட்டும், கச்சம் இல்லாமலும், பரபரப்போடும் செய்யக்கூடாது. மந்த்ரத்தை உரத்துச் சொல்லிக்கொண்டும், ஆஸனத்தில் உட்கார்ந்துகொண்டும், ஆஸனபந்தஞ் செய்துகொண்டும், ஏகவஸ்த்ரத்துடனும், இதர சிந்தையோடும் வலத் தோளை மூடிக்கொண்டும், படுக்கையிலிருந்துகொண்டும், வண்டி அல்லது வாஹனத்தில் பிரயாணத்தில் உட்கார்ந்துகொண்டும், நுனிக்காலால் நின்றுகொண்டும், ப்ரௌட பாதனையும் செய்யக்கூடாது.

ஆசமன தீர்த்தத்தின் லக்ஷணமாவது

உஷ்ணம் (வெந்நீர்), மழை ஜலம், உப்பு, புளிப்பு, துவர்ப்பு, நுரை, குமிழி, கலக்கம், துர்நாற்றம், அசுத்தமான இடத்திலிருந்து வருவது, சரகுகள் விழுந்தது, எலம், லவங்கம், பச்சகற்பூரம், சந்தனம் இவைகளால் வாஸிக்கச் செய்யப்

பட்டது கூடாது. பரிஷேசன, பாதப்ரக்ஷாளன பான சேஷங்களும் கூடாது. (இம் மூன்றின் சேஷத்தைக் கொஞ்சம் பூமியில் சேர்த்துவிட்டு உபயோகிக்கலாம்.) அங்கஹீனர், அசுத்தர், வேதாரம்பம் செய்யாதவர், இன்னுனென்றறியப்படாதவர்கள் கொண்டுவந்த தீர்த்தமும் ஆசமனத்திற்கு அர்கமாகாது. இடது கை நுனியால் எடுத்துவிடப்பட்டது, இன்னொருவன் கையால் தீர்த்தத்தை தாரையாய் விட்டானுனாலும் ஆசமனம் செய்யக்கூடாது. இரு கைகளாலும் கரகாதிகளால் தீர்த்தத்தை விட்டால் அதைத் தான் வலது கையிலேந்தி ஆசமனம் செய்யலாம்.

ப்ரௌட பாதன் என்பது பாதங்களை ஆஸனத்தில் வைத்துக்கொண்டாவது, மடக்கி இரு துடைகளில் வைத்துக்கொண்டாவது உட்கார்ந்திருத்தலுக்குப் பெயராகும். விரல்களால் தீர்த்தத்தை எடுத்து ஆசமனம் செய்வது ஸுராபானத்திற்கு ஸமமாகும். பிறர் நகஸ்பர்ச தீர்த்த பானமும் அதே மாதிரியாகும். வலது தோளை மறைத்துக்கொண்டு செய்யக்கூடாது. தெற்கு முகமாயோ, மேற்கு முகமாயோ இருந்து ஆசமனம் செய்துவிட்டால் விதிப்படி ஸ்நானஞ் செய்து திரும்பவும் ஆசமனஞ் செய்யவேண்டும். உத்தரீயத்தை இடுப்பில் தரித்துக்கொண்டு செய்யக்கூடாது. பிராம்மணனின் வலது கையில் அக்னியிருப்பதுபோல் இடதுகையில் துவாதசாதித்யர்களும் ஸர்வ தீர்த்தங்களுக்கும் அதிபதியான வருண தேவனும் இருக்கின்றனர். ஆகையால் இடது கையால் ஜலத்தைத் தொட்டுக்கொண்டே செய்யவேண்டும். மண் பாத்திரத்தால் தீர்த்த பானம் செய்யவே கூடாது.

ப்ரம்ஹாதி தீர்த்தந்தின் லக்ஷணங்கள்

ஹிரண்யகர்ப்பனை தேவதையாகவுடையது **பிராம்ஹம்.** பிரஜாபதியை தேவதையாகவுடையது **காயம்.** பெரு விரலின்

அடியில் கீழாகச் செல்லும் ஓர் ரேகையில் உள்ளது **பிரம்ஹ தீர்த்தம்** என்றும், பெரு [கட்டை] விரலுக்கும் ஆள்காட்டிக்கும் நடுவில் உள்ளது **பித்ரு தீர்த்தம்** என்றும், சிறு விரலினடி, கையின் மத்தியம் இவற்றில் உள்ளது **பிராஜாபத்ய தீர்த்தம்** என்றும், விரல்களின் நுனியில் **தைவ தீர்த்தம்** என்றும் ஸ்தான பேதங்கள் உண்டு.

ஆசமனத்தில் அங்கஸ்பர்ச க்ரமங்கள்

பெருவிரலுக்கு அக்னி, ஆள் காட்டிக்கு வாயு, நடுவிரலுக்கு ப்ரஜாபதி, பவித்திரத்திற்கு ஸூரியன், சிறு விரலுக்கு இந்திரனும் தேவதைகளாவர். நடு மூவிரல்களால் இரு முறை உதடுகளைத் துடைத்துக்கொண்டு கட்டை விரலால் வலது இடது தவடைகளையும், கட்டைவிரலோடு பவித்ர விரலால் இரு கண்களையும், கட்டைவிரலோடு ஆள்காட்டியால் இரு நாஸிகளையும், கட்டைவிரலோடு சுண்டுவிரலால் இரு காதுகளையும், கட்டைவிரலோடு நடுவிரலால் இரு புஜங்களையும், எல்லா விரல்களாலும் நாபியையும், சிரஸையும் கேசவாதி நாமங்களைச் சொல்லி ஸ்பர்சிக்கவும்.

ஆசமன ப்ரசம்ஸை

இவ்வித ஸ்பர்சங்களால் பிரம்ஹாதி ஸ்தம்ப பர்யந்தம் உள்ள ஸர்வ ஜீவராசிகளும் பலவித க்ரமங்களில் திருப்தி அடைகின்றனர் என்பது ஒரு பொது ஸித்தாந்தமாகும். இது விஷயத்தில் பிரம்ஹயஜ்ஞ வேத ப்ரகரணத்தில் சொல்லுவதாவது:— மூன்று தடவை தீர்த்தபானத்தால் ரிக் வேதமும், இரு முறை துடைப்பதால் யஜுஸும், ஒரு தடவை துடைப்பதால் ஸாமமும், சிரஸ், நேத்திரம், நாஸி, காதுகள், மார்பு இவைகளை ஸ்பர்சிப்பதால் அதர்வாங்கிரஸ், பிராம்ஹணங்கள், இதிஹாஸங்கள், புராணங்கள், கல்பங்கள், காதைகள். நாராசம்ஸிகள் என்ற இப்பல வித்யா விபாகங்கள் திருப்தி

யாகின்றனவாம். மூன்று முறை பானம் பண்ணுவதால் முறையே ரிக், யஜுஸ், ஸாமங்களும், முதல் தடவை துடைத்தலால் அதர்வணமும், இரண்டாந்தரத்தால் இதிஹாஸ புராணங்களும், மற்ற அங்கஸ்பர்சத்தால் ஓஷதி, வநஸ்பதிகள், சகல தேவர்களும் திருப்தியாகின்றனராம். முழங்காலுக்கு மேற்பட்ட ஜலத்தில் நின்றுகொண்டு செய்யவேண்டும். அதற்குக் கீழ்ப்பட்டு நின்றுகொண்டு செய்துவிட்டால் அஹருப வாஸத்தால் சுத்தியாகிறான். விதி தெரிந்தே செய்தால் அஹோராத்ர உபவாசத்தால் தான் சுத்தி. குறைவுபட்ட நீரில் இடது காலைத் தரையில் வைத்து வலக்காலை நீரில் வைத்துக்கொண்டு இடது கையால் ஜலத்தைத் தொட்டுக்கொண்டு வலக்கையால் ஆசமனம் செய்யவேண்டியது. ஸ்தல ஜல இரண்டிலும் இருந்துகொண்டு ஆசமனம் செய்வதால் இரண்டிடத்திலும் இருந்துகொண்டு செயயவேண்டிய கர்மாக்களுக்கு அதிகாரியாகிறான். ஈரவஸ்தர தாரியாயிருந்தால் ஆசமனம் தர்ப்பணம், ஜபம் இவைகளை ஜலத்திலிருந்தே செய்யவேண்டியது. உலர்ந்த வஸ்த்ரத்தை தரித்தவனுயிருந்தால் ஸ்தலத்திலிருந்துகொண்டே செய்யவேண்டியது. இவ்விதிக்கு விரோதமாய்ச் செய்யப்படும் கர்மாக்கள் நிஷ்பலம். அவ்வித சகல காரியங்களும் ராக்ஷஸமாகும். ஸ்தலத்திலிருந்து ஜலத்திலும் ஜலத்திலிருந்து ஸ்தலத்திலும் செய்யக்கூடாது. ஈர வஸ்த்ரத்துடன் கரையிலிருந்து ஆசமனம் செய்யும் பாபியின் அவ்வஸ்திரம் பிழிந்த அழுக்கு ஜலத்தை அவன் பிதிர்க்கள் பானம் பண்ணுகின்றனர். தர்ப்ப பவித்ரத்துடன் செய்யும் ஆசமனம் சோமபானம் செய்வதற்கு ஸமானமாகும்.

தர்ப்பப்பிரசம்ஸை

தர்ப்பத்தின் அடியில் பிரம்மாவும், நடுவில் விஷ்ணுவும், நுனியில் ருத்ரனும் சுற்றிலும் சகலதேவர்களும் வசிக்கின்ற

னர். ஜபம், ஹோமம் முதலியவைகளை அபஹரிக்க ஸதா அஸுரர் உரு மறைந்தவர்களாய் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கின்றனர். அவர்கள் தர்ப்பத்தைக் கண்டதும் பத்து திசைகளிலும் பறந்தோடிப் போகின்றனர். தர்ப்பத்தை தேக முழுதும் மாலையாகவும், செவி முதலிய இடங்களிலும் தரித்தால் விசேஷ பலனுண்டு. ஸதா பவித்ரபாணியாய் இருப்பவனுக்குப் பாவம் என்பதே கிடையாது என்று ரிஷிகள் முறையிடுகின்றனர். தாமரை இலையில் நீர் ஒட்டாததுபோலும் பஞ்சுப் பொதியை தீ பொசுக்குவது போலும் பாவம் ஸ்பர்சிக்கிறதில்லை. பூதப்ரேத பைசாச பிரம்மரக்ஷஸ் இதர துர்தேவதைகளும் இதைக் கண்டவுடன் நடுங்குகின்றன. விஷ்ணுவிற்குச் சக்கிரம் போலும், ருத்ரனுக்கு சூலாயுதம் போலும், இந்திரனுக்கு வஜ்ராயுதம் போலும், விப்ரருக்கு குசம் ஆகிறது. குசாஸனத்தில் உட்கார்ந்து செய்யும் சகல ஜபதபாதி வைதிக கர்மாக்களும் ஸித்தியாகின்றன. பவித்ரபாணியின் ஆசமனத்திற்கு யாக பலன் சொல்லியிருக்கிறது. பவித்ரமின்றி பிராம்ஹணன் ஸ்பர்சிக்க சகல பரிசுத்த வஸ்துக்களுங்கூட அபரிசுத்தமாகின்றன. அபவித்ர பாணியின் ஆசமனமும் வீண்தான். இதற்குக் காரணம் முன்பு பரமசிவன் தம் பெருவிரல் பவித்ர விரல்களால் பிராம்மாவின் சிரஸைக் கண்டித்தது முதல் கைக்கு அபரிசுத்தம் ஏற்பட்டுவிட்டபடியால அதன் பாவனத்திற்கு பவித்திரமே தரணமாகும். ஜபம், ஹோமம், தானம், வேதாத்யயனம், (பிரம்ம யஜ்ஞம்) பித்ரு தர்ப்பணம் முதலிய கர்மாக்களில் பவித்திரம் ஒன்று தர்ப்பத்தாலோ, வெள்ளி அல்லதுஸ்வர்ணத்தாலோ அவசியம் இருக்கவேண்டியது. பவித்ரபாணியாய்ப் புசிப்பவனுக்கு அன்னதோஷம் யாதுமில்லை. யஜ்ஞோபவீதம், மௌஞ்சீ, பவித்ரம் இவைகளில் பிரம்மமுடி இருக்கவேண்டும். அதை இரு மோதிர விரல்களிலும், நடுவிரல்களிலும் கூட

தரிக்கலாம். பவித்திரத்திற்கும் நுனிக்குப் பிரம்மாவும், முடிக்கு விஷ்ணுவும், முறுக்கின அடிக்கு ருத்ரனும் தேவதைகளாவர். அடி விரலில் தரிப்பது ஸர்வார்த்த ஸாதகமாகும். நடுவிரலில் தரிப்பது ஸந்தானத்தை உண்டுபண்ணும். நுனியற்றதற்கு த்ருணம் என்று பெயர். நுனி உலர்ந்தோ, குட்டையாயோ இருக்கக்கூடாது. ஆசமனத்தில் தர்ப்ப பவித்திரத்திற்கு எச்சில் தோஷமில்லை. போஜன காலத்தில் உண்டு. ஆசமன கால பவித்திரத்திற்கு பிரம்ம முடி கூடாது. பிரம்ம முடியோடு கூடின பவித்திரத்தால் செய்யப்படும் ஆசமனம், போஜனம், தீர்த்த பானங்கள் ஸுராபானத்திற்கு ஸமமாகும். முடியுள்ள பவித்திரத்துடன் ஆசமனஞ் செய்துவிட்டால் மறுபடியும் அம் முடியை அவிழ்த்து எறிந்துவிட்டுப் பிறகு ஆசமனம் செய்தால் தான் சுத்தனாகிறான். போஜனாந்தரம் பவித்ர வளையத்தை அவிழ்த்து நீளமாகவே உத்தராபோசனத்தை உண்டு இலை ஓரத்தில் விட்டுவிடவேண்டியது. முடியில்லாத பவித்ரத்தால் போஜனம் செய்துவிட்டால் நூறு தடவை காயத்ரீ தேவியை ஜபம் செய்யவேண்டியது. இடக் கையில் தரித்து வலக்கையில் தரியாது செய்வது ரக்த பானத்திற்கு ஸமானமாய் அவன் சாந்த்ராயண விரதத்திற்கு அர்ஹனாய் அதைச் செய்தாலொழிய சுத்தனாகிறதில்லை. முடியில்லாத தர்ப்பங்களை தரிக்கக்கூடாது. ஆள்காட்டி விரலில் வெள்ளி பவித்திரமும், மோதிர விரலில் ஸ்வர்ணமும், காதுகளில் சுவர்ண குண்டலங்களும் அவசியம் ஸதா தரித்திருத்தல் க்ஷேமகரமாம். பாபமும் அணுகாது. செப்பு 8 பங்கும், வெள்ளி 12 பங்கும், பொன் 11 பங்கும் சேர்த்துச் செய்த பவித்ரம் மூன்று லோக பவித்திரம் எனப் படும். இதைத் தரிப்பதால் ராக்ஷஸ பயம், அபம்ருத்யு பயம், வியாதிபீடனம் முதலிய ஒன்றும் ஏற்படாது. தகப்பன், தமயன் உள்ளவர் ஆள்காட்டி விரலில் வெள்ளியை தரிப்பது கூடாது.

ஒரு கர்மாவின் முடிவில் பவித்ரம், கூர்ச்சம் இவைகளின் முடியை அவிழ்த்து விஸர்ஜனம் செய்யவேண்டியது. அவிழ்க்காமல் எறிந்தால் மூன்று நாளோ, ஒரு நாளோ உபவாஸமிருந்து சுத்தனாகிறான். பசுவின் வால் மயிரால் செய்த பவித்ரத்திற்கும் சொல்லமுடியாத விசேஷ மஹிமைகளுண்டு. பவித்திரத்தின் அளவு; நுனியுள்ள ஐந்து முஷ்டி (பிடி) யுள்ள நீளத்தால் ப்ரணவத்தால் முடியவேண்டியது. ப்ரதக்ஷிணமாய் முறுக்கி ஸரிபாதியாய் மடித்து ஒரு அங்குல முடி, இரு அங்குல வளையம், நாலு அங்குல நுனியுள்ளதாய் இருக்கவேண்டும்.

தர்ப்பக்ரஹண காலம்

ப்ரதி தினம் க்ரஹிப்பது மிகவும் உத்தமம். பானுவாரத்தில் க்ரஹிப்பது மறு ஞாயர் வரையிலும், ஓர் அமாவாஸையில் க்ரஹிப்பது மறு அமாவாஸை வரையிலும், மாசி, ஆவணி அமாவாஸைகளில் க்ரஹிப்பது ஒரு வருஷம் வரையிலும் உபயோகப்படும். அமாவாஸை புச்சமிருந்தால் அந்த புச்ச அமாவாஸையில் தான் க்ரஹிக்கவேண்டும். சுத்தனாய் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி ஹுங்காரம் செய்து மந்த்ரத்தைச் சொல்லி சுத்தமான கத்தி, அரிவாளால் க்ரஹிக்கவேண்டும். சாயங் காலங்களில் க்ரஹிக்கக்கூடாது. ப்ராம்ஹணர்களுக்கு ஸ்நேகமாயும், பாவங்களுக்கு அமித்ரமாகையாலும் இதற்கு விச்வாமித்ரமெனப் பெயர். குசம், நாணல், யவைப்புல், அருகு, கோதுமை, நீர்முத்துக்காசு, வழல், நெற்பயிர், முஞ்சிப்புல், விச்வாமித்ரம் எனத் தர்ப்பம் பத்து விதப்படும். விச்வாமித்ரத்திற்கு விஷ்ணுவும், குசத்திற்கு ப்ரஹ்மாவும், நாணலுக்கு ருத்ரனும், அருக்குக்கு ரிஷிகளும் தேவதைகள் ஆவர் குசம் கிடைக்காத பக்ஷத்தில்தான் மற்றவை க்ராஹ்யமாகும். குசஹஸ்த ஆசமனததில் காயத்ரீ 108 ஜபிக்கக் கடவன். கர்மாவின் நடுவில் ஆசமனாதிகளுக்காகப் பவித்ரத்தைக் கழற்றினால் வலக்காதில் தவிர மற்ற சரீர எந்த பாகத்தில் வைத்துக்கொண்டாலும் அதற்கு அசுத்தமே. எக்காலத்திலும் தேவகார்யங்களுக்குப் பவித்ரம் இரண்டு தர்ப்பங்களாலும்,

பித்ரு கார்யங்களுக்கு ஒன்று அல்லது மூன்று தர்ப்பங்களையுமே உபயோகிக்கவேண்டியது. ஒரு கார்யத்தில் உபயோகிக்கப்பட்டது, நகத்தால் சேதித்து க்ரஹிக்கப்பட்டது, மார்க்கம், ஸ்மசானம், யஜ்ஞபூமி, முதலியவைகளில் க்ரஹிக்கப்பட்டது, அக்னியால் தஹிக்கப்பட்டது, ஆஸனமாய்ப் போடப்பட்டது, யாக, தர்ப்பணாதிகளில் உபயோகப்பட்டது முதலிய தர்ப்பங்கள் கூடாவாம். அக்னியில் கொளுத்த ஒரு தர்ப்பமும், கோடு கிழிக்க 2ம், பரிஸ்தரணத்திற்கு 16ம்[அக்னியைச் சுற்றிவைப்பது] கணக்காகும்.

ஆசமனத்திற்கு ஹேதுக்கள்

ஸர்வ வைதிக கார்ய ஆத்யந்தங்கள், போஜன, நித்ரை, தானம் ப்ரதிக்ரஹம் இவைகளின் ஆத்யந்தங்கள், அத்யயன, [உருச் சொல்ல ஆரம்பித்தல்] பாராயணாதிகளின் ஆரம்பங்களிலும் இரு இரு முறைகள் ஆசமனம் செய்யவேண்டியது. மலமூத்ர விஸர்ஜன காலங்களில் கண்டூஷமானதும் முறையே மூன்று, இரண்டுதரம் ஆசமனங்கள். சூத்ரனுடன் ஸம்பாஷணம் செய்தபிறகும் இருமுறை செய்ய மநு விதிக்கிறார். குருவந்தனம், தேவதார்ச்சனம் செய்யப்போகும் முன்னமும், லேஹ்யம், ஔஷதம் உட்கொள்ளல், தீர்த்தம், த்ரவ பதார்த்த பானங்களில் இவைகளில் முந்தியும், பிந்தியும், ஸம்போகம் முடிந்ததும், மயிரில்லாத உதட்டைத் தொடல், ஓர் கர்மா ஆரம்பித்து சற்று விடப்பட்டு மறுபடியும் ஆரம்பிக்கப்படுங்கால் அப்பொழுதும், வேறோர் விப்ரனை ஸ்பர்சித்துவிட்டபோதும், இன்னொரு எச்சிலான விப்ரனால் ஸ்பர்சிக்கப்பட்ட போதும், வாந்தி செய்தவுடனும், அபாங்க்தேயரைப் பார்த்தபொழுதும், கண்ணீர் விடும்பொழுதும், ரத்தம் பெருகும்பொழுதும், ஸ்த்ரீகளை ஸ்பர்சித்துவிட்டாலும், கச்சத்தைச் சீர்திருத்திக்கொள்ளும் பொழுதும், சிகை முடிதலிலும், அவிழ்த்தலிலும், மூக்கைச் சிந்தல், அதன் அழுக்கை ஸ்பர்சித்தலிலும், கால்களைக் கழுவிக்கொள்ளும்பொழுதும், வீதியில் சென்றாலும், அபான வாயு பறியுதலிலும், தைல பக்குவமில்லாத பதார்த்தங்களைத் தொட்டாலும், கோபகாலத்திலும், வழி நடத்தல், அபசப்தங்

களை உச்சரிக்குங் காலங்களிலும், அசுத்த வஸ்துக்களைப் பார்க்குங்காலும், நாய், சூத்ரன், பதிதர், கழுதை, தூரஸ்திரீகளைப் பார்க்கும்பொழுதும், தும்மல், வாய்க் கொப்பளித்தல், உறங்கல், வஸ்த்ரந்தரித்தல் இவைகளுக்குப் பின்னும் பல்லிடுக்கில் ஒட்டிக்கொண்டிருப்பதை வெளியிலோ உள்ளேயோ தள்ளுங் காலங்களிலும், இடுப்பு முடிச்சை அவிழ்க்கும்பொழுதும், வாய் எச்சில் தெறிக்கும்பொழுதும், அவச்யம் இருமுறை ஆசமனம் செய்யவேண்டியது. எச்சிலாயிருக்கும்பொழுது, பசு, பிராம்ஹணர், அக்னி, சந்த்ரஸூர்யர்களை ஸ்பர்சிக்கவும் பார்க்கவுங் கூடாது. ஆசமனத்திற்கு ஜலம் கிடைக்காதகாலத்தில் ஈரப் புல்லையோ, பூமியையோ, கோமயத்தையோ ஸ்பர்சிக்கவேண்டியது. அதுவும் முடியாவிடில் ப்ரணவத்தால் தன் வலக் காதை மும்முறை ஸ்பர்சிக்கவேண்டியது. ப்ராம்ஹணனின் வலக்காதில் அக்னி, கங்கை, ப்ரபாஸம் முதலிய புண்ய தீர்த்தங்கள், வேதங்கள், ஸர்வ தேவர்கள், ஸூர்யசந்த்ரர், வாயுக்கள் ஸதாவஸிக்கின்றனர். இரவு நடு இரு யாமங்களில் தீர்த்தபானம் செய்யக்கூடாது. மலமூத்ரம் விஸர்ஜித்தால் ஆசமனம் செய்யாவிட்டால் ப்ராஜாபத்ய க்ருச்ரம் செய்துகொள்ளவேண்டியவனாய் விடுகிறான். ஆசமனம் பண்ணிக் கையில் மிகுந்த தீர்த்தமும் வாயிலுள்ள தீர்த்தத்திற்கு ஸமானமாகும்.

ஆசமனம் வேண்டாத காலங்கள்

வேதோச்சாரணத்திலும், பிறர் ஆசமன தீர்த்தம் நம் மீது பட்டாலும் எச்சிலாகாது. பழம், கரும்பு, தாம்பூலம், ஸோமபானம், விஷ்ணுபாத தீர்த்தம், ப்ராணாஹுதி இவைகளை உட்கொண்ட பின்னர் ஆசமனம் வேண்டியதில்லை. உச்சிஷ்ட தோஷமுமில்லை. விஷ்ணுபாத தீர்த்தபானாந்தரம் கையை அலம்பவுங்கூடாது. புசிக்கத் தகுந்த பதார்த்தம் கையிலிருக்கும்பொழுது அபரிசுத்தனால் ஸ்பர்சிக்கப்பட்டு அசுத்தனானால் இவன் அதைக் கீழே வைத்துவிட்டு ஆசமனம் செய்து அதை ப்ரோக்ஷித்து ஸூர்யனுக்குக் காட்டி எடுத்துக்கொள்ளக் கடவன்.

பல் தேய்த்தல்

வாய் நாற்றம், கண் பீளை, முக அசுசிகளை நீக்கப் பல் துலக்கவேண்டியது. கீழ்க் கூறப்படும் மரங்களிலொன்றை அணுகி ச்லோகத்தைச் சொல்லிக் குச்சியை ஒடிக்கவேண்டியது. அதற்கு ரிஷி ப்ரஜாபதி, அனுஷ்டுப் சந்தஸ், வனஸ்பதிதேவதையாகும்.

கிழக்கு அல்லது வடக்கு நோக்கி இருமுறை ஆசமனம் செய்துவிட்டு இரு முழங்கால்களுக்குள் இரு கைகளையும் சேர்த்து வைத்துக்கொண்டு குக்குடாஸனமாய் (குந்தி உட்கார்ந்து) வலது புறம் முதல் துவக்கிக் கிரமமாய் பல்களைத் துலக்கவும். தந்தகாஷ்டம் முள்ளுள்ள மரத்தினுடையதானால் புண்ணியமும், பாலுள்ள மரத்தினதானால் கீர்த்தியையும் தரும். அது எட்டங்குல நீளமும் நுனிவிரல் பருமனுமாயுமிருத்தல் வேண்டும். கருவேல், புங்கன், வேம்பு, நாவல், நாயுருவி, வில்வம், எருக்கு, அத்தி, விளா, ஆல், மா, மாதுளை, கடம்பை, புன்னை, இலந்தை, மருதை, தினை, புரசு, எலுமிச்சை, பலா, அசோகன், மூங்கில், ஜாதிமல்லிகை, அரளி, இலுப்பை, கிராம்பு மரங்களும், தவிரவும் துர்க்கந்தமில்லாததும், தோலுடன் கூடியதும், பச்சையுமானதும், புளிப்பு, துவர்ப்பு, வாஸனையுள்ளதுமான மரங்களும் அல்லது கொடிகளும் தந்தகாஷ்ட க்ரஹணார்ஹமாகும். அதைக் கையால் ஒடிக்கக்கூடாது. விரல்களால் பல் துலக்குதலுங்கூடாது. பற்களை விரல்களால் துலக்குதலும், போஜனத்தில் ப்ரத்யக்ஷமாய் உப்பைச் சேர்த்துக்கொள்ளுதலும், மண்ணைப் புசித்தல்களும் கோமாம்ஸபக்ஷண துல்யமாகும். இம்மரங்களின் குணங்கள் அதை க்ரஹிக்குங்கால் சொல்லப்படும் ச்லோக ரீதிப்படி ஆயுள், பலம், கீர்த்தி, தனம், பிரம்மதேஜஸ், ஆரோக்யம், பசு புத்ரர், புத்தி, மேதை முதலியவைகளைக் கொடுக்கக்கூடியவைகளாகும். பருத்தி, இலவு. பாலை, புரசு, வன்னி, தானி, குங்கிலியம், கமுகு அவுரி, கடம்பை, தும்பை, தக்கோலம், முருங்கை, நொச்சில், குன்றிமணி, ஜாதிமல்லிகை, அரசு, தருணராஜ வகுப்பைச் சேர்ந்த மரங்களின் குச்சிகளை க்ரஹிக்கக்கூடாது. அப்படி க்ரஹித்துத் துலக்குபவன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவாயிருப்பினும் லக்ஷ்மீ

கடாக்ஷம், புண்ணியங்கள் போய்விடுகின்றன. பனை, தென்னை, பத்திரி, தாழை, கூந்தற்பனை, ஊமத்தை, பேரீச்சு, திப்பிலி, கமுகு இவைகளை த்ருணராஜ விருக்ஷங்களெனப் பெயர் விதித்திருக்கின்றனர்.

புரசு, அரசுக்கள் ஆஸனம் வாஹனம், தந்தகாஷ்டம், பாதுகை, சயனங்களுக்கு நிஷேதிக்கப்பட்டிருக்கின்றன. ஜாதிப் பெயர் தெரியாதவையும், இலைகளுடன் கூடியதும். இரட்டை இலைகளுள்ளதும், யாதொரு ஆயுதமுமின்றி ஒடிக்கப்பட்டதும், ஓர் புறம் பச்சையும், மற்றோர்புறம் காய்ந்ததும், முடிச்சுகளுள்ளதும், தோலற்றதுங் கூடாது.

ஓர் நுனியால் பல் துலக்கி, மற்றொன்றால் நாவை வழித்து அக்குச்சியை அலம்பி தென்மேற்கு திக்கில் எறிந்துவிடவேண்டியது. அது அபிமுகமாய் விழுமாகில் அன்று விசேஷ போஜனமும் ப்ராப்தமாகும். தெற்கு, மேற்கு முகமாயிருந்து தந்ததாவனம் செய்வது அபஜயாதி அரிஷ்ட ஹேதுவாகும். கோயில், யாகபூமி, சுத்தமானவிடம், நீர், கொட்டகை, நதி இவைகளில் தந்ததாவனம் செய்யக்கூடாது.

தந்தகாஷ்டம் கூடாததினங்களைப் பற்றி. ஸ்த்ரீகளுக்கும் தந்தகாஷ்டம் உதவுமாதலால் புருஷன் ஊரிலில்லாத தினங்களில் ஸ்த்ரீகள் தைலாப்யங்கம், காமநூற் படிப்பு, தந்தகாஷ்டங்களை நீக்கவேண்டியது. வ்ருத தினத்தில் எவனொருவன் தந்ததாவனம் செய்கிறானோ அவன் கோமாம்ஸத்தைப் புசித்தவனாகி அனேக கோடி வருஷகாலம் மஹா பயங்கரமான நரகத்தில் வாஸம் செய்வானென விதிக்கப்பட்டது. ச்ராத்தம், உபவாஸங்களில் தேய்ப்பவனின் எழு தலைமுறையுள்ள பித்ருக்களின் குலம் வினாசத்தை அடைகிறது. அப்ப்டித் தெரியாமற் செய்துவிட்டவன் நூறு காயத்ரியை ஜபிக்கப்பட்ட தீர்த்தத்தை உட்கொள்ளச் சுத்தனாகிறான். அஷ்டமி, சதுர்த்தசி, அமாவாஸ்யைகளிற் தந்தகாஷ்டம், அப்யங்கம், மைதுனங்களைச் செய்பவன் அக்னிக்கு ஸமானமானவனாயிருப்பினும் கூட புண்யம் போய்விடுகிறது. தலையில் எண்ணையிருக்குங்காலத்தில் தந்த

தாவனம், மைதுனம், ஒன்றைப் புசித்தல், வாஹனம், அத்யயனம், க்ஷௌரங்கள், கூடாது. ப்ரதமை, பர்வங்கள், ஸங்க்ரமணம், ஷஷ்டீ, அஷ்டமி, நவமி, சதுர்த்தசி, ஜன்ம திதி, விவாஹம், அஜீர்ணம், யஜ்ஞம், நியமம், பானுவாரம், வ்யதீபாத தினங்களிலும் தந்ததாவனம் கூடாதாம். இம்மாதிரியான தினங்களில் பனிரண்டு முறை வாய் கொப்பளித்தலே முக சுத்தியைக் கொடுக்கும். நடு, மோதிரவிரல்களால் பல் துலக்கலாம். செங்கல், ஓடு, கருங்கல்களால் துலக்கவே கூடாது. ஏகாதசி, அமாவாஸைகள் தவிர மற்ற தினங்களில் காஷ்டங்களுக்குப் பதில் மா நாவல் இலைகளால் பல் தேய்த்து நாக்கை வழிக்கலாம். போஜனத்தில் எவ்வளவு நியமங்கள் உண்டோ அவ்வளவும் பல் துலக்குவதற்கும் உண்டு. அமா, ஏகாதசிகளில் மாவிலை உதவும். சிராத்த தினத்தில் வாய்க்கொப்பளிப்புத் தவிர பல் தேய்த்தலே கூடாது.

ஸ்நான நியமங்கள்

பஞ்சபஞ்ச உஷ:காலமே ஸ்நானத்திற்குச் சரியான காலமாகும். ரிஷிகளுக்கு ரிஷித்வம் ஏற்பட ப்ராதஸ்நானம் ஓர் முக்கிய காரணமாகிறது. ப்ராதஸ்நானம் செய்பவனுக்கு யமதர்சனம் கிடையாது. மூதேவி நீங்குகின்றனள். க்ரஹசாரதோஷம் துலைகிறது. மனதிற்குத் தெளிவு, பலம், ரூபம், (தேஜஸ்), யசஸ், கர்மம், ஜ்ஞானம், ஆயுஸ், ஸுகம், தைர்யம், ஆரோக்யம், தாரணை, துஸ்வப்ன நாசனம் முதலியன உண்டாகின்றன, மஹாபாதகங்களும் ஒழிந்து போகின்றன. ஸ்நானமின்றி ஸந்த்யாவந்தனாதி ஒரு க்ரியையைச் செய்வதற்கும் அனர்ஹனாகிறான். இதற்கு ப்ராஜாபத்ய க்ருச்ர பலனுண்டு. ஸ்நானம் செய்யாமல் புசித்தவன் மலத்தைப் புசித்தவனாகிறான். ஜபம் செய்யாமல் புசிப்பவன் சீழ் ரத்தங்களைப் பானம் செய்தவனாகிறான். ஹோமம் செய்யாமல் தின்றவன் புழுக்களை உட்கொண்டவனாகிறான். தானம் செய்யாமல் விழுங்கினவன் விஷத்தை விழுங்கினவனாகிறான். க்ருஹஸ்த, வனஸ்தர்கள், காலை நடுப்பகல் இருவேளைகளிலும், ப்ரம்ஹசாரி காலையில் மட்டும், யதிகள் த்ரிஸந்திகளிலும், ஸ்நானம் செய்யவேண்டியது. வியாதி

யிலும், நீர் கிடைக்காதவிடத்திலும் ஆக்னேயம் முதலிய ஸ்நானத்தைச் செய்யவேண்டியது.

தீர்த்தங்கட்கு **நாரம்** என்று பெயர். அந்த நாரங்களையே அயனம் (ஸ்தான) மாகவுடையவராதலால் தேவர்களுக்கெல்லாம் தேவனுக்கு **நாராயண**னென்று பெயர். அவரே ஸ்நான காலத்தில் ஸ்மரிக்கவேண்டிய தேவதையாவர்.

ஸங்கல்பம், ஸூக்த ஜபம், உடம்பைத்தேய்த்தல், அகமர்ஷணம், தேவ தர்ப்பணம் என ஸ்நானத்திற்கு அங்கங்கள் ஐந்தாகும். ஸ்நானம், ஜபம், அர்க்யம் இவைகள் எப்பொழுது செய்யினும் ஸூர்யனுக்கு எதிர் முகமாய் தர்சனம் செய்துகொண்டு செய்யவேண்டியது. நதியில் ஜலப்ரவாஹத்திற்கு எதிராக இருந்துகொண்டு செய்ய வேண்டியது. தேவாலயத்தில் பிம்பத்திற்கு எதிர் முகமாகச் செய்யவேண்டியது. முதலில் மும்முறை அமிழ்ந்தெழுந்திருக்க வேண்டியது. ஸங்கல்பமாவது அக்காலத்திய வருஷ, மாஸ, பக்ஷ, திதி, வார, நக்ஷத்ரங்களை பூணூல் தரிக்கும் காலத்திற் சொல்லிக்கொள்வதுபோல் சொல்லுவது. பிறகு அப்பு, வருணதேவ வேத ஸூக்தங்களைச் சொல்லுவது. ஸங்கல்பமின்றி செய்யும் ஸ்நான, தான, வ்ரதங்கள் நிஷ்பலமாகும். அகமர்ஷணம் என்பது பாவங்களைத் துலைப்பது, அழிப்பது என்று அர்த்தமாகும். இதுவும் அந்த ஸூக்த முடிவில் வரும் பதப்படி ஓர் வேத மந்த்ரமே. அகமர்ஷணத்திற்கு அச்வமேத பலன் என்று ரிஷிகள் கூறுகின்றனர். கேசவாதி தர்ப்பணம் போல் தேவ, பிதிர் தர்ப்பணமாகும். ஆகையால் பஞ்சாங்கங்களும் ஒன்றைப்போல் ஒன்று அத்யாவச்யமாயிருக்கின்றன. இத்தர்ப்பணம் செய்யாவிடில் பிதிர்க்கள் ஜலத்தைப் பிரார்த்தித்தவர்களாய் கிடைக்காமற் போனதற்காக ரக்தத்தையே பானம் செய்து விடுகின்றனர். நாபியளவு ஜலத்தில் நின்றுகொண்டு வேறொன்றையும் நினையாமல் தேவர், தேவகணம், ரிஷிகள், ரிஷிகணம், காண்ட ரிஷிகள், பிதிர், பிதிர் கணம் இவர்களை அவர்கள் பெயரைச் சொல்லி பிரஹ்மாதி தீர்த்தங்களால் அந்தந்த திக்குகளுக்கு ஜலம் போகும்படி, பூணூலை இடம் வலம் மாறிமாறி தர்ப்பிக்கவேண்டியது. தெற்கு

நோக்கி ப்ராசீனாவீதியாய் பிதிர்களுக்கு. நிவீதியாய் காண்டரிஷி தர்ப்பணம். உபவீதியாய் தேவ தர்ப்பணங்களுமாம். கிழக்கே உபவீதியாய் ப்ரம்ஹாதி தேவதர்ப்பணத்தைச் செய்துவிட்டு, இரு கட்டை விரல்களிலும் மாலையாய்ப் பூணூலைமாட்டி இரு கைகளுக்கும் நடுவில் ஜலம்விழும்படி ரிஷி, காண்ட ரிஷி தர்ப்பணம்வடக்காய்ச் செய்துபிறகு பிதிர் தர்ப்பணமும் செய்யவும். விதிகள் மாறின் அந்நீர் ரக்தத்தோடொப்பாகும். பிதிர் தர்ப்பணத்தில் கடைசியில் ஆகாசத்தில் இறைத்துச் செய்யவேண்டியது. ஆகாயமும், தெற்கு திக்குமே பிதிர்க்களின் வாஸஸ்தலமாகும். பிறகு யக்ஷ்ம தர்ப்பணம் செய்யவேண்டியது. பித்ரு தர்ப்பணம் செய்யாமல் துணியைப் பிழிந்தால் அவன் தேவ, பித்ருக்கள் ஆசையற்றவர்களாய்ப் போய்விடுகின்றனர். தேவர், ரிஷி, பிதிர்க்கள் வாயு மூலமாய் தாகத்துடன் ஸ்நானம் செய்யப்போகிறவனைத் தொடர்ந்து செல்லுகின்றனர். தீண்டல், க்ஷௌர ஸ்நானங்களுக்கு அகமர்ஷணஜப, தர்ப்பணங்கள் வேண்டியதில்லை.

ஸ்நானம் செய்தபிறகு கரையிலேறி, பூணூலை இடமாய் தரித்துக்கொண்டு, சரீரத்தைத் துணியால் மூடாமல், அசையாமலும் நிற்கவும். தலை மயிர் நீர் பின் பக்கமாய் விழுந்தால் அது கள்ளுக்கு ஸமானமாவதால் முன்புறம் விழுவது கங்கைக்கு ஒப்பாவதாலும் மயிரை முன்பக்கம் அவிழ்த்துத் தொங்கவிட்டுக்கொண்டு சற்று நிற்கவும். அப்பொழுது தேஹத்திலிருந்து சொட்டும் திவலைகளை பூதங்கள் குடிக்கின்றன. ஆதலால் பிரம்ஹத்தியாதி மஹாபாதகங்கள் யாவும் நடுங்குகின்றன. அப்பொழுது வடிவது 33 கோடியளவுள்ள தீர்த்தங்கள் சரீரத்திலிருந்து வருகின்றனவாம். வடியும் சிரோ ஜலத்தை தேவர்களும், முகத்தினதைப் பித்ருக்களும், இடுப்புவரையிலுள்ளதை யக்ஷ, கந்தர்வ, ஸர்ப்பாதிகளும், அதற்குக் கீழ்ப்பட்டதை ஸகல ஜந்துக்களும் அடைந்து திருப்தியடைகின்றன.

வஸ்த்ரநிஷ்பீடனம் (பிழிதல்)

கரைமேலேறி துணியை நான்காய் மடித்து தெற்கு நோக்கி நுனியைப் பிடித்துப் பிழியவும். மூன்றாய் மடித்தோ, ஜலத்தி

லேயோ பிழிபவன் ஸ்நான பலத்தை இழக்கிறான். பிறகு இடக்கையின் கீழ் மணிக்கட்டின் மேல் வைத்துக்கொண்டு நீரிலிறங்கி இருமுறை ஆசமனஞ் செய்துக் கரையேறவேண்டியது. பிழிந்த துணியைத் தோளின்மீது வைப்பது அமங்கலமும் ஆஸுரமுமாகும். அப்படிச் செய்துவிட்டால் புனஸ்நானாசமனாதிகளால்தான் சுத்தி ஏற்படும். மூன்றுதரம் மண் போடுதலே ஸ்நான வஸ்த்ரத்திற்குச் சுத்தியாகும். ஸ்நானவஸ்த்ரத்தாலோ, கையாலோ தலையைத் துடைப்பவன் ஸ்நான பலனை இழக்கிறான். புனஸ்நானத்தால்தான் அவனுக்குச் சுத்தி. தனியாக இரண்டு உலர்ந்த வஸ்த்ரங்களை வைத்துக்கொண்டு ஒன்றால் சிரஸையும் மற்றொன்றால் தேஹத்தையும் துடைத்துக் கொள்ள வேண்டுமேயொழிய ஒருக்காலும் ஈர வஸ்த்ரத்தால் செய்தலே கூடாது. அப்படிச் செய்பவன் தன் பிதிர்க்களை நரகத்தில் தள்ளிவிடுகிறான். கரையில் பிழியப்பட்ட வஸ்த்ரத்தையும் உதறக்கூடாது. தலைமயிரை நின்றுகொண்டு துவட்டக்கூடாது.

வஸ்த்ரதாரணம். வஸ்த்ர லக்ஷணம்

உலர்ந்த உத்தரீயத்தைத் தலையில் சுற்றிக்கொண்டு, பூணூலை வலக்காதில் சுற்றிக்கொண்டு வேஷ்டியுடுத்திக்கொண்டு கௌபீன ஜலஸ்பர்சம் தொடைக்குக் கீழ்ப் பாகங்களில் வழிந்ததற்காக அப்பாகங்களை ம்ருத்திகா ஜலத்தால் அலம்பி உத்தரீயத்தை இடுப்பில் கட்டிக்கொண்டுப் பூணூலையும் ஸரியாய்ப் போட்டுகொண்டு இரு முறை ஆசமனஞ்செய்ய வேண்டியது. எக்காரணத்தைக் கொண்டும் இரு வஸ்த்ரங்களையும் மாற்றிமாறி உடுத்திக்கொள்ளக் கூடாது. வேஷ்டி மட்டுமோ, உத்தரீயமட்டுமோ தரித்து ஆசமனங்கூடச் செய்யக் கூடாது. வஸ்த்ரம் வெண்ணிறமாயும், புதிதாயின்றி ஸலவையாய் நனைத்து உலர்த்தப்பட்டும், வேறொருவரால் த்ரிக்கப்படாததாயும், நான்கு ஓரங்களிலும் சிவப்புக் கரைகளுள்ளதாயும், தலைப்புள்ளதும், தைக்கப்படாததுமாய் இருத்தல்களே வஸ்த்ர லக்ஷணங்களாகும்.

கச்சம் தரிக்காதவன், ஓர் தலப்பை விட்டு கச்சம் தரிப்பவன், மூலகச்சம் தரிப்பவன், தலைப்புகள் எல்லாவற்றையும் சேர்த்து ஒன்ருய்ப் பின்புறத்தில் ஒரே கச்சமாய்த் தரிப்பவன், அறைநாண் கயிற்றில் கச்சங்களைச் சொருகி வைப்பவன், கடி ஸூத்ரமே தரியாதவன், ஈர வஸ்த்ரம், அழுக்குத் துணி, கொளுத்தப்பட்டது, கந்தல் தரித்திருப்பவன், கச்சமில்லாதவன் உத்தரீயமில்லாதவன் இவர்கள் யாவரும் **நக்னன்** (வஸ்த்ர மற்றவன்) எனக் கூறப்படுவர். இவர்கள் ச்ரௌத ஸ்மார்த்த கர்மாக்களை மனதினுல்ஸ்மரிக்கவும் அர்ஹதையற்றவர்கள். கச்சமின்றி செய்துவிட்டானுகில் மஹா பதிதனுகிருன். கர்மமும் ஆஸுரமாகும். உத்தரீயத்திற்குப் பதிலாக வேருெரு பூணூலை தரிக்கலாம். சுசிவோ என்ற ரிக்கால் வஸ்த்ர ப்ரோக்ஷணமும், தேவஸ்யத்வா என்பதால் அதை க்ரஹிக்கவும். அவதூதகும் ரக்ஷ: என்பதால் உதறவும், தரணி:, உதுத்யம் என்ற மந்த்ரங்களால் அதை ஸூர்யனுக்காய்க் காண்பிக்கவும், ஆவஹந்தீ என்பதால் அதை தரிக்கவும் வேண்டும். வஸ்த்ரம் ஈரமாயிருந்து அதை உடுத்திக்கொள்ள ஆவச்யகத்வம் எற்பட்டால் அதை ஏழு முறை காற்றில் உதறிப் பிறகு உடுக்க வேண்டியது. காலைத் தூக்கி வஸ்த்ரமுடுத்திக்கொள்ளக்கூடாது. செய்பவன் பித்ருக்களைக் கொன்றவனுவன். தர்ப்பண காலத்தில் வெண்பட்டு தரிப்பது உத்தமமாகும். **அஹதம்** என்ற புது வஸ்த்ரம் விவாஹ காலங்களில் மட்டுந்தான் தரிக்க அர்ஹமாகும். வண்ணுந்துறையில் ஸ்நானஞ் செய்யக்கூடாது. வஸ்த்ர நிஷ்பீடனம் ஸந்த்யாவந்தனத்திற்கு முந்தியும், மாத்யாந்ஹத்திற்குப் பிந்தியும், தர்சாதி ச்ராத்தங்களில் சராத்தானந்தரமும் செய்யவேண்டியது.

ஸ்நான பேதங்கள்

மந்திரமின்றி, விதி தவறினவன் விரதாவாக மூழ்கினவனே யன்றி பலன் ஒன்றும் உண்டாகாது. சரீரக் கஷ்டந்தான் மிச்சமாகும். மீன், ஆமை, தவளை, முதலைகள் ஸதா புண்ய தீர்த்தங்களில் முழுகிக்கிடந்தும் பலனை எப்படி அடைகிறதில்லையோ அதுபோல இவனுடையதுமாகும். பலனில்லாமற் போவதோடு

நெடுநாள் நரகவாழ்க்கையும் ப்ராப்தமாகும். ஸ்நானம் நித்யம், நைமித்திகம், காம்யம், க்ரியாங்கம், மலாபகர்ஷணம், க்ரியா ஸ்நானம், என அறுவகையாகும். தினந்தோறும் செய்யும் ப்ராதர், மாத்யாந்ஹிகஸ்நானங்கள் **நித்ய**மாகும்.

சண்டாளர், பிணப்புகை, தூரஸ்திரீ இவர்கள் நெருங்கி விட்டாலும் ஸ்பர்சிக்கத் தகாதவைகளை ஸ்பர்சிப்பது இவற்றைச் சுத்திசெய்துக் கொள்வதற்காகவுஞ்செய்வது **நைமித்திக ஸ்நான**மாகும். ஜனனம், மரணம், ஸங்க்ராந்தி, ச்ராத்தம், ஜன்மதினம், க்ரஹணம், பர்வங்கள் இவைகளும் நைமித்திகத்தில் சேர்ந்துவிடும்.

ஓர் பலனை விரும்பி (பசு, புத்ராதிகள்) சில விசேஷதினங்களில் செய்யப்படுவது **காம்ய ஸ்நானமாம்.**

ஓர் வைதிக க்ரியையைச் செய்யவேண்டி அதற்கு அங்கமாய்ச் செய்யப்படுவது **க்ரியாங்க ஸ்நான**மாகும்.

தேஹ ஆரோக்யத்தை உத்தேசித்து எண்ணெய் முதலிய தேய்த்துக்கொள்ளுதலுக்கு **மலாபகர்ஷண**மென்று பெயர். (தேஹ அழுக்கைப் போக்கிக் கொள்ளல்.)

நதி, புராண மஹிமைபெற்ற புண்ய தீர்த்தம் இவைகளில் செய்வதற்கு **க்ரியா ஸ்நான**மெனப்படும்.

ஸ்நானர்ஹ தீர்த்தங்கள்

நதி, தடாகம், குளம், ஸரஸ், வாய்க்கால், மலையருவி, ரிஷிகளால் புகழப்பட்ட தீர்த்தம், **நதம்** [கிழக்கேயுண்டாகி மேற்கு ஸமுத்திரத்தில் ஸங்கமமடையும் நதி], தேவகாதம், கிணறு முதலிய தீர்த்தங்கள் ஸ்நானத்திற்கு அர்ஹமாகும். மலையிலுண்டாகி ப்ரவஹித்து ஸமுத்திரத்தில் கலப்பதே பாவங்களை ஒழிக்கக்கூடிய **மஹாநதி** எனப்படும். சாந்த்ராயணம், மூன்று க்ருச்ரம், முப்பதினுயிரம் காயத்ரீ ஜபம், மஹாநதி ஸ்நானம் இந்நான்கிற்கும் பலன் துல்யமாகும். மலையிலோ, பூமியிலோ உண்டாகி வேறு நதியோடு கலந்துவிடுவது **ஸ்ரோத**

ஸாகும். மலைகளிலோ, வேறெங்கேயாவதோ வற்றாமலும், விசாலமாயும், தாமரையுடையதுமானதற்கு **ஸரஸ்** என்று பெயர். மலையிலாவது, பூமியிலாவது, வற்றாமல் கரைகளோடு கூடி குறுகியோ, விசாலமாயோ இருக்கும் ஜலாசயத்திற்கு **தேவகாதம்** என்று பெயர். நதியின் நீர் வெட்டிக்கொண்டு வந்து பயிர்களுக்கு உபயோகப்படும்படி தேக்கப்பட்டிருப்பதற்கு **நாளம்** என்று பெயர். தேக்கமான தீர்த்தங்களுக்கு **தடாகம்** என்றும், படித்துறைகளோடு சதுரமாய் கட்டப்பட்டிருக்கும் ஜலாசயத்திற்கு **குண்டம்** என்றும், மலையிலிருந்து விழுவதற்கு **தாரை** என்றும், வீடுகளிலும், நாம் வயல்கள் நடுவில் பார்க்கும் கிணறுகளுக்குக் **கூபம்** என்றும் பெயர். ஸரியான காரணமின்றி நதியைத் தாண்டலாகாது. ஸ்நானம் செய்வதற்குப் பரிசல், ஓடம் முதலியவற்றால் நதியைத் தாண்டலாகாது. பிறருடைய கூபம் கூடாதாகையால் அதிலிருந்து நாண்கு கை மண்ணை எடுத்து வெளியெறிந்துவிட்டு ஸ்நானம் செய்யவேண்டியது. இல்லாவிடில் அதன் சொந்தக்காரனின் பாவம் இவனை அணுகும். ஸ்நான பலனுமில்லை. இறங்க முடியாவிட்டால் மூன்று குடம் நீரையெடுத்து வெளியில் கொட்டிவிட்டு ஸ்நானஞ் செய்யவேண்டியது. பொது ஜனங்களுக்காக ஏற்பட்ட வாபீ, கூப, தடாகாதிகளுக்கு இம்மாதிரி செய்யவேண்டியதில்லை. ஆனால் அக்ரமத்தில் பணம் சேர்த்தவர், பதிதர், பயிரிடுபவர் இவர்களுடைய கிணற்றில் ஸ்நானம் செய்யும்படி ஏற்பட்டால் ஓர் க்ருச்ரம் செய்து கொண்டால் சுத்தி அடைகிறான். சண்டாளர் வெட்டப்பட்டதில் ஸ்நான பானம் செய்பவன் ப்ராஜாபத்ய க்ருச்ரத்திற்கு அர்ஹனாகிறான். அருகே நதியிருக்க வேறு தீர்த்தத்தில் ஸ்நானங்கூடாது. ஏராளமான நீரிருக்க உபாயமான அல்ப நீரில் ஸ்நானஞ் செய்யக் கூடாது. பர்வகாலந் தவிர மற்ற காலங்களில் ஸமுத்ர ஸ்நானமே கூடாது. பர்வ காலத்தில் ஓர் தடவை ஸமுத்திரத்தில் ஸ்நானஞ் செய்தானாகில் நூறாயிரம் ஜன்மங்களில் செய்திருக்கும் பாவங்களையும் துலைத்துவிடுகிறான். இதைத் தன் மனைவி கர்ப்பமாய் இருக்குங் காலத்தில் செய்யக் கூடாது. செய்தால் ஜனிக்கும் சிசு நெடுநாள் ஜீவித்திராது. புத்திரகாமி ஞாயிறு, செவ்வாய்களில்

பர்வங்கள் வந்தால் அத்தினங்களில் செய்யக்கூடாது. ஸேது ஸ்நானத்திற்குக் கால நியமம் யாதுமில்லை. ஸமுத்ர ஜலத்தால் ஆசமனங் கூடாது என்று ச்ருதியே விதித்துவிட்டது. தர்ப்பணம் மட்டும் செய்யலாம். ஸூர்யாஸ்தமனத்தின் பிறகு நதீ ஸ்நானம் கூடாது. ஓர் நதியில் ஸ்நானஞ் செய்யும்போது மற்றொன்றைப் புகழக்கூடாது. இவ்வித புண்ணிய தீர்த்தம், க்ஷேத்ரங்களுக்கும் உண்டு. அப்படிப்புகழ்ந்தால் புண்யம் போய்விடுசிறது ஆனால் கங்கை, கயை, குருக்ஷேத்ரம் ப்ரபாஸம், நைமிசம் இவைகளை ஸ்நான காலத்தில் ஸ்மரிக்க வேண்டியது. வண்ணான் துறையில் பத்துமுழம் ஒதுங்கி ஸ்நானம் செய்யலாம். ஸ்த்ரீ, சூத்ரர், நாஸ்திகர், ரோகிகள், குழந்தைகள், பாஷாண்டர், அசுசிகள் இவர்களுடன் சேர்ந்து ஸ்நானம் செய்யக்கூடாது. வற்றிப்போன நதிகளில் வெள்ளம்வந்தால் முதல் பத்து நாள் அதில் ஸ்நான பானங்கள் செய்யக் கூடாது. வென்னீர் ஸ்நானம் நிஷ்ப்ரயோஜனம், சரீர சுத்தியைத் தவிர. நைமித்திக ஸ்நானம் வெந்நீரில் ரோகிகளுக்குத் தவிர மற்றவர்களுக்கு ஸர்வப்ரகாரத்தாலும் த்யாஜ்யமாகும். செய்பவன் கோஹத்தி பாவத்தை அடைகிறான். ஆரோக்யம், புத்ரமித்ர லாபங்களும் ஏற்படாது. தேவாலய ஸமீபமான தீர்த்தம் அசுத்தமாயிருப்பினும் விரஜை, சிவகங்கைகளுக்கு ஸமமானதால் மகாபாபங்களைப் போக்கும் அதி புண்ய தீர்த்தமேயாகும். கௌபீனமில்லாமல் ஸ்நானம், ஆசமனம், முதலிய ஒரு கர்மாவும் செய்யக்கூடாது. ஒருவருக்கொருவர் பின்புறமாயிருந்து ஸ்நானஞ்செய்யக் கூடாது. ஸ்நானஞ் செய்த பிறகு பல் துலக்கக்கூடாது. கௌபீனத்தை மட்டும் தரித்து நக்னனாய்த் துணியைக் கசக்குபவனிடமிருந்து தேவபித்ருக்கள் யாவரும் பயந்து திரும்பித் தங்களிருப்பிடம்செல்லுகின்றனர். காயத்ரீமந்திரத்தால் மண் வெட்டியால் பூமியைவெட்டி மேல் மண்ணைத் தள்ளி அடி மண்ணை க்ரஹித்து அதையும் கோமயம், அருகு, இவைகளைப் பரிசுத்தமான ஸ்நானவிடத்தில் வைத்துக்கொண்டு ஆந்ஹிக மந்த்ர ரீதியாய் ஓர் ம்ருத்திகையால் சிரஸையும், இரண்டால் தொப்புள் வரையிலும், நான்கால் அதன் கீழ்ப்ரதேசங்களையும், ஆறு ம்ருத்திகையால் பாதங்களையும் போட்டு அலம்பி

பிறகு கோமயத்தாலும் தேஹத்தைப் போட்டுச் சுத்தி செய்து கொண்டு, அருகம்புல்லால் தேஹ முழுதும் மந்த்ரபூர்வகமாய் ஸ்பர்சித்து, கங்கா ஆவாஹனாதிகளையும், தன் சிரஸிலிறைத்துக் கொள்ளுதல்களையும், விஸ்தாரமாய்ச் செய்து கொள்ள வேண்டியது.

நைமித்திக ஸ்நானம்

சண்டாளர், ப்ரஸவித்தவள், தூரஸ்த்ரீ, பதிதன், பிணம், ஆசௌசமானவர், ஸோம விக்ரியம் செய்தவன், இவர்களைத் தீண்டினாலும், இவர்களைத் தீண்டினவனைத் தீண்டினாலும், ஸசேல ஸ்நானம் (கட்டியிருக்கும் துணியுடன்) செய்யவேண்டும். பிறகு அக்னியை ஸ்பர்சித்து நெய்யைப் பானம் செய்ய வேண்டும். தெரியாமல் தீண்டிவிட்டால் தீண்டினவர், அவரைத் தீண்டினவர்களுக்கு ஸ்நானம் உண்டு. தெரிந்துதீட்டுப் பட்டவன், அவனைத் தொட்டவன், தீட்டுப்பட்டவனைத் தொட்டவனைத் தொட்டவன் இம் மூவருக்கும் ஸ்நானம் உண்டு. இப்படிப்பட்ட நான்காம் தீட்டுப்பட்டவனுக்கு ஆசமனம் மட்டும் தான். அதற்கும் மேற்பட்டு ஐந்தாமவனுக்கு ப்ரோக்ஷணத்தோடு ஸரி. தீபத்தின் சுடர், எண்ணெ, பஸ்மத்தில் எதையாவது ஸ்பர்சித்தாலும், பிணப் புகைப்பட்டாலும், அஷ்டமி, சதுர்தசி, பர்வகாலங்கள் பகல் முதலிய நிஷித்த காலத்தில் மனைவியைப் புணர்ந்தாலும், இரவுகளிலும் கர்ப்பமாகக் கூடிய காலங்களிற் புணர்ந்தாலும், துஸ்வப்னங் கண்டாலும், க்ஷௌரம் செய்துகொண்டாலும், ப்ரேதத்துடன் சென்றாலும், ஜைனர், பாசுபதர், சார்வாகர், பௌத்தர், பிணஞ் சுமந்தவன், நாஸ்திகர், அன்யஜாதி விருத்தியைக் கைக்கொண்ட பிராம்ஹணர், தன் விருதங்களை விட்ட பிரம்ஹசாரி இவர்களை ஸ்பர்சித்தாலும் ஸசேல ஸ்நானம் செய்யக்கடவன்.

சண்டாளரை நெருங்கினால் ஸ்நானமும், பேசினால் பிராம்ஹணருடன் பேசலும், பார்த்தால் சந்த்ர, ஸூர்யர்களைப் பார்த்தலுமே பிராயச்சித்தமாகும். ஸ்நானம் செய்தவுடன் இவர்களைப் பார்த்தால் மறுபடியும் ஸ்நானம் செய்தே சுத்தியடைகிறான். சண்டாளருக்கு நான்கு நுகத்தடி (நுகத்தடி என்பது

நான்கு முழம்) தூரமும், ஸூதிகைக்கு மூன்று நுகத்தடியும், தூரஸ்த்ரீக்கு இரண்டும், பதிதர்க்கு ஒரு நுகத்தடி தூரமும் விலகவேண்டியது, இத்தூரத்திற்குட்பட்டு நெருங்கிவிட்டால் ஸசேல ஸ்நானம் செய்யவேண்டியது. சூத்ர ஸ்பர்சத்திற்கு ஒரு முழுக்கும், அந்திமனை ஸ்பர்சித்தால் பத்தும், சண்டாளருக்கு முப்பத்திரண்டும், பதிதருக்கு முப்பது முழுக்கும், ருதுஸ்த்ரீ ஸ்பர்சத்திற்கு முப்பத்திரண்டும் ஒரே மூச்சாய் மூழ்கிச் சுத்தமாகிறான். சண்டாளர் சேரிக்கு இருநூறு அடி ஒதுங்க வேண்டும். தூமை ஒழுகுவதை அறியாமல் இருப்பவள் ஸ்பர்சித்த வஸ்துக்களைக் கழுவுவதிலேயே சுத்தியும், அருகே இருப்பவர்களுக்குத் தீட்டுமில்லை. கடைத்தெரு, பட்டணத்திற்குச் செல்லும் மார்க்கம், இன்னும் ஒதுங்க முடியாத சில நெருக்கமான இடங்களில் எவ்வளவு தூரம் ஒதுங்க ஸௌகரியப்படுகிறதோ அதுவரையில் அவசியம் ஒதுங்கவேண்டியது. கீற்றுத் தட்டி, சுவர் இவைகளால் மறைக்கப்பட்டவிடங்களில் நெருங்கினால் ஸ்நானமே வேண்டியதில்லை: வஸ்திரத்தால் மறைக்கப்பட்ட அங்கத்தை ஸ்பர்சித்தாலும் அது அங்கத்தை ஸ்பர்சித்தது போல்தான் ஆகும். நாற்பதடிக்குட்பட்ட அந்திமர், ச்வபாகர், பதிதர் முதலியோருடைய நிழலை பிராம்ஹணன் மிதித்தானாகில் ஸ்நானம் செய்யவேண்டியது. கூலிக்காகக் கோவில்பூஜை செய்யும் தேவலர் ஹவ்யகவ்யங்களில் வர்ஜிக்கத் தகுந்தவர்களாகையால் அவர்களை ஸ்பர்சித்தாலும் ஸசேல ஸ்நானம் செய்யவேண்டியது. தவிரவும் நாய், பன்றி, கழுதை, ஒட்டகம், நரி, குரங்கு, காக்கை, கோழி, கழுகு, பல்லி, அரணை, ஓணான், மாம்ஸ பசையோடிருக்கும் எலும்பு இவைகள் ஸ்பர்சித்தாலும் ஸ்நானம் உண்டு. இவைகள் தேஹத்தில் மலமூத்ர விஸர்ஜனம் செய்துவிட்டாலும் ஸசேல ஸ்நானமும் மஹா வ்யாஹ்ருதிகளால் ஹோமமும் செய்யவேண்டியது. பருந்து, குரங்கு, பூனை, கழுதை, நாய், பன்றியின் மல ஸ்பர்சத்திற்கு ஸசேல ஸ்நானம் உண்டு. தான் அசுத்தனாயிருந்து உன்மத்தன், தூரஸ்த்ரீ, நாய், கோழி முதலிய அஸ்பர்ச வஸ்துக்களை புத்திபூர்வகமாய் ஸ்பர்சித்தால், உபவாஸத்தினாலாவது க்ருச்ரத்தினாலாவது சுத்தியடைகிறான். அசுத்தனான ப்ராம்ஹண

னுக்கு அசுத்தனான மற்றோர் ப்ராம்ஹணனாலோ வேறு அசுத்த வஸ்துவாலோ தீட்டு ஏற்பட்டால் ஒரு நாள் உபவாஸமும் பஞ்சகவ்ய ப்ராசனமும் விதிக்கப்பட்டது. போஜன காலத்தில் நாய், சண்டாளர், தூரஸ்த்ரீ முதலியோர் பார்த்தால் ஸ்நானம்செய்து 'மாநஸ்தோகே' ரிக்கை ஜபிக்கவேண்டியது. சாப்பிட்டுக் கை அலம்புவதற்கு முன் சூத்ரனைப் பார்த்துவிட்டால் அவனோடு கூடவே புசித்தவனாகிறான். இறந்தவனைக் குறித்து பத்து தினங்களுக்குள் துக்கம் விசாரித்தால் ஸ்நானத்தால் சுத்தி. பத்து தினங்களுக்கு மேற்பட்டுவிட்டால் ஆசமனமே போதும். குழந்தைகளுக்குப் பற்கள் முளைக்கிறவரையில் **சிசு** என்றும், சௌளம் வரையில் **பாலகன்** என்றும், உபநயனம் வரையிற் **குமாரன்** என்றும் பெயர்கள் வ்யவஹரிக்கப்படும். தூரஸ்த்ரீ முதலிய ஸ்பர்சத்தில் சிசுவிற்கு ப்ரோக்ஷணமும், பாலனுக்கு ஆசமனமும், குமாரனுக்கு ஸ்நானமும் செய்விக்கவேண்டும். உத்தராபோசனம் செய்யாமல் போஜன ஸ்தானத்தைவிட்டெழுந்திருந்தால் உடனே ஸ்நானம் செய்யவேண்டியது. செய்யாவிடில் அவனுக்குச் சுத்தியில்லை. அசுத்தன் நாய் முதலியவைகளால் கடிக்கப்பட்டால் ஸ்நானம்செய்து எண்ணூறு காயத்ரீஜபம் செய்த பின் சுத்தி ஏற்படுகிறது. சக்தனுக்கு மஹாநதீ ஸ்நானம், ப்ராம்ஹணோத்தமர்கள், ஸமுத்திரம் இவர்களுடைய தர்சனம் செய்துகொண்டு ஜபிக்கவேண்டும். ஓர் விருதத்தில் இருப்பவனை நாய் முதலியன கடித்துவிட்டால் அவன் மூன்று நாள் உபவாஸமிருந்து நெய், பொன், குச தீர்த்த ப்ராசனங்களைச் செய்துகொண்டு விரதத்தை முடிக்க வேண்டும். கடிக்கப்பட்டவன் பிரம்ஹசாரியாய் இருந்தால் மூன்று நாள் கழித்தும், க்ருஹஸ்தனானால் இரண்டு நாட்கள் கழித்தும், அக்னிஹோத்ரியானால் ஒரு நாள் கழித்தும்தான் சுத்தி ஏற்படும். இரவு நடு இரு யாமங்களில் ஸ்நானபானங்கள் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்வாமி தர்சனம் செய்தவுடனும், பந்துமித்ரர்களை வழியனுப்பிவிட்டுத் திரும்புகையிலும், போஜனம் செய்தவுடனும், வ்யாதிகாலத்திலும், நதியில் எண்ணை தேய்த்துக்கொண்டும் ஸ்நானங்கள் செய்யக் கூடாது. அஸ்தமித்த பிறகு நதீ ஸ்நானங்கூடாது. நதி தீர்த்தமும் கொண்டுவரக் கூடாது.

ஸ்நான, தான, ஜப, ஹோமங்கள் க்ரஹணமின்றி இரவில் செய்யக்கூடாது. யாத்திரை, யாகம், க்ரஹணம், ஸங்க்ராந்தி, விவாஹம், ஜனனமரணங்கள், காம்யவ்ருத ஸ்நானங்கள் இவைகளில் ராத்ரி ஸ்நானம் செய்யவேண்டியது.

க்ரஹண ஸ்நானம்

க்ரஹண புண்ய காலங்களில் உலகிலுள்ள தீர்த்தங்கள் யாவும் [கிணறு உள்பட] கங்கா தீர்த்தத்தோடும், ப்ராம்ஹணர் யாவரும், சதுர்முக ப்ரஹ்மாவோடும், ஸர்வதானமும் பூதானத்திற்கும் ஸமமாகும். ரோகியாயிருப்பவன்கூட வென்னீரிலாவது ஸ்நானம் செய்யவேண்டுமேயொழிய க்ரஹணஸ்நானத்தை இரவாயிருந்தாலும் அந்த சமயத்தில் செய்யாமலிருக்கக் கூடாது. ஜனன மரணசௌசமுள்ளவனும் ஸ்நானம் செய்யவேண்டும். செய்யாதவன் ஏழு ஜன்மங்களில் குஷ்டரோகியாய்ப் பிறந்து அளவற்ற துக்கங்களை அனுபவிப்பான். இஜ்ஜன்மத்திலும் சீக்கிரத்தில் யமனை அடைகிறான். க்ரஹண புண்ணிய காலத்திலும், புத்திர ஜனன காலத்திலும் ஹிரண்ய ரூபமாயாவது ச்ராத்தஞ் செய்யவேண்டியது. ஆமரூபத்திலும் செய்யலாம். க்ரஹணத்திற்கு முன்பு சமையலானவைக்கு ஸூதக தோஷம் ஏற்பட்டுவிட்டபடியால் பின்பு அதைப் புசிக்கக் கூடாது. க்ரஹணத்தின் ஆத்யந்த புண்யகாலம் முழுவதும் ஜபம் செய்யவேண்டியது. தூங்கக்கூடாது. போஜனமும் செய்யக்கூடாது. விட்டபிறகு ஸ்நானம் செய்து போஜனம் செய்யக்கடவன். ச்ராத்தம் [தர்ப்பண ரூபத்திலாவது] செய்யாதவன் மீளா நரகத்திற்காளாகிறான். க்ரஹண ஸ்பர்சகாலத்தில் ஸ்நானம் பிறகு ஜபம், ஹோமம், மோக்ஷகாலத்தில் தானம், மோக்ஷமான பிறகு ஸ்நானமும் செய்ய வேண்டியது. ஸூர்யக்ரஹணத்தில் ஆரம்பத்திலும், சந்த்ர க்ரஹணத்தில் விட ஆரம்பிக்கும் பொழுதும் தர்ப்பணம் செய்யவேண்டும். க்ரஹணத்தில் ஆதி முதல் அந்தம் வரையிலுமே புண்யகாலமாகும். ஞாயற்றுக்கிழமை ஸூர்ய க்ரஹணமும், திங்கட்கிழமை சந்திரக்ரஹணமும் ஸம்பவிப்பதற்கு **சூடாமணி** புண்ணியகாலமென்று பெயர்.

இவ்வித க்ரஹணத்திற் செய்யும் தானாதிகளுக்கு மற்ற க்ரஹணங்களை விட கோடி பங்கு அதிகமான பலனுண்டாம். மோக்ஷமாகாமலேயே க்ரஸ்தாஸ்தமாய் விடுங்காலங்களிற் அது த்ருஷ்டிக்குத் தெரியும் வரையிற்றான் புண்ணியகாலமாகும். பிறகு மறுபடியும் சுத்தமாய் மறு ராத்ரியோ பகலோ சந்த்ர ஸௌர்ய க்ரஹணங்களில் தெரிந்தபிறகு ஸ்நானஞ்செய்து போஜனம் செய்யவேண்டியது. தெரியாத க்ரஹணங்களுக்குப் புண்ணிய காலம் இல்லை. க்ரஹணத்திற் போலவே ஸங்க்ராந்தி புண்ணிய காலத்திலும் ஸ்நானம் செய்யாதவனுக்கு எழு ஜன்மங்களில் ரோகியாய் ஜனித்து மிகுந்த துக்கங்களை அனுபவிக்கிறான். அப்புண்ணிய காலங்களிற் கொடுக்கும் தான ஹவ்யகவ்யங்களை ஸௌர்யன், செய்பவர்களுக்கு எழு ஜன்மங்கள்தோறும் திருப்பித் திருப்பிக் கொடுத்துக்கொண்டு வருகிறான்.

பனிரண்டு ஸங்க்ராந்தி புண்ணியகால நிர்ணயம்

மேஷம் முதலிய பனிரண்டு ராசிகளில் ஸௌர்யன் க்ரமமாய் ஸஞ்சரித்து வருகையில் ஒரு ராசியிலிருந்து மற்றோர் ராசிக்கு ப்ரவேசிக்குங்காலமே ஸங்க்ராந்தி புண்ணிய காலமெனப்படும். [தை] மகரஸங்க்ராந்திக்கு உத்தராயணமென்றும் கடகத்திற்கு [ஆடி) தக்ஷிணாயனமென்றும் இரண்டு அயனங்களாகும். முந்தியதற்கு பிறந்த பிறகு இருபது நாழிகையும் பிந்தியது பிறப்பதற்கு முந்தியே இருபது நாழிகையும் புண்ய காலமாகும். மேஷம் [சித்திரை] துலாம் [ஐப்பசி] இவ்விரு விஷுவ புண்ணியகாலங்களுக்கும், பிறப்பதற்கு முன்பின் பத்துபத்து நாழிகைகள் புண்ணியகாலமாகும். கன்னி [புரட்டாசி], மிதுனம் [ஆனி], மீனம் [பங்குனி], தனுஸ் (மார்கழி) இந்நான்கு ஷடசீதீ புண்ணியகாலங்களுக்கும் வந்த பிறகு அறுபது நாழிகை புண்ணியகாலமாகும். வ்ருஷபம் [வைகாசி], வ்ருச்சிகம் [கார்த்திகை], கும்பம் [மாசி], ஸிம்ஹம் [ஆவணி] இந்நான்கு விஷ்ணுபதி புண்ணியகாலங்களுக்கும் முன்பின் பதினாறு நாழிகைகள் புண்ணியகாலங்களாகும். விஷ்ணுபதி நாலும் இரு விஷுவங்களை விடப் புண்ணியமானவைகள். இரவு முன்பாதி ஸங்க்ரமணத்திற்குப் பகல் பின்பாதியும், இரவு பின்

பாதி ஸங்க்ரமணத்திற்கு மறுநாட் பகல் முன்பாதியும் புண்ணிய காலமாகும். மாஸப் பிறப்புகளில் எவ்வளவுக்கெவ்வளவு ஸங்க்ரமண காலத்தை நெருங்கி இருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு அப்புண்ணிய காலதர்ப்பணத்திற்கு விசேஷமுண்டு.

தூரஸ்த்ரீ ஸ்நானம்

ஜனன மரணாசௌசங்கள் நிவர்த்தியடையும்பொழுது ஸங்கவகாலத்தில், அதாவது உதித்து ஐந்து நாழிகைக்குமேலும் ருதுமதி ஸ்நானம் ஆறு நாழிகைக்குமேலும் செய்யவேண்டியது. ரோகம், மோகங்களாலும் ரஜஸ் வெளிப்படுமாகையால் அப்பொழுது ரஜஸ்வலா தோஷமில்லை. ருது ஸ்நானம் ஆனபிறகு பனிரண்டு தினங்களுக்குள் ரஜஸ் ஸம்பவித்தால் மூத்ர விஸர்ஜனத்திற்கு ஏற்பட்ட சௌசமே இதற்கும் விதிக்கப்பட்டது பதினெட்டு தினங்கள் வரையில் ஸ்நானமும் அதற்கு மேற்பட்டால்தான்அசுசியும் விதிக்கப்பட்டிருக்கிறது. பதினெட்டாவது தினமாகில் ஒரு நாள் தீண்டலும், பத்தொன்பதாவது தினமாகில் இரண்டு நாள் தீண்டலும், இருபதாவது தினம் முதல் மூன்று தினம் தீண்டலும் விதிக்கப்பட்டது. பதினெட்டு தினங்களுக்கு மேல் வாடிக்கையாய் ரஜஸ் ஸம்பவிக்குமானால் அவர்கள் மூன்று நாள் வீட்டைவிட்டு ஒதுங்கியே இருக்கவேண்டும். ப்ரஸவித்தவளுக்கு இருபது தினங்களுக்குப் பிறகு ரஜஸ் ஸம்பவித்ததேயானாலும் அவள் ரஜஸ்வலை ஆகமாட்டாள். தீண்டல் தோஷமில்லை. அது நின்றவுடன் ஸ்நானத்தினாலேயே சுத்தியடைவாள். தூரஸ்த்ரீயானவள் முதல் நாள் சண்டாள ஸ்த்ரீயோடும், இரண்டாம் நாள் வண்ணாத்திக்கும், மூன்றாம் நாள் சூத்ர ஸ்த்ரீயோடுமொப்பாவள். நான்காம் நாள் ஸுமங்கலிகள் அறுபது மண்ணும், விதவைகள் நூற்றிருபது மண்ணும், இட்டு சௌசம் செய்துகொண்டு இருபத்தோரு முறை மண்ணால் சரீரத்தைத் தேய்த்து நூறு தடவை மூழ்கினால்தான் சுத்தியடைகிறாளேயொழிய ஸ்நானமாத்திரத்தினாலேயே சுத்தி கிடையாது. பிறகு ஸுமங்கலியானவள் ஸௌர்ய பகவானைக் குறித்து புத்திரனைப் பிரார்த்தித்து மூன்று கவளங்கள் அன்னத்தைப் புசிக்க வேண்டியது. அப்படிச் செய்யாத

வள் மிகுந்த தோஷத்தை அடைகிருள். ஐந்தாம் நாள் ஸ்நானத்திற்குப் பிறகு தான் வைதிக காரியங்களுக்கு அர்ஹமாவள். ஓர் ரஜஸ்வலைக்கு நாய், காக்கை, சண்டாள ஸ்பர்சம் ஏற்பட்டால் அவள் நான்காம் நாள் ஸ்நானம் செய்யும் வரையில் பட்டினி கிடக்கக் கடவள். புத்தி பூர்வகமான ஸ்பர்சத்திற்கு சாந்த்ராயண, ஸாந்தபன க்ருச்ரங்கள் விசேஷ ப்ராயச்சித்தங்களாய் விதிக்கப்பட்டிருக்கின்றன. ரஜஸ்வலையாயிருக்கும் காலத்தில் ஜனன மரணசௌசங்கள் ஸம்பவித்தால் ஸ்நானம் செய்து போஜனம் செய்யக் கடவள். ரஜஸ்வலைகள் ஒருவரையொருவர் தொட்டுக்கொண்டால் இருவரும் ஸ்நானதினம் வரையிற் பட்டினி கிடக்கவேண்டியது. கீழ் ஜாதி தூரஸ்த்ரீகளோடு ஸ்பர்சம் ஏற்பட்டால் க்ருச்ரம் முறையே கால், அரை, ஒன்றுமாகும். ரஜஸ்வலையின் போஜன பாத்திரத்தை ஸ்பர்சித்து ஸ்நானம் செய்யாமற் புசித்தானுகில் ஒரு நாள் உபவாஸமிருப்பின் சுத்தியுண்டாகும். அவள் வஸ்த்ரத்தைத் தொட்டு ஸ்நானம் செய்யாமற் புசித்தானுகில் மூன்று நாள் உபவாஸமிருக்கக் கடவன். ரஜஸ்வலா உச்சிஷ்டத்தைப் புசிப்பானுகில் ஸாந்தபன க்ருச்ரம் செய்யக் கடவன். போஜன காலத்தில் தூரஸ்த்ரீயைப் பார்த்தால் உடனே ஸ்நானம்செய்து ப்ரம்மகூர்ச்சம் பானம் பண்ணக் கடவன். சண்டாள தர்சனம் ஏற்பட்டுவிட்டால் மூன்று நாள் உபவாஸமிருக்கக்கடவன். இவ்விதியே தூரஸ்த்ரீக்குமாம். போஜன காலங்களில் ரஜஸ்வலைகள் கீழ் ஜாதியர்களால் பார்க்கப்பட்டால் ஸ்நான தினம் வரையில் பட்டினி கிடக்கக்கடவர். அசக்தர்கள் ஸ்நானதினம் வரையில் மூன்றல்லது ஐந்து ப்ராம்ஹணர்களுக்குப் போஜனம் செய்துவைத்துக்கொண்டு வரவேண்டியது.

காம்ய ஸ்நானம்

காம்ய ஸ்நானங்களுக்கு நியமங்கள் விசேஷமாய்க் கூறியிருக்கின்றன. ஸந்தானம், ஸம்பத்து பலப்ராப்திகளும் விசேஷமாயுண்டு. ஆனுல் நியமங்கள் தவ்றி நடப்பின் இருக்கும் ஆயுஸ், ஐச்வர்யம், பசு, புத்திராதிகளின் நாசமும் விசேஷமாய் ஏற்பட்டு விடுமென்றிருக்கிறது. துலா ஸ்நானம், மாக (மாசி) ஸ்நானங்களுக்கும் விசேஷ பலன் கூறப்பட்டிருக்கின்றன.

இவை பெரும்பாலும் ஸ்த்ரீ சூத்ரர்களுக்குத்தான் உத்தேசம். மற்ற புருஷர்களுக்கோ நித்தியத்திலேயே உஷஸ்நானமும் விசேஷ பலன்களும் ஸ்நான கட்டத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. அது தவறி இம்மாதங்களில் மட்டும் காம்யமாய் ஸ்நானம் செய்பவர்களுக்கும் விசேஷ பலன் உண்டாகாது.

அப்யங்கஸ்நானம். (எண்ணெய் தேய்த்துக் கொள்ளல்)

ஜனனம், மரணம், தந்ததாவனம், மைதுனம், அப்பியஞ்ஜனம், உதய ஸ்நானம் இவைகளைச் செய்யும் ஸமயத்தில் எது திதியோ அதுவே திதியாகும். அப்யங்க ஸ்நானத்தில் திதி ஒரு பங்கும், நக்ஷத்ரம் நாலு பங்கும், கரணம் ஆறு பங்கும், வாரம் எட்டு பங்கும் அதிக பலமுடையவைகளாகும். திங்கள், புதன், சனி வாரங்கள் எண்ணெய் தேய்த்துக்கொள்ள அர்ஹமாகும். த்விதீயை, த்ருதீயை, சதுர்த்தி, பஞ்சமி, நவமி, த்ரயோதசி இத் திதிகளும் கூடுமானவையே. மற்ற திதி வாரங்களும், ஜன்ம நக்ஷத்ரம், மாஸப் பிறப்பு, வ்யதீபாதம், சித்திரை, ஹஸ்தம், திருவோணம், திருவாதிரை, உத்திரம், கேட்டை, வ்ரததினம், க்ஷௌரம் செய்துகொண்டநாள், விவாஹம், ஸூதக துக்க காலங்கள், பிணத்துடன் சென்றவன் இத்தினங்களில் தைல ஸ்நானம் கூடாது. தைலத்தைத் தொட்டுவிட்டாலே லக்ஷ்மீகடாக்ஷம் போய்விடும். ஸங்க்ரமணம், அஷ்டமி, அமா, பூர்ணிமா, சதுர்தசி இவைகளுக்குப் பஞ்ச பர்வங்கள் என்று பெயர். இவைகளில் தைல ஸ்நானம், மைதுனங்களைச் செய்பவர் மல மூத்ரம் நிறைந்த நரகத்தை அடைவதுந்தவிற சண்டாள யோனியிலும் ஜனிப்பர். அஷ்டமியில் எண்ணெய் குடிப்பவன் முன்னேழு ஜன்மங்களிற் செய்த புண்ணியத்தை இழந்துவிடுகிருன். துக்கம், காந்தி, அற்பாயுஸ், ஸம்பத்து, தரித்திரம், வ்யாதி ஸர்வ கார்யஸித்திகளே ஞாயர் முதலிய வாரங்களுக்கு முறையே அப்யங்க ஸ்நான பலனுகும். சிரஸில் தேய்த்துக்கொண்ட எண்ணெயால் தேஹத்தை தொடவுங் கூடாது. ஸுரையில் மூழ்கினவனுக்காகிலும் பிராயச்சித்தம்விதிக்கப்படுகிறது. உஷ:பராத:காலங்களில் எண்ணெய் தேய்த்துக் கொள்ளுபவனுக்குப் ப்ராயச்சித்தமே இல்லை. அதாவது

உதித்து ஐந்து நாழிகைக்கு மேற்பட்டுதான் தைல ஸ்நானம் ஆசரிக்க வேண்டியது. இது தீபாவளி ஒரு தினத்திற்கு மட்டுந்தான் கூடும். நிஷித்த திதி வார நக்ஷத்ரங்களில் எண்ணெய் தேய்த்துக்கொள்ள இச்சிப்பவன் எண்ணெயோடு கொஞ்சம் நெய்யோ, ஜலமோ விட்டுத் தேய்த்துக்கொண்டால் தோஷம் ஏற்படுகிறதில்லை.

தீபாவளி ஸ்நானம்

தைல ஸ்நானம்செய்து ஸம்பத்தை அடைவதற்காக புது வஸ்த்ரம் தரித்து தீபங்களால் நீராஜனம் என்பது லக்ஷ்மியிடம் இதில் செய்யப்படுவதால் இதை **தீபாவளி** என்கின்றனர். தீபாவளி தினத்தில் தைலத்தில் லக்ஷ்மியும், வெந்நீரில் கங்கையும் வஸிக்கிறார்கள். இவ்விரண்டினால் ஸ்நானம் செய்பவன் தரித்திரத்தைத் துலைத்துக்கொள்ளுகிறான். நரகாஸுரனை பகவான் வதைத்த புண்ணியகாலமாகையால் நரக சதுர்தசி ஸ்நானம் ஜனங்களுக்கு நரக பீதியைப் போக்கிவிடுகிறது. சுத்த பாத்திரத்தில் எடுத்து வைக்கப்பட்ட தீர்த்தம் ஓரிரவு சென்றதேயானால் அபரிசுத்தமாய் விடும். ப்ராம்ஹணர்களுக்கு தைலாப்யங்கம் செய்வித்தானாகில் நூறு வருஷம் கங்கையில் ஸ்நானம்செய்து அடையக்கூடிய பலனை ஸந்தேஹமின்றி அடைகிறான்.

க்ரியா ஸ்நானம்

தேவதா நிர்மாணமான புண்ணிய தீர்த்தம், புண்ணிய நதிகள் இவைகளில் யாத்திரைசெய்து ஸ்நானம் செய்வதே க்ரியா ஸ்நானமாம். இதில் முதலில் ஸ்நானம் விதிப்படி செய்து பிறகு ஸமந்த்ரகமாய் அகமர்ஷணாதிப் பல ரிக்குகளைச் சொல்லி ஸ்நானம் செய்வதே விதியாகும். க்ருஹஸ்தர்கள் குடும்பத்தை விட்டு தீர்த்தாடனம் செய்வதை ரிஷிகள் அங்கீகரிக்கவில்லை. யாத்திரையில் குடைபிடித்துச் சென்றால் தீர்த்த யாத்திரையின் காற்பலனையும், பாதரக்ஷை தரித்துச் சென்றால் பாதி பலனையும், வாஹனங்களிற் சென்றால் முக்காற் பங்கு பலனையும், டோலிகை, பல்லக்கு முதலியவைகளிற் சென்றால் முழுபலனையும், மாட்டு வண்டியிற் சென்றால் முழுபலன் போவ

தோடு அதன் தேஹத்தில் எத்தனை மயிர்களுண்டோ அத்தனை வருஷங்கள் அதி பயங்கரமான நரக வாஸத்தையும் அடைகிறான். பிறர் உதவியாற் செய்தவன் பதினாறில் ஒரு பங்கு பலனையும், வேறொரு கார்யமாய்ப் போகும் நடுவில் இது நேர்ந்தால் பாதி பலனையும் வேறொருவருக்கு ஸஹாயமாய்ச் சென்றால் ஸ்நான பலனை மட்டுமும் அடைகிறான். புண்யாத்மாவாய் இருப்பவர் செய்யின் புண்ணிய தீர்த்த ஸ்நான பலன் முழுமையும் அடைகின்றனர். பிதா, மாதா, குரு முதலிய வேறொருவரை உத்தேசித்து ஸ்நானம் செய்தால் அவர்கள் அதின் பனிரண்டில் ஒரு பங்கு பலனை மட்டுமே அடைகின்றனர். அவர்களால் விதிக்கப்பட்டு ஒருவன் செய்தால் அவர்கள் அரைக்காற் பங்கு பலனையடைகின்றனர். தீர்த்தத்தில் ஸ்நானம்செய்த புண்ணிய பலனை விற்கக்கூடாது. பெற்றோர், குரு முதலியவர்களுக்குப் புண்ணியத்தை ஸமர்ப்பிக்கலாமே யன்றி அவர்கள் அனுமதி கொடுத்தாலும் பாபத்தை ஸமர்ப்பிக்கவே கூடாது. ஜீவனத்திற்காக அனுஷ்டிக்கப்படும் வைதிக கர்மாக்கள் பலனைத் தருகிறதில்லை. ஸரியாய்த் தெரிந்துகொள்ளாத மந்த்ர ஜபமும் வ்யர்த்தந்தான். உலகிலுள்ள ஸர்வ தீர்த்தங்களும் ஸமுத்திரத்தில் இருக்கின்றன. ஸமுத்திரத்திலுள்ள ஸர்வ தீர்த்தங்களும் ப்ராம்ஹணனுடைய வலது பாதத்தில் வஸிக்கின்றன. ஆசாரம், ஸத்யம், பொறுமை, ஜ்ஞானங்களையுடையவனுக்கு ஒரு தீர்த்த யாத்திரையும் வேண்டியதேயில்லை. எங்கு பகவான் வஸிக்கிறானோ அதுவே புண்ணிய தீர்த்தமும் தபோவனமும் ப்ரம்ஹமுமாகும். கோதாவரி, தாம்ரபர்ணீ, துங்கபத்ரை, க்ருஷ்ணை, காவேரி, பாலாறு, இந்த ஆறு நதிகளும் விந்திய பர்வதத்திற்குத் தெற்கே மஹாநதிகள் என்றும், கங்கை, யமுனை, நர்மதை, ஸரஸ்வதி, விசோகை, விதஸ்தை இவ்வாறும் விந்தியத்திற்கு வடக்கே மஹாநதிகள் என வழங்கப்படும். பர்வதத்திலுண்டாகி ஸமுத்திரத்தையடைபவைகளே மஹாநதிகளாகும். கங்கைக்கு ஒரு காலத்திலும் ரஜோ தோஷமே கிடையாது. ஆடி பிறந்து முதல் மூன்று நாட்களுக்கு கங்கை தவிர ஸர்வ நதிகளுக்கும் ரஜோதோஷம் உண்டென்பர். ஆனால் உபாகர்மம், மரணாசௌசம், க்ரஹண

ஸ்நானங்களுக்கு ரஜோ தோஷத்தைக் கவனிக்கவேண்டியதில்லை. வேறு ஜலம் ஸ்நான பானங்களுக்குக் கிடைக்காவிடில் ரஜோ தோஷமுள்ளவைகளாயினும் நதியில் ஸ்நான பானங்களைச் செய்யலாமென்று விதித்தனர்.

கௌண ஸ்நானம்

தலையை நனைக்காமல் கழுத்து வரையில் அல்லது இடுப்பு வரையில் சரீரத்தை ஜலத்தில் நனைப்பதற்கும், ஈரவஸ்த்ரத்தால் உடம்பைத் துடைத்துக்கொள்ளுவதற்கும் **கௌண ஸ்நானம்** என்று பெயர். ஈரவஸ்த்ரத்தால் துடைத்துக் கொள்வது **காபில ஸ்நானம்** எனப்படும்.

ஸ்நானங்கள் தினப்படி ஆசரிக்க வேண்டியது ஐவிதமாகும். அவை வாருணம், ப்ராம்ஹம், ஆக்னேயம், வாயவ்யம், திவ்யம் என்பதே.

ஜலத்தில் இறங்கி, மூழ்கி, வருணஸூக்த, அகமர்ஷணாதிகளைச் சொல்லி தேவரிஷி, பித்ரு தர்ப்பணங்களைச் செய்வதே **வாருண**மாம்.

ஆபோஹி என்ற ப்ரோக்ஷண மந்த்ரத்தால் பாதம், சிரஸ், மார்புகளிலும், சிரஸ், மார்பு, பாதங்களிலும், மார்பு, பாதம், சிரஸுகளிலும் முறையே ஒவ்வொரு மந்த்ரத்தால் ப்ரோக்ஷித்துக் கொள்ளுவது **மந்த்ர ஸ்நானம்** அல்லது **ப்ராஹ்ம**மாம்

அக்னிஹோத்ர, அல்லது ஔபாஸனாக்னியின் பஸ்மத்தால் [திருநீறு] சரீரம் முழுவதிலும் பூசிக்கொள்வது **ஆக்னேய**மாம்.

பசுவின் குளம்புகளின் தூள்கள் மேலே படும்படி இருப்பது **வாயவ்ய**மாம்.

வெயிலுடன் கூடிய மழையில் நனைவது **திவ்ய**மாம்.

ஸ்ரீமந்நாராயணனை த்யானித்து அவரது பாதத்திலிருந்து கங்கை ப்ரவஹித்து தன் ப்ரம்ஹரந்திரத்தின் வழியாய் தேஹத்தின் உள்ளும் புறமும் பரவி சுத்தி செய்துவிட்டதாய் நினைப்பதே **மானஸம்** அல்லது யோகிகள் அனுஷ்டிப்பதால் **யௌ**

கிகம் என்றும் சொல்லப்படும். இதையும் சிறப்பித்து ரிஷிகள் கூறியுளர்.

அதிகாரி பேதத்திற்குத் தகுந்தபடி, ஸ்நானங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. சக்தன் அசக்தனுக்கு விதித்துள்ளதைச் செய்யின் அவன்செய்யும் ஸர்வ வைதிக கர்மாக்களும் வியர்த்தமாய்விடும். ஆபத்காலத்திலும் யாவச்சக்கியம் வாருணத்தையே ஆசரிக்க முயல்வது சிறந்ததாகும்.

காயத்ரீயை பத்து தரம் அபிமந்திரித்து அஜ்ஜலத்தால் சிரஸ் முதலிய அங்கங்களைப் ப்ரோக்ஷித்துக் கொள்ளுதல் **காயத்ரீ** ஸ்நானமாம். இதுவும் ஓர் மந்த்ர ஸ்நானமாகும். இக் காயத்ரீ தீர்த்தத்தை ப்ரணவத்தால் உட்கொண்டு இரு முறை ஆசமனமும் செய்யத்தக்கது. ‘ஆபோஹி’ என்று துடங்கி செய்யப்படும் இந்த மந்த்ர ஸ்நானமானது மல மூத்ர விஸர்ஜனங்கள் தோறும் செய்யவேண்டியதாகும்.

புண்ட்ரதாரணம்

ப்ரபியையும் ஊர்த்வ புண்ட்ரம் மேலுலகத்திற்குச் சேர்ப்பிக்கிறதால் இதற்கு **ஊர்த்வபுண்ட்ரம்** என்று பெயர். உபவீதம், உத்தரீயம், சிகை, புண்ட்ரம், பவித்ரம் இவைகளைத் தரித்துக்கொள்ளாமற் செய்யும் கர்மங்கள் யாவும் வீணாகின்றன. அதிலும் புண்ட்ரமின்றிச் செய்யும் யாகம், தானம், ஜபம், ஹோமம், தர்ப்பணம், அத்யயனம், போஜனம் முதலிய ஸகல கர்மங்களும் பலனற்றவையாயும் ஆஸுரமுமாகின்றன. புண்ட்ரமுள்ளவன் மனதில் அசுத்தனாயினும், சுத்தனாயினும் புண்ட்ரம் தரித்தாலேயே புண்யசாலியாகவே விளங்குகிறான். புண்டரத்தைக் கண்டு கருநாகத்தைக் கண்ட தவளைபோல் யமகிங்கரர்களும் பயப்படுகிறார்கள். அதில்லாதவன் முகம் ஸ்மசான ஸத்ருசமாகி மீண்டும் நரகத்திற்கும் ஆளாகிறான். கோபீசந்தனம் என்பது த்வாரகாபுரியில் உண்டானது. அதுவும் மிகவும் பாவனம் செய்யக்கூடியது. அதை தரிப்பவன் எவனெவனைப் பார்க்கிறானோ அவன் எவ்வளவு பாபியாகிலும் அவன் பர்வங்கள் யாவும் துலைகின்றன என்று அதற்கு மஹத்துவம் உண்டு. இக்கோபீசந்தனத்தாலும் ஊர்த்வ

புண்ட்ரம் தரிக்கலாம். த்ரிபுண்ட்ரமாவது த்ரிமூர்த்தி அல்லது மூவேத ஸ்வரூபமாகும். இதையும் தரிக்கலாம். அவரவர்கள் பெரியோர்களின் ஆசாரப்படி ஊர்த்வ புண்ட்ரமோ, த்ரிபுண்ட்ரமோ 'கந்தத்வாராம்' என்ற ரிக்கால் குழைத்து பவித்ர விரலினால் நெற்றியிலும், மற்ற மார்பு, கைகளிலும் இட்டுக்கொள்ளவேண்டியது. எவ்வித புண்ட்ரமுமில்லாமல் மட்டும் இருக்கக்கூடாது. சூத்திரர் கையிலிருக்கும் பஸ்மாவினால் அந்தணன் த்ரிபுண்ட்ரம் தரிக்கக்கூடாது. புண்ட்ரமே தரிக்காமல் ச்ராத்தாதிகள் செய்வதும் ஒத்துக்கொள்ளத் தகுந்த குலாசாரமாகும். ஒரு புண்ட்ரதாரி மற்றோர்வித புண்ட்ரதாரியை நேரிலோ மறைவிலோ தூஷிப்பது யமலோகத்தில் நித்திய வாஸத்தை ஆசையோடு அபேக்ஷிப்பவனாவனே தவிர வேறல்ல.

ஸந்த்யாவந்தன விதி

ஸந்த்யை என்பது இரு ஸந்த்யாகாலங்களுக்கும், அக்காலங்களில் உபாஸிக்கப்படும் தேவதைக்கும் பெயராகும். ஸந்த்யாவந்தனத்தை மும்மூர்த்திகளும், இதர தேவர்களும், ரிஷிகளுமே அனுஷ்டிக்கிறார்கள் என்றால் ப்ராம்ஹணர்கள் உபாஸிக்கவேண்டும் என்று சொல்ல விதி ஒன்றும் வேண்டியதில்லை. ஸந்த்யோபாஸன ஆவச்யகத்தை விசாரிப்போம். தைத்ரீய ச்ருதி கூறுவதாவது— ['ரக்ஷாகிம்ஸி' என்று துடங்குவது]. முன்னொரு காலத்தில் ராக்ஷஸர்கள் பலர் கூடி உக்கிரமான தபஸைச் செய்தனர். அதை மெச்சின ப்ரம்மா அவர்களை வேண்டிய வரனைக் கேழ்க்கச் சொல்ல அவர்கள் ஆதித்யனோடு போர் புரியவேண்டுமென அவரும் அப்படியே செய்யுங்களெனச் சொல்லிப் போய்விட்டார். அது முதல் முப்பது கோடி அஸுரர்கள் ஸூர்யனை உதயாஸ்தமங்களில் ஹிம்ஸிக்கின்றனர். அதை நிவாரணம் செய்வதற்காகவே தேவர்கள், ரிஷிகள், ப்ராம்ஹணர்கள் உதயாஸ்தமனங்களுக்கு முந்தியே தினந்தோறும் தீர்த்தத்தை காயத்ரீ மந்த்ரத்தால் அபிமந்த்ரித்து மும்முறை உயர விட, அது வஜ்ராயுதமாய் மாறி அவ்வஸுரர்களை மந்தேஹாருணம் என்ற தீவின்கண் தள்ளிவிடுகிறது. பிறகு ஸூர்ய பகவான் யாதொரு தடங்கலுமின்றி வெளிவந்து ப்ரகாசிக்கிறார்.

ஸூர்யனின்றி உலகில் ஒரு ஜீவராசியாவது உயிருடன் இருக்க முடியாதல்லவா. ஆகையால்தான் இது தவிர்க்கக் கூடாத ஓர் கர்மாவாகும். இதில் ஏற்படும் அஸுரவதத்திற்காகத் தங்களைத் தாங்கள் ஸூர்யனைப் பார்த்து ப்ரதக்ஷிணம்செய்து கொள்ளுதலே ப்ராயச்சித்தமாகும் என்று அந்த ச்ருதியிலேயே விதிவாக்கியம் ஏற்பட்டுவிட்டது. இதை உபேக்ஷிப்பவன் ஸூர்யனையே வதைப்பவனாகிறான். மோக்ஷத்திற்கு முக்கியகாரணமான ஸூர்ய பகவானை வதைப்பவன் மோக்ஷத்தை எப்படி அடைய முடியும்? இம்மஹிமையை அறியாதவனும், அறிந்து அனுஷ்டியாதவனும் சண்டாளனுக்கும் இழிவான பங்க்திக்கனர்ஹ பதிதனாகிறான். ப்ராம்ஹண ஜன்மம் கிடைக்கப்பெற்றவன் தினந்தோறும் ஸந்த்யா, ஸ்நானம், ஜபம், ஹோமம், தேவ பூஜை, அதிதி பூஜை, வைச்வதேவம், இவ்வாறு கர்மாக்களையும் செய்தே தீரவேண்டும். இதில் ஒன்றையாவது, அதிலும் ஸந்த்யாவந்தனத்தையாவது செய்யத் தவறினால் அவனுக்குக் கொடிய நரகவாஸமும், கோட்டான், நாய் முதலிய பிந்திய ஜன்மங்களும் இன்னும் இஹத்திலேயே ஸர்வ ஜனங்களாலும் பஹிஷ்கரிக்கப்பட்டு தேவதா ஸகாயம் யாதுமின்றி அநேக துக்கங்களுக்கு ஆளாகுவன் என்பதில் யாது ஸந்தேஹமுமில்லை என சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. ரிஷிகள் யாவரும் த்ரிஸந்த்யாகாலங்களிலும் ச்ரத்தையுடன் தவறாமற்செய்து வந்ததால் தீர்க்காயுஸ், விசேஷஜ்ஞானம், கீர்த்தி, வைதிகத்தன்மைகளை [ப்ரம்ஹவர்ச்சஸ்] அடைந்து இன்புற்று விளங்கினர். ஸாயம் ஸந்த்யா, ப்ராணாயாமங்களால் பகலிற் த்ரிகரணங்களாற் செய்த பாவங்களையும், ப்ராதஸ்ஸந்த்யா, ஜபாதிகளால் இரவிற் செய்யும் மஹாபாபங்களையும் உதறிக்கொண்டு சுத்தனாய் விடுகிறான். இதனுண்மை 'ஸூர்யச்ச, அக்னிச்ச' என்று ஆரம்பிக்கும் ப்ராசன மந்த்ரங்களால் விளங்கும்.

ஸந்த்யாவந்தனத்திற்குக் கால நிர்ணயம்

காணாமலும் கோணாமலும் கண்டும் அர்க்யம் விடவேண்டியது என்று இத் தமிழ் நாட்டில் ஆன்றோர் கூறுவர். இதன் விவரமாவது:— காலையில் நக்ஷத்திரங்கள் ஒளியுடன் பூர்ண

மாய் விளங்குவது உத்தம காலமாகும். ஒளி சற்று மங்கி வருவது மத்யமகாலமாகும். முற்றும் தோன்றாதது அதம காலமாகும் இவ்வதம காலத்தில் எவ்வளவு விதிவத்தாய் ஆசரிக்கப்படினும் புத்ரகாமி மலடியைப் புணர்வது போல் நிஷ்பலமாய் ஆஸுரமாகி விடுகிறது. தேவதைகளை அடையாமல் அஸுரர்களையே அடைந்தவிடுகிறது. உசித காலம் வருவதற்கு முன் ஒரு கர்மாவை அனுஷ்டித்து விட்டால் மறுபடியும் ஸகாலத்தில் அதை ஒரு முறை செய்துவிடுவதே அதன் ப்ராயச்சித்தமாகும். கால அதீதமாய் அதைச் செய்வதும் செய்யாததோடு ஸமானமாகும். தேவதா ப்ரஸாதத்திற்குப் பாத்திரனாகாமலும், ஆஸுர துக்கங்களுக்கும் ஆளாகிவிடுகிறான். இதன் தாத்பர்யம் கர்மாவை விட்டுவிடலாமோ என்றால் அங்க தோஷமிருப்பினும் அங்கி தோஷம் மிகவும் கெடுதலாகும். பல அங்கங்களுள் காலம் ஒரு அங்கம்; மந்த்ரஹீனம், க்ரியாஹீனம், பக்திஹீனம் என்பதிற் போல். அதனால் ஸ்வல்ப பாப ஸம்பந்தமேற்படும். முதலே விட்டுவிட்டால் மஹத்தான பாப ஸம்பவம் என்பதற்குச் சொல்லவே வேண்டியதில்லை. மாத்யான்ஹிக ஸ்நானம் செய்த பிறகு உதித்து பனிரெண்டு நாழிகைக்கு மேல் மாத்யான்ஹிகத்திற்குக் காலமாகும். உச்சிவேளை செய்வது உத்தமமாகும். ஸூர்ய மண்டலம் பாதி மறைந்து பாதி தெரியுங்காலமே ஸாயம் ஸந்த்யாவிற்குத் தகுந்த காலமாகும். நக்ஷத்ர மண்டலம் விளங்கி உதயமாகும் வரையில் ப்ராதஸ்ஸந்தியைக்கும் ஸூர்யன் மறைய ஆரம்பித்து பூர்ண நக்ஷத்ரமண்டலம் தோன்றும் வரையிலும் ஸாயம் ஸந்த்யைக்குங் காலமாகும். ஸந்த்யாகாலம் ப்ராப்தமாயிருக்க அதை உபேக்ஷித்துவிட்டு வேறு எவ்வித தர்மமானகாரியம் செய்யினும் அந்த ஸூர்யகாதகனது கர்மா நிஷ்ப்ரயோஜனமாகும். அவனுக்கு ப்ராம்ஹணீகமே போய் ஒரு கர்மாவையும் செய்ய அதிகாரம் கிடையாது. அப்படிப்பட்டவனை சூத்ரர்களுக்குரிய கர்மாக்களில் ப்ரவேசிக்கும்படி தர்மசிந்தையுள்ள அரசன் ஆஜ்ஞாபிக்க வேண்டுமென வேதவ்யாஸ பகவான் விதித்திருக்கிறார். உத்தம கதியை அடைய இதுவே பெரும் ஸாதகமாகும்.

உபாஸ்யமான ஸந்த்யா தேவியின் ஸ்வரூபம்

ஸந்த்யா தேவதையே ஜகன்மாதாவானவள். ஸகல மாயையுங் கடந்தவள். ப்ரம்ஹத்தின் சக்தியே ரூபமெடுத்து வந்தவள். காலையில் காயத்ரீ என்றும், நடுப்பகலில் ஸாவித்ரீ என்றும், மாலையில் ஸரஸ்வதீ என்றும் வியவஹரிக்கப்படுவள். தன்னை ஜபிப்பவனை தானம் வாங்குதல், தோஷான்ன போஜனம், மஹாபாதகம், உபபாதகங்களிலிருந்தும் ரக்ஷிப்பதால் காயத்ரீ என்றும், ஸூர்யனுக்கு அந்தர்யாமியாய் இருந்து அவனையும் ஸர்வ ஜீவராசிகளையும் விளங்கச் செய்வதால் ஸாவித்ரீ என்றும், லோகத்தை ஸ்ருஷ்டித்துச் சொல்லுருவாய் விளங்குவதால் ஸரஸ்வதீ என்றும் காரணப் பெயர்களாகும். காயத்ரீயின் நிறம் சிவப்பும், ஸாவித்ரீயினது வெளுப்பும், ஸரஸ்வதீயினது கருப்புமாகும். காயத்ரீ ப்ரம்ஹரூபிணீ என்றும், ஸாவித்ரீ ருத்ரரூபிணீ என்றும், ஸரஸ்வதீ விஷ்ணுரூபிணீ என்றும், உபாஸிக்கப்படுவள். காலையில் ஸூர்யனைப் ப்ரம்மாவாகவும், பகலில் ருத்ரனாகவும், மாலையில் விஷ்ணுவாகவும் உபாஸிக்க வேண்டியது. இவள் வேதஸ்வரூபி. 'ரக்ஷாகிம்ஸி' என்று முற்கூறிய யஜுர்வேத அனுவாகக் கடைசியில் உதிக்குமவனும், அஸ்தமிக்குமவனுமான ஸூர்யனே இவ்வித நாம ரூபங்களுடன் ஸந்த்யாகாலங்களில் தியானத்தோடு ஜபிக்கப்படவேண்டியவனான ப்ரம்ஹபதஸ்வரூபியாவன். இவனை இடைவிடாது த்யானிப்பவனே ஸகல மங்களங்களையும் அடைந்து ப்ரம்ஹரூபமாகவே பரிணமித்து முக்தனாய்விடுகிறான் என்று உத்கோஷிக்கிறது. ச்ருதி ரீதியாகவே காயத்ரீயையும், வேதமூர்த்தியும் ஸூர்யமண்டல மத்தியவர்த்தியுமந்தர்யாமியுமான நாராயணனையும் பிரித்து நினையாமல் ஐக்யமாகவே ஸதா ஹ்ருதயகமலத்தில் த்யானிக்க வேண்டியதென வேதவ்யாஸர், யாஜ்ஞவல்க்யர்கள் விதித்துளர். இதுவே ஸந்த்யோபாஸனமாகும். இதற்கு ப்ரோக்ஷணம், மார்ஜனம் முதலியவை அங்கமாகும். ஜலம் கிடைக்காவிட்டால் ப்ரோக்ஷண மார்ஜனங்களுக்கு ஸௌகர்யப்படாத காலங்களில் ஸந்த்யாகாலம் ப்ராப்தமாய்விட்டால் ஸூர்ய

னுக்குப் புழுதியினாலேயோ அல்லது மந்த்ரத்தை மட்டுமாவது சொல்லி அர்க்யத்தை மானஸீகமாக ஸமர்ப்பித்துவிட வேண்டியது. இவ்வாறே பாண்டவர்கள் பாரத யுத்தத்தில் ஸந்த்யா காலம் வந்துவிட்டபொழுது செய்ததாக ஸஞ்ஜயன் திருதராஷ்ட்ர மஹாராஜனுக்குச் சொன்னானென்பது அனுஷ்டானத்திலும் ஏற்பட்ட விஷயமாகும். ஸந்த்யோபாஸனமானது வியாதி, ஜனன மரணாசௌசாதிகளிலும் ஸங்க்ரஹமாயாவது செய்யத் தகுந்ததே யொழிய ஒருக்காலும் விடத்தகுந்ததன்று.

ஸந்த்யாவந்தனத் தவறுதலுக்குப் பிராயச்சித்தம்

ஸந்த்யாவந்தனத்திற்குக் காலமதீதமாய்விட்டால் துர்யர்க்யம் [நாலாவது] விட்டு ஸந்த்யாவந்தனத்தைச்செய்துவிட வேண்டியது. வெகு நேரம் கழிந்து போய்விட்டால் நூற்றெட்டு, ஆயிரத்தெட்டு காயத்ரீ ஜபம் செய்துப் பிறகு விதிப்படி ஆசரிக்க வேண்டியது. காலை ஸந்த்யோபாஸனம் தவறினால் அஹருபவாஸமும் மாலையிலானால் ராத்ரி உபவாஸமும் இருக்கவேண்டியது என்பது தெரியாத்தனமாய்த் தவறினதற்காகும். தெரிந்தே தவறினால் அஹோராத்ரமும் உபவாஸமிருக்க வேண்டும். இரண்டு நாள் விட்டவன் மூன்றுதின உபவாஸமும், மூன்று நாள் விட்டவன் அரை க்ருச்ரமும், பத்து நாள் விட்டவன் ஒரு க்ருச்ரமும், அதற்கும் மேற்பட்டால் சாந்த்ராயணமும், பிறகு பாரகமும் ப்ராயச்சித்தங்களாகும். ஏழு நாள் ஸந்த்யாவந்தனம் செய்யாமற்போனால் அவன் பைத்தியம், குருடு, செவிடாயிருப்பினுங் கூட பதிதனாகிறான். புனர் உபநயனார்ஹனாகிறான். ஸந்தியாவந்தனம் செய்வதற்கு நதீதீரம், தேவாலயங்கள் முதலிய ஏகாந்தமான ஸ்தலங்கள் விசேஷமாகும்.

ப்ரோக்ஷணம்

'ஆபோஹிஷ்டா' என்ற ப்ரோக்ஷணங்களும் ஒவ்வொன்றும் ப்ரணவஸஹிதமாய்ச் செய்யப்படுமாயின் ஒரு வருஷ பாவங்கள் போகின்றன. ப்ரோக்ஷணக் கணக்கு மீறிச் செய்துவிட்டால் ப்ரம்மஹத்தி தோஷத்திற்காளாகிறான். ப்ரோக்ஷணத்தில் ஆசமனத்திற் போல் இடது கையால் ஜலத்தை ஸ்பர்சித்துக்

கொண்டே செய்யவேண்டியது. தாரையாய் விடப்பட்ட ஜலத்தால் ப்ரோக்ஷித்துக் கொள்ளக் கூடாது, ஸந்த்யாவந்தனமும் செய்யக்கூடாது. ப்ரோக்ஷித்துக் கொள்ளப்படும் நீர் சிரஸினினும் கீழே விழக்கூடாது. இதால் ப்ரஹ்மஹத்தி தோஷங்கூட இவனை விட்டொழிகிறது.

ஒவ்வொரு மந்திரங்கட்கும் அதன் ரிஷி, சந்தஸ், தேவதை விநியோகம், பிராம்ஹணம் இந்த ஐந்துமறிந்து கொள்ளாமல் ஜபிக்கக்கூடாது. ஜபித்தானாகில் மஹாபாபியாவன். செய்யுங் கர்மாவும் நிஷ்பலமாகும். அதைப்போலவே அவைகளின் அர்த்தமும் தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிடில் அது பஸ்மாஹுதிக்கு ஸமானமாகும் என மனு கூறுகிறார்.

பிறகு 'ஸூர்யச்ச' என்று காலையிலும், 'ஆப:புனந்து' என்று மாத்யான்ஹிகத்திலும், 'அக்னிச்ச' என்று ஸாயம்காலத்திலும் ரிஷி சந்தஸ்ஸுக்களுடன் அனுவாகங்களைச் சொல்லி தீர்த்தத்தைப் ப்ராசனம் செய்யவேண்டியது. பிறகு ஆசமனம் செய்யவேண்டியது. அதன் பிறகு 'ஸுரபிமதி' என்னும் 'ததிக்ராவிண்ண' ரிக்குகளாலும், ஆபோஹிஷ்டாதிகளாலும் ரிஷி சந்தஸ்ஸுக்களுடன் புன:ப்ரோக்ஷணம் செய்து கொண்டு அர்க்யத்திற்கு யத்தனிக்க வேண்டியது. ஸுரபிகள் என்பவை பிராணன்கள். பிராணன்கள் இந்த ஸூக்தத்தால் தேஹத்தில் தரிக்கப்படுகின்றன. ஆகையால்தான் இந்த ஸூக்தத்திற்கு ஸுரபிமதீ என்று பெயர்.

உலர்ந்த வஸ்த்ரதாரி முழங்காலளவு ஜலத்திற்கு மேல் நின்றுகொண்டு ஸந்தியாவந்தனம், ஆசமனாதிகளைச் செய்தால் தன் பரிசுத்தம் போய் அபரிசுத்தனாகிறான்.

அர்க்ய ப்ரதானத்தில் இரு கையிலும் ஜலத்தை எடுத்துப் புருவம் வரையில் உயரத் தூக்கி இரு பாத குதிகால்களும் பூமியிற் படாமல் எழும்பி ஜலாஞ்ஜலியை ஜலத்திலேயே விஸர்ஜனஞ் செய்யவேண்டியது. ஜலமில்லாவிடில் ஸ்தலத்தைச் சுத்திசெய்து அங்குவிட வேண்டியது. கட்டை, ஆள்காட்டிவிரல்கள் சேர்வது ராக்ஷஸ முத்திரையாகும். அப்படிச் சேர்க்காமல்

விடவும். சேர்த்துவிடப்படும் ஜலம் ரத்தத்திற்கு ஸமானமாகும். பிறகு தைத்யவத நிமித்தம் தன்னைத்தான் ப்ர தக்ஷிணம்செய்துகொண்டு ஸம்ப்ரதாயப்படி கேசவாதியோ, நவக்ரஹாதி தர்ப்பணங்களைச் செய்து ஜபத்திற்கு யத்தனம் செய்யவேண்டியது.

பவித்ரமில்லாமற் செய்யும் ஸந்த்யாவந்தனமும், தீர்த்தமில்லாமற் செய்யும் தானமும், எண்ணிக்கையில்லாமற் செய்யும் ஜபமும் நிஷ்ப்ரயோஜனமாகின்றன. தான, ஜபங்கள் பிறருக்குத் தெரியாமல் ரஹஸ்யமாய் அஹங்காரமற்றிருக்கவேண்டும். அப்படிப்பட்டவைகளே ஸபலமாகும். ஜபஸித்தியை ராக்ஷஸர் அபஹரித்துவிடா வண்ணம் ‘அபஸர்ப்பந்து’, ஆப்ரம்ஹ லோகாத்’ ‘உக்ரபூதபிசாசா:’ முதலிய ச்லோகங்களை அனுஸந்தித்துக் கொள்ளவேண்டியது. ஜபம் செய்வது வீட்டிலானால் ஒரு மடங்கும், நதீ தீரமானால் இரு மடங்கும், பசுக்கொட்டகையானால் பத்து மடங்கும், அக்னிசாலையானால் நூறு மடங்கும், ஸித்த க்ஷேத்ரம், தேவஸந்நிதிகளானால் ஆயிரமடங்கும், விஷ்ணு ஸந்நிதானமானால் அநேக கோடி அளவற்ற புண்ய பலனையளிக்கும். ஸூர்யன், அக்னி, தேவதை முதலான ஸந்நிதானங்களில் அவர்களுக்குப் பின்புறத்தைக் காட்டாமல் அவர்களுக்கு நேராகவே இருந்துகொண்டு ஜபிக்கவேண்டியது. மூங்கில், ஓடு, கல், பூமி, புல் முதலியவை வியாதி, தரித்திர, துக்க ஹேதுக்களாதலால் துணி, கம்பளம், முதலியவற்றின் பேரிலுட்கார வேண்டியது. ஆஸனத்தில் வீராஸனம், ஸ்வஸ்திகம், முக்தாஸனமெனப் பல பேதங்கள் உள. ‘ப்ருத்வீத்வயா’ என்ற ச்லோகத்தால் ஆஸனத்தை அபிமந்த்ரிக்க வேண்டியது. பிறகு அங்கந்யாஸ, கரந்யாஸங்களையும் செய்துகொண்டு தியான ச்லோகங்களை உச்சரித்துவிட்டு ஜபத்திற்தத் தொடங்க வேண்டும். இதற்கு முன் மூன்று ப்ராணாயாமங்களைச் செய்ய வேண்டும்.

ப்ராணாயாம விதி

‘ப்ராணன்’ என்பது தேஹ வாயு; ‘ஆயாமம்’ என்றால் அதைத் தடைப்படுத்துவது. மார்ஜன ப்ரோக்ஷணாதிகளால்

பாஹ்ய சுத்தியைச் செய்துகொண்டான பிறகு ஹ்ருதய சுத்திக்காக (உள் மலங்களைப் போக்க) ப்ராணாயாமத்தைச் செய்யவேண்டியது. மௌனியாய் இரு கண்களையும் மூடிக்கொண்டு ப்ராண வாயுவை அடக்கி ஹ்ருதயத்தில் ஆத்ம ஸ்வரூபத்தை த்யானித்துச் செய்யவேண்டியது. ஆள்காட்டியும், நடுவிரலும் மூக்கில் ஸ்பர்சிக்கவே கூடாது. அப்படிப் பட்டுவிட்டால் இவன் சூத்திரனுக்கு ஸமானமெனப்படுவன். எப்பொழுது ப்ராணாயாமம் செய்தாலும் இடக்கையால் எண்ணிக்கொண்டும், பிறருடன் பேசிக்கொண்டும் செய்யக் கூடாது. த்யானமின்றிச் செய்வது **அகர்ப்பம்** என்றும், தியானத்துடன் செய்வது **ஸகர்ப்பம்** என்றும் சொல்லப்படும். இடது நாசியால் (இடை) பனிரண்டு மாத்திரைகள் உள்ளுக்கிழுப்பது **பூரகம்** எனப்படும். அவ்வாயுவினால் வயிற்றை நிறப்பி மூக்கின் நுனியில் பார்வையைச் செலுத்தி காயத்ரீயின் அர்த்தத்தால் த்யானிப்பது **கும்பக**மாகும். பிறகு **பிங்களை** [வலது நாடியினால்] சரீரத்தைக் கொஞ்சமும் அசைக்காமல் வெகு மந்தமாகக் காற்றைவிடல் **ரேசக**மாகும்.

யோகசாஸ்த்ர ரீதியாய் ச்வாஸம் எப்பொழுதும் வலது நாசியில் ஓடிக்கொண்டிருப்பதுதான் ச்லாக்யம். ஆனால் ஸதா அதில் ஓடிக்கொண்டும் இருக்கமுடியாது. மாறிமாறித் தான் வரும். இருந்தாலும் ப்ராணாயாம காலம் முதலியவற்றிற் போல் நாம் இதன் மூலம் விட்டு வந்தாலே இடம்மாறி வந்துவிடும். இதில் ஓடுவது ஸாத்விகமாகும். புறப்படும்பொழுதும் ஒரு காரியம் தொடங்கும்பொழுதும், வல நாசியில் காற்று சென்றுகொண்டிருக்குமானால் காரிய ஸித்தியாம். மரண காலத்திலும் வல நாசியில் ஓடினால் புண்ணியலோகமும், இட நாசியில் பாபஜன்மங்களுக்கும் ஹேதுவாகும். தூங்கும்பொழுதும் வல நாசிமேலே இருக்கும்படியும் இட நாசி கீழ்ப் புறமாயும் படுக்கவேண்டும். அதனால் ஹ்ருதயத்திலும் ரத்த ஓட்டத்திற்குக் கெடுதிகள் இல்லை.

ச்வாஸத்தை விடும்பொழுது கொஞ்சங் கொஞ்சமாய்
மூச்சை இழுத்தும் பிறகு விட்டும், மறுபடியும் இழுத்தும் இவ்
வாறு பலதரங்கள் செய்யவேண்டும். ஒரே மூச்சாய் வேகமாய்
விடுவது ஆயுட்குறைவிற்கு ஹேதுவாகும். கும்பகத்தில் சரீரம்
முழுதும் வியாபித்த வாயுவினின்றும் அக்னியுண்டாகும்.
அக்னியினின்றும் ஜலமுண்டாகும். அப்பொழுது அவ்வாயு
விற்கு அக்னி ஜலங்களால் சுத்தி எற்படுகிறது. இப்படி அனுஷ்
டிப்பவன் மஹாயோகியோடு ஒப்பாவன். பூரக கும்பக ரேசகங்கள்
மூன்றிற்கும் மூன்று ப்ராணயாமம் வீதம் பத்து ப்ராணயாமங்
களைச் செய்து காயத்ரீயை ஜபிக்கக் கடவன். எக்காலத்தில்
ப்ராணயாமம் செய்தாலும் இம்மாதிரி மந்த்ரத்தை மூன்று
முறை சொல்லுதலே ஒரு ப்ராணயாமமாகும். ப்ராணயாம
முடிவில் ப்ரணவத்தால் வலது காதைத் தொட வேண்டும்.
ஜபத்திற்கு முந்தி ஒருதரம் காயத்ரீ ஆவாஹனம் ஆனதும்
அங்கந்யாஸ கரந்யாஸங்களை ப்ராணயாம மந்த்ரத்தால் செய்து
த்யான ச்லோகங்களையும் சொல்லி ஜபம் ஆரம்பிக்கவேண்டி
யது. இப்படி ப்ராணயாமங்கள் செய்துவருபவர்களுக்கு நினைத்த
மாத்திரத்தில் வேண்டிய இடத்திற்குச் செல்ல சக்தியுண்டா
கிறது. காயத்ரீயை ஹ்ருதயத்தில் ஆவாஹனம்செய்து த்யானிக்க
வேண்டியது. ஸூர்ய மண்டலத்திலும் ஆவாஹனம் செய்து
ஜபிக்கலாம். **முத்திரை** என்றால் பாபங்களைத் துலைப்பதென்று
பொருள்படும். இது ஸம்முகம், ஸம்புடம் முதலிய இருபத்தி
நான்கு வகைப்படும். விரல்களைப் பலவிதமாக அமைத்துக்
கொள்ளும் விசேஷங்களே இவைகளின் ஸ்வரூபமாகும். விஷ
யம் அவ்வளவு முக்கியம் என்றில்லாதது பற்றி இதன் விவரங்
களை எழுதவில்லை.

காயத்ரீ மஹிமை

மநு:— ப்ரணவத்திலுள்ள மூன்று அக்ஷரங்களும். வ்யா
ஹ்ருதியிலுள்ள மூன்று பதங்களும், காயத்ரீயிலுள்ள மூன்று
பாதங்களும் பிரம்ஹாவினால் மூன்று வேதங்களினின்றும்
லோகோபகாரமாய் ஸங்க்ரஹம் செய்யப்பட்டது. இதை மூன்று
ஸந்திகளிலும் ஜபிப்பவன் மூன்று வேதபாராயணத்தைச்

செய்த பலனை அடைகிறான். ஒரு திராசில் ஒரு புறம் ஸகல பத
க்ரமங்களுடன் கூடின நான்கு வேதங்களையும், மற்றோர்புறம்
இக்காயத்ரீயையும் வைத்து நிறுத்தபொழுது இரண்டும்
ஸமமாகவே இருந்ததென யமதர்மராஜன் கூறுகிறான். ஜலத்
தில் அகமர்ஷண ஸூக்த ஜபத்தைவிட வேறு சிறந்தது ஒன்று
மேயில்லை. வ்யாஹ்ருதி ஹோமத்தை விடச் சிறந்த ஹோம
மும், காயத்ரீ ஜபத்தைவிடச் சிறந்த ஜபமும் வேறெந்த ஜபம்,
தபம், த்யானம், ஹோமம் ஒன்றுமே கிடையாது. கோடி
முறை இதை விதிப்படி ஜபிப்பவனுக்கு இப்பூமண்டலமோ,
தைவத்தன்மையோ, வேறெந்த கோரிக்கையோ, அதை
யாதொரு தடையுமின்றி அடைந்துவிடுகிறான் என வேதவ்யா
ஸர் கூறுகிறார். மிதாஹாரம் பண்ணி, ப்ராணி தயையுடனும்
ப்ரஹ்மசர்ய வ்ரதத்துடனும், சுசியாய் விதிப்படி லக்ஷம் தடவை
ஜபித்தானாகில் புத்தி பூர்வகமாய்ச் செய்திருந்தாலும் ஸகல
மஹா பாதகங்களையும் துலைத்துவிடுகிறான். நான்கு வேதங்
களிலும் இதற்கு ஸமமான மந்த்ரமே கிடையாது. ஸகலமான
வேதங்கள், தபஸுக்கள், யாகங்கள், தானங்கள், இவைகள் யா
வும் காயத்ரீயின் வீசாம்சத்திற்கு ஈடாகாது என்பதை ஸகலமஹ
ரிஷிகளும் அபிப்பிராயப்பட்டுளர். வேதங்களை ஓதாமலும், ஸர்வ
வைதிக கர்மாக்களையும் அனுஷ்டிக்காமலும் இருப்பவன் கூட
காயத்ரீயை மட்டும் ஜபித்து வருவானேயாகில் ஸகல பயங்
களையும் விட்டு நீங்கினவனாகிறான். இஜ்ஜப்தா லேசகம் முழுமை
யுமே தானம் வாங்கின போதிலும் ப்ரதிக்ரஹ தோஷத்தை
அடைகிறதில்லை. எப்படிப்பட்ட அபாங்க்தேயனும் இதை ப்ரதி
தினம் ஜபித்து வருவானாகில் பங்க்திபாவன யோக்யதையுடைய
வனாகிறான். [பங்க்தியில் கூட உட்கார்ந்து புசிக்கத்தகாதவ
னும், அசுத்தமான கோஷ்டியையும் தன் தர்சனத்தினால்
சுத்தம்செய்து வைக்குந்தன்மை யுள்ளவனாகிறான்] 'ஆபாது'[3]
என்ற காயத்ரீ ஆவாஹன மந்த்ரத்தில் வருகிறபடி காயத்ரீ
தேவியானவள் ஸகல வேதங்களுக்கும் தாயாவள். ப்ரஹ்ம
ஹத்திதோஷம் இதன் கோடி ஜபத்தாலும், ஸுராபானதோஷம்
எண்பதுலக்ஷ ஜபத்தாலும் ஸ்வர்ணஸ்தேய தோஷம் எழுபது
லக்ஷ ஜபத்தாலும், குருபத்னீகமனதோஷம் அறுபதுலக்ஷ ஜபத்

தாலும் துலைகின்றன. ஏகோத்திஷ்டம், ஸபிண்டீகரணம், மாஸிக, ச்ராத்தாதிகளில் நிமந்தரண புக்தி தோஷங்களும் ப்ரத்யாப்திகத்தில் 108, மாஸிகத்தில் 700, ஏகாஹத்தில் 30,000 ஸபிண்டீகரணத்தில் 10,000, ஜபங்களால் துலைகின்றன என்பதைப் பெரியோர் அனுஷ்டானங்களிலும் பார்த்து வருகிறோம். தினந்தோறும் காலையில் பரிசுத்தனாய் அர்த்தத்தை த்யானம் செய்துகொண்டு ஆயிரத்தெட்டுமுறை ஜபிப்பானாகில் இவன் ஸர்வ பாபங்களின்றும் விடுபட்டவனாகிறான். இப்படிப்பட்டவனே ச்ராத்தாதிகளில் நிமந்தரணத்திற்குறிய பாத்திரமாவான். தன்னைப் பாவம் அடைந்ததாக எண்ணும் ஸமயத்தில் காயத்ரீ தில ஹோமம், ஜபங்களைச் செய்வானாகில் பரிசுத்தனாகிறான் என்று ப்ரம்ஹநிஷ்டரான வஸிஷ்ட பகவான் விதித்திருக்கிறார். தான் ஜபித்த காயத்ரீயை இன்னொருவனுக்கு ஒரு பலனை ப்ரதீக்ஷித்து விற்றுவிட்டானேயாகில் அவன் உடனே சண்டாளனாய் விடுகிறான்.

ஜபவிதி

கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா தாம் யஜ்ஞ, தபஸ்ஸுக்களைப் புசிப்பவரென்றும், யஜ்ஞங்களுள் ஜபயஜ்ஞமாய்த்தானே இருப்பதாயும் உபதேசம் செய்திருப்பது யாவருக்குந் தெரிந்த விஷயமே.

'ம' என்றால் மனஸ், 'த்ர' என்றால் ரக்ஷணம். மனதை ரக்ஷிப்பது என்பது 'மந்த்ர' சப்த அர்த்தமாகும்.

'ஜ' என்றால் ஜன்மநாசமும், 'ப' என்றால் பாபநாசமும் ஏற்படுவதால் ஜபம் என்பதற்கு ஜன்ம, கர்மங்களைத் துலைப்பது என்பது பொருளாகும்.

பவித்ரபாணியாய் குசாஸனம் அல்லது அதற்கும் மேல் ஓராஸனம் போட்டுக்கொண்டும், ஸூர்யனுக்கெதிராக இருந்துகொண்டு ஜபமாலையைக் கையில் பிடித்து பரிசுத்தமானவிடத்திலிருந்து காலையிலானால் நின்றுகொண்டும், மாலையிலானால் உட்கார்ந்துகொண்டும், காலையில் நக்ஷத்ரம் மறைவு முதல் ஸூர்யோதயம் வரையிலும், மாலையில் நக்ஷத்ரமண்டலம் சுத்தமாய்த் தோன்றும் வரையிலும், மத்யான்ஹமானால் உட்கார்ந்து

கொண்டும், மௌனியாய், உடம்பசையாமல், அர்த்தத்தைத் தியானித்தவனாய், ப்ரணவத்தை மூன்றறை மாத்திரை நீட்டி நிறுத்திப் பிறகு வ்யாஹ்ருதி த்ரயத்தைச் சொல்லி நிறுத்தி பிறகு மூன்று பாதங்களையும் விட்டுவிட்டு இவ்விதம் ஐந்து அவஸானங்களுடன் ஜபிக்கவேண்டியது. பிரிக்காமல் ஒரே வாக்யமாக ஜபிப்பவன் ரௌரவ மஹாநரகத்தை அடைகிறான், ப்ரஹ்மஹத்தி தோஷத்தையும் அடைகிறான். இரவிற் செய்த பாவம் துலையக் காலையில் நின்றுகொண்டேயும், பகலிற் செய்த பாவங்களுக்காக ஸாயங்காலத்தில் உட்கார்ந்துகொண்டேயும் ஜபிக்கவேண்டியது. இதற்கு மாறாகச் செய்வது பயனற்றதே. செய்தவனும் ஒரு கர்மாவிற்கும் உதவாது சூத்ரனைப்போல் ஆய்விடுகிறான். சாந்தோக்ய ச்ருதி விப்ரன் காலையில் நின்றுகொண்டு ஜபிப்பதால் ஸ்வர்க்க லோகத்தையும், மாலையில் உட்கார்ந்து ஜபிப்பதால் இஹலோகத்தையும் ஜயிப்பர் என்று உத்கோஷிக்கிறது. ஆயிரம் ஜபம் உத்தமம். நூறு மத்யமும், இருபத்தெட்டு அதமமும், பத்து அதமாதமுமாகும். ஜனனமரண சௌசாதிகளில் மட்டும்தான் தசவாரம் ஜபிக்கத் தகுந்தது.

ஸ்வரத்துடன் உரத்துச் சொல்லுவது **வாசிக**மாகும். தன் காதுக்கு மட்டும் கேழ்க்கும்படி உதடுகள் அதிகமாய் அசையாமற் ஜபிப்பது **உபாம்சு** ஆகும். மந்த்ரார்த்தத்தை சிந்தித்து த்யானிப்பதே **மானஸ**மாகும். இதில் முதலுக்கு ஒரு பங்கும், இரண்டாவதற்கு நூறு பங்கும், மானஸமான மூன்றாவதற்கு ஆயிரம் பங்கு பலனும் ஏற்படுகின்றன. வாசிகரீதி ஆபிசார ப்ரயோகத்திலும், உபாம்சு தன் ஸுகங்களைக் கோறுபவரும், மானஸம் மோக்ஷத்தைக் கொடுப்பதுவுமாகும். இதில் மந்த்ர ஸம்மந்தமான காற்று வெளியேபோய் விடாமல் உள்ளேசென்று தேஹத்தை சுத்திசெய்து மந்த்ரமயமாய் ஆக்கிவிடுகிறது.

காலையில் கைகளை மூக்கிற்கு ஸமமாகவும், மத்யான்ஹத்தில் மார்புக்கு ஸமமாகவும், ஸாயங்காலத்தில் நாபிக்கு ஸமமாகவும் வைத்துக்கொண்டு ஜபம் செய்யவேண்டியது. சிரஸை மூடிக்கொண்டும், கைகளை மூடாமலும் ஜபம் செய்யக்கூடாது.

மனதில் யாதொரு விசார துக்கங்களின்றி 'ஸந்துஷ்டஸ்ஸததம் யோகீ' என்று கீதாசார்யன் கூறுவதுபோல் ஸந்தோஷமாய் இருந்து அந்தர்யாமியைத் திருப்தி செய்விக்கவேண்டும்.

உலாவிக்கொண்டும், சிரித்துக்கொண்டும், அக்கம்பக்கங்களைப் பார்த்துக்கொண்டும், பேசிக்கொண்டும், பிறர் பேச்சைக் கேட்டுக்கொண்டும் தூண் முதலியவற்றைப் பிடித்துக்கொண்டும், பாதங்களை மாறி மாறி பூமியில் ஊன்றிக்கொண்டும், கைகளால் பூமியைத் தொட்டுக்கொண்டும், வேறு சிந்தையாயும், உரத்தும். சோம்பல், தூக்கம், தும்மல், மயக்கம், கோபம், துப்பல், கோட்டுவாய் விடுதல், பார்க்கத்தகாதவர்களைப் பார்த்தல்களைச் செய்துகொண்டும், கைகால்களை மாறுதலாக வைத்துக்கொண்டும், சட்டை, தலைப்பாகை, பர்தரக்ஷை தரித்துக்கொண்டும், அவிழ்ந்த சிகையுடனும், பசியோடும், வண்டி, வாகனம், படுக்கைகளில் இருந்துகொண்டும், கால்களை நீட்டிக்கொண்டும், மேலே உட்கார்ந்து கால்களைத் தொங்கவிட்டுக்கொண்டும், கச்சமின்றியும், செய்யும் ஜபம் பயனற்றவையாகும். ஜபம், வ்ரதம், ஹோம காலங்களில் பிறருடன் பேசக்கூடாது. ஜபமத்தியில் சண்டாளர், அசுத்தர், பதிதர், சூத்ரர், தூரஸ்த்ரீ, நாய், பூனை, கழுதை, கோழி, க்ரௌஞ்சம், குரங்கு, இவைகளைப் பார்த்தால் ஆசமனம் செய்துவிட்டு, நாராயணனை ஸ்மரித்து மீதி ஜபத்தை முடிக்கவேண்டும். இவர்களோடு பேசிவிட்டால் ஸ்நான ஆசமனங்களைச் செய்து மீதி ஜபம் துடங்கவேண்டும்.

நாபிக்குக் கீழ்ப்பட்ட அவயவங்களை வைதிக கர்மானுஷ்டான காலங்களிற் தொட்டால் கைகளை சோதிக்க வேண்டியது, அல்லது ச்ரோத்ராசமனமாவது செய்யவேண்டியது, விஷ்ணுவையாவது ஸ்மரிக்கவேண்டியது. இருளடர்ந்தது, அசுசி, ஜனஸஞ்சாரவிடங்கள், ஜபம் செய்ய விலக்கத் தக்கவையாகும்.

ஹோமம், தானம், ப்ரதிக்ரஹம், போஜனம், ஆசமனம், ஜபம், இவைகளைஅனுஷ்டிப்பவன் இரு கைகளையும் முழங்கால்களுக்குள்ளாகவே வைத்துக்கொண்டு, நான்கு விரல்களோடு கட்டைவிரலையும் சேர்த்தேவைத்துக்கொண்டு செய்யவேண்டியது.

தேவாலயம், ஜலம், அரசு, அக்னி, ஸூர்யன் இவர்களுக்குப் பின்புறத்தைக் காட்டிக்கொண்டு ஜபம் செய்யக்கூடாது.

ஈரவஸ்த்ரத்துடன் செய்யும் ஜபம், ஹோமம், ப்ரதிக்ரஹங்கள் ராக்ஷஸ ப்ரீதியாகும். ஈரவஸ்த்ரந் தரித்தவன் ஜலமத்தியிலிருந்தே ஜபிக்கவேண்டியது. வெளியில் கூடாது. ஒரே வஸ்த்ரம், பழையது, கந்தல், அழுக்காடை, கறுப்பானது, கொஞ்சம் கொளுத்தப்பட்டது, முதலியவைகளை தரித்து ஒரு வைதிக கர்மாவும் செய்யக்கூடாது. காயத்ரீ என்பது 'அக்னிமுகீ'. அதை ஒருக்காலும் ஜலத்திலிருந்து புத்திமான் செய்யக்கூடாது. ஜப ஹோம காலங்களில் பூணூலைத் தொட்டுக்கொண்டிருந்தாலும் பயனற்றதாகும்.

விரல்களின் ரேகைகளாலோ, ஜபமாலையாலோ, எண்ணி ஜபிக்கவேண்டியது. ருத்ராக்ஷமணியோ, துளஸிகாஷ்டத்தினாலானதோ, தாமரைக்காய் மணியோ, ஸ்படிகமோ, பொன் அல்லது வெள்ளியாலானதோ உதவும். அவை நூற்றெட்டு இருப்பது உத்தமமும், அதிற்பாதி மத்யமமும், அதிலும் பாதி அதமமுமாகும். விரல்களை விரித்து ஜபம் செய்தால் ஜபம் ஒழுகிப்போம். கட்டை விரலையும் சேர்த்துக்கொண்டே ஜபிக்கவும். மணிக்குமணி நடுவில் முடியிருக்கவேண்டும். கட்டை விரல் மத்தியில் வைத்துக்காண்டு மாலையை நடுவிரல் நுனியால் தள்ளி ஜபம் செய்யவேண்டியது. இடக்கையாலோ, ஆள்காட்டி விரலாலோ மாலையைத் தொடக்கூடாது. மாலை கீழே விழுந்துவிட்டால் நூற்றெட்டு தரம் காயத்ரீ ஜபம் செய்வதே ப்ராயச்சித்தமாகும். கயிறு அறுந்துவிட்டாலும் புதிதாய் முடிந்து இப்ராயச்சித்தமே செய்யத் தகுந்தது. விரல்களின் பர்வாக்களால் எண்ணி ஜபிப்பதே மிகச் சிறந்ததென ரிஷிகள் அபிப்ராயப்படுகிறார்கள்.

அவரவர் ஆந்ஹிக ரீதியாய் காயத்ரீ உத்வாஸனம், உபஸ்தானம், திக்வந்தனங்களைச் செய்து ஸந்த்யாவை ஆசமனத்தோடு முடித்துவிட்டுத் தாய், தந்தை, குரு, தமையன், மூன்று வயதுக்கு மேம்பட்ட சிஷ்டர் இவர்களுக்கு க்ரமமாய் வந்தனம்

அபிவாதனங்களைச் செய்யவேண்டியது. ஈரவஸ்த்ரத்தில் திக்வந்தனத்திற் ப்ரதக்ஷிணம் கிடையாது. கரையேற வேண்டியதுமில்லை.

பிறகு புருஷஸூக்தம், ருத்ரம், சமகம், சதருத்ரீயம், பவமான மந்த்ரம், த்ரிஸுபர்ணம், த்ரிணாசிகேதம், த்ரிமது, (மதுவாதா என்ற மூன்று ரிக்குகள்) முதலியன ஜபித்தலுக்கு பஞ்சமஹாபாதகங்களும் துலைகின்றனவென்று வேறுவிசேஷ பலன்கள்கூறப்பட்டுள்ளன. ப்ராயச்சித்தம், ஜபம், விஷ்ணுபூஜை, மோக்ஷ வச்யம், அக்னியுபஸ்தானம், ஸத்புத்ர ப்ராப்தி, ஆரோக்யம், ம்ருத்யுநாசம், ஐச்வர்ய ப்ராப்தி, முதலிய கார்யங்களில் இப்புருஷ ஸூக்தத்தை ஜபிக்கவேண்டும். அபூர்ணமான ஹோமாதிகளும் இஜ்ஜபத்தால் பூர்த்தியாய் விடுகின்றன. இதன் அர்த்தத்தைத் தெரிந்து ஜபம் பண்ணுபவன் இந்த ஜன்மத்திலேயே முக்தனாகிறான் என்பதிற் சற்றும் ஸந்தேஹமில்லை. நிறைந்திருப்பதால் புருஷன் எனப்படுகிறான் நாராயணன். அதனாற்றான் இவ்வளவு ஏற்றமாம்.

காம்ய ஜபங்கள்

மநு:—ஜோதிஷ்டோமம் முதலிய ஹிம்ஸையுடன் கூடிய யாகங்களைக் காட்டிலும் அஹிம்ஸகமான ஜபயஜ்ஞம் அநேகமாயிரம்மடங்கு சிறந்ததாகும் 'யஜ்ஞானாம் ஜபயஜ்ஞோஸ்மி' என்பதிற்போற் [கீதை]. ஜபயஜ்ஞத்தை அனுஷ்டிக்கிறவனால் லோகத்திற்கே க்ஷேமங்களேற்படுவதால் ஸகல ப்ராணிகளுக்கும் மித்ரனாகிறான். அஷ்டாக்ஷர, பஞ்சாக்ஷரங்கள், ராம, வாஸுதேவ, மஹாதேவாதி நாமங்கள் யாவும் குரு முகமாய் உபதேசம் பெற்று ஜபித்துவரப்படின் அவை இஹபர லோகங்களுக்கு வெகு ஸாதகமாகுமென்று ரிஷிகள் உறுதியிட்டுக் கூறுகின்றனர் என்று அவர்கள் விசேஷித்து ஆன்ஹிகத்தில் எழுதியுள்ளதை நாம் இதோடு ஸங்க்ரஹமாய்க் கூறி நிறுத்திக்கொள்ளுகிறோம். வெகுவாய் விஷ்ணுவின் ஸஹஸ்ரநாமங்க்ள் முடிந்து தொடர்ச்சியாய் 'இதீதம் கீர்த்தனம் யஸ்ய' என்றாரம்பித்து பலச்ருதியை நாமுமே தினந்தோறும் சொல்லிவருகிறோம்.

அதில் தனதான்ய ஸம்ருத்தி, ஜயம், பயமின்மை, ரோஹநிவாரணம், பலவித துக்க நாசனங்கள் கூறப்பட்டிருப்பது நன்கு விளங்குகின்றன. அதிலேயே பார்வதீ பரமசிவனை விஷ்ணு ஸஹஸ்ர நாமத்திற்குப் பதில் ஸங்க்ரஹமாய் ஏதாவது ஸாதித்தருள ப்ரார்த்திக்க அவர் 'ராம' நாமத்தையே அதற்கு ஈடாகச் சொல்லியிருக்கிறார். இதன் ஸ்வரூபமானது அஷ்டாக்ஷர மத்திய எழுத்து முதலெழுத்தாயும், பஞ்சாக்ஷர இரண்டாம் எழுத்து இரண்டாமெழுத்தாயும், இரு மஹா மந்த்ரங்களினின்றும் உத்பத்தியை உடையதாயிருக்கிறது. இவ்விருமந்த்ரங்களினின்றும் இவ்விருமுக்கிய எழுத்துக்களை எடுத்துவிட்டால் நாயணாய [மார்க்தின் பொருட்டில்லை] என்றும், நசிவாய [மங்களத்தின்பொருட்டில்லை]என்று அர்த்தத்தை நேர்விரோதமாய்த் தருகின்றன. 'ராமநாம தாரகம், பக்தி முக்திதாயகம்' என்னுமாப்போல் இக்கொடுங் கலியிற் நீந்திவருவதற்கும், பக்தி, முக்திகளைத் தருவதற்கும் இது ஒரு சிறந்த ஔஷதமாகும். கலிஸந்தரண உபநிஷத்தில் 'ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே, ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே' என்று கடைசியாய்க் கலி தொடங்கும் காலம் வரையிலிருந்த ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தையும், வேதாரம்ப முடிவுகளிலும், ஸர்வ ச்லோக ஆரம்ப முடிவுகளிலும் சொல்லும் ஹரிசப்தங்களும் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் இந்த நாமாக்களை ஜபகாலங்களின்றி மற்ற ஸர்வ காலங்களிலும் 'ஸ்ரீமதே நாராயணாய நம:, ஸ்ரீ க்ருஷ்ணாய நம:, ஹரி: ஹரி; என்று நாம் வாய்விட்டுச் சொல்லிக்கொண்டு பகவானை ஸர்வ காலத்திலும் கீதையிற் பலவிடங்களிற் கூறியவண்ணம் 'தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மாமனுஸ்மர' என்று அவனை நினைத்தோ, நினைக்காமலோ வாயாற் சொல்லிக்கொண்டு அப்யாஸம் செய்துவருவது இஹபர க்ஷேமத்திற்கு ஹேதுவாகும். 'தலைக்குவரும் ஆபத்து தலைப்பாகையோடு போம்' என்பதிற்போல் அதிககஷ்ட அனுபவம் கொஞ்சமாய்வந்து போய்விடும். வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் அஷ்டாக்ஷர மந்த்ரத்தை அங்கந்யாஸ கரந்யாஸங்களைச் செய்துகொண்டு தினந்தோறும் எட்டாயிரம் முறை ஜபிக்க உபதேச காலத்தில் ஆசார்யர்கள் கூறு

இன்றனர். சிவபக்தர்களுக்கும் ஓர் வைஷ்ணவ மந்த்ரம் அத்யாவச்யம் என்று அந்த ஸம்ப்ரதாய வித்வான்களே. க்ரந்தங்களிற் கூறியிருப்பதைச் சொல்லுகின்றனர். மோக்ஷத்தைக் கோறுபவர் ஜனார்த்தனனையும், ஜ்ஞானத்தைக் கோறுபவர் சங்கரனையும், ஆரோக்யத்தைக் கோறுபவர் ஆதித்யனையும், ஐச்வர்யத்தைக் கோறுபவர் அக்னியுபாஸனையும், செயயக் கடவர் என்று ரிஷிகள் விதித்துளர். வித்யாரண்யர், த்யாகராஜர் முதலிய பக்தர்களுக்கு ஏற்பட்டது போல் தேவதா ஸாந்நித்யம் நம் ஜபக்கணக்கு அதிகரிக்க அதிகரிக்கவும் சித்தம் ஏகாக்ரம் ஆக ஆகக் கொஞ்சங்கொஞ்சமாய் ஸ்வப்னத்திலும் நேரிலும் அடிக்கடி தர்சனம் ஆஞ்ஜனேயரைப்போல் தருவதும் அனுபவ ஸித்தமான விஷயமாகும்.

ப்ரோக்ஷண தீர்த்தம் கொண்டுவருதல்

பொன், வெள்ளி, தாம்ரம், மண்பாத்ரம் இவைகளில் ஒன்ருல் வேருெரு பாத்ரத்தினின்றும் எடுக்கப்படாததும், இடது கையிற் பிடித்து வராததும், துணி மூடி பிழிந்த தீர்த்தமல்லாததும், ஒற்றை வஸ்த்ரந் தரித்தவனுற் கொண்டுவராததும், ஆசாரமாய்த் தீர்த்தம் வீட்டிற்கு எடுத்து வந்து ஆசமனம் செய்து ஸ்தலத்தை ப்ரோக்ஷிக்க வேண்டியது. இரும்பு, வெண்கலப் பாத்திரங்கள் உதவாது. இன்னும் வைதிக கர்மாவுக்கு வேண்டியதையும் ப்ரோக்ஷிக்க வேண்டியது. தானுகவே கொண்டுவந்தது உத்தமமும், இதரரால் கொண்டுவந்தது இரண்டாம் தரமுமாகும். 'வைச்வானரோஜீஜநத்' என்பதே ப்ரோக்ஷண வைச்வானர ஸூக்தமாகும்.

ஹோம விதி

அக்னி பூஜை இல்லாத வீடு தலையில்லாத விக்ரஹத்தைப் பூஜை செய்வதற்கு ஒப்பாகும். விராட் புருஷனுடைய முகத்திலிருந்து அக்னி உண்டானதால் எந்த அக்னியில் உபநயம் செய்விக்கப்பட்டானே அந்த அக்னியிலேயே ப்ரஹ்மசர்யம், வ்ருதஹோமம், ஸமாவர்த்தனம், விவாஹ ஹோமம், காம்ய க்ருஹ்ய ஹோமங்கள் செய்யவேண்டியது. எந்த அக்னியில்

விவாஹம் ஆயிற்ருே அதற்கு க்ருஹ்யம் என்றும், ஜாதகர்மாதிகள் எதில் செய்யப்பட்டதோ அதற்கு பௌருஷாக்னி என்றும், சமயலுக்கு உபயோகப்படும் அக்னிக்கு லௌகிகாக்னி என்றும் பெயர். வேதத்திற் கூறிய ஸர்வகர்மாக்களையும் அனுஷ்டிக்கச் சக்தியில்லாதவர் இரு ஸந்த்யாகாலங்களிலும், அக்னிஹோத்ரத்தையும், பக்ஷாந்தரங்களில் தர்சபூர்ணமாஸ இஷ்டிகளையுமாவது செய்தானுகில் உத்தமகதி அடைவன் என்றும், அது வீரஹத்திக்கு ஸமானபாவம் என்றும், ஒரு மாதம் விட்டவனே சாந்த்ராயண க்ருச்ரம் விதிக்கப் பெறுவன் என்றும், மனு ஸ்மிருதி முறையிடுகிறது.

ஹோமம் தானே செய்வது உத்தமமும், பிள்ளை, ரித்விக், மருமகன் [மாப்பிள்ளை] குரு, சிஷ்யன், ஸஹோதரன் மூலம் செய்யப்படுவது கௌணபக்ஷமுமாகும். உபநயனம் முதல் ஸமிதாதானம் போல், பாணிக்ரஹணமானது முதல் விவாஹக்னியை உபாஸிக்க வேண்டியது. வைதிக மந்த்ரமன்னியில் பர்த்தாவிற்கு அஸெகர்யமான காலங்களில் பத்னியும் மறுமகளும் [ஸ்நுஷை] ஹோமம் செய்யலாம். மற்றவர் செய்யுங் காலத்தில் க்ருஹிணீயும் கூட இருக்கவேண்டுமே யொழிய தானுக எவரும் செய்துவிடக் கூடாது. மீறி அப்படிச் செய்யப்படுவது நிஷ்பலனுகும். வெளியிற் செல்லும் யஜமானன் அக்னியை பார்யையிடத்தும் குறிப்பிட்ட ஓர் ரித்விக்கிடத்தும் ஒப்பிவித்து விட்டுச் சீக்கிரம் தன் கார்யங்களைப் பார்த்துக்கொண்டு திரும்பி ஊர் வந்து சேர்ந்துவிட வேண்டியது. விவாஹாக்னியை உபாஸியாதவர் வீட்டல் புசிக்கவே கூடாது. யஜமானனும் க்ருஹஸ்த சப்தத்திற்கனர்ஹனுகிருன். பத்னீயும் தாஸிக்கு ஒப்பானவளே. பனிரண்டு நாள் அக்னி பூஜையை விட்டாலே அவன் சதுர்வேதங்களிலும் கரை கண்டவனுயினும் சூத்ரனுகிருன். மனைவியிழந்த விதுரனுக்கும் ஹோமம் விவாஹாக்னியில் உண்டு. ஜனன மரணுசௌசங்களிலும், அசக்த காலத்திலும், ச்ராத்த போஜன [ப்ராம்ஹணார்த்தம்] தினத்திலும், வெளியூர் ப்ரயாணத்திலும் மற்ற எக்காரணத்திலாயினும், ஹோமம் நிறுத்தக் கூடாது. சக்ரவர்த்தி திருமகனை

ராமாவதாரத்திலும் ஸீதை பிரிந்து போய்விட்ட பின்னர் அவளுக்கு ப்ரதியாய் ஓர் ஸ்வர்ண விக்ரஹத்தை வைத்துக் கொண்டு ஸ்ரீ ராமர் அக்னியை உபாஸித்துவந்தார். எவ்வளவு வருஷங்கள் ஹோமம் விட்டதோ அவ்வளவு க்ருச்ரங்களும் எவ்வளவு ஹோமத்ரவ்யம் செலவாயிருக்குமோ அவ்வளவு ப்ராம்ஹணர்களுக்குத் தானம் செய்துவிடுவது ஒருவித பரிஹாரமாகும். அதாவது ஒரு வருஷத்திற்கு அறுபதுபடி அரிசியும், மூன்றுபடி நெய்யும் வீதம் என ஒரு ரிஷி கணக்கிட்டிருக்கிறார்.

ஹோமகாலம்

வேதம் **அனுதிதம்** ஸூர்யோதயத்திற்கு முன்பு என்றும், **ஸமயாவிஷிதம்** ஸூர்யோதயத்திற்குச் சற்று முன்பு என்றும், **உதிதம்,** ஸூர்யோதயத்திற்குப் பின்பு என்றும் மூன்று காலங்களைவிதித்துவிட்டது. ஓடுகள், இரும்புப்பாத்திரங்கள், எருமுட்டை,கொள்ளி, உடைந்த பாத்திரங்களால் அக்னி ப்ரணயனம் செய்வது வியாதி, பய, நாசஹேதுவாகும். உதித்துத்தான் செய்வது அனுஷ்டானத்திலிருப்பதால் காலை மாலைகளில் உதித்து அஸ்தமித்து ஒன்பது நாழிகைகள் காலமாகும். ஹோமத்ரவ்யம் கிடைக்காமை, இன்னும் மற்ற ஆபத்காலத்தில் காலை ஹோமத்தை ஸாயம் ஹோமகாலத்திற்குள்ளும், ஸாயம் ஹோமத்தை மறு ப்ராதர் ஹோம காலத்திற்குள்ளும் செய்து முடித்துவிட்டு க்ரமப்படி அவ்வேளை ஹோமத்தைப் பிறகு செய்யவேண்டும். மாறிச்செய்வது ஆஸுரமாகும். அதேமாதிரி தர்சவிதியைப் பூர்ணிமை வரையிலும், பூர்ணிமை விதியைத் தர்சம் வரையிலும் செய்யலாம். இவ்வித காலாதீதத்திற்கு ப்ராயச்சித்தமும் வேண்டியதில்லை. கர்மத்தைவிடாது ஆபத்திலும் அனுஷ்டிப்பவனுக்கு வேதத்தில் பூர்வான்ஹ ஹோமத்திற்கு 'அக்னிஷ்டோமம்,' மத்யான்ஹத்திற்கு 'உக்த்யம்' அபரான்ஹத்திற்கு 'ஷோடசீ' பூர்வராத்ரிக்கு 'அதிராத்ரம்' அபரராத்ரிக்கு 'அப்தோர்யாமம்' யாகத்தை அனுஷ்டித்தவர்களாவர் என்று சொல்லியிருக்கிறது. பகலினதற்கு ராத்ரி ஒரு யாமம் வரையிலும், ராத்ரியினதற்கு மறுப் பகல் ஒரு யாமம்

வரையிலும் கௌணகாலமாகும். இவ்விதி ப்ரஹ்மயஜ்ஞம் ஸூர்யநமஸ்காரங்களுக்கு எடுத்ததல்ல.

பக்ஷாக்னிஹோத்ரம்

இதில் **பக்ஷாத்னிஹோத்ரம்** என்று ஒரு ஆபத்தர்ம வழி உண்டு. முற்காலத்தில் வழிப்ரயாணம் செய்யவேண்டியிருந்த **யாயாவரர்கள்** என்ற ரிஷிகள் ப்ரதமை தினம் ஸாயங்காலத்தில் அப்பக்ஷத்திற்கு வேண்டிய சதுர்க்ருஹீத ஹவிஸ் கணக்கால் பதினான்கு முறை ஹோமம் செய்து மறுநாட் காலையிலும் அனுஷ்டித்தனர். இதில் ஸமித் ஒன்றே. கைத்துடக்குதலும் ஒரு முறையே. உபஸ்தானமும் ஒரு முறைதான். இவ்விதம் மூன்று பக்ஷங்கள் செய்யலாம். அதற்குமேற் கூடாது. இது ரோகம், ப்ரயாணம், ஆசௌசம், ஆபத்து இக்காலங்களுக்கு மட்டும் ஏற்பட்டது. பக்ஷத்திற்குள் திரும்பி வந்துவிட்டால் வந்த நாள் முதல் பக்ஷ முடிவு வரையிற் க்ரமமாகவே ஹோமம் செய்யவேண்டும். இதில் ப்ரத்யவாயமில்லை. இவ்வாபத்தர்மம் ப்ரதமையின்றி எத்தினத்திலும் பர்வாவிற்கு எத்தினை தினங்கள் இருக்கின்றனவோ அத்தினை ஹோமங்களையும் சேர்த்து அன்று ஸாயங்காலத்திலும் மறுதினம் காலையிலும் செய்யலாம். எப்பொழுதும் பர்வாவின் ஹோமம் ஸாயங்காலத்தில் தனியாகவும், ப்ரதமையின் காலையிலும் தனியாகவே செய்யவேண்டும். அப்படிப் பர்வதினத்திற்கு வரமுடியாத பக்ஷத்தில் அதையும் சேர்த்து முன்மாதிரி செய்துவிட்டுப் போகலாம். ஹோம ஆரம்பத்தில் ஸமித் முதலிய ஹோமத்ரவ்யங்களை ப்ரோக்ஷிக்க வேண்டியது.

ஸமித்தின் லக்ஷணம்

ஆசாரசீலனானவன் ஸமித், புஷ்பம், தர்ப்பம் முதலியவைகளைத் தானே மந்த்ரபூர்வகமாய் சுத்தியாய் க்ரஹித்துக் கொண்டு வர வேண்டும். விலைக்கு வாங்கப்பட்டோ, சூத்ரர் கொண்டுவரப்பட்டதோ, யஜமானனைப் பதிதனாக்கிவிடும். ஸமித், பவித்ரம், இவை [ஐந்தங்குலம்] ஒட்டையளவு இருக்கவேண்டும். இத்மமும் இவ்வளவே. **பரிதி** பத்தங்குலம் நீளமுள்ளதாய்

இருக்கவேண்டும். பலாசம், புரசு, கருங்காலி இவைகளே சிறந்தவைகள். ஆல், அத்தி, அரசு, தர்ப்பங்கள் கௌணகல்பமாகும். அரசில் ஆபத்ததிகம். துளஸிகாஷ்டத்தால் ஜ்வலிக்கும் அக்னியிற் செய்யும் ஹோமம் அளவற்ற பலனை அளிக்கும். உதிர்ந்த ஸமித்துக்கள் ஆயுளைக் குறைக்கும். இலைகளல்லாதது வ்யாதியை விளைவிக்கும். அளவிற்குக் குறைந்தது மரண ஹேதுவாகும். கோணலாயிருப்பது கார்ய ஹாநி. தர்ஜனீக்கு மேல் பருமனுனது ஸம்பத்தை அழிக்கும். மிகவும் சிறியது பந்துநாசம். இருவாக்கிளை நேத்ர ரோகம். புழுக்களுள்ளது பொருளழிவு. மிகவும் நீண்டது கலஹோத்பத்தி. தோலற்றது ப்ராணஹானிகளை விளைவிக்கும். ஸமித்தானது பச்சையாய் ஆயுதத்தால் க்ரஹிக்கப்பட்டதாய், பிறகு உலர்த்தப்பட்டு ஒரே அளவுள்ளதாயும் இருக்கவேண்டும்.

இதர ஹோம த்ரவ்யங்கள்

ஹவிஸ் **க்ருதம், அக்ருதம், க்ருதாக்ருதம்** என மூன்று வகைப்படும். அன்னம், மா, இவை [செய்யப்பட்டது] க்ருதமாயும், நெல் முதலிய தான்யங்கள் [செய்யப்படாதது] அக்ருதமாயும், அரிசி முதலியவை க்ருதாக்ருதமுமாகும் [இரண்டும் கலப்பு]. கபிலைப் பசுவின் பாலினுல் அக்னிஹோத்ரம் செய்பவர் ஸூர்யமண்டலத்தை பேதித்துக்கொண்டு, நித்யமான பரப்ரம்ஹத்தை அடைகின்றனர். எண்ணெய், தயிர், பால், ஸோமரஸம், பயத்தங்கஞ்சி, அன்னம், நெய், அரிசி, மாம்ஸம் ஜலம் இப்பத்தும் ஹோம த்ரவ்யங்களாகும். பாலினுல் ஒரு வருஷம் ஹோமம் செய்தானுகில் அபம்ருத்யுவை ஜயிக்கிருன். ஒரு பகல் செய்தாலும் மறுபிறப்பை அடைகிறதில்லை என்று ச்ருதி உத்கோஷிக்கிறது. சம்பாநெல், கோதுமை, யவை இவைகளை அப்படியேயும் தான்யமாக்கியும் ஹோமம் செய்யலாம். தோல் நீங்காத எள் ஹோமார்ஹமாகும். ஔபாஸனத்திற்கு மாம்ஸம் ஹோமார்ஹமாகாது. காலையிற் செய்யப்பட்ட வஸ்துவே ஸாயமௌபாஸனத்திற்கும் உபயோகிக்க வேண்டும். உளுந்து, வரகுகள் கூடாது. யவை, அடுத்தது செந்நெல் அதுவும் இல்லாவிடில் தயிர், பால்கள் சிறந்ததாகும்.

சரியானது கிடைக்காவிடில் அதன் குணங்களுள்ள வஸ்து அதற்குப் ப்ரதியாகும். ஹோமத்திற்கு த்ரவ்யம் சொல்லாதவிடத்து நெய்யும், தேவதை சொல்லாதவிடத்தில் ப்ரஜாபதியும் தேவதையாவர். பசுவின் நெய் ஹோமத்திற்குச் சிறந்ததாகும். இது கிடைக்காவிட்டால் எருமையினதும், அதுவும் கிடைக்காவிடில் ஆட்டினதும், அதுவும் கிடைக்காவிடில் காட்டெள்ளின் எண்ணெயும், கடுகெண்ணெயும் உபயோகிக்கலாம். ஒன்றுமே கிடைக்காவிடில், யவை, பாதிரிச்சம்பா, செந்நெல்லின் அரிசியைத் தீர்த்தத்தினுல் கரைத்து நெய்க்குப் பதிலாக உபயோகிக்கலாம். பசு முதலியதின் நெய் கிடைக்காவிடில், அவற்றின் பாலும், அதுவுமில்லாவிடில் அவற்றின் தயிரும், ஒன்றுமே கிடைக்காவிடில் எண்ணெயும் தகுதியாகும். ஹோமத்தில் பிரதிநிதி என்பது நித்ய நைமித்திகத்திற்கே யொழிய காம்யத்திற்கு இல்லவேயில்லை. ஒரு கர்மத்திற்குக் கர்த்தாவானவன் ஸம்ஸ்காரங்களை அடையாதவனுயினும், அவனேதான் அதிகாரியேயில்லாது பூர்ணயோக்யதையுடைய இன்னொருவன் அவனுக்குப் பதிலாக கர்மாதிகாரியாகமாட்டான். முக்கிய த்ரவ்யம் கிடைக்காது கௌண த்ரவ்யத்தினுல் ஹோமம் செய்துகொண்டிருக்கும்பொழுது முக்கிய த்ரவ்யமே கிடைத்துவிட்டாலும் அதை உபேக்ஷித்தே கௌணத்தினுலேயே ஹோமத்தைச்செய்து முடிக்கவேண்டும். முக்கிய விதிகளை அனுஷ்டிக்கச் சக்தனுயுள்ளவன் கௌணவிதிகளை அனுஷ்டித்தால் அதால் இஹபரங்களுக்கு உண்டான பலனைக் கொஞ்சமும் அடைகிறதில்லை என ச்ருதி ஸ்மிருதிகள் முறையிடுகின்றன. ஒருபடி தான்யத்தால் அறுபத்திநான்கு ஆஹுதிகள் செய்யலாம். தில ஹோமத்தில் அரைப்படி எள்ளினுலேயே அவ்வளவு செய்யலாம். ஆஜ்ய ஹுதியானுல் கால்படியே அவ்வளவிற்குப் போதும். நூறு தான்யம் கொண்டது ஒரு ஆஹுதியாகும். அன்னமானுல் அதிலிரண்டு பங்காகும். ஒரு பிண்டமாவது கோழிமுட்டையளவு இருக்கவேண்டும். மயில் முட்டையளவு ஹோமார்ஹமாகும். கையினுல் க்ரஹிப்பது நான்கு விரல்கொண்டவையாக எடுக்கப்படவேண்டும். ஆஜ்யாஹுதியானுல் ஸ்ருவம் அல்லது தர்வி கொள்ளுமளவுமிருக்க வேண்டும்.

அக்னியை ஜ்வலிப்பிக்க இலையானால் வ்யாதியும், முறமானால் தன நாசமும், கையானால் மரணபயமும், முகமானால் ஆயுட்குறைவும் உண்டாகும். விசிறி, வஸ்த்ரம், கட்டைகளும் கூடாது. ஊதுகுழாய், கட்டை, புல் முதலியவைகளை மத்தியில் வைத்துக்கொண்டு வாயால் ஊதலாம்.

புகையோடுகூடின அக்னியில் ஹோமம் செய்யும் யஜமானன் இஹபரங்களில் குருடனாகவே ஆகிறான். தணல் ஜ்வாலை இல்லாதவிடத்தில் செய்தவன் ரோகியாயும், தரித்ரனாயும் ஆகிறான். அக்னியின் காதுகளில் ஹோமம் செய்தால் ரோகமும் நாசியிலானால் மனவருத்தமும், நேத்திரங்களிலானால் நிந்தையும், மயிர்களிலானால் தரித்ரமும், சிரஸிலானால் பாபமும் ஸம்பவிக்கும். அக்னியில் நாக்கிலேயே ஹோமம் செய்யவேண்டியது. அக்னி பகவானின் பல அங்கங்களாவது கட்டையாகயிருக்குமிடம் செவிஎன்றும்,புகையாயிருக்குமிடம் நாசிஎன்றும், சிறியஜ்வாலையுள்ளது நேத்திரம் என்றும், சாம்பல் படர்ந்திருக்குமிடம் சிரஸ் என்றும், விசேஷஜ்வாலையுள்ள இடமே நாவுமாகும். மெல்லிய சாம்பற் படர்ந்து விளங்கும் அக்னியினின்றும், நீலவர்ணமாக உண்டாகும் ஜ்வாலையிற் செய்யப்படும் ஹோமம் ப்ரஹ்மத்தினிடம் ஹோமம் செய்யப்பட்டதாகும். தணல்களின்ஜ்வாலை யாவும் அடங்கின பிறகு மிகவும் சிறியதாய் எரிந்துகொண்டிருப்பதே அக்னியின் தைவீகமான முகமாகும்.

அக்னி பகவானின் ஏழு நாக்குகளினிடங்களும் அவைகளிற் செய்யக்கூடிய ஹோமகர்மங்களும்:—

ஸுவர்ணா	மேற்கே	விவாஹத்திற்கு
கனகா	நடுவே	யாகங்களுக்கு
ரக்தா	வடக்கே	உபநயனத்திற்கு
க்ருண்ணா	தெற்கே	பித்ருகார்யத்திற்கு
ஸுப்ரபா	கீழே	காம்யகர்மாவிற்கு
அதிரக்தா	தென்கிழக்கே	சாந்திகளுக்கு [களுக்கு
பஹுரூபா	வடகிழக்கே	அபிசார ஹோமங்

இந்த அக்னியின் ஏழு நாக்குகளையும் தெரிந்துகொள்ளாமல் ஹோமம் செய்வது நிஷ்பலனாயும், நரக ஹேதுவுமாகிறது.

ஹோமம் செய்வதானது தங்கள் தங்களுடைய க்ருஹ்யத்தில் விதிக்கப்பட்டபடியே அனுஷ்டிக்க வேண்டியது. ஹோமம், ப்ரோக்ஷணம், ச்ராத்தம், ஸந்த்யாவந்தன மார்ஜனம், ஆசமனம், போஜனம் இவைகளில் பாத்திரம், தீர்த்தம் இவைகளை இடது கையினால் ஸ்பர்சித்துக்கொண்டே அனுஷ்டிக்க வேண்டியது. ஹோம மந்த்ரங்களை அர்த்த ஜ்ஞானத்துடன் அனுஷ்டியாவிடில் தோஷமாகும். கர்மாவும் குழந்தை விளையாட்டிற்கு ஸமானமாகி நிஷ்பலமாகிறது. அனுஷ்டானமில்லாத ஜ்ஞானமும், ஜ்ஞானமில்லாத அனுஷ்டானமும் இரண்டும் நிஷ்ப்ரயோஜனமே. குருடனுக்கு ஒரே துக்கம். மூடனுக்கு அனுஷ்டிக்க முடியவில்லையே என்கிற துக்கம். ஆகையால் இருவரும் ஸமமே. ஹோமகாலத்தில் பேசினால் அக்னி தனத்தை அபஹரித்துவிடுகிறான். ஸ்நானகாலத்திற் பேசினால் வருணன் தேஜஸ்ஸை அபஹரிக்கிறான். போஜனகாலத்திற் பேசினால் யமன் ப்ராணனை அபஹரித்து விடுகிறான். ஆகையால் இக்காலங்களிற் பேசுதல் கூடாது. பன்னிரண்டு தினங்கள் வரையில் ஹோமம் நின்றுபோயிருந்தால் ப்ராயச்சித்தம் செய்துகொண்டு அவ்வக்னியையே வைத்துக்கொள்ளலாம். அதற்கு மேற்பட்டுவிட்டால் மறுபடி **ஆதானம்** செய்யவேண்டியது. ஆதானம் பண்ணிக்கொண்டு சதுர்தசி, பர்வம், ப்ரதமை இம்மூன்று தினங்களில் ஹோமம் பண்ணி **ஸ்தாலீபாகம்** செய்யவேண்டும். அக்னியானது அபரிசுத்தர்களால் தொடப்பட்டால் மறுபடி அக்னியாதானம் செய்யவேண்டியது. ஸர்வதோஷங்களுக்கும் [மந்த்ரம், ஸ்வரம், தேவதாபேதம்] த்வன்னோ அக்னே, ஸத்வன்னோ அக்னே' மந்த்ர ஹோமங்களே ப்ராயச்சித்தமாகும்.

'நான் ஒன்றும் செய்யவில்லை. ஸகலமும் ப்ரம்ஹமே செய்கிறது' என்று த்ரிகரண சுத்தமாய்ச் சொல்லுவதே **ப்ரஹ்மார்ப்பண**மென்று ரிஷிகளின் கருத்து. (ஸாத்விகத்யாகம்)

இம்மாதிரியான வைதிக கார்யத்தை ஆபத்தல்லாத காலத்திலும் அனுஷ்டிக்காமற் போவானேயானால் ஒரு வருஷத்திற்

குள் பதிதனுவான். நாஸ்திக புத்தியால் விட்டுவிட்டவன் ஒரே மாஸத்தில் மஹா பதிதனுகிருன். அவனுக்குப் பனிரண்டு அப்த க்ருச்ரத்தைத் தவிர வேறு ப்ராயச்சித்தமே சுத்திக்குக் கிடையாது. இப்படிப்பட்டவனைப் பார்த்தால் ஸூர்யனைப் பார்க்க வேண்டும். தொட்டால் ஸசேல ஸ்நானம் செய்யவேண்டும். பாஷித்துப் பழகிக்கொண்டிருந்தால் இவனும் அவனுக்கு ஸமமாய் விடுகிருன். அவன் அன்னத்தைப் புசித்தல், கூட உட்காரல், படுத்தல்களைச் செய்துவிட்டால் அதே க்ஷணத்தில் அவனுக்குங் கீழாய் மஹாபதிதனுய்விடுகிருன்.

ஸகல தனங்களும் நிறைந்த பூமியையும், மேரு என்கிற ஸ்வர்ண பர்வதத்தையும் தானம் செய்தாலும் ஒரு வேளை ஹோமத்தின் வீசம் பலத்திற்கு ஈடாகாது என வஸிஷ்டர் ஆர்வரிக்கிருர்.

அக்னியில் ஹோமம் பண்ணின ஆஹுதியானது ஸூர்யனை அடைகிறது. ஸூர்யனுல் மழை பெய்கிறது. மழையினுல் பயிர் செழிக்கிறது. அதனுல் அன்னஸம்ருத்தி ஏற்படுகிறது. அதனுல் ப்ரஜைகள் திருப்தியடைந்து ஸந்தோஷிக்கின்றனர். ஆகையால் ஹோம சீலனுன புருஷன் சராசரங்களடங்கிய இந்த முழு லோகத்தையே ரக்ஷித்தவனுகிருன். ப்ரணவம், வ்யாஹ்ருதிகள், ஸ்வாஹா, ஸ்வதா, நம:, வஷட் முதலிய சப்தங்கள் த்வனிக்கும் க்ருஹவாஸிகள் ஸத்யலோகத்திலேயே வஸிப்பவரென்று சொல்லப்படுவர்.

மங்களத்ரவ்ய தர்சனமும் அதன் பலனும்

ஹோமத்தைச் செய்துவிட்டு சுபமான வஸ்துக்களைப் பார்த்துவிட்டு வீட்டை விட்டு வெளியிற் புறப்படுதல் மிகவும் நல்லது.

நெய், தயிர் தண்ணீர்க் குடம், கன்றுடன் கூடிய பசு, வ்ருஷபம், பொன், கோமயம், ஸ்வஸ்திவாசகம், அக்ஷதை, எண்ணெய், தேன், ப்ராஹ்மண கன்னிகை, வெண்ணிறப் புஷ்பங்கள், அக்னி, ஸூர்யன், சந்தனம், அரசுமரம், கண்ணுடி, ரத்னம், சடுகு, குரு, ப்ராஹ்மணன், அரசன், யதி பஞ்சகவ்யங்கள் கோரோசனை, ஸமுத்ரம், கபிலைப் பசு, தீக்ஷிதர், ஆஹிதாக்னி,

அன்னதாதா, ஜ்ஞானஸித்தியடைந்தவன், தபஸ்வி, ஸாது, தீர்க்காயுஸ்காரர், தார்மிகர், சுத்தாத்மா, அரணி, வன்னி, அறுகு, ப்ரயங்கு முதலியன மங்களத்ரவ்யங்களாகும். தினந்தோறும் இவைகளைத் தார்சிப்பதால் பாவந்துலையும். தவிரவும் மஞ்சள், உப்பு, பொறி, மொச்சை, வெல்லம், ஜீரகம், பழம், பூ இவைகள் மங்களாஷ்டகங்கள் எனப்படும். கரும்பு, மொச்சை, அவரை, யவை, நெய், பசுவின்பால், செம்பரத்தைப் பூ, உப்பு இவ்வெட்டும் ஸௌபாக்யாஷ்டகமென விதிக்கப்பட்டிருக்கிறது. பொருளை விரும்புவர் தினந்தோறும் தலையில் வில்வம் முதலிய புஷ்பத்தை அணியக் கடவர்.

அரணி, சுறுப்புப் பூனை, சந்தனம், ரத்தினம், எள், மான் தோல், ஆடு, இவைகளை வீட்டில் எக்காலத்திலும் வைத்திருக்க வேண்டியது. மாடப்புரு, கிளி, பெண் கிளி, முதலியவைகள் வீட்டில் வளர்க்கப்பட்டதானுல் பூதங்களின் கொடுமைகள் நிவாரணமாகும்.

அரசு, அக்னி, எருது, தேவாலயம், பசுக் கொட்டகம், நாற்சந்து, பிராம்ஹணன், தார்மிகர் இவர்களைத் தினந்தோறும் ப்ரதக்ஷிணம் பண்ணவேண்டியது. அரசமரத்தையும் குரு, ப்ராம்ஹணர்களையும் நமஸ்கரிக்க வேண்டியது. நெய்யில் தன் சரீரத்தைப் பார்த்துக்கொள்ளுபவர் ஆயுளை வ்ருத்திசெய்துக் கொள்ளுகிருர்.

ப்ராம்ஹணன், அரசன், பசு, அக்னி, ஸூர்யன், பொன், நெய், தீர்த்தம், இவ்வெட்டுமே மங்கள வஸ்துக்களாகும். இவர்களைத் தினந்தோறும் தர்சித்து, நமஸ்கரித்து, ப்ரதக்ஷிணம் செய்துவருபவர் தீர்ககாயுஷ்மான்களாவர்.

பார்க்கக்கூடாதவர்களான பாபி, பிணியாளி, குருடன், தோரைமூக்கன் தோன்றிவிட்டால் பரிஹாரார்த்தம் ஸூர்யனைப் பார்க்கவேண்டியது.

ப்ரஹ்மயஜ்ஞ விதி

இப்ரகரணத்தில் சொல்லப்படும் விஷயங்களுக்கு மூலாதாரம் வெகுவாய் தைத்ரீய ஆரண்யக இரண்டாம் ப்ரசனத்தில் இருக்கிறது.

கிழக்கு, வடக்கு, வடகிழக்கு இவைகளில் ஒரு திக்கை நோக்கி, வீட்டிற்கு வெளியேயாவது சென்று, ஹோமத்திற்குப் பிறகோ, மாத்யான்ஹிக ஜபத்திற்குப் பிறகோ, தேவ தர்ப்பணத்திற்கு முந்தியும் அல்லது வைச்வதேவத்திற்குப் பிறகேனும் ப்ரஹ்மயஜ்ஞத்தை அனுஷ்டிக்க வேண்டியது.

ஸங்கற்பமானதும் 'வித்யுதஸி' மந்த்ரத்தால் கைகளை ஜலத்தால் துடைத்துக்கொண்டு மும்முறை ஆசமனம் மாதிரி அமந்த்ரகமாய் தீர்த்தத்தை உட்கொண்டு, இரு முறை உதடுகளை ஸ்பர்சிக்கவேண்டும். எல்லா விரல்களினாலும் தலையையும், பவித்ர விரலினால் கண்களையும், ஆள்காட்டியால் மூக்கையும், சுண்டு விரலினால் காதுகளையும், உள்ளங்கையினால் மார்பையும், இடையிடையே ஒவ்வொரு ஸ்பர்சத்துக்கும் ஜலத்தை ஸ்பர்சித்துக்கொண்டே கையலம்பி எழுந்து போய் தர்ப்பாஸனத்தில் உட்காரவேண்டியது. தர்ப்பங்களாலேயே ஒ ர ா ஸனம் இயற்றி தெற்கு வடக்காய் வைத்துக் கிழக்கு நோக்கி உட்கார்ந்து மேலுங்கீழும் பாராமல் வீட்டிலானால் சற்று மௌனமாயும், வெளியிலானால் சற்று உரத்தும், ஸங்கல்ப ரீதியாகக் கைகளை வலத்துடை மீது வைத்துக்கொண்டு பவித்ரபாணியாய் காயத்ரீயை ப்ரஹ்மோபதேசத்திற் போல் த்யானத்துடன்ஜபித்து பிறகு ப்ரச்னமேகமோ சில அனுவாகங்களோ முதல்நாள் விட்டதற்குமேல் தொடங்கி அனத்யயனமே பாராமல் ஜபித்துவர வேண்டியது. தீர்த்தம், ஓஷதிகள் இவைகளின் ரஸமே தர்ப்பங்களாகையால் அவ்வாஸனம் ச்லாகித்துச் சொல்லப்பட்டது. கம்பளத்திலுட்கார்ந்து செய்யக்கூடாது. ஸாவித்ரீயை ஜபித்தலானது தனங்களையுண்டுபண்ணுகிறவர் ஸவிதாவாகையால்அவரை தேவதையாகவுடைய மஹாமந்த்ரத்தை ஜபித்தால் தனங்களை அடைவான். பரஹ்மயஜ்ஞத்தில் நிஷ்டையுடையவன் ப்ரஹ்ம லோகத்தில் விளங்குகின்றனன். பிக்ஷாதானமே இதற்கு தக்ஷிணையாகும். இவ்வங்கமில்லாத ப்ரம்ஹயஜ்ஞம் வீணாகும். உட்கார அசக்தனாயிருப்பவன் நின்றுகொண்டோ, நடந்துகொண்டோ, படுத்தோ உச்சரிக்கலாம். இரவில்கூட ஜபிக்கலாமென்னும் கௌணபக்ஷம் இதை விட்டுவிடக்கூடாது

என்பதை நிர்ப்பந்தித்துச் சொல்லவேண்டியதற்காக ஏற்பட்ட ச்ருதியே யொழிய இரவு ஒரு ஸரியானகாலமாகாது காலை தவறிப்போய் விட்டால் மாத்யாந்ஹிகம், வைச்வதேவத்திற்குப் பின்னும்தான் காலங்களாகும். இவ்வித மஹிமையைத் தெரிந்துகொண்டு பாராயணம் செய்பவனே தபஸ்வியாவன். இதன் பலனை அடைவன். பங்க்தி பாவனார்ஹனாவன். அத்யயனமே தபஸ், தபஸே அத்யயனம். ஸாயங்காலத்திற்குள் ப்ரச்னத்தை முடித்துவிடவேண்டும். பகலில் விட்டால் உபவாஸமே ப்ராயச்சித்தமாகும். அத்யயனம் பண்ணாதவன் புருஷஸூக்தத்தையாவது பகவத்யானத்துடன் சொன்னால் வேதத்தை அங்கங்களோடு நியமமாய் ஜபித்தவனாகிறான். இதுவும் தெரியாவிட்டால் காயத்ரீயையாவது பத்துதரம் ஜபிக்க வேண்டியது. வேதபாராயணம் ஆனதும் இதிஹாஸ, புராணபடனங்கள் செய்யவேண்டியது. இந்த யஜ்ஞத்தில் ப்ரஹ்மம் என்ற வேதமே ஆஹுதி த்ரவ்யமாக ஹோமம் பண்ணப்படுகிறது. அத்யயனமே வஷட்காரமாகும். அதனால்தான் இதற்கு அனத்யயன தோஷமே கிடையாது. ச்ருதியும் இந்த யஜ்ஞத்திற்கு மேகமே ஹவிஸ் வைக்கும் பாத்ரமாகும். மின்னலே அக்னியாகும். மழை ஹவிஸ்ஸாகும். இடியே வஷட்காரமாகும். மேக கர்ஜனை அனுவஷட்காரமாகும். வாயுவே சரீரமாகும். அமாவாஸ்யையே ஸ்விஷ்டாகாரமாகும். இவைகளை இப்படி அறிந்து மழை பெய்யும்பொழுதும், மின்னல் மின்னும்பொழுதும், இடிக்கும்பொழுதும், மேகம் கர்ஜிக்கும்பொழுதும், காற்று வீசும்பொழுதும், அமாவாஸ்யை தினத்திலும், அனுஷ்டிப்பதே தபஸ் என்றே அமாவாஸ்யையும் புகழுகிறது. இம்மாதிரி காலங்களில் ஒரு ரிக்கையேனும், 'ஸத்யம் தப:' என்ற மந்த்ரத்தையேனும் ஜபித்தானாகில் ப்ரஹ்மயஜ்ஞாத்யயன பலனைப் பெறுகிறான் என்கிறது வாஜஸநேயி ப்ராம்ஹணம். தேவதார்ச்சனம், பாராயணம் காம்யஜபம், யாகத்திற்கும் வேதாங்கங்களை அப்யஸிப்பதற்கும், இதற்கும் அனத்யயன தோஷமில்லை. ப்ரதிதினம் ஒரு ப்ரச்னம் சொல்லுபவன் அனத்யயனத்திலும் சொல்லலாம். தனக்கு ஆசௌசமும் தன்னிடத்திற்கு அசுசி

யும் (ப்ரேதம்போல்) ஏற்பட்டால்தான் இதற்கு அனத்யயனமாகும். கிராமமாயிருந்தால் தெருவிலேயே சவமிருக்கக்கூடாது. நகரமாயிருந்தால் தன் வீட்டிலாவது அக்கம்பக்கம் வீட்டிலாவது கூடாது. தெருவுமுழுதும் என்கிற நிர்ப்பந்தமில்லை. ப்ரஹ்மயஜ்ஞத்தை விட்டவன் ப்ரம்மஹத்தி செய்தவனென்று அத்யயனக் கடன்களைச் சேர்ந்தவர்களான ரிஷிகள் சாற்றுகின்றனர். வேதமோதாதவனின் வசனத்திற்கு ப்ரயோஜனம் (கௌரவமே) ஏற்படாது. ஸ்வர்க்கமும் கிடையாது. இதில் கடைசியில், 'நமோ ப்ரஹ்மணே' ரிக்கை மும்முறை வாக்யம் வாக்யமாய்ச் சொல்லவேண்டும்.

ப்ரஹ்மயஜ்ஞம் பண்ணினவனுக்கு ஸகல தனங்களுடன் பூமியை தானம் பண்ணின புண்யம் லபிக்கிறது. ஸர்வ பாபங்களையும் துலைப்பன். ஸர்வ லோகத்தையும் ஜயிப்பன். அபம்ருத்யுவை ஜயிப்பன். ப்ரஹ்மஸாயுஜ்யத்தை அடைவன். எந்தெந்த யாக ப்ரகரணங்களை (ப்ரச்னங்களை)ப் படிக்கிறானோ அந்தந்த யாகத்தை அனுஷ்டித்தவனாகிறான். இதனால் ரிஷிகள் மாத்திரமின்றி தேவ, பித்ருக்களின் கடன்களைத் துலைத்தவனாய் ஸர்வலோகங்களிலும் ஸஞ்சரிக்கிறான். சொன்னது ரிக்வேதமாய் இருந்தால் பால் கால்வாய்களாய் ஓடி இவன் பித்ருக்களையும், தேவர்களுக்கு திவ்ய பால் ஆஹுதிகளாயும், யஜுஸ்ஸாயிருந்தால் நெய்யாஹுதிகளாயும், ஸாமமாயிருந்தால் ஸோமாஹுதிகளாயும், அதர்வாங்கிரஸங்களானால் மது ஆஹுதிகளாயும், ப்ராம்ஹண, இதிஹாஸ (ராமாயண, பாரதங்கள்), புராண (பாகவதம், விஷ்ணு புராணம் முதலிய) காதா (யஜ்ஞகாதை) நாராசம்ஸி முதலியவைகள் மேதஸினாலான ஆஹுதிகளாயும் பரிணமித்து தேவர்களுக்குத் திருப்தியளிக்கின்றன. இதனால் திருப்தியடைந்த தேவர்கள் அத்யேதாவுக்கு அதிக ஆயுள், காந்தி, தேஜஸ் (ப்ரம்மவர்ச்சஸ்), கீர்த்தி, அன்னம், தனங்களால் கொடுத்து பதிலுக்குத் திருப்தி செய்விக்கின்றனர் என்று தைத்ரீய ஆரண்யக இரண்டாம் ப்ரச்ன ச்ருதி.

ரிக்வேதத்திலும் யஜுஸ், ஸாமங்கள் உண்டு. யஜுஸ்ஸிலும் ரிக், ஸாமங்கள் உண்டு. ஸாமத்திலும் ரிக், யஜுஸ்ஸுக்

கள் உண்டு. பெரும்பான்மை ரிக்குகளிருப்பது ரிக்வேதமென்றும், அதேமாதிரி மற்றவைகளும் வியவஹரிக்கப்படுகின்றன.

க்ருஹஸ்தனுக்கு ஏற்பட்ட பஞ்சமஹா யஜ்ஞங்களுள் இது ஒன்றாயிருந்தாலும், ப்ரஹ்மசாரிகளுக்கும் இது உண்டு. 'யேயே யஜ்ஞேன' என்ற மந்த்ரங்களின் இரு பகுதிகளும் அதர்வாங்கிரஸங்கள். 'சித்தி:ப்ருதிவீ' என்ற அனுவாகங்கள் ப்ராஹ்மண மந்த்ரங்கள். 'க்ருதம்பிபந்தி' என்பதாதிமந்த்ரமே இதிஹாஸ மந்த்ரம். 'அதாதோ தர்சபூர்ணமாஸௌ வ்யாக்யாஸ்யாம' என்பதாதிகளே கல்பம். 'ததேஷா' என்பதாதிகளே காதைகள். 'இதம் ஜன:' என்பதாதிகளே நாராசம்ஸிகள். இவைகளைப் படித்துவிட்டு 'தச்சம்யோரா வ்ருணீமஹே' என்ற சாந்தி பாடத்தையும் படிப்பதுண்டு. காலவேளைகளில் ப்ரஹ்மயஜ்ஞமான பிறகு பகவத் கீதை படனம் பூர்த்தியாகவோ சில அல்லது ஒரு அத்யாயமோ பாராயணம் செய்யவும். ராமாயண படனமும அவச்யம். இதை போஜனாந்தரம் ஸ்வாத்யாய காலத்திலும் செய்கின்றனர். அதேமாதிரி ஸ்ரீமத் பாகவதத்தையும் இக்காலத்தில் படனம் செய்வது நலம். இதை இரவில் சிலர் வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

கீதையைப் பதினெட்டு அத்யாயங்களிற் கூறிக் கடைசியாய் நம் இருவருக்கும் நடந்த இந்த தர்மமான ஸம்வாதத்தை யார் படிக்கின்றனரோ அவரால் நான் ஜ்ஞானயஜ்ஞத்தினால் பூஜிக்கப்பட்டவனாவேன் என்று பகவான் ஸ்ரீ க்ருஷ்ணன் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். இதற்கும், தினம் ச்லோகத்திற் கால் பாதமாவது படிப்பவர் மோக்ஷத்தை அடைகின்றனர் என்ற பலச்ருதிகள் விசேஷமாயிருப்பதால் பகவதாஜ்ஞையான ஸந்த்யாவந்தன, ப்ரஹ்மயஜ்ஞாதிகள் போல் இதுவும் அக்காலத்திற் படிக்கத் தகுந்ததாகும்.

பகலை எட்டு பாகமாகப் பிரித்து அதில் முதல் பாகத்தில் அனுஷ்டிக்க வேண்டியவைகள் இதுவரையிற் கூறப்பட்டன.

இனிப் பகலின் எட்டின் இரண்டாம் பாகக் க்ரியைகளைப் பற்றி ஸங்க்ரஹிக்கலாம்.

அத்யயனம், அத்யாபனம் (வேதம் ஓதல், ஓதுவித்தல் ஸந்தை, திருவைகள்), வேதார்த்த விசாரம், வேதாங்கங்கள், மந்வாதி ஸ்ம்ருதி க்ரந்தாவலோகனம் தவிரவும், ஸமித், புஷ்பம், தர்ப்பக்ரஹணங்களையும் இதில் செய்யவேண்டியது.

தானே வைத்துப் பயிராக்கின புஷ்பம் உத்தமம். வனங்களிலுண்டாவது மத்யமம். க்ரயத்திற்கு வாங்கினது அதமம். பிறருடையதானால் அதமாதமம். முதல் நாள் மலர்ந்தது, புழு முதலியவற்றால் கெடுக்கப்பட்டது, கால்களால் தாண்டப்பட்டது, வாடினது, தீண்டத்தகாதவர்களாலும், அசுத்த வஸ்துக்களாலும் ஸ்பர்சிக்கப்பட்டது, அதற்கேற்பட்டவர் த வி ர சூத்ரர், அன்ய மிச்ர ஜாதிக்காரரால் கொண்டுவரப்பட்டது, பாத்திரமின்றி கையில் எடுத்து வரப்பட்டது, வஸ்த்ரத்தில் வைத்துக் கொண்டுவந்தது, தானாகவே உதிர்ந்தது இவைகள் பூஜார்ஹமாகாது. கோவில் தோட்டத்திலிருந்து கொண்டுவந்து வீட்டுப் பூஜைக்கு வைத்துக்கொள்ளக் கூடாது. பொன், வெள்ளி, துளஸி, வில்வம், ஜலத்திலுண்டான தாமரை முதலியன, கங்கா ஜலம் இவைகளுக்குப் பழமை என்கிற தோஷமே கிடையாது. நாரில் கோர்க்கப்பட்ட புஷ்பம், மணல்கள் சேர்க்கப்பட்ட ஜலம், எண்ணெய் சேர்க்கப்பட்ட அன்னங்கள் முதல் நாளினதாயினும் மறுநாளைக்கு க்ராஹ்யமாகும். வெகு தூரங்களிற் சென்று இவைகளை க்ரஹிப்பதே ச்லாக்யமாகும்.

ஞாயிறு, செவ்வாய், வெள்ளி, மன்வாதி, யுகாதி, மத்யாந்ஹத்திற்குப் பிறகு, ஸங்க்ராந்தி (மாஸப் பிறப்பு), பர்வம், த்வாதசி, இரவு, இரு ஸந்த்யாகாலங்கள் இவைகளில் துளஸி தளத்தை க்ரஹிப்பவர் ஸ்ரீ ஹரி மூர்த்தியின் சிரஸைக் கிள்ளினவராவர். துளஸியை க்ரஹித்து என் பக்தன் எங்கெங்கு செல்லுகிறானோ அங்கெல்லாம் நானும் தொடர்ந்து செல்லுகிறேன், கன்றைத் தொடரும் பசுவைப்போல் என்று ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மா பாரதத்தில் கூறியிருக்கிறார்.

இனிப் பகலின் எட்டில் மூன்றாவதான பாக கார்யங்களைப் பற்றி விசாரிக்கலாம்.

குடும்ப யோகக்ஷேமத்தை கவனித்தலே இக்காலத்திற்கு உரியதாகும். யோகக்ஷேமமாவது, இல்லாத பொருளைச் சேகரிப்பதும், சேகரித்திருப்பதை ஜாக்ரதையாய்க் காப்பாற்றிக் கொள்ளலுமேயாம்.

பொருளை அபேக்ஷித்தவனாய் ராஜாவினிடம் சென்று கேட்டு வாங்கிக்கொண்டு வரவேண்டியது என ஹாரீதர், கௌதமரிஷிகள் கூறியவண்ணமே வ்யாஸபகவானும் எழுதியிருக்கிறார். இது அந்தணருக்கு ஜாதி தர்மமாகும் என விதித்துளர். குடும்ப பரணத்திற்குத் தவிர மற்ற எதற்கும் தார்மிகர்களை யாசிக்கக் கூடாது.

பிதா, மாதா, குரு, பார்யை, புத்ரர், தாஸன், (பரிசாரகன், ஆள்), அதிதி, அக்னி (வைதிகம்), இவர்களே போஷ்ய வர்க்கத்தினராவர். தவிரவும், ஜ்ஞாதிகள், பந்துக்கள், தரித்திரர், அ நா த ர் (திக்கற்றவர்), தன்னை அண்டியவர்களும் போஷ்ய வர்க்கத்தினராவர். இவர்களை ரக்ஷிப்பது ஸ்வர்க்கத்திற்கு ஸா த ன மு ம், உதாஸீனமாயிருப்பது நரகத்திற்கும் ஸாதனமாகும் பந்து ஜனங்களை ஆதரியாது தன் வயிற்றை மட்டும் நிரப்பிவருபவன் உயிரோடிருந்தும் இறந்தவனே என மதித்துளர்.

இத்துடன் மூன்றாம்பாகக் க்ரியை முடிந்ததாகும். கடைக்குப் போதல் கழனியைச் சுற்றிவரல் முதலியன இக்காலத்திற் செய்துகொள்ளத் தகுந்தவையாகும்.

இனிப் பகல் எட்டின் நான்காவது பாகக் க்ரியைகளை விவரிக்கலாம். உதித்து ஒண்ணரை ஜாமத்திற்கு மேற்பட்டதே மாத்யாந்ஹிக ஸ்நான காலமாகும்.

மாத்யான்ஹிக ஸ்நானத்திற்காக ம்ருத்திகை, தர்ப்பம், ஸமித், புஷ்பங்கள், எள் முதலியவைகளை எடுத்துக்கொண்டு நதிக்குச் சென்று ஸ்நானத்தை முடித்துக்கொண்டு மாத்யான்ஹிகத்தைச் செய்யவேண்டியது.

இதில் அர்க்யம் ஒருதரம் தான். ஸஹஸ்ராவ்ருத்தி காயத்ரீ ஜபம் உத்தமமாகும்.

ப்ரம்ஹயஜ்ஞும் முந்தி செய்திராவிட்டால் காண்டரிஷி தேவரிஷி பித்ரு தர்ப்பணத்திற்கு முந்தியோடு செய்துவிட வேண்டியது.

முதலில் ப்ரணவத்தையும், முடிவில் 'தர்ப்பயாமி' என்பதையும் சேர்த்து தேவரிஷிகளை அக்ஷதை கலந்த தீர்த்தத்தாலும், பித்ருக்களை திலோதகங்களினாலும் யஜ்ஞோபவீதத்தை விதிப்படி மாற்றிமாற்றி தங்கள் ஸூத்திர ரீதியாக அவர்களைத் த்ருப்தி செய்விக்கவேண்டியது.

பூமிமீது அசுத்த வஸ்துக்கள் (பயிர், சாம்பல், புழு முதலிய) இருப்பது ஸஹஜமாதலால் தர்ப்பங்களைப் பரப்பியே அதன்மீது தர்ப்பிக்க வேண்டும். கரையிலிருந்து தீர்த்தத்தில் தர்ப்பணம் செய்யக்கூடாது. பாத்திரத்திலும் செய்யக்கூடாது. ஒரு கையாலும் செய்யக்கூடாது. கோபத்தோடு செய்தல் கூடாது. பூமியில் செய்யப்படாதது இவையாவும் பித்ருக்களை அடைகிறதில்லை. பொன், வெள்ளி, தாம்ரம் இப்பாத்ரங்களில் தர்ப்பிப்பது அக்ஷயமாகும்.

இடது கையின் அங்குஷ்டமூலத்தில் ரோமமில்லாதவிடத்தில் எள்ளை வைத்துக்கொண்டு வலதுகை கட்டைவிரலால் மட்டும் எடுத்து இடது கை பெருவிரலின் மூலத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது. ஆள்காட்டி விரல்கள் சேர்க்கப்பட்டால் அது ராக்ஷஸ முத்ரையாகும். கல், இலை, துணி, ரோமமடர்ந்த அவயவங்களில் வைக்கப்பட்ட எள் புழுக்களுக்கு ஸமமாகும். தீர்த்தமும் ரத்தமாகும். கறுப்பு எள் வெள்ளையைக் காட்டிலும் சிறந்ததாகும்.

வீட்டில் திலதர்ப்பண நிஷேதகாலங்கள்

ஸப்தமி, ஞாயிறு, ஜன்ம நக்ஷத்ரங்களில் வீட்டில் திலதர்ப்பணம் புத்ர, களத்ர, தாஸர்களைக் கோறினவன் செய்யக்கூடாது. வீட்டிற்கு வெளியிற் சென்று செய்வது நன்மையாகும். அதற்கு முடியாதவன் ஒரு பாத்திரத்தில் தீர்த்தத்தில் எள்ளைக் கலந்து மற்றொரு பாத்திரத்தில் (மண்ணல்லாத பாத்திரம்) தர்ப்பிக்கலாம். சுபம் விவாஹமாயிருந்தால் ஒரு வர்ஷமும், உபநயனமானால் ஆறு மாதங்களும், சௌளமானால் மூன்று மாதமும் வீட்டில் திலதர்ப்பணம் செய்வது கூடாது. விலக்கக்கூடாத ஸந்தர்ப்பமாயிருந்தால் எள்ளும் அரிசியுமாகக் கலந்து தர்ப்பணம் செய்யலாம்.

திவ்ய பித்ருக்களான வஸுருத்ராதித்யர்களின் நாமதேயங்கள்

த்ருவர், தர்மர், ஸோமர், தீர்த்தர், அநிலர், அநலர் (ஆபோக்னி வாயு), ப்ரத்யூஷர், ப்ரபாஸர், என **வஸுக்கள்** எட்டுபேராவர்.

அஜைக பாதர், அஹிர் புத்னியர், விரூபாக்ஷர், பைரவர், ஹரர், பஹுரூபர், த்ரயம்பகர், ஸுரேச்வரர், ஸாவித்ரர், ஜயந்தர், பிநாகீ, அபராஜிதர், என **ருத்ரர்** பதினொருபேர் ஆவர்.

இந்த்ரர், தாதா, பகர், பூஷா, மித்ரர், வருணர், அர்யமா, அர்ச்சிஷர், விவஸ்வான், த்வஷ்டா, ஸவிதா, விஷ்ணு என **ஆதித்யர்**கள் பன்னிருவராவர்.

ஸ்ம்ருதி ரீதியாக இக்காலத்தில் தர்ப்பணத்தால் த்ருப்தி செய்யவிக்கப்பட வேண்டியவர்.

பித்ருக்கள், மாத்ருக்கள், மாதாமஹர், பித்ரு ஸஹோதரர், அவர் பார்யைகள், மாதுலர், அம்மாமி, குரு, ஆசார்யர், உபாத்யாயர், மித்ரர், பொருளளிப்பவர், அன்னமளிப்பவர், போஷகர், தரித்திரர், அரசர், இப் பலபேர்களின் பார்யைகள், பிறகு விஷ்ணுவைச் சேர்ந்த கணங்கள், (ஆதாரசக்தி). பிறகு ரிஷிகள், சந்தஸ், வேதங்கள், இதிஹாஸங்கள், புராணங்கள், ஸர்வ பித்ருக்கள் மற்றுமுள்ள ஸகல ஜீவராசிகளுக்கும் தர்ப்பணம் செய்யவேண்டியது. ஜீவ பித்ருக்கள் (தகப்பனை உயிரோடு உடையவர்கள்) கவ்யவாஹர், அதலர், ஸோமன், யமன், அர்யமா, அக்னிஷ்வாத்தர், ஸோமபர், பர்ஹிஷதர் இவர்களைக் குறித்துமட்டும் தர்ப்பணம் செய்யவேண்டியது. ஈரவஸ்த்ரத்துடனும், ஒரு வஸ்த்ரத்துடனும் தேவகார்யங்களை அனுஷ்டிக்கக்கூடாது.

இவ்விதம் தேவர், அஸுரர், தக்ஷர், நாகர், கந்தர்வர், ராக்ஷஸர், பிசாசர், குஹ்யகர், ஸித்தர், கூச்மாண்டர். பசுக்கள், பக்ஷிகள், பூமி, ஜலம், வாயு பக்ஷணம் செய்யும் ஸர்வ சராசரங்கள், யமலோக ஜீவராசிகள், பந்து, அபந்துக்கள் எல்லோரையும் தர்ப்பணங்களால் த்ருப்திசெய்பவன், ஜகத்தை உத்தாரணம் பண்ணின மஹாபுண்யத்தைப் பெறுகிருன் என்று பராசரர் மைத்ரேயருக்கு உரைத்தனர். ‘ஆப்ரஹ்ம ஸ்தம்பபர்யந்தம் ஜகத் த்ருப்யது’ என்ற வாக்யத்தை உச்சரித்து மூன்று முறை தர்ப்பணம் செய்வது அசக்தர்களுக்குத் தகுதியாகும்.

தேவரிஷி பித்ருக்களுக்குத் தர்ப்பணம் ப்ரதிதினம் செய்யாதவர் அவர்களுக்குக் கடன்காரராகி மீளா நரகத்திற்காளாகின்றனர். த்ருப்தி செய்விப்பவரோ தேஜோ ரூபியாய் சாச்வதமான பரமபதத்தை அடைகின்றனர் என விதிக்கப்பட்டது. குழந்தைகள் தாயைத் தேடுவதுபோலவும், பசிதாகமுள்ளவன் அன்னபானங்களை அபேக்ஷிப்பது போலவும், ஜகத்திலுள்ள ஸகல சராசரங்களும் ப்ராம்ஹணன் விடும் தீர்த்தாஞ்ஜலியை எதிர்பார்க்கின்றனர். செய்தால் அவையாவும் ரக்ஷிக்கப்பட்டனவாகும். வந்த பித்ருக்களும் த்ருப்தியாய்த் திரும்புவர். பித்ருக்கள் ‘நம் ஸந்ததியிற் சீதளமான நதி ஜலத்தால் தர்ப்பணம் செய்யக்கூடிய ஒரு புத்ரன் உண்டாகமாட்டானு’ என்று பரம ஆவலோடு நம் புத்ரகாமத்தை விட அனேக மடங்கு ஸதா சிசு ஜனனத்தை எதிர்பார்க்கின்றனர். இவ்வாறு த்ருப்தி செய்விக்காத பிள்ளை புத்ர சப்தத்திற்கு எப்படி அர்ஹனுவன். செய்யாதவனுடைய பித்ருக்கள் தனது மாம்ஸ நீரை அருந்துகின்றனர். தர்ப்பணத்தைவிட்டு உண்டவன் உடனே ஸ்நானஞ் செய்து ப்ராம்ஹணர்களுக்குப் போஜனத்தால் த்ருப்தி செய்விக்க வேண்டியது.

நரகசதுர்த்தசியிலும், க்ருஷ்ணுங்காரக சதுர்த்தசியிலும் (செவ்வாயுடன் கூடினது) யமதர்ப்பணம் செய்வதால் அந்த ஜன்மத்திற் செய்த பாவங்கள் அனைத்தும், அதே க்ஷணத்தில் போய்விடுகின்றன. ‘யமாய தர்ம ராஜாய’ முதலிய பதினுங்கு பெயர்களாலும் கடைசியில் ‘நம:’ என்ற பதத்தைச் சேர்த்து

மும்மூன்று முறை திலோதகத்தால் தர்ப்பணம் செய்வதே யமதர்ப்பணமாம். நதியில் தேவ தீர்த்தத்தினுல் தெற்கு முகமாயிருந்து இதைச் செய்யவேண்டியது. யமனுக்கு தேவத்வம், பித்ருத்வம், இரண்டுமிருப்பதால் ப்ராசீனுவீதியாயிருந்தும் செய்யலாம். பிறகு ‘யமோநிஹந்தா’ என்பதாதி பத்து நாமங்களையும் ஜபித்து, ‘நீலபர்வதஸங்காசோ’ என்பதாதி வாக்யங்களைச் சொல்லியும் நமஸ்கரிக்கவேண்டியது.

இதர காம்ய தர்ப்பணங்கள்

மாகமாத சுக்லாஷ்டமி திதியில் பீஷ்ம தர்ப்பணம் செய்தால் ஒரு வருஷத்திய பாவம் துலைகிறது.

மன்வாதி, யுகாதிகளில் செய்யும் திலோதக பித்ரு தர்ப்பணம் ஆயிரம் வருஷத்திய நித்ய ச்ராத்த பலனை அளிக்கும் என்று பித்ருக்கள் பேசும் ரஹஸ்யம் என்று மத்ஸ்ய புராணம் கூறுகிறது.

ஆடிப் பௌர்ணமி முதல் ஐந்து பக்ஷங்கள் பித்ருக்கள் அன்னபான இச்சைகளுடன் கார்த்துக்கொண்டிருக்கின்றனர். அக்கால தர்ப்பணமும் மிகச் சிறந்ததாகும். அமாவாசை, ஸங்க்ராந்தி, க்ரஹணம் இவைகளில் நித்ய தர்ப்பணம் செய்த பிறகுதான் அத்தினத்திய ச்ராத்தம் (தர்ப்பணம்) செய்ய வேண்டும்.

பரேஹனி தர்ப்பணமாவது புத்திரர் ஒருவராயிருந்தாலும் பலராயிருந்தாலும் ச்ராத்த மறுநாள் ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் ஸ்நானம் செய்து திலதர்ப்பணம் செய்துவிட்டு மறுபடி ஸ்நானம் செய்து நித்யகர்மானுஷ்டானங்களைச் செய்யவேண்டியது. உதயமான பின்பும் ஹோமத்திற்கு முந்திச் செய்யலாம். நாந்தி ச்ராத்தம், ஸபிண்டீகரணம், ஏகோத்திஷ்டம், மாஸிகம், ஆப்திகங்களுக்கு தர்ப்பணம் செய்யவேண்டியதில்லை. மஹாளயபக்ஷத்தில் தினந்தோறும் திலதர்ப்பணம் செய்ய வேண்டியது. ஸஹ்ருன் மஹாளய ச்ராத்தம் அன்னமானுல் மறுநாட் காலையில் ஈர வஸ்த்ரத்துடன் திலதர்ப்பணம் செய்ய வேண்டியது. ஆப்திக ச்ராத்தத்தில் அன்றே ச்ராத்தாங்க

தர்ப்பணம் செய்பவன் பித்ரு ஹத்தி செய்தவனுய்க் கற்பகோடி காலம் நரகத்தில் மூழ்குகிருன்.

க்ஷேத்திர ச்ராத்தத்தில் பொன், எள் இவைகளினுல் பித்ருக்களைத் த்ருப்தி செய்வித்து ச்ராத்தத்தின் முடிவில் பிண்ட தானமும் தில தர்ப்பணமும் செய்யவேண்டியது. ஹிரண்ய ச்ராத்தத்தில் ச்ராத்தத்திற்குப் பிறகு திலதர்ப்பணம் செய்யவும். ஸபிண்டீகரணம் பனிரண்டாம் நாளில் செய்தானவன் பிந்தி வரும் அமா, ஸங்க்ராந்திகளில் திலதர்ப்பணம் செய்யலாம். அது செய்திராவிடில் கூடாது. அமாவாஸையன்று ப்ரத்யாப்திகம் வந்துவிட்டால் ப்ராம்ஹணபோஜனம் ஆனபிறகு பிண்ட தானத்திற்கு முந்தி தர்ச தர்ப்பணத்தைச் செய்யவேண்டியது.

அமாவாஸை, வ்யதீபாதம், ஸங்க்ராந்தி, வைத்ருதி, அஷ்டகை, மன்வாதி, யுகாதி, மஹாளயம் இவைகளில் அன்ன ச்ராத்தமும், திலதர்ப்பணமும் செய்யவேண்டியது. மஹாளயத்தில் தினந்தோறும் அன்ன ச்ராத்தமேனும் தர்ப்பணமும் செய்யவேண்டியது. ஆமச்ராத்தத்தில் முந்தி திலதர்ப்பணம் செய்யவேண்டும்.

தர்ப்பணம் கிழக்கு முகமாயிருந்து திலோதகங்களால் பித்ருக்களைக் குறித்து, தென்புறமாகக் கையைச் சாய்த்துச்செய்ய வேண்டியது.

பரேஹினி தர்ப்பணம் சிஷ்டாசாரம் இருந்தால் இருவர்க்கத்திற்கும் செய்யலாம்.

விகிரம், பிண்டதானம், தர்ப்பணம், ஸ்நானம் இவைகளில் ஆசமனம் செய்து பிறகு தர்ப்பங்களை விஸர்ஜனம் செய்ய வேண்டியது. பிறகே வஸ்த்ரநிஷ்பீடனம் செய்யத்தக்கது. ஸ்நானமானதும் தேவரிஷி பித்ரு தர்ப்பணம் செய்யாதவரையில் வஸ்த்ரம் பிழியக்கூடாது. பிழிந்தால் பித்ருக்கள் ஆசையற்றவர்களாய் சபித்துத் திரும்புகின்றனர். வஸ்த்ரநிஷ்பீடனம் துணியை நான்காக மடித்துக் கரையிலேயே செய்யவேண்டியது. இதுதான் ச்ராத்த உச்சிஷ்டத்தைப் புசிப்பவர்களுக்கு பாக்கி

யத்தை அளிக்கும். வஸ்த்ரம் பிழிதல் காலையில் அனுஷ்டிக்கும் கர்மங்களுக்கு முந்தியும் மாத்யான்ஹிகத்தில் ப்ரம்ஹயஜ்ஞத்திற்குப் பிந்தியும் செய்யவேண்டியது. முன்புபோல் மணிக்கட்டிற்கிடையில் வைத்துக்கொண்டு இருமுறை ஆசமனம் செய்யவேண்டியது.

தேவபூஜை

நம் குல பெரியவர்களின் ஆசாரப்படிக்கும் நமக்கு மனஸ்ருசிக்கும் வண்ணமும் ப்ரம்ஹா, விஷ்ணு, சிவன், அக்னி, ஆதித்யன், கணபதி, ஸரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி முதலியோருள் ஒரு தேவதையை வழக்கப்படி துளஸி, வில்வபத்ரங்களாலும், புஷ்பம், தீர்த்தம், அக்ஷதைகளாலும், தூபதீபங்களாலும் பக்திச்ரத்தையுடன் புருஷஸூக்தம் முதலிய ரிக்குகளால் பூஜிக்கவேண்டியது. ஆதித்யன், அம்பிகை, விஷ்ணு, கணபதி மஹாதேவன் இவ்வைந்து தேவதைகளையும், பஞ்சயஜ்ஞபரஞன ப்ராம்ஹணன் பூஜிக்கவேண்டியது.

அக்னியில் ஹவிஸ்ஸினுலும், தீர்த்தத்தில் புஷ்பங்களாலும், ஹ்ருதயத்தில் த்யானத்தினுலும், ஸூர்யமண்டலத்தில் ஜபத்தினுலும் ஸ்ரீ ஹரிமூர்த்தியைப் பூஜிக்கவேண்டியது. ஸாளக்ராமம், விக்ரஹம், யந்த்ரம், ஸுவர்ணம், பசு, ப்ராம்ஹணர் இவர்களிடத்திலும் தேவதைகளைப் பூஜிக்கலாம். ப்ராம்ஹண சரீரத்தில் ஸர்வ தேவதைகளும் வஸிக்கின்றனர். ஆகையால் அவர்கள் சரீரத்திலேயே தேவதைகளைப் பூஜிக்கவேண்டியது. பூஜிக்கப்படுவதற்கு ப்ராம்ஹணன் கிடைக்காவிட்டால் ப்ரதிமை முதலியவைகளில் பூஜிக்கவேண்டியது. ப்ரதிமை, பட்டயம், யந்திரம், இவைகளுக்குப் பிரதிதினம் அபிஷேகம் கூடாது. பஞ்சபர்வங்களிலும், அழுக்கடைந்திருந்தாலும், சில விசேஷ காலங்களிலுமட்டுமே ஸ்நானம் செய்விக்கவேண்டியது. ஸாளக்ராம சிலைக்கு ப்ரதிஷ்டை, ஸம்ப்ரோக்ஷணம், ஆவாஹனங்கள் கிடையாது. அதற்கு நித்யாபிஷேகம் உண்டு. யோகிகள் ஜீவபரமாத்மா ஸம்யோகம் பெற்று மிகவும் நிர்மலமாக விளங்கும் ஹ்ருதயத்திலும், ப்ராம்ஹணர் அக்னியிலும், விக்ரஹங்களிலும் உபாஸிப்பர். புருஷஸூக்த பதினெட்டு ரிக்குகளுக்கும் பதி

ணெட்டு ரிஷிகள், பதிணெட்டு தேவதைகள், பதிணெட்டுவினியோகங்களுமுண்டு. அவ்வினியோகங்களாவன:— ஆவாஹனம், ஆஸனம், அர்க்யம், பாத்யம், ஆசமனீயம், மதுபர்க்கம், ஸ்நானம், வஸ்த்ரம், யஜ்ஞோபவீதம், சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம், தாம்பூலம், ப்ரதக்ஷிணம், நமஸ்காரம், உத்வாஸனங்களே ஷோடசோபசாரங்களாகும். ஜகத்காரணப் பொருளான புருஷனை பதிணெட்டு ரிக்குகளால் தன் தேஹத்தில் பாதாதிகேசம் வரையில் நியாஸம்செய்து கொள்ளவேண்டியது. முதலில் பீடபூஜை, ஆத்மபூஜைகளை முடித்துக்கொண்டு பிறகு பூஜை ஆரம்பிக்கவேண்டியது. இதற்கு பூதசுத்தி ஸம்ஸ்காரம் என்று பெயர். இதில் நம் அழுக்கு உடம்பை தஹித்து பகவானுடைய பாதத்தில் ஆத்மாவை ஸமர்ப்பித்துவிட்டு, பிறகு அத்திருவடிகளினின்றும், கங்கைபெருக இச்சரீரத்தில் வந்து மறுபடியும் புதிதாய் தேஹம் எடுத்ததாய் ஸம்ஹார, ஸ்ருஷ்டி, ஸ்திதிகளை மனதால் மந்த்ர பூர்வகமாய் பாவிக்கவேண்டியது.

புருஷஸூக்த அபிஷேகத்தால் ஸகல ஜீவராசிகளோடும் கூடின புவனங்கள் த்ருப்தி செய்விக்கப்பட்டதாகும். ‘ஜிதந்தே புண்டரீகாக்ஷ’ என்கிற பஞ்சஜிதந்தேக்களால் பகவானைஸ்தோத்ரம் செய்யவேண்டியது.

தேவாலயத்தைச் சுத்தி செய்தலானது கோதான பலனையுடையதாகும். நந்தியாவட்டை, ஜாதிமல்லிகை, தாழை, தாமரைப் பூக்கள், கருந்துளஸி, சண்பகம் சிறந்ததாகும். அதைவிட ஸ்வர்ண புஷ்பம் அளவில்லாப் பலனை அளிக்கும். துளஸியால் ஆராதனம், ஏகாதசி உபவாஸத்திற்கு ஸமமாகும். கோயில், நாற்சந்து இவைகளுக்குத் தீபம் வைத்தால் நல்லறிவு முதலியனவைகளைத் தரும். ஹவிர்நிவேதனமில்லாவிட்டால் பழம், துளஸி, தீர்த்தம் வைத்து நிவேதிக்கலாம். அவையும் இல்லாவிடத்து மானஸிகமாகவேனும் செய்ய வேண்டியது.

கைகள், கால்கள், முழங்கால்கள், மார்பு, சிரஸ், நேத்ரம், வாய், மனஸ் இவைகளாற் செய்வதே அஷ்டாங்க நமஸ்காரம்.

ஸாளக்ராம அபிஷேக தீர்த்தத்தைப் பானம் பண்ணி சிரஸில் ப்ரோக்ஷித்துக்கொண்டால் ஸர்வ பாப நிவர்த்தியாகும். அதைப் பானம் செய்யாமல் ப்ரோக்ஷணம் மாத்திரம் செய்துகொண்டால் ப்ரம்மஹத்தி தோஷத்தையடைகிறான், அது துளி கீழே விழுந்துவிட்டால் அநேக ஹத்திதோஷங்களை விளைவிக்கும். விழுந்தவுடன் அதைத் துணியால் ஒத்திவிடவேண்டியது. அதைப் பானம்பண்ணிக் கையைக் கழுவினால் பஞ்சமஹாபாதகத்தை அடைகிறான். இதைப் பருகுவது ஸோமபானத்திற்கு ஸமமாகும். ஸ்ரீ விஷ்ணுவினுடைய நிர்மால்யம் (முதல்நாள் வைத்துக் களையப்பட்ட புஷ்ப துளஸிகள்), புஷ்பம், பழம், ஜலம், இவற்றுள் எதுவாயினும் தரித்தானாயின் அவன் மஹா பரிசுத்தனாகிறான்.

ஸ்த்ரீ, சூத்ரர்கள் மந்த்ரமன்னியில் தந்த்ரத்தினாலேயே பூஜிக்கவேண்டியது. இவர்களால் பூஜிக்கப்படுவதை வணங்குபவன் இருபத்தோரு வம்சத்துடன் மஹாநரகத்திற்கு ஆளாவான். பரிசுத்தமான மனதுடன் தினந்தோறும் விஷ்ணுவை ஆராதிப்பவன் மறுபிறப்பை அடைகிறதில்லை. அப்படிப் பூஜையின்றித் தனக்காகவே புசித்து உண்பவன் பாவத்தையே புசிப்பவனாகிறான் என்று ஸ்ரீ பகவான் கீதையிற் கூறியிருக்கிறார். பூஜையில் ஹுங்காரம், வார்த்தையாடுதல் கூடாது.

விஷ்ணுபூஜையில்லா வீடு ஸ்மசானத்திற்கும், பகவத்கதையில்லாத கானங்கள் நரியின் கூக்குரலுக்கும், விஷ்ணு ஸேவை பண்ணாதிருப்பவன் பிணத்திற்கும், விஷ்ணு நிவேதனம் ஆகாததைப் புசிப்பது விஷத்தைப் புசிப்பதோடும் ஸமமாகும். ‘ய: பூர்வ்யாய வேதஸே’ என்னும் யஜுர்வேத சாகையில் விஷ்ணு பூஜையை மிகவும் ச்லாகித்திருக்கிறது. எந்தெந்த அபீஷ்டங்களை அபேக்ஷித்துப் பூஜித்தாலும் அவ்வவை இதில் கிடைக்கின்றன. புராணத்தில் விஷ்ணுவைப் பூஜியாத ப்ராம்ஹணனுக்குக் கொடுக்கும் தானம் அவன் செய்யும் ஹோமம், தபஸ், அத்யயனம் யாவும் ப்ரேதத்திற்குச் செய்யும் அலங்காரத்

திற்கு ஸமமாகும், மாதாவைப் போல் ஸ்ருஷ்டித்து, ரக்ஷிக்கும் மஹாவிஷ்ணுவை ஆராதியாதவன் மீளா நரகிற்காளாகிருன் என்றும் சொல்லியிருக்கிறது.

தனுர்மாஸ ஆராதனம்

நம் உத்தராயண தக்ஷிணாயன காலங்களை ஒரு தினமாகக் கொண்ட தேவர்களுக்கு மார்கழிமாஸமே உஷ:காலமாகும். அம்மாஸத்தில் தேவேசனை ஷோடசோபசாரத்தோடு ஆராதனஞ் செய்து எழுப்பி பொங்கலை தினந்தோறும் மிகுந்த பக்தியுடன் உதயத்திற்குமுந்தி நிவேதனம்செய்பவன் ஸ்ரீவிஷ்ணுபதவியைப் பெறுகிருன். இம்மாஸத்தில் சிவபூஜையும் சிறந்ததாகும்.

மார்கழி மாஸம் சுக்லபக்ஷ ஏகாதசி (வைகுண்ட ஏகாதசி) திதியில் வேதபாராயணத்துடன் தேவனுக்கு உத்ஸவம் செய்ய வேண்டியது. திருவோணம், த்வாதசி, பருவகாலம், ஜன்ம நக்ஷத்திரம், மாஸநக்ஷத்திரம், ஹரிதினங்களிலும், துர்நிமித்தம், துஸ்வப்னம், மஹாபயம், பக்தர் வரவு முதலிய இக் காலங்களிலும் பகவானுக்கு விசேஷ ஆராதன நிவேதனங்கள் செய்யவேண்டியது. விஷ்ணுபூஜையைவிட வேறு விசேஷவைதிக கர்மமே கிடையாது. விஷ்ணுஸூக்தம், புருஷஸூக்தங்களை விட சிறந்த வேதமந்திரமும் கிடையாது ஆகையால் திருமாலை இம்மந்திரங்களால் தினந்தோறும் ஆராதிக்கவும். இதில் அஷ்டாக்ஷரம் ப்ரத்யுபசாரத்திற்கும் உபசாரமந்திரமாகும். இவ்விதம் பூஜித்து நமஸ்கரித்து ஆத்மநிவேதனம் பண்ணத் தகுந்ததாகும். பூஜாக்கிரமம் வைஷ்ணவ ஆன்ஹிகத்தில் ஸம்ப்ரதாய பேதப்படி அறிந்துகொள்ளத் தக்கதாகும்.

பஞ்சாக்ஷரத்திஞல் மஹேசனை ருத்திரமந்த்ரத்தோடு விஷ்ணுபூஜையிற் சொல்லப்பட்டதுபோலவே செய்யத்தகுந்தது. கோமயத்தால் மெழுகி முன்னே ப்ரம்ஹ விஷ்ணுக்களையும், தெற்கில் ஸ்கந்த விஞயகர்களையும், மேற்கில் சூலத்தையும், வடக்கில் நந்திகேச்வரனையும், ஸ்தான கல்பன பூர்வகமாய் அமைத்து அர்க்கிய பாத்தியம் ஸமர்ப்பித்து நிர்மால்யத்தைப் போக்கி வடக்கே சண்டேசனிடம் சேர்ப்பித்து அதன் பிறகு

ஸ்நானதர்ப்பணாதி தூபதீபபர்யந்தமும் சருநிவேதனம் எல்லா தேவதைகளுக்கும் பண்ணி அஷ்டநாமங்களையுச்சரித்து மந்த்ர புஷ்பம், ஸ்தோத்திரங்களைச் செய்து உத்வாஸனம் பண்ண வேண்டியது. தேவதாஸாந்நித்தியம் ஸதா இருப்பதால் ப்ரதிஷ்டையாயிருப்பதால் ப்ரதிமைகளுக்கு ஆவாஹனம் உத்வாஸனங்கள் கிடையாது. இப்படிச் செய்வது இஹபரங்களுக்கு நன்மையாகும்.

லிங்கத்தை தர்சிப்பதே புண்ணியமானது. தர்சனத்தை விட ஸ்பர்சம் இன்னும் மேலானது. ஸ்பர்சத்தைவிட அர்ச்சனம் இன்னும் ச்லாக்கியமானது. அதைவிடத் தியானம் மிகவும் சிறந்ததாகும். சாந்த்ராயணக்ருச்சிராதிகளால் ஆஹாராதிகளைக் குறைத்து ச்ரமப்படுவது ஒருநாள் சிவபூஜைக் கீடாகாது. தேன், தயிர், பால், நெய்யபிஷேகங்களின் பலனை வாய்விட்டுச் சொல்லிமுடியாது, எல்லையில்லாதன. நூறு முறை பாலபிஷேகமும், இருபத்தைந்து முறை யெண்ணெயபிஷேகமும், பழரஸங்களால் ஆயிரமுறை யபிஷேகமும் செய்வது மஹாபிஷேகமெனப்படும். வாஸனைச் சந்தனாபிஷேகத்திற்கு கந்தர்வலோகமும், பன்னீரபிஷேகத்திற்குக் குபேர லோகமும், (பால், தயிர், நெய், தேன், சர்க்கரைகளால்) பஞ்சாம்ருத அபிஷேகத்திற்கு முக்தியும் பலனாகும். புதிய பட்டு வஸ்த்ரங்களையும், மூன்றிழையுள்ள தாமரை நூல்களால் இயற்றப்பட்ட வெண்மையான உபவீதத்தையும் சாற்றுகிறவன் வேதாந்தங்களின் கரையைக் காண்பன். மயிராலான கம்பளம் முதலியவை கூடாது. ஸுகந்த சந்தன லேபனம் செய்பவன் அனேக கோடி வருஷங்கள் சிவலோகத்தில் வஸிப்பன். நெய் தீபமேற்றி, அகிற்புகை யூட்டுபவர் யமயாதனைகளைத் துறந்து சிவலோகம் போவார்கள். சமையற்பாத்திரத்தில் எவ்வளவு அன்னம் நிவேதனம் செய்யப்படுகிறதோ அவ்வளவு ஆயிர யுகங்கள் ஸ்வர்க்கத்தில் ஆனந்தம் அனுபவிப்பர். இரண்டு மரக்கால் பசுவின் பால், இரண்டு மரக்கால் பசுவின் நெய்,

இரண்டு மரக்கால் அரிசியைச் சேர்த்து த்ராக்ஷை, முந்திரிப் பருப்பு முதலியவைகளைக் கலந்து செய்வதே பாயஸமாகும். இது தேவதைகளுக்கு அமிர்தமாகும்.

வாழை, மா, தென்னை, பலா, புளி, பாகல், கரும்புபயறு, புளியுகிர், கக்கரி, சேனை, கரணை, சர்க்கரைவள்ளி, சுக்கு, இஞ்சி, கடுகு, மிளகு, ஜீரகம், துவரை, மொச்சை, தட்டைப்பயறு (காராமணி), சாமை, உளுந்து, பயறு, எள்ளு, தினை, கண்டங்கத்தரி, தேமா, பூஷணி, வெள்ளரி முதலியன கூடும். கத்தரி பேதங்களுடன் உதவும். மூங்கிலரிசி, யவை, குருவை, சென்னெல் (செம்பாளை), செம்பா, பெருநெல் இவைகள் பின்சொல்லியதைவிட முன்சொன்னவைகள் முறையே ச்லாக்கியமாம். வரகு, கேழ்வரகு சுரைகள் உதவா. தாழை, குருக்கத்தி, குருந்தை, மா, முல்லைப்பூக்கள் சிவ பூஜைக்காகாது.

ஹரிஹரபூஜை வைதிக தர்மமாகையால் த்விஜர்கள் மட்டுமே அதிகாரம் பெறுவர். விநாயகர், ஸூர்யன், அம்பிகை, அச்சுதன், மஹேசன் இவ்வைவர்களைப் பூஜிப்பவர் ஸூர்ய மண்டலத்திலேனும், ஹ்ருதயத்திலேனும், ஓர் மேடையிலேனும் (ஸ்தண்டிலம்), பிம்பத்திலேனும் பூஜிக்கவேண்டியது. கிழக்கு முகமான தேவனை வடக்கு முகமாயிருந்து பூஜிக்க வேண்டும்.

பூஜாக்ருஹத்தை யடைந்து நமஸ்கரித்து ஓர் மணைமீது உட்கார்ந்து ப்ராணாயாம ஸங்கல்பங்களைச் செய்துகொண்டு சங்கு முதலிய பாத்திரங்களால் நல்ல தீர்த்தத்தை நிரப்பி, புஷ்பாக்ஷதைகளைப் போட்டு காயத்ரீ மந்த்ரத்தாலபிமந்தரித்து தீர்த்தங்களை ஆவாஹனம் பண்ணி 'ஆபோஹி' என்ற மந்திரத்தால் தன் சரீரம், பூஜாக்ரஹம், பூஜாத்ரவ்யங்களையும் ப்ரோக்ஷித்துத் தீர்த்தகும்பத்தை ஸ்தாபித்து சந்தனம் முதலியவைகளால் அலங்கரித்து, ஜபித்து, அந்த தீர்த்தத்தினால் அந்தந்த மந்த்ரங்களைச் சொல்லி ஷோடசோபசாரங்களையும் ஸமர்ப்பிக்க வேண்டியது. பதார்த்தங்கள் குறைவாயிருந்தாலும் மனதினால் இருப்பதாய்த் தியானம் செய்துகொள்ளவேண்டியது. கடைசியில் நமஸ்கரித்து அபராதக்ஷாபணம் பிரார்த்தித்து விஸர்ஜனம் செய்ய வேண்டியது. இப்படிச் செய்வதால் ஸர்வாபீஷ்டங்களையும் பெறுவான். ஹோமசேஷான்னமோ தனியாகச் சமைக்கப்பட்டதோ சிவபூஜைக்குதவும். பூஜையில் நிவேதனமான அன்னத்தால் வைச்வதேவம் செய்யக்கூடாது.

ஆசார்யனிடத்தில் மனிதன் என்கிற புத்தியும், பிம்பத்தில் கல், தாம்ப்ரம் என்கிற புத்தியும், மந்திரத்தில் ஏதோ ஒரு சப்தம் என்கிற புத்தியும் வைப்பவன் ப்ரஹ்மஹத்தி செய்தவனாகிறான். குருவை அவமதிப்பதால் மரணத்தையும், மந்த்ரத்தை தூஷிப்பதால் தாரித்ரத்தையும் அடைந்து ரௌரவ மஹாநரகத்தையும் அடைகிறான் என்பதில் ஸந்தேஹமேயில்லை என முறையே பராசர வஸிஷ்டர்கள் விதிக்கின்றனர். ஆசார்யனை தைவமாகவே கருதவேண்டும்.

பஞ்ச மஹா யஜ்ஞங்கள்

இனிப் பகலின் எட்டில் ஐந்தாவது பாகத்தில் தேவயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், மனுஷ்யயஜ்ஞம், பூதயஜ்ஞங்களையும் அனுஷ்டிக்கவேண்டியது. பகவதாராதனத்திற்குப் பிறகு வைச்வதேவமும் பலிஹரணமும் அனுஷ்டிக்கத்தக்கது. விச்வே தேவர்கள் என்றால் ஸகலமான தேவர்களும், அவர்கள் ஸம்பந்தப்பட்ட கர்மா வைச்வதேவமுமாகும்.

நைவேத்தியத்திற்காகத் தனியாய் ஒரு சமையலும் வைச்வதேவத்திற்காக மற்றொரு சமையலும் தனித்தனியாகவே பத்னியே செய்யவேண்டும். விஷ்ணுவிற்கு நிவேதனமான சேஷம் வைச்வதேவத்திற்குதவுமென வியாஸபகவானின் உறுதிமொழியாகும்.

ஸமித்தை அக்கினியில் ஹோமஞ்செய்வதே தேவயஜ்ஞமாகும். பித்ருக்களைக் குறித்து ஸ்வதா என்று சொல்லித் தீர்த்தங்களையளிப்பது பித்ருயஜ்ஞமாகும். பூதங்களைக் குறித்து பலிகளையளிப்பது பூதயஜ்ஞமாகும். பிராம்ஹணர்களுக்கு

அன்னமளிப்பது மனுஷ்யயஜ்ஞமாகும். அவரவர் வேதத்தைப் பாராயணம் பண்ணுவதே ப்ருஹ்மயஜ்ஞமாகுமென தைத்திரீய ச்ருதி உத்கோஷிக்கிறது.

உரலுலக்கைகளை யுபயோகித்தல், அம்மியி லரைத்தல், தீயில் விறகு முதலியவைகளையிடல், தீர்த்தக்குடம் வைக்குதல், துடப்பம்போட்டுப் பெருக்குதல், முறம், சல்லடைகளையுபயோகித்தல்களால் க்ருஹஸ்தன் ஐவித பாவங்களையும் செய்தவனும் மறுபடியும் பிறந்துவருகிருன். இவைகளின் ப்ராயச்சித்தமாகவே இப் பஞ்சமஹாயஜ்ஞங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அஹுதம், ஹுதம், ப்ரஹுதம், பிராம்ஹஹுதம், ப்ராசிதமே இவ் வைந்து யஜ்ஞங்களின் வேறு பெயர்களாகும்.

அஹுதம் என்பது ப்ரஹ்மயஜ்ஞமான ஜபமும், ஹுதம் என்பது ஹோமமும், ப்ரஹுதம் என்பது பலிஹரணமும், ப்ராஹ்மஹுதம் என்பது ப்ராஹ்மண ஸந்தர்ப்பணையும், ப்ராசிதம் என்பது பித்ரு தர்ப்பணமுமாகும. அத்தியாயத்தினுல் ரிஷிகளையும், ஹோமங்களால் தேவர்களையும், ச்ராத்தத்தினுல் பித்ருக்களையும், அன்னங்களால் மனிதர்களையும், பலிகர்மத்தால் பூதங்களையும் த்ருப்தி செய்விக்க வேண்டியது.

காலை மாலைகளில் க்ருஹ்யாக்னியில் வைச்வதேவமும், வைவாஹிகமான அக்னியில் பாக யஜ்ஞம் முதலியவைகளும் அனுஷ்டிக்க வேண்டும். தேவ யஜ்ஞம் தவிர மற்றவைகளை அக்னியில் அனுஷ்டித்தலாவது அக்னிக்கு ஸமீபத்தில் செய்ய வேண்டுமென்பதாகும். வைச்வதேவத்தை வைதிகாக்னியிலோ, லௌகிகாக்னியிலோ, தீர்த்தத்திலோ, பூமியிலோ அவச்யம் அனுஷ்டிக்கவேண்டியது. காலை ஹோமம் செய்த பிறகு அதினின்றும் சிறிது பாகத்தைப்பிரித்து சமையலைப் பூர்த்திசெய்து கொண்டு பிறகு அவ்வக்னியை அந்த சாலாமுகியாக்னியிலேயே சேர்த்துவிட வேண்டியது. எந்த அக்னியில் சமையல் செய்தானே அந்த அக்னியில் வைச்வதேவத்தைச் செய்ய வேண்டியது. ஹோமம் பண்ணிமிகுந்த அன்னத்தினுல் பூத

பலியை அளிக்கவேண்டியது. எந்தெந்த தேவதைகளைக் குறித்து ஹோமம்செய்யவேண்டியது என்பது ஒவ்வொரு சாகைகளிலும் வித்யாஸப்படுவதால் அவரவர் க்ருஹ்யவிதிப்படி ஸ்வல்பமாயிருந்தாலும், விசேஷமாயிருந்தாலும் அனுஷ்டிக்க வேண்டியது.

ஹோமம் செய்யும்பொழுது அக்னி ஜ்வலித்துக்கொண்டிராவிட்டால் யஜமானனுக் கண் பார்வை போய்விடும். அக்னியில் ஹோமம் பண்ணமலும், அந்தணர்களுக்கு அளிக்காமலும் ஒன்றையும் புசிக்கக் கூடாது. கீரை, இலை, கிழங்கு, கனி இவைகளில் எதால் ஆஹாரம் செய்யப்படுகிறதோ அதினுல் தான் வைச்வதேவமும் செய்யவேண்டும். அன்னம் கிடைக்காவிடில் தீர்த்தத்தால் ஜலத்தில் தர்ப்பணமாய்ச் செய்துவிட வேண்டுமேயன்றி வெளியூர் எங்கு சென்றிருந்தாலும் வைச்வதேவத்தை விடவே கூடாது. (நெய், பால், தயிர் போன்ற) த்ரவபதார்த்தமானுல் ஸ்ருவத்தினுலும், கடினமான ஹவிஸ்ஸானுல் கையினுலும் ஹோமம் செய்யவேண்டும். மனோவாக்குகளால் அவசியம் உத்தேசத்தியாகம் செய்யவேண்டும். அதின்றிச் செய்யப்படும் ஹோமம் தேவதைகளை அடைவதில்லை, செய்தவனும் மஹாநரகில் ஆழ்வன்.

அக்னியில்லாதவன் கூட வ்யாஹ்ருதிகளால் அன்னத்தை ஹோமம்பண்ணிப் பிறகு சகலமந்த்ரங்களால் சாகல ஹோமம் பண்ணி அதன் பிறகு காக்கைகளுக்கு பலி வைத்து அதிதிகளைப் பூஜிக்கவேண்டியது. பக்குவமாயினும், அபக்குவமாயினும் புசிக்கத் தகுந்த பதார்த்தங்களால் வைச்வதேவ பலிஹரணங்களைச் செய்யவேண்டியது. இதனுல் ஸ்வர்க்கம் ஆரோக்யம் முதலியவைகள் ஸித்திக்கின்றன.

இவ்வைச்வதேவமானது நியமத்துடன் உபதேசமான பிறகு ஆரம்பிக்கவேண்டும். அதாவது பனிரண்டு நாட்கள் உபவாஸமிருந்து ப்ருஹ்மசர்ய வ்ருதமும், உப்பில்லா ஆஹாரமும், தரையிற் படுத்தலுமாம். பத்னீக்கும் இந்நியமங்கள் உண்டென்பது சிலர் கொள்கை. பாகம் முழுதுமான பிறகு பாச

கன் நின்றுகொண்டு 'பூதம்' என்று யஜமானனிடம் சொல்ல வேண்டியது. பிறகு யஜமானன் 'ஸுபூதம்' என்பதாதி மந்த்ரங்களால் ப்ரதிவசனம் சொல்லிக் கார்யங்களை ஆரம்பிக்க வேண்டியது.

பலிஹரணம்

ஹவிஸ்ஸை எடுத்து நெய்யால் அபிகாரம்பண்ணி, ஹோமங்கள் முடிந்தபிறகு சேஷான்னத்தினால் பலிஹரணம் செய்ய வேண்டியது. வீட்டைக் காக்கும் பூதங்களைக் குறித்து பலியிடுவதே **பூதயஜ்ஞமாம்.** தான் ஊரிலிராவிட்டாலும் அல்லது ஆசௌசகாலத்திலும் பிள்ளை, ஸஹோதரன், ரித்விக், சிஷ்யன், மாமன், மாமனார், பத்னி, ச்ரோத்ரியன், யாஜ்யர் கௌணபக்ஷமாகச் செய்யலாம்.

அக்னிக்கு மேற்கேயும், தீர்த்தம் வைக்குமிடத்திலும், வீட்டின் நடுவிலும், படுக்குமிடத்திலும், ரேழியிலும், வாசற்படியிலும், அந்தந்த மந்த்ரங்களைச் சொல்லி எந்தெந்த தேவர்களுக்குப் பூணூலை உபவீதியாயும் ப்ராசீனாவீதியாயும் செய்ய வேண்டுமோ அவ்வாறு தன் க்ருஹ்யத்திலுள்ளபடி விச்வே தேவர்களுக்கும் திவாசாரிகளுக்கும் பகலிலும், நக்தம்சாரிகளுக்கு இரவிலும், கூரை தடுக்கப்படாது வீட்டிற்கு வெளியில் ஆகாசத்திலும் போடவேண்டியது. பலி வைக்குமிடங்களை முதலில் கையினால் துடைத்துவிட்டு, தீர்த்தத்தினால் ப்ரோக்ஷித்து, பலியைவைத்துப் பிறகு தீர்த்தத்தினால் பரிஷேசனம் செய்ய வேண்டியது. இதில் பருப்பு முதலியவை சமைக்கப்பட்டிருப்பதையும் கலந்து வைக்கவேண்டும். இப்படிச் சேர்க்கப்படுவது தான் பருப்பு முதலிய வ்யஞ்சனங்களுக்குப் பரிசுத்தியாகும். இதில் இந்த்ரன், யமன் முதலிய அஷ்டதிக்பாலகர்களும், அந்த அந்த திக்குகளிலும், மருத்துக்களுக்கு வீட்டின் த்வாரங்களிலும் [வாசற்படி] பிறகு வீட்டிற்குள் வந்து ப்ரம்மஸ்தானத்தின் மத்தியில் க்ருஹதேவதைகளுக்கும், தீர்த்தம் வைக்கும் இடத்தில் தீர்த்த தேவதைகளுக்கும், விச்வேதேவர்களுக்கு ஆகாசத்திலும் போடவேண்டியது. படுக்கையினுடைய தலைப் புறத்தில் ஸ்ரீதேவிக்கும், கால்புறத்தில் பத்ரகாளிக்கும், பசுக்

கொட்டத்தில் தனபதிக்கும், ஸ்தம்பஸ்தானங்களில் ருத்ரனுக்கும், பசு கட்டுமிடத்தில் மித்ரனுக்கும், உரல் உலக்கைகளில் வருணனுக்கும், கிணற்றில் அஹிர்ப்புத்னியர்களுக்கும், வீட்டின் மத்தியில் ப்ரம்ஹனுக்கும், அம்மியிலும் சமையல் செய்யுமிடத்திலும் இதர தேவதைகளுக்கும் பலியை ஸமர்ப்பிக்கவேண்டியது. வாஸ்துவின் பின்புறத்தில் ஸர்வபூதங்களுக்கும் பலியை அளித்து மிகுந்த எல்லா அன்னங்களாலும் பித்ருக்களுக்காகத் தென்புறமாய் ஸமர்ப்பிக்க வேண்டும். வைப்பதைச் சக்ரத்தைப் போல் வைப்பது ஆயுள், ஆரோக்யம், ஸௌபாக்யம், புத்ரர், வித்தை, பசு, தனம், மோக்ஷம் இவைகளைக் கொடுக்கக் கூடியதாகும். இலந்தம்பழம் அளவு நுனிவிரல்களாலெடுத்து வைக்கத் தகுந்ததே இதன் ப்ரமாணமாகும். இதில் மிகுந்ததை வீட்டிற்கு வெளியில் மந்த்ரத்தைச் சொல்லி பூமியில் நாய், சண்டாளன், பதிதர், ரோகிகள், புழு, காக்கைகளுக்கும் வைக்க வேண்டும் இதனால் ஸகல தேவ, மனுஷ்ய, பசு, பக்ஷி, பூத, ப்ரேத பிசாச, உரக, யக்ஷ, ப்ரம்மாதி ஸ்தம்பபர்யந்தம் த்ருப்தி செய்விக்கப்பட்டவர்களாகின்றனர் என்பது இவ்விஷ்ணு புராண மந்த்ரத்தாலேயே நன்கு விளங்குகின்றது. இதனால்தான் மற்றாச்ரமங்களுக்கு இவ்வாச்ரமம் ஏற்றங் கூறப்படுகின்றது.

பித்ரு த்ருப்திக்காகத் தினந்தோறும் ஒரு ப்ராம்ஹணனுக்காவது போஜனம் செய்விக்கவேண்டும். இல்லாவிடில் சக்தியானுஸாரம் அன்னத்தை ஓர் வேதவித்தான அந்தணனுக்குப் பித்ரு த்ருப்திக்காக அளிக்கவேண்டும். அதுவும் முடியாவிடில் 'பித்ருப்யஸ்வதா' என்று சொல்லி கோழிமுட்டையளவு அன்ன பிண்டம் தென்புறமாக அவர்களுக்காக வைத்துவிடவேண்டியது.

இந்த **நித்ய ச்ராத்தத்திற்கு** ஆவாஹனம், பார்வண ஹோமம், பிண்ட நிர்வாபணம், விஸர்ஜனம், விச்வேதேவவரணம், ஸ்வதாகாரம், ப்ரஹ்மசர்யம், அர்க்யம் வேறு இதர தேச கால கர்த்ரு நியமம் யாதுமில்லை. ருசியுள்ளவையாக, ஆறுபேருக்கு சந்தனம்முதலியவைகளால் அர்ச்சித்து த்ருப்தியாகும்வரையில், போஜனம் செய்வித்து சக்தியானுஸாரம் தக்ஷிணை

கொடுத்து விஸர்ஜனம் செய்யவேண்டியது, பூ, கனி, கிழங்கு, இவற்றாலோ, திலோதகத்தாலோ, நித்யச்ராத்தம் செய்பவன் நம் குலத்தில் ஒருவனாவது உண்டாவனோ என்று ஸதா பித்ருக்கள் பாடுவார்களாம்.

இவ்வைச்வதேவத்தில் தேவதாஹோமம், பூதபலி, பித்ரு பலியோ நித்யச்ராத்தமோ இருப்பதால் இதுவே தேவ்யஜ்ஞும், பித்ருயஜ்ஞும், மனுஷ்ய யஜ்ஞும், பூதயஜ்ஞும் என பஞ்ச மஹா யஜ்ஞுமாகும் [ப்ரஹ்மயஜ்ஞும் நீங்கலாக]. வைச்வதேவத்தில் ஆறு மந்த்ரங்களை உச்சரித்து ஸமித்துக்களாலும் தேவதைகளுக்கு ஹோமம் செய்யலாம். ஸ்வதாகார பூர்வகமாய்த் தீர்த்தத்தினால் பித்ருக்களைக் குறித்தும் ப்ராசீனாவீதியாய்ச் செய்யலாம். பித்ருயஜ்ஞுத்திற்குப் பிறகே நாய், காக்கை, பதிதர்களுக்குப் பலியிடவேண்டும். இ ப் ப டி வைச்வதேவமானது ஆச்ரயமாகவும் பலிஹரணாதிகள் ஆச்ரயீக்களாயும் ஆகின்றன. பூதயஜ்ஞுத்தையும் அக்னிக்கு வடக்கில் கிழக்கு நுனியாக தர்ப்பங்களைப் பரப்பி அவைகள் மீது பூதபலியையும் அளிக்கலாம். அதிதி கிடைக்காவிட்டால் ஸங்கல்பமாகவேனும் கொடுக்கவேண்டியது. அதிதியஜ்ஞுமான ப்ராஹ்மண ஸந்தர்ப்பணத்திற்கு அசக்தனானவன் அன்னத்தையெடுத்து நிவீதியாய் ஹந்தகாரத்தால் ஸனகாதி யோகிகளைத் த்ருப்தி செய்விக்கவேண்டியது.

ஸ்வாஹாகாரம், வஷட்காரம், நமஸ்காரம் இவைகள் தேவதைகளுக்குரியதாகும். **ஸ்வதாகாரம்** பித்ருக்களுக்குரியது. **ஹந்தகாரம்** மனிதர்களுக்குரியதாகும்.

பலிஹரணத்தில் எல்லாவற்றையும் செலவுசெய்து விடாமல் கொஞ்சம் அதிதிகளுக்கு வைத்துக் கொள்ளவேண்டியது. சக்தியானுஸாரம் அவர்களுக்கு பிக்ஷையோ, புஷ்கலையோ, ஹந்தகார ப்ரமாணமோ, அதுவுமில்லாவிடில் தீர்த்தம் நிறைந்த பாத்ரத்தையோ தானமாய் அளிக்கவேண்டியது. ஒரு கவளான்னம் **பிக்ஷை**யாகும். இதைப்போல் நான்கு கொண்ட அன்னம் **புஷ்கலம்** அல்லது **அக்ர**மெனப்படும். நான்கு புஷ்கல பரிமாணமுள்ள அன்னம் **ஹந்தகார**மெனப்படும். யவை

சிறுநெல், செந்நெல், சம்பா இவைகள் இருநூறு கொண்டது ஒரு கவளப்ரமாணமாகும். அக்னியில் ஹோமம் பண்ணாமலும், அக்ரம் கொடுக்காமலும் இருக்கப்பட்ட அன்னத்தை ஒருவரும் புசிக்கக்கூடாது என ஆபஸ்தம்பர், யமதர்ம தேவதை முதலியோர் கூறுகின்றனர். அவிபக்தமான (எக) குடும்பத்தில் ஒருவர் வைச்வதேவம் செய்வதே போதுமானது. பங்கான பின்ன குடும்பங்களில் ஒவ்வொரு முக்யஸ்தரும் செய்ய வேண்டும். இவ்வைச்வதேவ கர்மாவால் புருஷார்த்த ப்ரயோஜனத்தோடு அன்னமும் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டதாகிறது.

வைச்வதேவ கர்மாவின் மஹிமை அளவற்றதாகும். தனிகனான ஓர் ப்ராம்ஹணன் ஸம்பூர்ண தக்ஷிணையுடன் மஹா ஸோமயாகத்தைச் செய்வதும், எளியவன் செய்யும் பஞ்சமஹா யஜ்ஞுங்களும் ஸமான பலனையே அளிப்பதாகும்.

இவைகளைச் செய்யாமற் புசிப்பவன் வீணாய் இவ்வுடலைச் சுமந்து திரிந்து முடிவில் மீளா நரகத்திற்கு ஆளாகிறான் என விதித்தனர். தவிரவும் காக்கையோ வேறு திர்யக்யோனியிலோ பிறக்கிறான். சாந்த்ராயண க்ருச்ரம் செய்ய அர்ஹனாகிறான். இறந்த பின்னும் தலைகீழாகக் கட்டப்பட்டு கால ஸூத்ரமென்னும் மஹா நரகத்தை அடைகிறான். ரிஷிகள், பித்ருக்கள், தேவர், பூதங்கள், அதிதிகள் இவர்கள் குடும்பிகளிடமிருந்து அன்னத்தை எதிர்பார்க்கிறார்கள். அவர்களை ஏமாற்றிவிடக்கூடாது, அனுஷ்டித்து வருபவன் தேஜோமயமான பிரம்ஹத்தையே அடைகிறான் என்றும், அனுஷ்டியாதவன் இருந்தும் இறந்தவனுக்கு ஸமானமாகிறான் என்றும், பகவானும் பாரதத்தில் அர்ஜுனனுக்கு உபதேசித்திருக்கிறார். தேவர்களுக்குச் செய்யும் ஹோமங்களால் தேவலோகத்தையும், பித்ருக்களுக்குச் செய்யும் ஹோமங்களால் பித்ரு லோகத்தையும், அத்யயனம் செய்வதால் ரிஷிகளின் லோகத்தையும், பூதங்களுக்களிக்கும் பலிகளால் பூதங்களின் லோகத்தையும், ப்ராம்ஹணர்களுக்கு அளிக்கும் அன்னத்தினால் மனுஷ்ய லோகத்தையும் ஜயங்கொள்ளுகிறான்.

ச்ராத்த ஆரம்பத்தில் வைச்வதேவ ஹோமங்களைச் செய்யக் கூடாது. செய்தாலும் தேவர்கள் அவைகளை க்ரஹிக்கிறதில்லை. ச்ராத்தம் முடிந்தபிறகேதான் இந்த ஹோமங்களைச் செய்து விட்டு பந்துவர்க்கத்துடன் ச்ராத்த சேஷான்னத்தைப் புசிக்கக் கடவன். ச்ராத்தத்தில் வைச்வதேவத்திற்காகத் தனியாகச் சமையல் செய்துவைக்கவேண்டும். அப்படி பித்ருக்களுக்குச் செய்யப்பட்டதனின்றும் செய்தால் பித்ருக்கள் த்ருப்தியடை யாது கர்மமும் ஆஸுரமாகிறது. ஆகவே பூதபலி, வைச்வ தேவம் அதிதி ஸந்தர்ப்பணம், தேவபூஜை, யதிபிக்ஷை, ப்ரஹ்ம சாரி பிக்ஷை இவைகளை ச்ராத்தத்திற்காகச் சமைக்கப்பட்டத னின்றும் செய்யக்கூடாது. அதேமாதிரி வைச்வதேவத்திற் காகச் செய்யப்பட்ட அன்னத்தினின்றும் தர்ச ச்ராத்தம் முத லிய இதரகர்மம் செய்யக்கூடாது. ஆஹிதாக்னி மட்டும் ஒரே சமையலில் கீழ்க்கூறப்பட்ட ச்ராத்தம், வைச்வதேவம், இதர ஸந்தர்ப்பணங்கள் எல்லாவற்றையும் செய்யலாம் என்று விசேஷவிதி ஒன்று கூறப்பட்டிருக்கிறது. அனாஹிதாக்னிகளுக்கு இது விஷயமாகாது.

கீதையிலும் யஜ்ஞசேஷத்தைப் புசிப்பவனே ஸகல பாவங் களினின்றும் விடுபடுகிறான், அப்படியின்றித் தானே உண்ப தற்கென்று சமைப்பவன் பாவத்தையே புசிக்கிறான் என உப தேசித்திருப்பதும் இதன் ஆவச்யகத்தை உணர்த்தும்.

அதிதிபூஜை

வைச்வதேவ, பலிஹரணங்களைச் செய்துவிட்டு ஆசமனம் பண்ணிப் பிறகு அதிதிகள் வருவதை ப்ரதீக்ஷித்தவனாய் பசு பால் கரக்கும் நேரம், அதாவது ஒரு அரை நாழிகைகாலம் [முஹூர்த்த எட்டிலொரு பாக காலம்] திண்ணையில் உட் கார்ந்து பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். யதி, ப்ரம்ஹசாரி கள் வந்தால் அவர்களுக்கு விதிப்படி பிக்ஷை அளிக்கவேண் டும். க்ருஹஸ்தன் வந்தால் த்ருப்தியாகும் வரையில் போஜன மளிக்கவேண்டும். ஒருவரும் வராவிட்டால் அவர்களுக்கேற் பட்ட அன்னங்களைப் பசுவிற்களிக்கவேண்டியது. தவிரவும் பிறர் பசுவுக்கு கவான்ஹிக மந்த்ரத்தைச் சொல்லி புல் முதலியவைகளேனும் அளித்துவிட்டுப் புசிப்பவன் நரகத்தை அடைகிறதேயில்லை. அதிதிகள் சாப்பிட்டு மிகுந்த சேஷத்திற்கு **விகஸம்** என்றும், யஜ்ஞத்தில் மிகுந்ததும், சிஷ்டர்கள் புசித்து மிகுந்ததும் **அம்ருதம்** என்றும் சொல்லப்படும். இவை களையே புசிப்பவனாயிருக்க வேண்டும். சமைக்கும்பொழுதே பகவானுக்கும் அதிதிகளுக்குமென்று மனதில் உத்தேசமிருக்க வேண்டும். தனக்கென்கிற எண்ணமே கூடாது. தனக்கிஷ்ட மானபடி சமையல் செய்துக்கொள்ளக் கூடாது. அதிதிகளின் இஷ்டப்படியே சமையல் செய்யவேண்டும். அதிதிகள், பாலர், வ்ருத்தர், வ்யாதியஸ்தர், கர்ப்பிணிகள், பெண், தங்கை, பரிசார கர், தீனர், இவர்களுக்கு முதலில் போஜனம் செய்வித்துப் பிறகு, தான் போஜனம் செய்யவேண்டும். அதிதிகளுக்கில்லா மல் முழுமையும் சாப்பிட்டுவிடக் கூடாது.

அன்னம் தான் இரண்டு ச்லோகங்கள் கூறுவதாய் அவற் றின் அர்த்தத்தை எழுதுவோம். 'பித்ரர், தேவர்கள், பிருத் தியர், அதிதி, ஸ்நேஹிதர்கள் இவர்களுக்கு அளிக்காமல் தானே புசிப்பவன் விஷத்தைப் பானஞ் செய்தவனாகிறான். நானும் அவனைப் புசித்துவிடுவேன். நானே அவனுக்கு யமன். உலகத்தினர் பார்த்திருக்குங்கால் அவன் உயிரைக் கவர்ந்திடு வேன். அக்னிஹோத்ர, வைச்வதேவ, கர்மாக்களைச்செய்து சுசி யாயுண்டால் நான் அம்ருதமாகி அவனுக்கு ச்ரேயஸை விளை விப்பேன்' என்கிறதாம். ஹோமத்தினால் பாவமும், அன்னத் தினால் ஹோமமும், தக்ஷிணையினால் அன்னமும் சாந்தியடை கின்றன என்று வேதம் உத்கோஷிக்கிறது. அன்னமளிக்க சக்தியில்லாதவன் தீர்த்தமேனும் கொடுக்கவேண்டும்.

பரிசோதிக்காமல் அதிதிகளைப் பாத்திரவாறு ஸத்காரம் செய்யவேண்டியது. நியமத்துடன் செய்யும் கோதானத்திற்கு யாது பலனுண்டோ அதை பிக்ஷையளிப்பதினாலேயே க்ருஹஸ் தன் அடைகின்றனன். அதிதி பூஜை செய்யாதவன் இறந்த பின் தன் தேஹத்தை நாய், நரி, கழுகுகள் ஹிம்ஸிக்கப்போகின்

றன என்பதை உணராத மூடனாகிறான். இறந்த பிறகும் மஹாநரகங்களை அனுபவித்துப் பிறகு தனது ச்லேஷ்மங்களைப் புசிக்கும் மஹாகொடிய நரகில் மூழ்குவன்.

அத்யயனம் பண்ணாத அந்தணன் அதிதியாக வந்தால் அவனை எதிர்கொண்டழைக்காமல் இதோ ஆஸனம், இதோ தீர்த்தம், இதோ அன்னம் என்று இவ்வாறு அளித்தலே போதும். சூத்ரன் ஆஹாரத்திற்கு வந்தால் அவனிடம் வேலை செய்வித்துக்கொண்டு உணவு அளிக்கவேண்டியது என்று ஆபஸ்தம்பர் முதலியோர் விதிக்கின்றனர்.

நல்ல வ்ரதமுடைய ப்ரஹ்மசாரீ, அதிதி, நித்தியம் வேதாப்யாஸத்தில் ச்ரத்தையுள்ளவன் ஆகிய இவர்களே சிறந்த அதிதிகளாவர். யதிகளுக்கும் ப்ரம்ஹசாரிகளுக்கும் பக்குவமான அன்னத்தை மூன்று கவளங்களுக்குக் குறையாமல் அளிக்கவேண்டும். யதியின் கையில் முதலில் தீர்த்தத்தை விட்டுப் பிறகு பிக்ஷை கொடுக்கவேண்டியது. மறுபடியும் தீர்த்தத்தை விடவேண்டியது. இப்படிக் கொடுக்கும் பிக்ஷை மேருவுக்கு ஸமானமும் தீர்த்தம் ஸமுத்திரத்திற்கும் ஒப்பாகிறது. பிக்ஷையிடாதவன் சாந்த்ராயண வ்ருதமனுஷ்டிக்கக் கடவன். இட்டவன் கோதான புண்ணியத்தை அடைகிறான். ப்ரஹ்மசாரிகளைப் பார்த்து 'ஸவஸ்தி' என்று சொல்லிக் கையில் தீர்த்தத்தை விட்டு பிக்ஷையைக் கொடுக்கவேண்டியது. எவனுடைய க்ருஹத்தில் யதியானவர் போஜனம் செய்கிறாரோ அவனுடைய க்ருஹத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவே ப்ரத்யக்ஷமாய் போஜனம் செய்கிறார். எங்கு விஷ்ணு போஜனம் செய்கிறாரோ அங்கு மூன்று லோகங்களுமே உண்டு மிகவும் த்ருப்தியடைந்ததாகும் என விதித்தனர். யதிகளுக்குப் பாத்திரம் நிறைய பிக்ஷையை அளிப்பவன் தன் ஸகல பாவங்களையும் துலைத்துக் கொண்டவனாகிறான். வைச்வதேவம் ஆரம்பத்திற்கு முந்தியே பிக்ஷுகர் வந்துவிட்டால் அவர்களைக் கார்க்கவைக்காமல் வைச்வதேவத்திற்குக் கொஞ்சம் வைத்துக்கொண்டு அவர்களுக்கு பிக்ஷையிட வேண்டியது. பிறகு அனுஷ்டிக்கும் வைச்வதேவ

தோஷத்தை யதிகள் போக்கடிக்க ஸமர்த்தராவர். நிராகரிக்கப்பட்ட யதிகளால் உண்டாகக்கூடிய தோஷத்தைப்போக்க வைச்வதேவம் ஸாமர்த்யமுள்ளதாகாது.

ஸந்யாஸி, ப்ரம்ஹசாரி, வித்யார்த்தி, குருவைப் போஷிப்பவன், வழிநடப்பவன், ஜீவனமிழந்தவன் ஆகிய இவ்வாறு பேர்களும் பிக்ஷுகராவர். நோயாளி, தரித்திரர், குடும்ப ஸம்பந்தம் இழந்தவர்களுக்கும் பிக்ஷையிடவேண்டியது. யதிகளுக்குப் பொன்னும், ப்ரம்ஹசாரிககு அரிசியும், பிக்ஷுகன் அல்லாத க்ருஹஸ்தனுக்கு சமைத்த அன்னத்தையும் அளிப்பவன் ப்ரஹ்மஹத்தி தோஷத்தை அடைகிறான். போதுமான அளவிற்குமேல் யதி, ப்ரம்மசாரிகளுக்குக் கொடுக்கவுங்கூடாது, அவர்களும் வாங்கவுங்கூடாது. அப்படி பிக்ஷான்னத்தை ஒரு ப்ராம்ஹணனுக்குக் கொடுப்பவன் நரகத்தையடைகிறான். அதை வாங்கிப் புசிப்பவனும் மஹாபாபத்தைப் புசித்தவனே ஆகிறான். பிக்ஷான்னத்தில் உப்பு, வ்யஞ்ஜனங்கள் ஸம்பந்தப்பட்டிருந்தால் கொடுத்தவனுக்கு ஸ்வர்க்கப்ராப்தி இல்லை. யதிகள், ப்ரம்ஹசாரிகளைவிட்டு முதலில் க்ருஹஸ்தனைப் புசிப்பிப்பவன் அனேக கோடி க்ருமி ஜன்மங்களை எடுக்கிறான். ஹோமம் பண்ணாமலும், தபஸ்வியைத் திருப்தி செய்யாமலும் புசிப்பவன் பரலோகத்தில் தன் மாம்ஸத்தைத் தானாகவே தின்பன். வ்ருதம், அத்யயனங்களோடு கூடின ப்ரஹ்மசாரிக்கு அன்னம் அளித்தால் அளித்தவனுக்கு யாகம், தானம், ஹோமம், ப்ருஹ்மதேஜஸ், அன்னம், பசு முதலிய வ்ருத்தியாகின்றன. ப்ருஹ்மசாரிகளுக்குண்டான ஆசாரங்களை விட்டு, அத்யயனம் செய்யாமல் பிக்ஷைக்கு வருபவர்கள் திருடர்களாகையால் அவர்கள் ஊரைவிட்டுத் துரத்தத் தகுந்தவராவர், அனேகமாயிரம் ப்ராம்ஹணர்களுக்கு ஒரேகாலத்தில் போஜனம் செய்விப்பதைவிட சிஷ்டனான ஒரு வேதவித்துக்கு போஜனம் செய்விப்பது மேலானது. தம்பதிகளான தங்களுக்கு இடையூறு வந்தாலும் தாஸர்களுக்குக் குறைவின்றி அன்னம் அளிக்கவேண்டும். ஆசாரஹீனர்களுக்குப் போஜனம் அளிப்பதில் அன்னம் 'ஐயோ!

யாம் என்ன பாபம் செய்தோம், இந்த துராத்மாவிடம் சிக்கிக்கொண்டோமே' என்று கதறுகிறதாம். அதே சிஷ்டனான ச்ரோத்ரியனுக்கு அளிக்கப்படுவதில் அன்னம், 'இவரை நாம் வந்து அடைய என்ன தவம் செய்தோமோ, நற்கதி பெற்றோம்' என்றிவ்விதமாக மிகவும் குதூஹலத்துடன் விளையாடுகின்றனவென ச்லாகிக்கின்றனர்.

அதிதியின் லக்ஷணம்

மூடனோ, மூர்கனோ, சத்ருவோ, மித்ரனோ, த்விஜனோ, தரித்திரனோ, யாசகனோ, தெரிந்தவனோ, தெரியாதவனோ, கொலைபாதகனோ [பித்ருஹத்தி முதலிய], பகலிரவு வைச்வதேவம் செய்தானவுடன் மஹாபாபியோ, அதிதிக்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஸமயத்தில் வருபவனே ஸ்வர்க்கத்தை அடைவிக்கும் உத்தமமான அதிதியாவான் என்பது ஒரு பொது விதியாகும். இவன் அகாலத்தில் வந்தாலும் அதிதியே.

ஓரிரவு ஒருவன் ஒரு ஊரில் வஸித்துவிட்டால் மறுநாள் அவன் அவ்வூருக்கு அதிதியாகமாட்டான். ஒரு தினமேனும் ஓரிடத்தில் வஸிக்காதவன் என்பதே அதிதி சப்தார்த்தம். ஒரே கிராமத்தில் வஸித்துக்கொண்டோ, ஏதாவதொரு கார்யத்தைக் குறித்து வந்தவனோ அதிதியாகமாட்டான். உண்பதற்காகவே ஒருஇடத்திற்கு வந்தவன் அதிதியாகமாட்டான். வைதிகனாய், முன்பின் தெரியாமல், [ஆசார] தர்மத்தை முன்னிட்டு அதன் ஸௌகர்யத்திற்காக வந்தவனே அதிதியாவன். வெகுதூரம் நடந்து வெயிலாகிவிட்டதினாலோ, ஸூர்யாஸ்தமனம் ஆய்விட்டதினாலோ தங்கவந்தவன் அதிதியாவன்.

புசிக்கப்படாமல்போன அதிதி தன் பாவங்களை க்ருஹஸ்தனிடம் வைத்துவிட்டு, அவன் புண்ணியங்கள் எல்லாவற்றையும் [அக்னிஹோத்ரம், ஜபம், அத்யயனம், தபம் முதலிய யாவும்] ப்ரும்ஹத்தி தோஷமுடையவனாய் வாங்கிக்கொண்டவனாகிறான். க்ருஹபதி மஹா பதிதனாயுமாய்விடுகிறான். பதினைந்து வருஷங்கள் அவன் பித்ருக்கள்அவ்வீட்டு ச்ராத்தங்களை ஸ்வீகரிக்

கிறதில்லை. இரவில்வந்த அதிதியைப் பூஜியாவிடில் பகலின் தோஷத்தைக் காட்டிலும் எண்மடங்கு அதிக தோஷத்தையடைகிறான். அதிதியைக் குலம் கோத்ரம் விசாரித்து அன்னமிடுபவனுக்கு அதனால் ஸ்வர்க்கப்ராப்தி கிடையாது.

ச்ரமப்பட்டு வழிநடந்து வந்தவர்களுக்குப் படுக்கை, போஜனம், காலுக்குத் தடவிக்கொள்ள எண்ணெய் முதலியன கொடுத்து உபசரித்தால்தான் இவன் பிதா புத்ரவந்தனாகிறான். அதிதியோடு தேவர், பித்ருக்கள், அக்னிகள் முதலிய ஸகலரும் வருகின்றனர். அவன் பூஜிக்கப்பட்டு த்ருப்தியடைந்தால் இவர்கள் யாவரும் த்ருப்தர்களாகின்றனர். ஆகையால்தான் அதிதியை வேதம் வகுத்த ஸ்ரீ வ்யாஸபகவானாகவே பாவிக்கத் தகுந்ததாம். 'அதிதி தேவோ பவ' என்றதிற்போல் அவன் தைவமே. விஷ்ணுபுராணம் அவனை ப்ரும்ஹமம் என்றே வ்யவஹரிக்கிறது. அதிதி ஸத்காரத்தால் தனம், யசஸ், ஆயுஸ், ஆரோக்யம், ஸ்வர்க்கங்கள் கிடைக்கின்றன. யாக பலனை அடைவதாயும் பகவான் கூறுகிறார். அக்னிஹோத்ரம், யாகம், தபம், இவைகளாலும் அடையக் கூடாத லோகத்தை அதிதி பூஜையால் அடைகிறான்.

உபசாரமாவது:— அதிதியை ப்ரியமான பார்வையாகப் பார்ப்பதால் ஸூர்யனும், நல்ல மனதுடன் [வந்துவிட்டானே என்கிற குறை கூடாது] ப்ரியமாய்ப் பேசுவதால் ஸரஸ்வதியும், 'நல்வரவோ' என்று ஸ்வாகத குசலப்ரச்ன விசாரணைகளால் அக்னிதேவனும், ஆஸனமளித்தலால் தேவேந்த்ரனும், பாத ப்ரக்ஷாளனத்தால் பித்ரு தேவதைகளும், இன்றே யாம் தன்யரானோம் எனப் புகழ்ந்து அன்னமிடுவதால் ப்ரஜாபதியும், சயனாஸனத்தால் த்ரிமூர்த்திகளும் த்ருப்தியடைகின்றனர். காலுக்கு எண்ணெய், வென்னீர் கொடுப்பதால் பகவான் தாமே த்ருப்தராகிறார். எதிர்கொண்டழைப்பது, போகும் போது வழிவிட்டு வருவது, தீர்த்தமளிப்பது முதலிய யாவும் உத்தமாதிகாரிக்கு உத்தமமாயும், தனக்கு ஸமானமானவனிடம் ஸமமாயும், தாழ்வான யோக்யதைக்காரனிடம்

தாழ்வாயும் செய்யவேண்டியது. விசேஷாதிகாரியாயிருந்தால் அர்க்ய, பாத்யங்களைக் கொடுத்து, பாயஸம் முதலிய விசேஷபோஜனம் செய்விக்கவேண்டியது. நெய் வீட்டிலிருந்தால் அதை அதிதிக்குப் பரிமாறாதவன் மீளா நரகத்திற்காளாகிறான். நல்லதைத் தனக்கு வைத்துக்கொண்டு அவனை உபேக்ஷிப்பவன் நரகத்தினுன்றும் கரையேற வழியே இல்லாதவனாகிறான். ஸ்னேகம், பயம், பொருளாசை முதலிய காரணத்தால் ஏற்றக் குறைவாய் பங்க்தியில் பரிமாறுகிறவன் ப்ரும்மஹத்தி தோஷத்தை அடைகிறான். குதிரைமீது வந்த பணக்கார அதிதியையும் பூஜிப்பதனால், ஐராவத கஜத்தின் மேலேறி அம்ருதபானம் பண்ணி அப்ஸரஸுக்கள் நடனமாடவும், கந்தர்வர் காணம்பண்ணவும், கின்னரர் வீணை வாசிக்கவும், தேவகன்னிகைகள் தன்னைச் சூழ, ஸகல ஐச்வர்ய ஸம்பன்னனாய் தேவேந்த்ர பதவியைப் பெறுகிறான். இப்படி வந்தவன் ஜாதி, குலாசாரங்களால் தாழ்ந்தவனாயினும் ஸந்தேஹமின்றி பூஜிக்கப்படவேண்டியவனே.

போஜனத்திற்காகத் தன் குல கோத்ரங்களைச் சொல்லிச் சாப்பிடுபவன் [வாந்தாசீ] தான் வாந்தி பண்ணினதை (தன்னைப் பற்றிச் சொல்லிக்கொண்டது] சாப்பிட்டமாதிரியாகும் [அன்னரூபத்தில்]. பிறர் அன்னத்தில் ருசியுள்ளவனாய்த் திரியக் கூடாது. வாக்கு, கை, கால்களின் சபலம் ஒழியவேண்டும். அதிகமாயும் சாப்பிடக்கூடாது. பிறர் அன்னத்தைப் புசிப்பவர் அவர்களுக்குக் கன்று காலகளாய்ப் பிறந்து உழைக்கின்றனர் என விதிக்கப்பட்டிருக்கிறது. போஜனமிட சக்தியில்லாதவன் வந்தவர்களுக்கு இடம், தீர்த்தம், நல்வார்த்தை முதலிய உபசாரங்களைச் செய்யவேண்டியது. வருகிறவர்களுக்கு அன்னம் ஸித்தமாயிருக்கிறதென்று உத்கோஷிக்க தைத்ரீய உபநிஷத்து உத்கோஷிக்கிறது.

போஜனம்

ஸ்நானம் பண்ணாமல் புசித்தானாகில் மலத்தைப் புசித்தவனாகிறான். ஜபமன்னியில் புசித்தானாகில் சீழ், ரத்தங்களைப் புசித்தவனாகிறான். ஹோமமன்னியில் புசித்தானாகில் க்ருமிகளைப் புசித்தவனாகிறான், விஷத்தை விழுங்குகிறவனாகிறான். அதிதிகளுக்கு இடங்கொடாமலும், அன்னமிடாமலும், தான் மாத்திரம் த்ருப்தியாய்ச் சாப்பிடுபவனைவிட வேறு காதகன் கிடையாது. இரு காலங்களிலும் ப்ராம்ஹணர்களுக்குப் போஜனம் அளிக்க வேதம் விதிக்கிறதென மனு கூறுகிறார். அது அக்னிஹோத்ரத்திற்கு ஸமானமாகும். பகலிலோ, இரவிலோ ஒருவேளைக்கு மேல் இருமுறை புசித்துவிடக் கூடாது. இருகாலங்களிலும் ஒரு ஒருமுறையே புசிப்பவன் நித்யோபவாஸியாகிறான். இவ்விதி வ்ருத, உபவாஸ தினங்களைப் பற்றியதன்று. இருகாலங்களிலும் புசிக்கவேண்டுமென நிர்ப்பந்தங்கிடையாது, ஐச்சிகமே. ஆனால் அக்னிஹோத்ரத்திற்கு த்ரவ்யம் கிடைக்காவிடில் அக்னிஹோத்ர மந்த்ரங்களை மட்டுமேனும் ஜபிக்கவேண்டுமென்பது போலவே ப்ராணாக்னிஹோத்ரம் மந்த்ரங்களையும் உபவாஸகாலத்தில் சொல்லிவிட வேண்டியது. இப்படிச் செய்துவருபவன் ப்ரும்ஹஸம்பத்தை அடைகிறான். ஸந்தியாகாலங்கள், விடியற்காலம், நடு இரவுகளிற் போஜனம் செய்யக்கூடாது. அன்னத்தை நிந்திக்காமலும், ச்ரத்தை, சாந்தம், இதர ஜ்ஞாபகங்களின்றிப் புசிக்கக்கடவன். சுசியாய் யஜ்ஞசிஷ்டான்னத்தை [தேவபூஜையில் நிவேதனமானது] புசிக்க வேண்டும்.

வாய், கை, கால்களைக் கழுவிக்கொண்டு ஆசமனங்களைச் செய்து ஈரம் உலருவதற்கு முன்னமே புசிக்க ஆரம்பிப்பவனும் ஈரக்கால்கள் உலர்ந்த பின்னர் சயனம் பண்ணுபவனும், ஸகல பாவங்களைத் துலைத்துக் கொள்ளுகின்றனர். மூலை திக்கு [விதிக்கு] களுக்கு எதிர்முகமாய் உட்கார்ந்து உண்ணக்கூடாது. கையில் பவித்திரத்தை தரித்தவனாயும், குடுமியில் புஷ்பம் சூட்டிக்கொண்டவனாயும், மார்பில் சந்தனம் பூசிக்கொண்டும், போஜனம் செய்யவேண்டியது. நிமந்தரணத்தில் அனுஷ்டிக்கப்படும் இவ்விதிகள் நித்யானுஷ்டானத்திற்கே உண்டு. கிழக்கு முகமாய் உட்கார்ந்து தீர்த்த பாத்ரத்தை ஸ்பர்சித்துக் கொண்டே மௌனியாய் புசிக்கவேண்டியது.

போஜனத்திற்கு முன்னும் பின்னும் இருமுறைகள் ஆசமனம் பண்ணுமற் புசிப்பவன் எண்ணுயிரம் காயத்ரீகளை ஜபம் பண்ணி சுத்தியைப் பெறுகிறுன்.

ஆஸனத்திலிருந்துகொண்டு ஆசமனம் பண்ணுபவன் பங்க்திக்கே அனர்ஹனுகிறுன். போஜனம் செய்ய ஆஸனத்தில் வீற்றிருக்கும்பொழுது ஒருவன்வந்து நமஸ்கரித்துவிட்டால் மறுபடியும் ஆசமனம் செய்யவேண்டும்.

சதுரமாய் இலைக்குத் திட்டமாய் சாணத்தால் முழு இடமும் ஸ்தலசுத்தி பண்ணுவதால் த்ரிமூர்த்திகளும், லக்ஷ்மி, அக்னி தேவர்கள் அங்கு ஸாந்நித்யம் செய்கின்றனர். இல்லாவிடில் அஸுரர்கள் அன்னத்தின் பலனைக் கவர்கின்றனர். சூத்ரருக்கு ஸ்தலசுத்தி ப்ரோக்ஷணம்மட்டுமே. மணைமீது உட்கார்ந்து கிழக்கு அல்லது வடக்கு முகமாய் இருபாதங்களாலும் பூமியை ஸ்பர்சித்துக்கொண்டு ஒரு காலால் மட்டுமேனும் ஸ்பர்சித்தவனுயிருந்து புசிக்கக்கடவன். இப்படிச் செய்பவன் 'த்ரிராத்ரம்' என்ற யாகத்தின் பலனைப் பெறுகிறுன். ஆஸனத்தின்பேரிலேயே பாதங்களை வைத்துக்கொண்டும், வாயினுல் அன்னத்தை ஊதிக்கொண்டும் புசிப்பவன் கோமாம்ஸ பக்ஷகனே யாகிறுன்.

உட்காருமிடம் பஹிரங்கமின்றி ஏகாந்தமாயிருக்கவேண்டும். ஆஹாரமும், மைதுனமும் ரஹஸ்யமாய்ச் செய்வதால் ஐச்வர்ய வ்ருத்தியும் இல்லாவிடில் அதன் க்ஷயமும் ஏற்படும். கூட்டத்தின் நடுவிற்போயுட்கார்ந்து புசிக்கக்கூடாது. மேற்குமுகமாய்க் கூடப் புசிக்கலாம். ஸூர்யனுக்கு அபிமுகமாயும் புசிக்கலாம். தெற்கு முகமாய்க் கூடவேகூடாது. கிழக்கானுல் ஆயுளும், தெற்கானுல் கீர்த்தியும், மேற்கானுல் ஐச்வர்யமும், வடக்கானுல் ஸத்யத்தையும் அடைகிறுன். உடைந்த ஆஸனம், க்ருஷ்ணுஜினங்கள் வர்ஜிக்கத் தக்கனவாம். ப்ரஹ்மமுடியில்லாத பவித்ரதாரிக்கு அன்னதோஷங்கள் வராது. ஹோம, பூஜா, தான, ப்ரதிக்ரஹாதிகளில் போல் போஜனத்திலும் முழங்கால்களுக்குள்ளாகவே கைகளை வைத்துக்கொள்ள வேண்டும்.

இலை, வெண்கலம் அல்லது வெள்ளியிலானது போஜனார்ஹ பாத்திரமாகும். க்ருஹஸ்தன் தாமரையிலையிற் புசித்

தானுகில் சாந்த்ராயண க்ருச்ர ப்ராயச்சித்தம் விதிக்கப் பெறுவன். ஒருவன் பாத்திரத்தில் இன்னொருவன் புசிக்கக்கூடாது. வாழையின் கர்ப்ப இலை கூடாது. வெண்கலப் பாத்ரத்தால் ஒருக்காலும் காலை அலம்பக்கூடாது.

அரசு, ஆல், கையிலும், கப்பறையிலும், இரும்புப் பாத்ரங்களிலும் புசிப்பவன் சாந்த்ராயண க்ருச்ரம் அனுஷ்டிக்கக்கடவன். வஸ்த்ரத்திலும், கல்லிலும் போஜனம் செய்யக்கூடாது. இரு கையைக் குவித்துக்கொண்டும் தீர்த்தத்தைப் பானம் பண்ணக்கூடாது. இலையைத் தான் ஒரு முறை ப்ரோக்ஷித்துப் போட்டுக் கொள்ளவேண்டியது. கையின்றி கரண்டிகளால் பரிமாறப்பட்ட அன்னத்தைப் பூஜித்து ஆபோசனம் பண்ணவும். கவளந்தோறும் கோவிந்த நாமஸ்மரணையுடன் பேசாமல்புசிக்கவேண்டியது. பேசிவிட்டால் ப்ரணவ, வ்யாஹ்ருதிகளை ஜபித்து மறுபடியும் மௌனமாய்ப் புசிக்கவேண்டியது.

அன்னத்தை முதலில் தர்சித்தவுடன் நமஸ்கரித்து அஞ்ஜலி பந்தத்துடன் 'அஸ்மாகம் நித்யமஸ் த்வேதத்' (எங்களுக்குத் தினந்தோறும் வந்து உதவக்கடவீர் என்பது பொருளாகும்) என்று சொல்லி வந்தனம் பண்ணவேண்டியது என வேதவ்யாஸர் கூறுகிறுர். பூஜிக்கப்பட்ட அன்னத்தைப் புசிப்பதால் பலம், தேஜஸ் இவைகள் வ்ருத்தியாகின்றன. பூஜிக்கப்படாத அன்னத்தைப் புசிப்பதால் இவ்விரண்டும் நசிக்கின்றனவென்று மனு கூறுகிறுர்.

பரிஷேசனம் பண்ணி மிகுந்த தீர்த்தத்தினுல் ஆபோசனம் செய்துவிட்டாற் சாந்த்ராயண க்ருச்ரம் அனுஷ்டிக்கக்கடவன். வ்யாஹ்ருதிகளாலும் காயத்ரியாலும் அபிமந்த்ரித்து பரிஷேசனம் பண்ணவேண்டியது. பரிஷேசனம் பண்ண மறந்துப் புசித்துவிட்டால் அவ்வன்னம் மாம்ஸத்திற்கு ஸமானமாகிறது. அதற்கு ப்ராயச்சித்தம் சாந்த்ராயண க்ருச்ரமேயாகும். பரிஷேசனம் பண்ணின பிறகு ப்ராணுஹுதிக்கு முன் அன்னத்தைப் போட்டுக்கொண்டால் அவ்வன்னம் ஸ்பர்சிக்கத் தகாததாகும் என வேத வாதிகள் கூறுகின்றனராம். பஞ்சப்ராணுஹுதிகளையும் பற்களில் ஸ்பர்சிக்காமல் மௌனமாய்ப் புசிக்க

வேண்டியது. ப்ரணவ ஸஹிதமாய் ஒவ்வொரு ஆஹுதிகளையும் சொல்லவேண்டியது. இதனால் கார்ஹபத்ய, அன்வாஹார்ய ஆஹவனீய, ஸப்ய, ஆவஸத்யாக்னிக்களும் முறையே ப்ராணாபான வ்யானோதான ஸமாணாஹுதிக்களால் ஹோமம் பண்ணப்பட்டதாகின்றன. ப்ராணாஹுதிக்கு முன் பரிஷேசனமானதும் தர்மராஜனான யமனுக்கும், சித்ரகுப்தனுக்கும், ஸர்வ பூதங்களுக்கும் காயத்ரியால் அபிமந்த்ரிக்கப்பட்டதும் ப்ரோக்ஷணமானதுமான அன்னத்தை பூமியிற் மந்த்ரபூர்வகமாய் பலிகளைப் போடவேண்டியது.

ப்ராணாஹுதியின் ரஹஸ்யங்களை மனதில் ஊஹிக்கவேண்டியது. இடது கையினால் பாத்ரத்தை ஸ்பர்சித்துக்கொண்டு ஆ போ ச ன, ப்ராணாஹுதிகளைச் செய்யவேண்டும். முதல் ஆபோசனம் அன்னத்திற்கு ஆதாரமானதும், உத்தராபோசனம் அன்னத்திற்கு மேல்மூட்டமானதுமாகவே எண்ணத்தகும். புசிக்கும் ப்ரதி கவளத்தையும் பல்லிற் படாமற் புசித்தால் அது அம்ருதத்திற்கு ஸமானமான பலனையளிக்கிறது. இடதுபுறத்தில் வைக்கப்பட்டிருக்கும் பாத்ரத்தினால் ஆபோசனம் பண்ணுவது ஸுராபானத்திற்கு ஸமானமாகும். இடக்கையால் இலையைத் தொட்டுக்கொண்டு ப்ராணாஹுதி செய்யாதவன் சாந்த்ராயண க்ருச்ரம் அனுஷ்டிக்க வேண்டியது. கையில் ஆபோசனம் க்ரஹித்தபிறகு இடத்தைத் தாண்டக்கூடாது, ஆசீர்வாதமும் பண்ணக்கூடாது. பண்ணினால் அவ்வன்னத்தைப் புசிக்கத் தகாது. போஜனம் செய்பவனும் வந்தனம் பண்ணினால் அவ்வன்னத்தைப் புசிக்கக்கூடாது. ஆபோசனம், ஆஸனம், தைலாப்யங்கம் இவைகளைத் தனது கையினாலேயே செய்துகொண்டானாகில் ஆயுள், த ன ம், புத்ரர் இவையாவுந்துலைந்துவிடும்.

தீர்த்தம், பால், நெய், பாயஸம், ஆபோசனம் இவைகளை சப்தத்துடன் உரிந்து பானம் பண்ணினானாகில் அது ஸுராபானத்திற்கு ஸமமாகும். ஆபோசனம் பண்ணாமற் புசித்தவன் ஆயிரத்தெட்டு காயத்ரீகளை ஜபிக்கவேண்டியது. எச்சில் பண்ணின பிறகு நெய்யையும், ப்ராணாஹுதிக்கு முன்பு உப்பு

ஸம்பந்தமான பதார்த்தத்தையும் பரிவேஷணம் பண்ணக்கூடாது. நடுவிரல் மோதிரவில், கட்டை விரல்களால் ம்ருதுவாக அன்னத்தையெடுத்து பஞ்சப்ராணாஹுதிகளையும் செய்யவேண்டியது. அப்பொழுது நடுவில் பேசக்கூடாது. ஸந்தோஷமாய் அதிதிகளை உபசரிப்பதற்காக மட்டும் பேசிப் புசிக்கவேண்டியது. வீண்வார்த்தையாடலாகாது. பஞ்சப்ராணாஹுதிக்குப் பிறகு தனதாத்மாவை ப்ரம்ஹத்துடன் சேர்க்கப்பட்டதாக மந்த்ரத்தைச் சொல்லிச் சிந்திக்கவேண்டியது. முதலில் மதுரரஸமுள்ள பதார்த்தத்தையும், பிறகு உப்பு, புளிப்புள்ளவைகளையும். அதன் பிறகு காரம், துவர்ப்புள்ளவைகளையும் புசிக்கக்கடவன். முதலில் த்ரவமானவைகளையும், மத்தியில் கடினமானவைகளையும், கடைசியில் த்ரவமும் உஷ்ணமல்லாததுமானவைகளைப் புசிக்கத்தக்கதாகும். வேகமின்றி ஒரு நிதானமாய்ப் புசிப்பவன் அறிவு, ஆயுள், ஆரோக்யம், பலம், ஊஹம், ஸந்தானங்களான ஆறையுமடைவான். புசித்த அன்னம் ஜீர்ணமாகாதிருக்கும் ஸமயத்தில் புசிக்கக்கூடாது. அதிக பசியோடுமிருக்கக்கூடாது. இருந்தால் அவனது ஜாடராக்னியானது விறகில்லாத அக்னியைப்போல் அணைந்துவிடும். க்ருஹஸ்தன் முப்பத்திரண்டுவாய் கொண்ட கவளங்களைப் புசிக்கவேண்டியது. ப்ரும்ஹசாரிகளுக்கு இந்த நியமமில்லை. புசிக் கு ம் பொழுது வாய்க்குள் எல்லா விரல்களையும் விட்டுப் புகிக்கவேண்டும். கையையுதறாமல் மேல் வஸ்த்ரத்துடன் புசிக்கவேண்டும். வாய்க்கு மிகுந்த கவளத்தையோ வாயினின்று எடுக்கப்பட்ட பதார்த்தத்தையோ புசிப்பவன் சாந்த்ராயண ப்ராயச்சித்தம் செய்யக்கடவன்.

போஜன நியமங்கள்

தலையில் வஸ்த்ரத்தைக் கட்டிக்கொண்டும், இடது காலின் மீது கையை வைத்துக்கொண்டும், தெற்கு முகமாயுட்கார்ந்து புசிப்பதுமானது ராக்ஷஸர்களால் அபஹரிக்கப்படுகின்றதாகும். கையினால் காலைத்தொட்டுக்கொண்டு புசிப்பதானது தனது எச்சிலையே புசிப்பதாகும். காலில் பாதுகை தரித்துக்கொண்டும், பாய், மெத்தை, படுக்கையின்மீது உட்கார்ந்துகொண்டும், நாய்,

நீச ஜாதியர்களைப் பார்த்துக்கொண்டும் புசிக்கலாகாது. கையில் அன்னத்தை வைத்துக்கொண்டு புசிப்பதும் பூத்கார [ஒருவிதமான] சப்தத்துடன் புசிப்பதும், விரிக்கப்பட்ட விரல்களால் புசிப்பதும் கோமாம்ஸ பக்ஷணத்திற்கு ஸமானமாகும், ஸ்மசானம், கோயில், அக்னிசாலை, வாஹனம், துஷ்டர்களுடைய ஸங்கம், தோல் இவைகளிலிருந்து புசிக்கக்கூடாது. கை, ஆஸனம் இவற்றின் மீது அன்னத்தை வைத்துக்கொண்டு புசிக்கக்கூடாது ஈரவஸ்த்ரத்துடனும், ஈரமான தலையுடனும், கால்களை நீட்டிக் கொண்டும், முழங்கால்,காலின்மீது கையைவைத்துக்கொண்டும், மடியின்மீது போஜன பாத்ரத்தை வைத்துக்கொண்டும், ஒரே வஸ்த்ரத்துடனும், உலாவிக்கொண்டும், நின்றுகொண்டும், புசிக்கக்கூடாது. விழுங்கிமிகுந்ததான கவளத்தை விழுங்கக் கூடாது. பானம்பண்ணி மிகுந்தவற்றைப் பானம் பண்ணக் கூடாது. அப்படிப் பண்ணவேண்டியிருந்தால் பூமியில் அதிலிருந்து துளி ஜலத்தைக் கொட்டிவிட்டு மீதியைக் குடிக்ககலாம். இதைச் செய்யாதவன் சாந்த்ராயண க்ருச்ரம் அனுஷ்டிக்க வேண்டியவனாகிறான்.

பலருடன் புசிக்கும்பொழுது தான்மட்டும் சீக்கிரத்தில் புசித்துவிடக் கூடாது. அன்னங்களை பூமியில் இறைக்குதல் கூடாது. எச்சிற்கையுடன் எங்கும் போகக்கூடாது. அன்னத்தை இறைத்துப் பிறகு அதைப் பொறுக்கிப் புசிப்பவன் சாந்த்ராயண க்ருச்ரம் அனுஷ்டிக்கக் கடவன். கூட இருந்து பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்குக் கொடுக்காமலும், மடியின்மீது காலை வைத்துக்கொண்டும், கையினால் பூமியைத் தாண்டிக் கொண்டும் ஒரு காலால் மற்றொரு காலை ஸ்பர்சித்துக் கொண்டும், இருட்டிலும், காட்டிலும், புசிக்கக்கூடாது. பக்ஷணம், அடை, கிழங்கு, வேர், கறிகள், கரும்பு முதலியவைகளைப் பல்லால் கடிக்கக்கூடாது. இவைகளை மட்டுமே அதிகமாய்ப் புசிக்கக்கூடாது. ஒரு தரம் கடித்து மிகுந்த பழம், மோதகம் முதலிய எதுவாயிருந்தாலும் மறுபடி கடித்தாலும், சூத்ரசேஷம், நவ ச்ராத்த சேஷம் தம்பதிகள் சாப்பிட்டு மிகுந்ததைப் புசித்தாலும் சாந்த்ராயண க்ருச்ரம் அனுஷ்டிக்கத்

தகுந்தவனாகிறான். இடது கையினால் அன்னம், தலை, இடுப்பு இவைகளை சாப்பிடும்பொழுது தொடக்கூடாது. இலைகளை ஆஸனமாகக் போட்டுக்கொண்டும், தெருக்கதவைச் சாத்தாமலும், நிலவு, அடுப்பு வெளிச்சங்களிலும், பல ஜனங்கள் பார்க்குமிடத்திலும், மார்க்கத்திலும், ப்ரதோஷத்திலும், மஹா நிசியிலும், மூலையிலும், பெருக்கப்படாதவிடத்திலும், கூட்டத்திலும், மாடியிலும் புசிக்கக்கூடாது.

எழுந்துவிட்டு மறுபடியும் ஸ்பர்சிக்கப்பட்டதும், மயிர், புழு இவைகள் காணப்பட்டதும், நெய்யல்லாததுமான அன்னங்கள் ராக்ஷஸமென்று சொல்லப்படும். இப்படிப்பட்டதைப் புசிப்பவன் முன்னேழு பின்னேழு குலங்களையும் தன்னையும் ரௌரவ மஹா நரகத்தில் வீழ்த்துக்கொள்ளுகிறான்.

வாசற்படி, வழிநடை, புழுதிகளடர்ந்தவிடம், சுவற்றின் சந்து இவைகளிற் புசிப்பது ஸம்பத்வ்ருத்திகரமல்ல. வைதிகாக்கினி ஸ்தானம், கொட்டகை, தேவப்ராம்ஹண ஸந்நிதானங்களில் பாதுகை தரித்தலாகாது. பாழ்வீட்டிலும், ஆஸனத்தின் மீது வைத்துக்கொண்டும், உடைந்த பாத்ரத்திலும், பூமியிலும், வைத்துக்கொண்டுண்ணலாகாது. வேதோச்சாரணத்துடனும், பார்யையுடனும் புசிக்கக்கூடாது. பத்னி பார்த்திருக்கபுசித்தால் வீர்யமற்ற புத்ரன் ஜனிப்பானென்று வேதம் உத்கோஷிக்கிறது. தாய், தங்கை, பத்னி முதலிய ஸ்த்ரீயோடு புசித்தாலும் சாந்த்ராயண க்ருச்ரம் அனுஷ்டிக்கவேண்டியது. விவாஹத்திலும், யாத்திரையிலும் தம்பதிகள் சேர்ந்துப் புசிக்கலாம். நதியின் கரையோரத்திலும், படுத்துக்கொண்டும், முழந்தாட்களுக்கு வெளியில் கையை வைத்துக்கொண்டும், ஸ்த்ரீசூத்ரரின் சேஷம், (அவள் சாப்பிட்டு உள்ளே மிச்சமாயிருப்பது) உபநயனமாகாதவர், சிசுக்களுடனும், புசிக்கக் கூடாது. வேறொரு பாத்ரத்தில் கொண்டுவந்து அதை மீற்றி உள்ளே கலக்காத சூத்ரசேஷம் சேஷமாகாது.

உப்பு கலந்த பாலும், எச்சிலான அன்னத்தில் பராணாஹூதியில் விட்டுக்கொள்ளாமல் புதிதாக நெய்யை விட்டுக்கொள்ளுதலும், தூரஸ்த்ரீயின் முகத்தை முகர்வதும் ஸுராபானத்திற்கு

ஸமமாகும். ப்ராணாஹுதியில் நெய்விட்டுக்கொண்டால் மறுபடியும் விட்டுக்கொள்ளலாம்.

முதலிடத்தில் உட்கார்ந்திருப்பவன் மற்றவர்களைக் காட்டினும் முன்னதாகவே சாப்பிட்டுவிட்டால் அம்மூடன் அப்பங்க்தியில் உள்ளவர்களுடைய ஸர்வ பாபங்களையும் அடைகிறான். பலர்பார்த்திருக்க ஒருவனோ, ஒருவனைப் பார்த்திருக்கும் பலரோ அவனுக்குக் கொடாமல் புசிக்கக்கூடாது. தனது தாஸவர்க்கங்கள் பார்த்திருக்கத் தான்மட்டும் நல்ல ரஸமானவைகளாய்ப்புசிப்பவன் ஹாலாஹல மஹா விஷத்தையே புசித்தவனாகிறான். விஷமமாய்ப் பரிமாறுகிறவனும், அதைக் கண்டிக்காமல் புசிப்பவனும் ப்ரஹ்மஹத்திக்காரன் அனுஷ்டிக்கவேண்டிய வ்ருதத்தையனுஷ்டிக்கக்கடவர்கள். எல்லோரும் புசித்துக்கொண்டிருக்க எவன் முதலில் பாத்ரத்தை (இலையை) விட்டுவிடுவானோ அவன் ப்ரஹ்மஹத்தி தோஷத்தை அடைகிறான். மற்றவர்கள் யாவரும் புசிக்கவுங்கூடாது. புசித்துவிட்டால் ஸாந்தபன க்ருச்ரமனுஷ்டிக்க வேண்டியது. பந்து ஜனங்களோடும் போஜனம் செய்யக் கூடாது. செய்தால் பங்க்தியிலுள்ளோர்களுடைய பாவங்கள் புசிப்பவர்களை வந்தடைந்து விடுகிறது. ஆகையால் பங்க்தி போஜனம் செய்யக்கூடாது. அக்னி, பஸ்மம், தூண், த்வாரம், வழி, தீர்த்தம், புல், மேடுபள்ளமான பூமி இவைகளால் பங்க்தியானது வேறுபட்டதாகும். அசுசிகளுடைய மத்தியிலும், துஷ்டர்கள் பங்க்தியிலும் புசிக்கக்கூடாது, கோபம், குழந்தைகளை அதட்டுதல் கூடாது. அகால போஜனமும் கூடாது. சண்டாளன், ப்ரஸவஸ்த்ரீ, தூரஸ்த்ரீ, பார்த்துவிட்ட அன்னத்தைப் புசித்தானாகில் உடனே வாந்தி செய்துவிட வேண்டியது. சண்டாளன், பதிதன், ப்ரேதம், சூத்ரன், தூரஸ்த்ரீ, நாய், கோழி இவைகளில் ஒன்றைப் புசிக்கும்பொழுது பார்த்துவிட்டானாகில் வாந்தி பண்ணிவிட்டு மூன்று நாள் உபவாஸமிருக்கவேண்டியது. சண்டாளன், பதிதன், தூரஸ்த்ரீ இவர்களுடைய வாக்யத்தைக் கேட்டுக்கொண்டு ஒரு கவளமாவது புசித்துவிட்டானாகில் ஒரு நாள் உபவாஸமிருக்க வேண்டியது. தூரஸ்த்ரீ ஸ்பர்சித்ததைப் புசித்துவிட்டானாகில் மூன்று நாள் உபவாஸமிருக்க

வேண்டியது. அசக்தனாகில் இதிற் பாதி இருக்கக்கடவன். ஒரு பங்க்தியில் புசிப்பவர் ஒருவர்க்கொருவர் தொட்டுக்கொண்டார்களாகில் நூற்றெட்டு காயத்ரீ ஜபம் செய்யவேண்டியது. இதற்கே ஒரு ராத்ரி பட்டினிகிடந்து பஞ்சகவ்யமருந்தப் பராசர முனி விதிக்கின்றனர். தொட்டவன் உடனே ஸ்நானம் செய்ய வேண்டியது. அப்படிச் செய்யாமல் புசித்தால் சாந்த்ராயணமனுஷ்டிக்கக் கடவன்.

தான் எச்சிலாயிருக்கையில் வேறோர் எச்சிலன்னத்தை ஸ்பர்சித்துவிட்டால் உபவாஸமிருந்து சுத்தியடைகிறான். அதைப் புசித்துவிட்டானாகில் க்ருச்ரத்தினால் சுத்தனாகிறான். ச்ராத்தத்திலும் ஒருவரையொருவர் போஜனகாலத்தில் தொட்டுக்கொண்டால் சாப்பிட்டுவிட்டு நூற்றெட்டுதரம் காயத்ரீ ஜபம் செய்யவேண்டும். போஜன மத்தியில் மல மூத்ர விஸர்ஜனம் பண்ணிவிட்டாலும், மற்றொரு உச்சிஷ்டத்தினாலாவது, நாயினாலாவது ஸ்பர்சிக்கப்பட்டாலும் ஸ்நானம் பண்ணி ஸஹஸ்ராவ்ருத் காயத்ரீ ஜபம் செய்யவேண்டியது. எச்சிலோடிருக்கும் பொழுது சண்டாள ஸ்பர்சம் ஏற்பட்டால் பசுவின் மூத்ரம், யவை இவைகளாலேயே ஆறு நாள் ஆஹாரம்செய்து வ்ருதமிருக்க சுத்தனாவான். உச்சிஷ்டனாயிருந்து ஆசமனம் பண்ணுவதற்கு முன் சண்டாள ஸ்பர்சம் ஏற்பட்டால் ஸ்நானம்பண்ணி எண்ணாயிரம் காயத்ரீ ஜபமும், புத்திபூர்வகமான ஸ்பர்சத்திற்கு ப்ராஜாபத்ய க்ருச்ரமும் அனுஷ்டிக்கக் கடவன். தான் அசுத்தனாக இருந்து அசுத்தமானவைகளைத் தொட்டால் உபவாஸத்தினாலும் க்ருச்ரத்தினாலும் சுத்தியடைவான்.

இடது கையால் புசித்தலோ, குடித்தலோ கூடாது. அது ரக்தபானமாகும். இலையை வலக்கையால் தொட்டுக்கொண்டே தீர்த்தபானம் இடது கையில் பாத்ரத்தால் செய்யலாம். சூத்ரன் கொண்டுவந்த தீர்த்தத்தை உட்கொள்ளக்கூடாது. தீர்த்தபானத்தில் வாயினின்றும், அன்னத்தில் ஜலம் சிந்தினால் அவ்வன்னத்தைப் புசிக்கக்கூடாது. புசிப்பது பாவத்தையே புசித்ததாகும். சாந்த்ராயண க்ருச்ரத்தால்தான் சுத்தி யுண்டாகும். போஜன பாத்ரத்தினால் தீர்த்தத்தை போஜனகாலத்தி

னுட்கொண்டானாகில் அவன் தேவ பித்ரு கர்மங்களையும், ஆத்மாவையும் பதனம் பண்ணிவைக்கிறான். கையை விட்டு வாயால் நீரை யுறிபவன் நாயாய்ப் பிறக்கிறான். கை, நகங்கள் இவை பட்டது கூடாது. அஞ்சலி, இடது கைப் பானங்கள் ஸுராபான ஸமானமாகும் என்பது ஸ்வாயம்பு மனுவின் அபிப்ராயம்

இலைகளின் பின்புறத்தில் புசிக்கக்கூடாது. இரவில் தீபமில்லாமல் புசிக்கக்கூடாது. தீபம் அணைந்துவிட்டால் ஸூர்யனைத் தியானித்து மறுபடி தீபம் எத்தினவுடன் வேறு பரிமாறிக்கொள்ளாமல் முன்னிருந்ததைமட்டும் சாப்பிட்டு எழுந்திருக்கவேண்டியது. மறுபடியும் பரிவேஷணத்தால் பாபம் ஸம்பவிக்கிறது. கையினால் அளிக்கப்பட்ட அன்னம், பிக்ஷை, ப்ரத்யக்ஷமாய்ப் பரிவேஷணம் பண்ணப்பட்ட உப்பும் மாம்ஸ பக்ஷணத்திற்கு ஸமானமாகும்; புசிப்பவன் அசுசியாவன். நெய்யினாலும், எண்ணெயினாலும் பக்வமாயிருந்தாலும் ப்ராஹ்மணனே கொடுத்தாலும் அவை புசிக்கக்கூடாதனவாம், புசித்தவன் சாந்த்ராயண க்ருச்ரம் அனுஷ்டிக்கவேண்டியது. நெய் எண்ணெ, உப்பு, தீர்த்தம், பாயஸம், பிக்ஷை, வ்யஞ்ஜனம், இவைகள் நேராகக் கையினால் கொடுக்கப்பட்டதாயின் புசிக்கக் கூடாதவைகளே. இலை, புல், தர்விகள் மூலம் இவை அளிக்கப்படவேண்டும். இரும்புக் கரண்டி கூடாது. தீர்த்தம், அன்னங்களைக் கையினால் கொடுக்க நினைப்பவன் பஞ்சமஹா பாதகங்களை அடைகிறானென விதிக்கப்பட்டிருக்கிறது. இரும்புப் பாத்ரத்தால் அளிக்கப்பட்ட அன்னமானது நாயின் உச்சிஷ்டத்திற்கு ஸமானம். அதைப் புசிப்பவனுக்கு நரகந்தான் கதியாகும். இரும்புப் பாத்ரமானது ஸ்நானம், ஆசமனம் முதலிய கர்மங்களுக்கு அனர்ஹமானது. ஆகையால் அதிலிருக்கும் தீர்த்தத்தை உபயோகிக்கக்கூடாது.

எக்காளம் (வாத்ய விசேஷம்), எந்த்ரம், வண்டிச் சக்ரம், உரல் இவைகளுடைய சப்தம் காதில் கேட்கும் வரையில் சாப்பிடக் கூடாது. செக்கு, ஆலை, சூத்ரன், பதிதன் இவர்கள் சப்தமும் அப்படியே. கோழை உமிழ்தல், மூக்குச்சிந்தல், முதலியவைகளை போஜனகாலம், ஜபம், ஹோமம், மங்கள

கார்யம் இச்சமயங்களிலும், மஹா ஜனக்கூட்டத்திலும் செய்யக் கூடாது. தயிர் சாதமோ, பால் சாதமோ, சாப்பிட்டுவிட்டுத் தீர்த்தபானம் செய்யக்கூடாது. தீர்த்தபானம் பண்ணிப் பிறகு உத்தராபோசனம் பண்ணவேண்டியது. பழம், பக்ஷணங்கள், தவிர மற்றெதையும் குழந்தைகளுக்கு முதலில் பரிமாறக் கூடாது. தயிர், தேன், நெய், பழம், பால், தீர்த்தம், பாயஸம், மாவு இவைகளைமட்டும் பாக்கியில்லாமலேயே புசித்துவிடவேண்டும். மற்ற போஜன வ்யஞ்ஜனாதிகளை முழுமையும் புசித்துவிடக்கூடாது. தந்தை, தமையன், குரு இவர்களுடைய எச்சிலைப் புசிப்பதால் நன்மையே விளைவிக்கும். ஸ்த்ரீ, சூத்ரர்களின் எச்சிலைப் புசித்துவிட்டவன் ஏழுநாள் உபவாஸமிருக்கவேண்டும். நாய், பூனை, கழுகு, கோழி, எலி, பெருச்சாளி இவைகளால் முகரப்பட்ட அன்னத்தை புசிக்கக்கூடாது. பசுவினால் முகரப்பட்டதும், பறவைகள் வாய்வைத்ததும், கும்பலாகச் சேர்ந்து சமைக்கும் அன்னங்களும் புசிக்கத்தகாதவைகளாகும்.

பஹுளமான அன்னத்தில் முகரப்பட்ட கொஞ்சம் பாகத்தை எடுத்தெறிந்துவிட்டு மற்றதை வைத்துக்கொள்ளலாம். இதற்கு வேதகோஷமோ, ஸ்வர்ணவஸ்துவின் ப்ரோக்ஷணமோ அக்னியின் தாபமோ சுத்தியைக் கொடுக்கும். நாய், காக்கை, சிசு இவைகளுடைய எச்சில்பட்ட அன்னத்தைப் புசித்துவிட்டானாகில் மூன்று தினம் உபவாஸமிருக்கக் கடவன். பூனை, எலி, பெருச்சாளி தின்றதானால் பஞ்சகவ்யத்தால் சுத்தி. புழு முதலிய அசுத்த வஸ்துவைப் புசித்துவிட்டானாகில் மூன்று சாந்த்ராயண க்ருச்ரங்களால் சுத்தியடைகிறான். கீரி, பூனை, பாலர்களுடைய எச்சில்பட்டதற்கு ப்ரோக்ஷணத்தால் சுத்தியுண்டாகும். அன்னத்தில் புழு, மயிர், நகம், எலிப்புழுக்கையிருந்தால் அதைமட்டும் எடுத்தெறிந்துவிட்டு மீதியை ப்ரோக்ஷித்தால் சுத்தியாய்விடும் கையில் எடுத்தபிறகு அதில் காணப்பட்டால் அதை எறிந்துவிடவேண்டியது. வாயில் போட்டுக்கொண்டுவிட்டால் பிறகு தெரிந்தால் அதை உமிழ்ந்துவிட்டு நெய்யைக் குடிக்கவேண்டியது. அசுத்த ஸம்பந்தமானதை விழுங்கியான பிறகு தெரிந்தால் ஸ்வர்ணபாத்ர நெய்யை உறுகவைத்து

ப்ராசனம் பண்ணவேண்டும். சமையல் செய்யும்பொழுது தோன்றினுல் அதை எடுத்து எறிந்துவிடவேண்டியது. ஸ்த்ரீ சூத்ரோச்சிஷ்டமான தீர்த்தத்தைப் பானம் பண்ணிவிட்டால் மூன்றுநாள் முறையே சங்கதீர்த்தம் பாலினுலும், தர்ப்பதீர்த்தம் யவைக்கஞ்சியினுலும் உட்கொண்டு வ்ருதமாய் இருக்க வேண்டியது.

புசிக்கத் தகுந்தவையும் தகாதவையும்

அன்ன தோஷத்தினுல் யமனுனவன் ப்ராஹ்மணனைக் கொல்லத்துணிகிருன். புசிக்கத் தகாதவைகளை விலக்குவதால் ஹ்ருதயம் சுத்தியாகின்றது. ஸத்வகுணம் மேலிடுகிறது. புசிக்கத் தகாதவை என்பது இருவிதங்களாகும். வெள்ளுள்ளி போன்ற ஜாதியினுல் புசிக்கத் தகாதவை என்றும், புசிக்கக் கூடாது என்று நிஷேதிக்கப்பட்டவையே ஆச்ரய ஸம்பந்தமானவையுமாம். ஜாதி துஷ்டமானதும், க்ரியா துஷ்டமானதும், காலாச்ரய துஷ்டமானதும், சேர்க்கையால் துஷ்டமானதும், மனதிற்கு ஸந்தேஹமாயுள்ள ஆஹாரங்கள் புசிக்கத் தகாதவைகளாகும்.

வெங்காயம், வெள்ளைப்பூண்டு, செம்முருங்கை, சுரை, வெண்கத்திரி இவைகள் **ஜாதி தூஷிதமாகும்.**

பதிதர் முதலானேர்களால் பார்க்கப்பட்டது **க்ரியா தூஷித**மாகும். காலஞ்சென்றதும், ஊசினது, நூல், நீர் விட்டுக் கெட்டுப்போனவை **காலதூஷித**மெனப்படும். தயிர், பணியாரவகையிவைகளுக்கு ருசி கெடாமலிருக்கும் வரையில் காலதூஷிதமென்ற குற்றமில்லை. கள், வெங்காயம், சீயன்பால் (கன்றுபோட்ட பத்துநாட்களுக்குட்பட்ட பசுவின்பால்)இவைகளுடன்கூடிய அன்னமானது **சேர்க்கையால் துஷ்ட**மெனச் சொல்லப்படும். இதை சூத்ரர்களின் உச்சிஷ்டம்போல் பாவிக்கவேண்டும். எந்த ஆஹாரத்தைப் பார்த்தவுடன் மனதிற்கு ஸந்தேஹம் உண்டாகிறதோ அதுவே ஸந்தேஹப்பட்ட ஆஹாரமாகும். ரஸங்களின் ருசி மாறிவிடுவது **ரஸதூஷித**மெனப்படும்.

உருண்டை முள்ளங்கி, குப்பைக்கீரை, முருங்கை, ஒட்டகை, கழுதை, அல்லது ஆட்டின் பால், சீயன்பால், வெள்ளைப்பூண்டு,

வெங்காயம், வெண்கத்திரிக்காய், இவைகளைப் புசித்துவிட்டவன் மூன்றுநாள் உபவாஸமிருந்து பஞ்சகவ்யம் அருந்த சுத்தியாவன் என பராசர முனிவர் விதித்துளர். தெரியாமல் ஒரு தரம் புசித்துவிட்டவனுக்குத்தான் இப்பிராயச்சித்தம். தெரிந்து செய்பவன் பதிதனே. தெரியாமற் பலமுறை புசித்தவனுக்கு ஸாந்தபன க்ருச்ரம் ஏற்படும். இருமுறை புசித்துவிட்டவன் சாந்த்ராயண க்ருச்ரம் அனுஷ்டிக்கக்கடவன். பன்முறை புசித்துவிட்டவன் பனிரண்டுநாட்கள் பாலைக் குடித்து வ்ருதமிருக்க வேண்டியது.

வால் நீண்ட கருப்பு நெல், விதை நெல் [இதால் அநேக தான்யோத்பத்தி நாசமாவதால் ஆபத்து, வ்யாதிகாலங்களில் மட்டும் கூடுமென்பதாம்]. ஆட்டாங்கொடி, சீந்தற்கொடி இலுப்பைப்பூக்களும் கூடா. வசம்பு, பசளைக்கீரை,செம்முருங்கை சிறு (பேய்க்) தும்மட்டி, சுரை, விதைநெல், பிண்ணுக்கு இவைகள் எவருடைய வயிற்றில் சேருகின்றதோ அவர்களை இவை நரகமடைவிக்கின்றன. கண்டங்கத்திரி, தேற்றுன்விதை, சிறுகும்மட்டி, கோவை. அத்தி, புழுங்கலரிசி இவைகளை புசிப்பவனிடமிருந்து ஸம்பத்தானது வெகுதூரம் விலகுகிறது. தும்மட்டிக்காய், முருங்கை, பசளைக்கீரை, பிண்ணுக்கு, கோவை இன்னும் துர்க்கந்தமுள்ளவைகள், அசுசியானவைகளையும் புசித்தால் மந்த்ர ஸித்தியும் ஏற்படாது. காலத்திலின்றி அகாலத்தில் ஏற்படும் காய், பூ, பழங்கள் அசுத்தத்திலுண்டாகுமவைகளும், பார்க்கப்பிடிக்காதவைகளும் விலக்கத்தக்கவைகளே. நோயாளி வெங்காயம், பூண்டு முதலியவைகளை வ்யாதி நீங்கப் புசித்தாலுல் தோஷமில்லை. அதற்காக ஆயிரத்தெட்டுதரம் காயத்ரீயை ஜபித்து அந்நீரை அவன் தலையில் கொட்டவும். ஆடினவுடன் எண்ணெய், நெய்க்கசண்டு, நீர்க்கலக்காத கடைந்த தயிர், எள்ளோரை, தேவர்களுக்கல்லாத வடை, பாயஸம், நிவேதனமாகாத செய்துவைத்திருக்கும் ஹவிஸ், பழையது ஸந்தினி என்ற பசுவின்பால் ஒற்றைக் குளம்புள்ள ம்ருகத்தின் பால், கன்றிறந்த பசுவின்பால், காட்டுமிருகத்தின் பால், ஸ்த்ரீயின் முலைப்பால், இவைகளும் விலக்கத்தக்கவைகளாகும். எண்ணெய்

சேர்க்கப்பட்ட பழையது கூடும். பால் அல்லது நெய் ஸம்பந்தப்பட்டவைகளுக்கு பழையது தோஷமில்லை. ஒருவேளை அதிக்ரமித்துப் பால் கறக்கும் பசுவிற்கும், தனதின்றி மற்றோர் பசுவின் கன்றால் ஊட்டப்பட்டுக் கறக்கப்படும் பசுவிற்கும் ஸந்தினி என்று பெயர். முலைகளினின்றும் தானாகவே பாலை ஒழுகவிடும் பசும்பாலும், இரட்டைக் கன்றுகளீன்ற பசுவின்பாலும் ஆட்டைத்தவிர இரண்டே முலைகளுள்ளவைகளின் பாலும் உதவாது. ஆபத்துக்காலத்தில் தீர்த்தத்தினால் சுத்தமாய் சோதிக்கப்பட்ட நாட்சென்ற ஆஹாரமும் உபயோகிக்கலாம். தயிர் ஸம்பந்த அன்னம் மறுநாளைக்கு பர்யுஷித தோஷமடையாது. பர்யுஷிதான்னங்களை புசித்தால் மற்றவைகளுக்குப் போலவே ஒருநாள் உபவாஸமே ப்ராயச்சித்தமாகும்.

ஜனன மரணசௌசான்னம், திருடர்களுடைய அன்னம். நவச்ராத்தமிவைகளுக்கு சாந்த்ராயணமே ப்ராயச்சித்தமாகும்.

ப்ரதமையில் பூசனியும், த்விதீயையில் கத்தரிக்காயும், ஷஷ்டியில் புடலும், ஸப்தமியில் நெல்லிக்காயும், த்ரயோதசியில் எள்ளும், சதுர்த்தசியில் புளியும், பர்வங்களில் நெல்லிக்காயும் புசிப்பது மிகவும் தோஷகரமாகும். பூமி ஸம்பந்தமில்லாத நீரைக் குடிக்கக்கூடாது. தாம்ரபாத்ர க்ஷீரமும், வண்ணாந்துறை ஸ்நான நீரும், உச்சிஷ்டத்தில் நெய்யும், உப்புகலந்த பாலும் கள்ளுக்கு ஸமானமாகும்.

ஞாயிற்றுக் கிழமையிலும், ஸப்தமியிலும், நெல்லிக்காய் புசிப்பவன் தரித்திரனாவான். பகலில் விளாமரத்து நிழலிலும், இரவில் தயிர் புசிப்பதிலும், வன்னிமரத்து நிழலில் ஒதுங்குவதும், ஸப்தமியில் நெல்லிக்காயிலும் மூதேவியானவள் ஸதா ஸர்வகாலமும் வாஸம் செய்கிறாள் என விதிக்கப்பட்டிருக்கிறது. இரவில் புளி, எலுமிச்சம் பழம், நெல்லிக்கனியைப் புசிப்பதினால் வீர்யம், யசஸ், அறிவு, பொருளிவைகள் எல்லாம் போய்விடுகின்றன. பகலில் முட்டைப் பொறிகளையும், இரவில் வறுத்த நெல்லின் மாவு, இவைகளையும் புசிக்கக்கூடாது. எள் ஸம்பந்தப்பட்ட பதார்த்தம் எதுவும் இரவில் புசிக்கக் கூடாது. இரவில் குங்கிலியம், தயிர், இஞ்சி இவை

களை உபயோகிப்பதால் ஐச்வர்யம், அழகு, வாக்கு இவைகள் போய்விடுகின்றன [தூரஸ்த்ரீயின் புணர்ச்சியிற் போல்].

வெண்கலத்தில் எடுக்கப்பட்ட இளநீர், கரும்புரஸம் கள்ளுக்கு ஸமானமாகும். உப்பை அன்னத்தோடு கலந்தே பரிமாறவேண்டும். வேறுவீட்டினின்று வந்த சோறும் புசிக்கத் தகாததே. தேங்காய், பூசனி, வெள்ளறி, கண்டங்கத்திரி, வாழை, மா, பலா, தென்னை, புளி, பாகல், கரணைக்கிழங்கு, கக்கரி, அவரை (அதன் பேதங்களுடன்), புலியுகிர் என்ற பச்சிலை இலந்தை, சுக்கு, செவியங் கிழங்கு, இஞ்சி, நெய்தற்கிழங்கு, சேம்பு, பயர், துவரை, கொள்ளு, சாமை, உளுந்து, சிறுபாலை, கருஞ்ஜீரகம், கண்டப்பரங்கி, கொத்தமல்லி, விஷ்ணுக்ராந்தி, கடுக்காய், அகத்திக்கீரை, வஞ்சி, மாதுளை, முத்தக்காசு, விளா, த்ராக்ஷை, நாவல், கொடிக்கீரை, பேரீச்சை, பெரம்பு, ஜீரகம், மிளகு, கடுகு, மொச்சை, தினை, கருமொச்சை, தட்டைப்பயர், எள்ளு, பசு ஆடு எருமைகளின் பால், பொன்னாங்காணி, சுரை, நாரத்தை, தூதுவளை, கீரை, வல்லாரை, சிந்தில், திப்பிலி, இவைகளை போதாயன மஹரிஷி புசிக்கத்தகுந்ததாய் க்ரஹித்திருக்கிறார்.

அகத்திக்கீரை விஷ்ணுபக்தியை வ்ருத்திசெய்யும். நெல்லிக்கனியை எக்காலுமெவன் புசிப்பானோ அவனுக்கு நாராயணாகிய பரமபுருஷன் ப்ரத்யக்ஷமாகிறான் என விதித்திருக்கின்றனர். காசான்துளஸிக்கும் பலன் இம்மாதிரியேயாகும்.

புசிப்பதிலும், குடிப்பதிலும், கடிப்பதிலும், நக்கித் தின்பதிலும் எவன் 'நமோ நாராயணாய' என்று சொல்லிச் செய்கிறானோ அவன் நற்கதியடைகிறான் என்று சந்த்ரிகை க்ரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது. விஷ்ணுவுக்கு நிவேதனமானவைகளையே புசிக்கவேண்டியது, பானம் பண்ணவேண்டியது, முகரவேண்டியதென வேதம் உத்கோஷிக்கிறது.

சிவலிங்கத்திற்கு நிவேதனம் பண்ணப்பட்ட பதார்த்தம் சண்டேசனுக்கென்று சிவனால் கொடுக்கப்பட்டது. ஆகையால்

சிவனுடைய ஆஜ்ஞையை முன்னிட்டு ப்ரஸாதமென்பதில்லை. ஸ்தாவரலிங்கத்தில் சண்டேசனுக்கு நிவேதனம் பண்ணப்பட்ட பதார்த்தத்தைப் புசிக்கக்கூடாதென வ்யாஸபகவான் விதித்திருக்கிறார். க்ருஹங்களில் இஷ்டதேவதா நிவேதன ப்ரஸாதம் ஸ்வீகரிக்கத் தகுதியாகும்.

விஷ்ணுவினது தவிர மற்ற தேவதாந்தர நிர்மால்யத்தை கிணற்றில் கொட்டாது தெரியாமல் எடுத்து ஸ்வீகரித்துக்கொண்டாலும் ரௌரவ நரகத்திற்கு ஆளாகிறான்.

புசிக்கத்தகாத அன்னங்கள்

ச்ராத்த சேஷமான அன்னத்தைக் கர்த்தாவினது ஸபிண்டர்களைத் தவிர மற்றெவர்கள் புசிக்கின்றார்களோ அவர்கள் அவனது பித்ருக்களுக்கு யமலோகத்தில் மலத்தைப் புசிக்கச் செய்கிறார்கள். புசித்தவர்கள், கர்த்தாவோடும் அவனதுபித்ருக்களோடும் நரகத்தில மூழ்கின்றனரென்று பல ரிஷிகளின் அபிப்ராயமாகும்.

யதியின் அன்னம், அவனது பாத்திர தீர்த்தம், அவனால் அனுப்பப்பட்ட அன்னங்களைப் புசிக்கக்கூடாது. பலருக்குபனயனம் செய்துவைப்பவன், ஊர்ப் புரோஹிதன், கர்வம்படைத்தவன், மூர்க்கன், துஷ்டநடத்தையுள்ளவன், கெட்டபுத்தியுடையவன், இவர்களது அன்னத்தைப் புசிப்பவன் ப்ரூணஹத்தி செய்தவனாகிறான்.

லோபத்தினால் தன் புத்ரர்களையும், ஆட்களையும், தனது சரீரத்தையும், தர்மகார்யங்களையும், பித்ருக்களையும், ஹிம்ஸிப்பவன் **கதர்யன்** எனப்படுவன்.

சாஸ்த்ர நிஷேதமான தொழிலால் ஜீவிப்பவனும், தன்னையே [ஆத்ம] ஸ்துதி செய்துகொள்ளுபவனும், பிறரை நிந்திப்பவனும் இவர்களே **வார்த்துஷிக**ராவர். இவர்கள் ஹவ்ய கவ்யங்களில் விலக்கத் தகுந்தவராவர்.

விரும்பி அழைப்பவனைத் தவிர புண்யவானாயினும் அவன் அன்னத்தைப் புசிக்கக்கூடாது. ஆசாரசீலர்களுடைய அன்னத்தைப் புசிக்கலாம்.

அசுரோத்ரியன் செய்யும் யாகத்திலும், ஸ்த்ர்கள், நபும்ஸகர், க்ராம புரோஹிதர் செய்யும் ஹோமத்திலும், புசித்தல் கூடாது. தேவதைகளுக்கும் ப்ரீதியாகாது. கோபிஷ்டி, நோயாளி, கூட்டத்தோடு சாப்பாடு, வேசியன் அன்னம், ஸாதுக்களால் நிந்திக்கப்பட்ட அன்னமும், திருடன், பாடகன், தச்சன், வட்டியில் பிழைப்பவன், தீக்ஷிதன், கயிற்றால் கட்டுண்டவன், நபும்ஸகன், வ்யபிசாரிணி, டாம்பிகன், வைத்தியன், வேட்டையாடுபவன், க்ரூரன், எச்சிலைப் புசிப்பவன், ஸூதகம், அலக்ஷியமாய் அளித்த அன்னம், வரிசையாகக் கிடைத்த அன்னம், புருஷனையும் பிள்ளையையுமிழந்த விதவையின் அன்னம், சத்ருவன்னம், பட்டிணத்தன்னம், குருடர், வேதமோதாதவர், கன்னிகை விற்பவர், நிந்தகன், தரித்ரர், மரியாதையற்றவன், யதி, பதிதான்னம், தும்மல் ஸம்பந்தப்பட்ட அன்னம், வஞ்சகன், தகாதவர்களுக்கு ஹோமம் செய்துவைப்பவன், கோள்சொல்லுபவன், பொய் சொல்லுபவன், நட்டுவன், கைக்கோளன் (நெசவுக்காரன்), செய்நன்றிமறந்தவன், கருமான், நாய் வளர்ப்பவன், சூத்ரன், தட்டான், வண்ணான், [அதாவது இஜ்ஜாதிக்காரர்களால் பணமோ, அரிசி முதலிய ஸாமக்ரீக்களோ கொடுக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட அன்னம் என்பது பொருளே தவிர, அவர்கள் வீட்டன்னமல்ல] முதலியவர்களின் அன்னங்களும்கூடாது. எவனுடைய க்ருஹத்தில் வேறொரு ஜாரன் (சோர புருஷன்) இருக்கிறானோ அவர்களுடைய அன்னம் கூடாது. ஜாரபுருஷன் பத்னியோடு சேருவதை ஸஹிப்பவனும், ஸ்த்ரீயால் ஜயிக்கப்பட்ட நராதமனுடைய அன்னமும் புசிக்கத்தகாததாகும்.

அரசனுடைய அன்னமானது தேஜஸை பரிஹரிக்கும். சூத்ரான்னம் ப்ரஹ்மதேஜஸைக் குலைத்துவிடும். இப்படியே ப்ராணன், புத்திரர், கீர்த்தி, பலம், ஸ்வர்க்கப்ராப்திகளை இல்லாமற் பண்ணிவிடும். வேசி, வைத்தியர், வார்த்துஷிகள் முதலியோருடைய அன்னங்கள் முறையே சீழ், ரேதஸ், மலம், மூத்ரங்களுக்கு ஸமானமாகும். இதரர்களின் அன்னங்களும் அவர்களின் தோல், எலும்பு, மயிர்களுக்குத்துல்யம். இவைகளைத்தெரியாமற் புசித்துவிட்டால் மூன்று நாள் உபவாஸமிருக்கவேண்டி

யது. தெரிந்தேபுசித்தவன் ரேதஸ், மல, மூத்ரங்களைப் புசித்தவ்னுக்கு விதிக்கப்பட்ட க்ருச்ரங்களை அனுஷ்டிக்கவேண்டியது.

வேறொரு கதியில்லாமல், ஆபத்துக்காலத்தில் சூத்ரனிடமிருந்து ஆமமாக அரிசி முதலியவை ஒரே வேளைக்குமட்டும் க்ரஹிக்க சாஸ்த்ரம் இடங்கொடுக்கிறது. மற்ற முன் கூறின கர்வி முதலியோரிடத்தில் இவ்வாறும் க்ரஹிக்கக்கூடாததாகும்.

ஸரியான காலங்களில் ஹோமம், ஸ்நானம், பூஜை, தானம், முதலியவைகளைச் செய்யாதவரே **ஷண்டராவர்.**

டம்பத்திற்காகப் பலர் மெச்ச ஜபதபங்களைச் செய்பவர் **பூனையர்** [மார்ஜாரர்] என்று சொல்லப்படுவர்.

பொருளிருந்தும் தான ஹோமங்களைச் செய்யாது திரிபவர் (ஆகு) **பெருச்சாளியர்** எனப்படுவர். இவர் அன்னத்தைப் புசித்தவருக்கு க்ருச்ரத்தால் சுத்தியேற்படும்.

ஸபையில் பக்ஷபாதமாய்ப் பேசுபவர் [குக்குடர்] **கோழியர்** எனப்படுவர்.

ஆபத்தில்லாதகாலத்தில் ஸ்வதர்மத்தை விட்டுப் பரதர்மத்தை அவலம்பிப்பவர் **பதிதர்.** எனப்படுவர்.

தேவ, பித்ரு, குரு, கோப்ராம்ஹணர்களைப் பூஜியாதவரே **அபவித்ராவர்.**

வந்த யாசகனுக்கு ஆசைகாட்டி மோசம் பண்ணுபவனும் கொடுப்பதைத் தடுப்பவனும், சரணாகதர்களை ரக்ஷியாதவனும் 'சண்டாளர்' என வழங்கப்படுவர்.

அக்னிபூஜையில்லாதவர், ஸ்வல்பமான பாவங்களுக்கு ப்ராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டியிருக்க அதைச் செய்துகொள்ளாமலே கர்மங்களை அனுஷ்டித்துவருபவர் இவர்களுடைய அன்னமுங்கூடாது.

பெண்ணின் புருஷன் (ஜாமாதா) ஸ்ரீ விஷ்ணுவுக்கு ஸமானனேயாம். அவனுக்குக் கோபம் உண்டுபண்ணக்கூடாது. தௌஹித்ரன் பிறக்கும் வரையில் அவன் வீட்டிற் புசிக்கக்கூடாது. புசித்தால் மாமனார் பதிதனாகிறான்.

காலாகாலங்களில் போஜனம் செய்விக்காதவன், நியமமின்றி எல்லார் வீட்டிலும் புசிப்பவன், வ்ருஷளீபதி, மதம் பிடித்தவன், பித்தன், புத்திரனிடமிருந்து ஜ்ஞானோபதேசம் பெறுபவன், கடன்காரன் வந்து கடனைக் கேழ்க்க அவனுக்குப் பதில் சொல்லாது போய்விடுபவன், அவனை ஸ்நேகமாய்க் கொண்டவன் இவர்களது அன்னமுங்கூடாது.

ஒருவனது பாவம் மற்றொருவனைச் சேரும்விதம்

ப்ரூணஹத்தி செய்தவனுடைய அன்னத்தைப் புசிப்பவன் அவன் ப்ரூணஹத்தி தோஷத்தை இவன் அடைந்துவிடுகிறான். ஒருவன் பாவத்தை மற்றொருவன் சொன்னால் சொன்னவன் அப்பாவத்தை அடைந்துவிடுகிறான். திருடனை அரசன் தண்டிக்காவிடில் அவன் பாவம் அரசனைச்சாருகிறது. யாசித்தவனுடைய பாவத்தை அஸத்ய ப்ரதிஜ்ஞை செய்பவன் அடைகிறான் என்று ஆபஸ்தம்ப முனிவர் விதித்துளர்.

பரான்ன போஜன தோஷங்கள்

பிறரது அன்னத்தைப் புசித்தலானது புத்தி, தைர்யம், வீர்யம், கண் காதுகள், மனஸ், ப்ராணன், நினைவு, அறிவுகள் யாவையும் குலைத்துவிடும்; இவன் செய்த ஜபம், தபம், ஹோமம் தானம், அத்யயனம், இவையாவும் அன்னதாதாவைச் சேர்ந்துவிடும். ஒருவன் அன்னத்தையுண்டு புணர்ந்து புத்ரன் உண்டானால்பிறந்தவனின்ஸர்வபுண்யகர்மபலனும்அன்னதாதாவினுடையதே என வ்யாஸபகவான் கூறுகிறார் [வீர்யம் அன்னத்தினுலுண்டாவதால்]. தவிரவும் அன்னமளிப்பவனுடைய பாவமும் இவனையடைந்துவிடுகிறது. க்ருஹஸ்தன் பரான்னபோஜனத்தால் பதிதனாகிறான். பரான்ன நியமம் வைத்துக்கொண்டிருப்பதாய்ச் சொல்லுபவர் புசித்துவிட்டால் நாய், பன்றி, கழுதையாய்ப் பிறக்கின்றனர். பரான்ன போஜனமே செய்பவர் பசுமாடாய் ஜனித்து அன்னமளித்தவர்க்கு உழைக்கின்றனர். தேவபித்ரு கர்மங்களைச் செய்துவிட்டுப் பிறர் வீட்டிற்போய்ப் புசிப்பவன் பாவத்தையே புசித்தவனாய் செய்துவிட்டு வந்த கர்மபலன்களை அன்னமளிப்பவனுக்குக் கொடுத்தவனாய்விடுகிறான் என ஜமதக்னி மஹரிஷி கூறுகிறார்.

பரான்னத்தில் த்ருஷ்டியோடு தன் கர்மாக்களைக்குறைத்துக் கொள்ளக்கூடாது. பிறர் அன்னம் தேஹத்திலிருக்கும் பொழுது செய்யப்படும் வைதிக கர்மங்களின் பலன் மூன்றில் ஒரு பங்கு அன்னமளித்தவனை அடைகிறது. பூமி, பசு, பொன் ரத்னங்கள் முதலியவைகளை வாங்கிக்கொள்ளலாம். அன்னம் மட்டும் புசிக்கக்கூடாதென யமன் கூறுகிறார்.

பிறருடைய அன்னம், வஸ்த்ரம், தீர்த்தம், பெண்கள், க்ருஹம், யாவும் அனுபவிப்பவனுடைய தனத்தைக் குலைக்கும். க்ருஹஸ்தனுக்குப் பரான்னபோஜனம் பரிஹரித்துக்கொள்ள முடியாத ஒரு தனித்த பாவமாய் நிற்கிறது. சிஷ்டரான ச்ரோத்ரியருடைய ஒரு நாள் அன்னம்மட்டும் நம் ஸகல பாவங்களையும் நிவர்த்திக்கிறதால் அது க்ராஹ்யமாகும்.

பஞ்சமஹாயஜ்ஞங்களை அனுஷ்டித்துவிட்டுப் பிறருடைய அன்னத்தில் வயிறு வளர்க்கும் அதமர்கள் **பரபாகரதர்** என்றும், க்ருஹஸ்தனுக்குரிய கர்மாக்களை விதிப்படி அனுஷ்டித்து அவற்றை க்ரயத்திற்கு விற்பவன் **அபச**ரென்றும் பெயராகும். அபசருக்குக்கொடுத்த தானம் தாதா ப்ரதிக்ரஹீதா இருவர்களையுமே நரகமடைவிக்கிறது. பரபாக நிவ்ருத்தர், பரபாகரதர், அபசர், பரிவித்தி, பரிவேத்தா, குண்டன், கோளகன், தேவலன், புரோஹிதர்களது அன்னத்தைப் புசித்துவிட்டால் சாந்த்ராயண க்ருச்ரம் அனுஷ்டிக்கக்கடவர். அனாசாரன், நிஷித்தன், அசுசியாயுமுள்ள அந்தணன் அன்னத்தைப்புசித்துவிட்டால் ஒருநாள் முழுதும் உபவாஸமிருக்கவேண்டும். ஔபாஸனாக்னியை விட்டுவிட்டுத் தன்னை க்ருஹஸ்தனாய்ச் சொல்லிக்கொள்ளும் அசடுக்கு **வ்ருதாபாகன்** எனப் பெயர். இவரது அன்னமும் த்யாஜ்யமே.

சூத்ரான்ன தோஷங்கள்

சூத்ரனுடைய அன்னமும் ப்ராம்ஹணனால் உபஸ்காரம் பண்ணப்பட்டதும் கூடாது. ப்ராஹ்மணனுடைய அன்னத்தையும் சூத்ரனால் அழைக்கப்பட்டுப் புசிக்கக்கூடாது. இவ்விரண்டிற்கும் சாந்த்ராயணமே ப்ராயச்சித்தமாகும். சூத்ரன் கொடுக்கும் ஆமமும் த்யஜிக்கத்தக்கதே. இதை ப்ராம்ஹண போஜனத்திற்காக வாங்கிச் சமைப்பவனும், அதைப் புசிப்பவனும், ஆமம் கொடுத்த சூத்ரனும் ஆக மூவருமே மஹா நரகத்தை அடைகின்றனர். இவ்வாமம் குரு, அதிதி பூஜைகளுக்குதவும். சூத்ரான்னம் வயிற்றிலிருக்கும்பொழுது அதற்கு ப்ராயச்சித்தம் செய்துகொள்ளாமலே இறந்தவன் சூத்ரயோனியையடைகிறான். சூத்ரான்னத்தை சாப்பிட்டுக்கொண்டு செய்யும் அத்யயனம், ஜபம், ஹோமம் யாவும் நிஷ்பலமே. சூத்ரனுடைய அன்னம், சேர்க்கை, கூட உட்காருதல், ஜ்ஞானோபதேசம்பெறல் இவை எவ்வளவு தேஜஸ்வியாயிருந்தாலும் அவனைப்பதிதனாக்குகிறது. சூத்ரான்னத்தைப் புசிப்பவரும், ஜனனமரணாசௌசான்னங்களைப் புசிப்பவரும் கழுகாய்ப் பனிரண்டு ஜன்மங்களும், பன்றியாகப் பத்து ஜன்மங்களும், நாயாக ஏழு ஜன்மங்களும் எடுக்கின்றனரென்று மனுவிதிக்கின்றார். சூத்ரனுடைய ஆமமானது பக்குவான்னத்திற்கு ஸமானம். பக்குவான்னமோ எச்சிலுக்கு ஸமானமாகும். ஆறுமாத காலம் சூத்ரனது அரிசி முதலானவைகளைச் சமைத்து உண்டு வருபவன் சூத்ரனேயாகிறான்.

ஸூர்ய, சந்த்ரக்ரஹண காலங்களில் புசிப்பவனும், ஜனனமரணாசௌசான்னங்களைப் புசிப்பவனும், நதி முதலியவிடங்களில் கையில் அன்னத்தை ஏந்திப் புசிப்பவனும், மறுபடியும் புருஷஜன்மத்தையே அடைகிறதில்லை. தெரியாமல் இவைகளைப் புசித்துவிட்டவனுக்கு 'ப்ரம்ஹகூர்ச்சம்' ப்ராயச்சித்தமாகும். தெரிந்து செய்தவனுக்கு 'ப்ராஜாபத்யம்' 'மனஸ்தாபங்களே' ப்ராயச்சித்த க்ருச்ரங்களாகும். வேறு கதியில்லாத சூத்ரனால் கொடுக்கப்படும் அரிசி, பால், தயிர், நெய், மோர், எண்ணெமுதலியன ப்ராம்ஹணன் க்ருஹத்தில் சமைக்கப்பட்டுச் சாப்பிட க்ராஹ்யமாகும். கள், மாம்ஸங்களைப் புசிப்பவனும் தாழ்ந்த தொழிலைச் செய்பவனுமான சூத்ரனை சண்டாளன்போல் தூர விலக்க வேண்டியதென பராசர முனி விதிக்கிறார்.

அந்திமர் பாண்டத்திலிருக்கும் தயிர், நெய், பால் இவைகளைத் தெரியாது குடித்துவிட்டால் ப்ரஹ்மகூர்ச்சம் ப்ராயச்சித்தம் விதிக்கப்படுகின்றனர். தெரிந்து குடித்தவர் உடனே வாந்தி பண்ணிவிட்டு ப்ராஜாபத்யம் அனுஷ்டிக்கவேண்டியது. வாந்தி

பண்ணுது ஜீர்ணம் செய்துகொண்டுவிட்டவன் ஸாந்தபனக்ருச்ரம் அனுஷ்டிக்கவேண்டியது.

ஒரு கிணற்றில் ம்ருகமோ, பக்ஷியோ விழுந்துகிடந்து அந்நீரைக் குடித்துவிட்டவன் மூன்று நாள் உபவாஸமிருக்கப் பராசரர் விதிக்கின்றனர். சண்டாளர் வெட்டின கிணற்றில் தெரியாது நீரைக் குடித்துவிட்டால் ஒருவேளை போஜனத்தோடு அந்நாளைப் போக்கவேண்டும். சண்டாளருடைய பாத்ரஸம்பந்தப்பட்ட கிணற்று நீரானுல் கோமூத்ரயாவகாஹாரத்துடன் மூன்று நாட்கள் வ்ருதமிருந்து சுத்தனுகிறுன். கலங்கினது, துர்ந்தும், பிணமுடையதுமான கிணற்று நீரைப் பானம் பண்ணிவிட்டாலும், தண்ணீர்ப்பந்தல் நீரைப் பானம் பண்ணினுலும் சாந்த்ராயண க்ருச்ரம் அனுஷ்டிக்கவேண்டியது. ஆபத்காலமானுல் பஞ்சகவ்ய ப்ராசனமே போதும். சண்டாளனுடைய அன்னத்தைப் புசித்துவிட்டாலும் கோமூத்ரயாவகாஹாரத்துடன் பத்து தினங்களிருக்க சுத்தியாகிறுன். அமேத்ய பூமியிலுண்டானதைப் புசிப்பவன் இரு சாந்த்ராயண க்ருச்ரங்களை அனுஷ்டிக்க வேண்டியது. ஆசௌசியான ப்ராம்ஹணனுடைய அன்னத்தைத் தெரியாது புசித்துவிட்டால் இரண்டாயிரம் காயத்ரீஜபம் செய்யக்கடவன். தெரிந்து புசிப்பவன் மிகுந்த தினங்களில் இவனும் ஆசௌசியாயிருந்து ஆசௌசம் தீர்ந்தபிறகு சாந்த்ராயணம் முதலியவை அனுஷ்டிக்கவேண்டியது. அபுத்திபூர்வகமாய் இருப்பவன் அவ்வன்னம் ஜீர்ணமடையும் வரையில் ஒருநாள் தீட்டுகார்த்துப் பிறகு ப்ராயச்சித்தம் செய்துக்கொள்ளக்கடவன். ஆபத்துக்காலத்தில் புத்திபூர்வகமாய்ப் புசித்தவனுக்கும் ஒரு நாள் ஆசௌசமே.

சூத்ரான்னம், சூதகான்னம், ச்ராத்தான்னம், நக்ன ச்ராத்தம், நவச்ராத்தம், ஏகோத்திஷ்ட ச்ராத்தம், மகதீச்ராத்தம், இவைகளிற் புசிப்பவன் மறுபடியும் புருஷனுக ஆவதில்லை (ஸ்த்ரீயாகவே பிறந்துகொண்டிருப்பான்).

ப்ரத்யாப்திக ச்ராத்தத்தில் புசிப்பவன் ஒரு பகல் உபவாஸமிருக்கவேண்டும், அத்யயனம் பண்ணும் ப்ரம்ஹசாரி ப்ராம்ஹணர்த்தம் தெரியாமல் இருந்துவிட்டால் மூன்று நாட்கள் உப

வாஸமும் பிறகு ப்ராணுயாம க்ருதபானுதி ப்ராயச்சித்தங்களும், தெரிந்தே புசித்தால் ப்ராஜாபத்ய க்ருச்ரமும் அனுஷ்டிக்கக்கடவன். அப்யாஸமாகச் செய்துவந்தால் புனருபனயனம் செய்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறுன். க்ருஹஸ்தன் நிமந்த்ரணமிருந்தால் பத்துமுறை காயத்ரீயாலபிமந்த்ரித்த தீர்த்தத்தைப் பானம் பண்ணி ஸாயம் ஸந்தியை உபாஸிக்கவேண்டியது. சுபகால நாந்தீ ச்ராத்தங்களில் புசிப்பவருக்கு ஒருநாள் உபவாஸம் விதிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு பொது விதி. இதில் சிலவற்றிற்கு ஸாந்தபனுதி க்ருச்ரங்களும் ப்ராயச்சித்தமாகும். அமாவாஸையில் பரான்னபோஜனம் செய்பவனின் ஒரு மாத புண்யம் அன்னமளிப்பவனைச் சேர்ந்துவிடுகிறது. த்வாதசி பாரணையிலும் அப்படியே. ஏகாதசி உபவாஸ பலனும் போய் விடுகிறது.

ஏகாதசியில் புசிக்கும் மூடன் கவளந்தோறும் நாய் விஷ்டைக்கு ஸமானமான மஹாபாபங்களைப் புசிக்கிறுன். ஸுராபானுதிகளுக்கும் ப்ராயச்சித்தம் இருக்கின்றன. ஏகாதசி போஜனத்திற்கு ப்ராயச்சித்தமே எழுதப்படவில்லை. எட்டு வயதுக்கு மேல் எண்பது வயதுவரையில் மாத இரு பக்ஷ ஏகாதசிகளிலும் உபவாஸமிருக்கக்கடவர்.

அஷ்டமி, சதுர்த்தசீக்களில் பகற் போஜனமும், ஆதிவாரம், பர்வம், ஸங்க்ரமணம், வ்யதீபாதம், பித்ருதினங்களில் ராத்ரி போஜனமுங் கூடாது.

க்ரஹணகாலங்களில் ஸூர்யனதாயிருந்தால் நாலும், சந்த்ரனதாயிருந்தால் முன் மூன்று நாழிகைகளிலும் புசிக்கக்கூடாது. சந்த்ர க்ரஹணத்தில் மோக்ஷகாலம் நடுநிசியாயிருந்தால் அப்பொழுதும் போஜனம் கூடாது. க்ரஸ்தாஸ்தமத்திலும் கூடாது.

அயனம், விஷுவம், க்ரஹணங்கள் இவைகளில் பகலும் இரவும் உபவாஸமிருந்து ஸ்நானம் பண்ணினுகில் ஸகல பாவங்களினின்றும் விடுதலையடைகிறுன்.

எல்லா வஸ்துக்களுக்கும் க்ரஹணத்தில் ஸூதகதோஷம் உண்டாவதால் மோர், காடி, [சாத்தீர்த்தம்] நெய்யிற் பக்குவ

மானவை, ஜலம் இவைகளில் தர்ப்பங்களைச் சேர்த்துவைப்பதால் பிந்தி உபயோகித்துக்கொள்ளலாம். ஒரு வருஷத்திற்கு ஓர் க்ருச்ரமேனும் அஜ்ஞானத்தால் புசிக்கப்பட்டவைகளின் தோஷம் நீங்குவதற்காக ப்ராம்ஹணன் அனுஷ்டிக்கவேண்டியதென ஸ்ரீ வ்யாஸபகவான் விதித்திருக்கிறார்.

கலியில் யாகத்தில் ஒன்றுதவிர மற்ற காலங்களில் மாம்ஸபக்ஷணம் நிஷேதமாகும். ''மாம்'' என்னைப் புசிக்கும் எவன் 'ஸ:' அவனே அவனுடைய மாம்ஸத்தைப் புசிப்பேன் என்று எக்காலமும் மாம்ஸங்கள் முறையிடுகின்றன. அதனால் இதற்கு **மாம்ஸம்** என்று பெயர் வழங்கலாயிற்று. அனுமதிக்கிறவன், கொல்லுகிறவன், விற்கிறவன், வாங்குகிறவன், சமைக்கிறவன், கொண்டுவருகிறவன், புசிப்பவன் இந்த எட்டுபேர்களுக்கும் **காதகர்** என்ற பெயருண்டு. இவ்வெட்டு பேர்களும் பாவத்தை ஒரு மிருகத்தைக் கொல்வதாலடைகின்றனர். கொல்லப்படும் ஒரு மிருகத்தின்தேஹத்தில் எத்தனை மயிர்களுண்டோ அத்தனை ஜன்மங்களில் இவன் ம்ருகமாய்ப்பிறந்து கொல்லப்படுகின்றனன். அவனுக்கு இந்த ஜன்மத்திலும் மறு ஜன்மங்களிலும் ஸுகமே உண்டாகமாட்டாது.

உத்தராபோசனத்தில் பாதி ஜலத்தை உட்கொண்டு பாதியை 'ரௌரவ' ச்லோகத்தைச் சொல்லி இலையின் முன் பலிவைத்த தெண்புறத்தில் விட்டுவிடவேண்டியது. கையைச் சுத்தமாய் அலம்பியோ நாவினால் நக்கியோ க்ரஹிக்கப்படும் உத்தராபோசனம் ஸுராபானத்திற்கு ஸமானமாகும். அவன் தன்னையும், தேவர்களையும், பித்ருக்களையும் கொலை செய்தவனாகிறான். பிறகு இலையைத் தொடக்கூடாது. உத்தராபோசம் பண்ணி இலையைத் தொட்டால் அவன் ஸசேல ஸ்நானம்பண்ணி சுத்தனாகிறான். இலையிலும், சொம்பிலும் மிச்சம் வைக்காமல் உண்டு குடித்துவிடுபவன் ஜன்மங்கள் தோறும் தரித்ரனாய்ப் பிறந்து வருந்துவன். பவித்ரத்தை இலையில் விட்டுவிடவேண்டியது. வலப்பக்கம் தேவர்கள் வஸிப்பதால் உட்கார்ந்து பதினாறுதரம் வடபுறம் மெள்ள வாய்க் கொப்பளிக்கவேண்டியது. மண் முதலியவற்றால் கைகளைச் சுத்தம் செய்துகொண்டு காஷ்

டங்களால் பற்களை சோதிக்கவேண்டியது. ஆபோசனம் பண்ணாமல் எழுந்துவிட்டால் ஸ்நானம்பண்ணி சுத்தனாகிறான்.

வாய் கொப்பளிக்குங்கால் அத்தீர்த்தத்தை விழுங்குபவன் தேவ பித்ரு ச்ராத்தங்களையும், தன்னையும் கொல்பவனாகிறான். அப்பொழுது ஆள்காட்டி விரலால் வாயைத் துலக்கினால் ரௌரவ நரகத்தையடைகிறான். வெண்கலப் பாத்திரத்தில் கையை அலம்புதல், வாயைக் கொப்பளித்தலைச் செய்துவிட்டால் அதை ஆறுமாதம் பூமியிற் புதைத்தெடுத்துக்கொள்ளவேண்டியது. பிறகு ஆசமன உத்தர மாத்யான்ஹிகங்களைச் செய்யவேண்டியது. இதில் பகலில் ஸூர்யனையும் இரவில் எண்ணெய் தீபத்தையும் பார்க்கவேண்டியது. அதற்குள் சூத்ரன் முதலியவர்களைப் பார்த்துவிட்டால் அவனுடன் புசித்தவனாகவே எண்ணப்படுகிறான். 'சய்யாதிம்' என்ற மந்த்ரத்தால் தீர்த்தத்தைக் கண்களில் தெளிக்கவேண்டியது. இவர்களை ஸ்மரித்தால் நேத்திரங்களை இழக்கமாட்டார்களென்பதாம். பர்த்தா புசித்த இலையில் அதே மண்டலத்தில் பத்னியும் புசிக்கக்கடவள். இலையின்றிப் பாத்திரமானால் உச்சிஷ்டங்களை மட்டும் க்ரஹித்து அப்பாத்ரத்தை அப்புறப்படுத்திவிட்டு, அதே மண்டலத்தில் உட்கார்ந்து புசிக்கவேண்டியது. ப்ரம்ஹசாரியாயிருந்தால் அம்மண்டலம் (சாப்பிட்டயிடம்) சுத்தியாகாதவரை அவனுக்கும் சுத்தியில்லையாதலால் அதை சீக்கிரம் சுத்தி செய்யவேண்டியது. பிறகு சமைத்த பாத்திரத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் அன்னங்களையும் வியஞ்சனக் காந்தல்களையும் சிறு கோலால் சுரண்டி எடுத்து அவைகளைத் தீர்த்தத்துடன் கலந்து வீட்டிற்கு வடபுறத்தில் சுத்தமான ஓரிடத்தில் ருத்ரனுக்காக பலி அளிக்கவேண்டியது. இப்படிச் செய்வதால் அவ்வீடு மங்களமாக விளங்கும். புசித்தவுடன் நூறடிநடந்து உட்காரவேண்டியது. [பகலில் ஆறாவது எழாவது பாக காலங்கள்வருகின்றன]. பிறகு ஆஸனத்தின் மீது வீற்றிருந்து தனது இஷ்டதேவதைகளைத் தியானம் பண்ணக்கடவன் என்றும் விஷ்ணுபுராணத்திற் கூறப்பட்டுள்ளது. பிறகு ப்ரம்ஹவிசாரம் பண்ணவேண்டியுது. எண்ணாயிரம் அஷ்டாக்ஷர ஜபம் செய்யவேண்டி அவை அரைகுறையாயிருந்

தால் இக்காலத்திற் செய்து பூர்த்திசெய்துக் கொள்ளலாம். பிறகு வேதம், ராமாயண, பாரத, பாகவதம் போன்ற க்ரந்தபடனத்தால் ஸ்வாத்யாய காலத்தைக் கழித்து அஸ்தமனகாலம் நெருங்கினவுடன் ஸந்த்யாவந்தனத்தைச் செய்யக்கடவன். பகலிற் தூங்கினால் ஆயுள் குறைந்துவிடுகிறது. புணர்ந்தால் புண்யம் போய்விடுகிறது. வீண் பேச்சினால் பாபஸம்பவங்கள் ஏற்படுகின்றன. பகவத் ஸ்மரணையிலேயே காலங்கழியவேண்டும். தாம்பூல சர்வணமானதும் பிறகு அதிதிகளை ஊரெல்லை பர்யந்தம் கொண்டு விட்டுவிட்டு வரவேண்டியது. ஒரு பாக்கு ஸுகாரோக்யங்களைக் கொடுக்கும்; இரண்டு பயனற்றவை. மூன்று மிகவும் ச்ரேஷ்டமாகும். அதற்கு அதிகமும் தோஷமாகாது. வெற்றிலையின் மூலத்தில் வ்யாதியும், நுனியில் பாபங்களும் இருக்கின்றன, சுன்னம் வைத்திருந்த வெற்றிலை ஆயுளை அபஹரித்துவிடும். வெற்றிலையின் நரம்பானது புத்தியை அழித்துவிடும். ஆகையால் வெற்றிலையின் மூலம், நுனி, நரம்பு, சுன்னமிருந்த வெற்றிலை இவைகளை விலக்கவேண்டும். பாக்கை நறுக்கியும், வெற்றிலையை அலம்பியும், சுன்னத்தை சோதித்தும் உபயோகிப்பது தோஷத்தை வ்ருத்திபண்ணாது. வெற்றிலையை யின்றி முதலில் பாக்கைப்போட்டுக் கடிப்பவன் ஏழு ஜன்மங்களில் தரித்திரனாய்ப் பிறந்து நரகத்தையடைகிறான். சுன்னத்தை வெற்றிலையின் உட்புறத்தில் தடவக்கூடாது. வெற்றிலையை வெளிப்புறம் தெரிய மடிக்கவுங்கூடாது. ராத்ரி சர்வணத்தில் வெற்றிலையை அதிகமாய் உபயோகிக்கவேண்டும். தாம்பூலத்தில் ஸர்வ ரஸங்களும் பொருந்தியிருக்கின்றன. வாதம், க்ருமி நாசங்களும் ஜாடராக்னியை தீபனம் பண்ணுவதும், சோகத்தைத் தெளிவிப்பதும், ஸ்த்ரீ ஸம்பாஷணத்தில் அலங்காரமாயும் ருசியோடுமிருக்கின்றன. தவிரவும் முகத்தில் சுத்தி, வாஸனைகளைக் கொடுப்பதால் பெரியோர்களுடன் பேசும்பொழுது நல்லதாக இருக்கும். அதை அடிக்கடி உபயோகித்தலும் தேஹத்திற்குக் கெடுதிகளை விளைவிக்குமாம். ஆயுள், அறிவு, பலம், புத்தி, சக்தி, ரேதஸ் இவைகள் குறைகின்றன. நாக்கும் ரஸங்களின் சுவைகளை அறிகிறதில்லையாமென வைத்திய சாஸ்த்ரம் கூறுகிறது.

பொய் சொல்லுவது, பகற் புணர்ச்சி, சூத்ரான்னம் முதலிய தோஷங்கள் ஸாயம் ஸந்த்யாவந்தனத்தை வெளியிற் சென்று செய்வதால் போகின்றனவாம். தர்ப்பத்துடன் போகவும் காயத்ரீ ஜபத்திற்கு அனத்யயன தோஷமில்லை. நித்யநைமித்திக காம்ய வ்ருதங்களிலும் ஜபிக்கவும். பிறகு ஸாயமௌபாஸம், வைச்வதேவ பலிகளையும் ஸமர்ப்பித்துவிட்டு குருக்களையும், பெரியோர்களையும் நமஸ்கரித்து விஷ்ணுவிற்கு பூஜை நிவேதனங்களைச் செவ்வையாய்ச்செய்து அதிதி பூஜை பண்ணித் தானும் புசித்து வடக்கு, மேற்கு திக்குகளை நீக்கித் தலை வைத்துப் படுத்துறங்கவேண்டியது. ஆகாசமான வெளியில் தூங்கக்கூடாது. வஸ்த்ரமில்லாமலாவது, அசுசியாகவாவது, ஓர் ஆஸனத்தின் மீதிலாவது, பாழ்மனையிலாவது, மான்தோலிலும் உறங்கக்கூடாது. இரவில் முதல் ஜாமத்தில் ஜபம், யாகம், அர்ச்சனம், அத்யயனம், போஜனங்களைச் செய்யத்தகுதியாம். இரவு போஜனம் ஸ்வல்பமாயிருக்கவேண்டும். பிறகு ஆசமனம் பண்ணிவிட்டுக் கால்கள் உலர்ந்தபிறகு இஷ்டதேவதையைவந்தனம் பண்ணிவிட்டு, மூங்கில் தடியைப் படுக்கையின் ஸமீபத்தில் வைத்துக்கொண்டும், ரக்ஷை பண்ணிக்கொண்டும், ஸ்ரீமாதவனைத் தியானித்தவராய்த் தூங்கிவிடவேண்டியது, காலை உயர நீட்டிக்கொண்டாவது, தலையைக் கீழே வைத்துக்கொண்டாவது, ரோஹிகள் ஸமீபத்திலாவது, அவர்கள் படுக்கையிலாவது, தான்யத்தின்பேரிலாவது, படுக்கலாகாது. இடதுபுறம் கீழாகப் படுக்கவேண்டியது. இதனால் ஆயுள் பலங்கள் வ்ருத்தியடையும். தன் வீடு கிழக்கு, தங்கினது மேற்கு, வேட்டாம் தெற்கு, வேண்டாதயிடம் வடக்கு எனச் சொல்லும் ரீதியாய்த் தலை வைத்துக்கொள்ளவேண்டும்.

பசு, தேவர், அந்தணர், குரு இவர்கள் முன்னிலையில் படுக்கலாகாது. மங்களகரமான தீர்த்த குடத்தைத் தலைப்புறத்தில் வைத்துக் கொண்டு வைதிகங்களான காருட மந்த்ராதிகளால் ரக்ஷை பண்ணிக்கொண்டு 'ஸுத்ராமாணம்' என்றரிக்கை ஜபித்து ராத்ரீ ஸூக்தத்தை ஜபித்து ஸுகசாயிகளான புண்யபுருஷர்களை த்யானம்பண்ணி 'அப' என்பதாதி சலோகங்களைப் படித்து ஸாவித்ரியை உச்சரித்து தைவிகமான மந்த்ரங்

களைச் சொல்லி ஸமாதியிலிருந்து ஸ்ரீ நாராயணமூர்த்தியை நமஸ்காரம் பண்ணி ஒரே படுக்கையில் தானும் மனைவியுமாக படுத்து இரவில் நடு இரு யாமங்கள் நித்ரைபண்ணவேண்டியது. நிஷித்த தினங்களில் புணர்ச்சி கூடாது. படுக்கை மட்டும் ஒரே படுக்கைதான். இருவரும் வஸ்த்ரத்தை விலக்கிவிட்டுப் புணர்வராகில் மஹாபாபமாகிய கலியென்பவன் அவர்களை வந்தடைகிறான். பூணூலை நிவீதமாய் மாற்றிக்கொள்ளவேண்டும். குழந்தைகள், பாலர், ஸ்த்ரீகள் இவர்களுடைய மத்தியில் படுக்கக் கூடாது. படுக்குங்கட்டில் பஞ்தாருமரங்களிற் சேர்ந்தாயிருக்கக் கூடாது. அத்தி, அரசு, ஆல், இச்சி (இருளி) நாவல் இவைகளே பஞ்சதாருக்களாம். அகஸ்தி, மாதவர், முசுகுந்தன், கபிலர், அஸ்தீசர் ஆகிய இவர்களே ஸுகசாயிகளெனப்படுவர். இரண்டு யாமம் மட்டும் தூங்குகிறவன் ப்ரஹ்மத்தை அடையத்தகுந்தவனாகிறான்.

ப்ரதோஷகால நிர்ணயம் — ராத்ரியில் சதுர்த்தியிரண்டு நாழிகையும், ஸப்தமி ஒரு நாழிகையும், த்ரயோதசி ஒரு கலையேனும் இருந்தாலும் அன்றே ப்ரதோஷம். இரவு முன் ஒன்பது நாழிகைவரையில் த்ரிதீயையிருந்தால் அன்று சதுர்த்தீ ப்ரதோஷமாகும். அதற்கு மேற்பட்டால் இல்லை. இரவில் ஷஷ்டீ ஒரு யாமத்துக்கு மேலுமிருந்தால் அன்று ஸப்தமி ப்ரதோஷம் இல்லை. துவாதசியன்று உதயத்திற்குமுந்திக் கலைமாத்ரமேனும் த்ரயோதசியிருந்தாலும் மறுதினமே த்ரயோதசி ப்ரதோஷம். ப்ரதோஷகாலங்களில் காயத்ரீயைக் குறைத்து ஜபம் பண்ணி வருவதற்கு மூலாதாரமான ஸ்ம்ருதியானது இன்னுந்தேடி ஆராய்ந்து எடுக்கப்படவேண்டியதேயாகிறது என ஸ்ம்ருதிமுக்தாபல ஆஹ்னிககாண்டக் கடைசியிற் ஸ்ரீ வைத்யநாததீக்ஷிதர் அவர்கள் எழுதிவைத்திருக்கிறார்.

நாஸ்திக புத்தியாலாவது, சோம்பலினாலாவது எவன் உபேக்ஷைசெய்து அனுஷ்டிக்கவேண்டிய நித்யகர்மானுஷ்டானங்களை விட்டுவிடுகிறானோ அவன் குரூரங்களான நரகங்களில் மூழ்குகிறான். பிறகு காக்கையாய்ப் பிறக்கிறான். வர்ணாச்ரம தர்மத்தைத் தவிர வேறு மோக்ஷத்திற்கு உபாயமே கிடையாது.

ஆகையால் ஸ்ரீமந்நாராயணனுடைய ஸந்தோஷத்தின்பொருட்டே தனக்கு விதிக்கப்பட்ட ஸகல கார்யங்களையும் அனுஷ்டிக்க வேண்டியது என்று ஸ்ரீ வேதவ்யாஸ பகவான் கூறியிருக்கிறார்.

இங்கு கீதாசார்யனான ஸ்ரீ க்ருஷ்ணபகவான், தங்கள் தங்கள் கார்யங்களாற் பூஜித்து ஸித்தியை (நற்கதியை) அடைகிறார்கள்; அவரவர்கள் தங்கள் கர்மாக்களில் அபிருசியுடன் கூடியனுஷ்டித்தவர்களாய் ஸம்ஸித்தியை (முக்தியை) அடைகிறார்களென கடைசி அத்யாய இரு கீதா ச்லோகங்களும் ஞாபகப்படுத்திக் கொள்ளத்தகுந்தவைகளாகும்.

ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர்இயற்றிய ஸ்ம்ருதிமுக்தாபலம்
என்ற தர்மசாஸ்த்ரத்தையொட்டி ஸங்க்ரஹிக்கப்பட்ட
ஆன்ஹிக காண்டம் முடிந்தது.

சுபமஸ்து

முடிவுரை

ஆன்ஹிக சப்தத்தாலே நித்யகர்மானுஷ்டானங்கள்என்பது வ்யக்தமாயிற்று. இப்புஸ்தகத்தில் ஒவ்வொரு பக்கத் தலைப்பிலும், கட்டாரம்ப பக்க நடுவிடங்களிலும், இன்னமும் வரிகளின் நடுவில் பெரிய பெரிய எழுத்துக்களாலும் விஷயங்களை எழுதியிருப்பதால் தனியாய் விஷயஸூசிகைக்கு அவகாசமில்லாமற் போயிற்று.

பக்திக்குறைவால் ஜன்மமெடுக்கும் பக்தன் கர்ப்ப ஸ்ரீமானாய் ஸதாசார ஸம்பன்னர் க்ருஹத்தில் ஜனிப்பதாய் கீதையில் உத்கோஷித்திருப்பதால் அர்த்தாபேக்ஷகர்களான நமக்கு சாஸ்த்ரம் ஒரு பெரும் ஸாதனமாகும். கடைசியிற் கூறியதுபோல்மோக்ஷத்திற்கு நித்யகர்மானுஷ்டானத்தைவிட வேறு உபாயமில்லைஎன்று இவைகளை ச்ருதி ப்ரமாணத்துடன் ஸரளமாய் ஸங்க்ரஹித்த

ஆயிரக்கணக்கான ரிஷிகள் தவிர, பகவானும் கீதையில் உறுதியிட்டிருப்பதைக் காட்டினோம். இன்னமும் தர்மசாஸ்த்ர விதிகளை விட்டுவிட்டு தம்மிஷ்டப்படி நடக்கும் நாஸ்திகர்களுக்கு இஹத்திலும் பரத்திலும் ஸுகமே கிடையாதென்றும் கூறிவிட்டார். கீதாசாஸ்த்ரம் பகவத்பக்தியை அடைய ஸ்வதர்மானுஷ்டானந்தான் மார்க்கம் என்று ப்ரதி அத்யாயத்திலும் போதித்திருப்பதை நம் **ஜன்ம ஸாபல்ய** க்ரந்த ஆரம்ப பக்கங்களிலேயே விளக்கியிருக்கிறோம். ஒருவனுக்கு மாதா பிதாக்கள் ஹிதத்தைச் செய்வதுபோல் ஆயிரம் மடங்கு இஹபரஸுகத்திற்காகவே தர்மசாஸ்த்ரம் ஏற்பட்டிருக்கிறது. இது கேவலம் ஒருவனோ ஒரு பிரிவு ஜனமோ அனுஷ்டிக்க ஏற்பட்டதல்ல. கோடானுகோடி பரதகண்டத்தில் ப்ரதி சதுர்யுகங்களிலும் ஜனிக்கும் ஜனங்களுக்காக ஏற்பட்டதாகையால் அனுஷ்டிக்க ஸுலபமான வழியாகத்தானிருக்க வேண்டுமென சற்று யோசித்துப் பார்த்தாலே யாவருக்கும் விளங்கும் விஷயமாகும். விவேகியானவன் ஜன்மமே எடுக்காவண்ணம் இருக்க இதில் கூறியவை போதாதென நினைத்து இன்னும் அநேகமடங்கு ஜபதபாதி அனுஷ்டானங்களை முமுக்ஷுக்களான ரிஷி, பக்தர்களைப்போல் கைக்கொள்ள வேண்டும்.

ஆசாரம், சிஷ்டர்களுடன்பழகியும், கேட்டுத்தெரிந்துகொண்டும், அனுஷ்டித்தும் வரவேண்டுமேயன்றி படிப்பினால் மட்டும் வராது. ஒரே ஆசாரத்தைப் பற்றி பல ரிஷிகள் பலவாறு கூறியிருக்கலாம். ஸம்ப்ரதார்ய அனுஷ்டானம் லோகத்தில் ஒரு ஒரு மாதிரி இருக்கலாம். தம் குலாசாரம் இன்னமும் பேதமாயிருக்கலாம். குலாசாரமே சாஸ்த்ர ஸம்மதமாகும்.

இதில் ஏதாவது மாறுபாடிருப்பின் அதை சிஷ்டர்கள் எனக்கு சிக்ஷித்தால், அதை நான் அனுக்ரஹித்ததாய் சிரஸா வஹித்து மறுபதிப்பில் திருத்திக் கொள்ளுகிறேன்.

நியமம், ஈ. வேங்கடேச சர்மா.

ஸ்ரீ மஹாபாரதம் பிரஸ், கும்பகோணம். *14—10—1949.*

விஷயம்	பக்கம்
உஷ்ணோதக நிஷேதம்	28
ம்ருத்திகா ஸ்நானம்	29
நைமித்திக ஸ்நானம்	30
12-ஸங்க்ரமண புண்ய கால நிர்ணயம்	40
விவித ஸ்நானங்கள்	33-43
புண்ட்ர தாரணம்	41
ஸந்த்யாகால நிர்ணயம்	42
ஸந்த்யாதேவீ (காயத்ரீ) ஸ்வரூபம்	45
ப்ராணாயாம விதி	48
காயத்ரீ மஹிமை	50
ஜபவிதி	52
காம்ய ஜபங்கள்	56
ஹோமவிதி (அக்னிஹோத்ரம்)	58
மங்களத்ரவ்ய தர்சனம்	66
ப்ருஹ்மயஜ்ஞ விதி	67
இதர பாராயணங்கள்	71
புஷ்ப, துளஸி க்ரஹணம்	72
மாத்யான்ஹிக ஸ்நானம்	73
தர்ப்பணங்கள்	74
தேவ பூஜை	79
பஞ்சமஹா யஜ்ஞங்கள்	85
வைச்வதேவம்	88
அதிதி பூஜை	92
போஜனம்	98
போஜ்யாபோஜ்யம்	110
ஸ்வாத்யாய கால நயனம்	124
ஸாயம் ஸந்த்யா, ஹோமங்கள்	125

அவதாரிகை விஷயங்களை முகவுரை *127—128* பக்கங்களிற் பார்க்கவும்.

தக்ஷிண தேசக்ரந்தாலய ப்ரசுரங்கள்

கர-௵ 1950–51.

1.	ஸம்ஸ்க்ருத-தமிழ் அகராதி அ எழுத்துமுதல் த வரை முன்பாதி 800 பக்கங்கொண்டது	7	0
2.	தமிழ்-ஸம்ஸ்க்ருத அகராதி அச்சில்	1	0
3.	அமர ஸங்க்ரஹம் அர்த்தத்துடன்	3	0
4.	ஸம்ஸ்க்ருத ஸ்வபோதினி முன்பாகம்	1	0
5.	க்ரந்த தமிழ் அகராதி உதாரணங்களுடன்	4	0

— தமிழ் —

6.	வைத்யநாத தீக்ஷிதீய அன்ஹிக காண்ட ஸங்க்ரஹம். நித்ய கர்மானுஷ்டான விதிகள்	1	0
7.	ஷை. வர்ணாச்ரம காண்டம் அச்சில்	1	0
8.	ஷை ச்ராத்த, ஆசௌச காண்டச்சுருக்கம் ,,	0	8
9.	பாகவதச் சுருக்கம் முதல் 9 ஸ்கந்த அத்யாயங்கள்	1	12
10.	ஸ்ரீக்ருஷ்ணாவதாரம் 10, 11, 12 ஸ்கந்தம்	1	4
11.	வேதக் கதைகள் காண்ட, அஷ்டக, உபநிஷத்துக்களிலிருந்து	0	8
12.	பகவத்கீதையின் ச்லோகார்த்தம்	0	8
13.	ஸங்க்ஷேப ராமாயணம்	0	4
14.	பாரதச் சுருக்கம்	0	4
15.	பக்தியும் முக்தியும்	0	4
16.	ஸ்த்ரீ தர்மங்கள்	0	4
17.	நீதி சாஸ்த்ரம்	0	4
18.	சங்கர, ராமானுஜ, மத்வ, தேசிகன் சரித்ரம்	0	4
19.	ஆழ்வார்கள் சரித்ரம்	0	6
20.	த்யாகராஜ, வித்யாரண்ய, நாயன்மார்கள் ,,	0	6
21.	பதிவ்ரதைகள் சரித்திரம்	0	6
22	,, 2-ம் பாகம்	0	6
23.	கீதா விசாரம்	0	8
24.	தமிழ் ஸம்ஸ்க்ருத பதகோசம் தமிழில்	0	6
25.	லௌகிக ந்யாயங்கள் (காகதாளீயம் போல்)	0	6

இதில் 6, 9 10 தவிர மற்றவை 5 ரூபாய் சந்தாவுள்ள பக்தி என்னும் பத்ரிகையில் கர௵-சித்திரை௴ முதல் வெளியாய்க்கொண்டிருக்கும்.